Registered as a News Paper

பக்கம் - 28

16.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 வெள்ளி - 22 30-05-ஓகஸ்ட்-2004

## யுத்த நிறுத்தத்துக்குள் ஒரு யுத்தம்



# திருமுக அறிமுகம்

அவர் நாதம் குடிகொண்ட நாதன்.

அதுமட்டுமல்ல இசை ஞானமும் குடிகொண்ட நாதன் - ஆம், பத்மநாதன் நாதஸ்வர இசை உலகின் திலகமாக மிளிர்ந்தவர் தவில் மேதை தெட்சனாமூர்த்திப்பிள்ளையை ஈழத்தமிழ்க்கலைத்தாய்க்கு அர்ப்பணித்த அதே அளவெட்டி மண்தான் நாதஸ்வரக் கலாநிதி பத்மநாதனையும் பெற்றுக்கொடுத்தது.

யாழ்ப்பாணம் ஒரு இசைஞனுக்கு - அதாவது விழிப்புலனர்வற்ற இசைப்புலவரான யாழ்பாடி என்பவருக்கு பரிசிலாக வழங்கப்பட்டதாக வரலாற்றுக் கதையொன்று கூறுகிறது.

வீணைக் கொடியுடைய வேந்தன், தன்தலையை அறுத்து வீணையாக்கி நரம்புகளை தந்தியாக்கி அதை மீட்டி சாமகீதத்தை உயிருருக இசைத்து இறைவனை மெய்மறக்கச்செய்து கைலாயமலையையே தூக்கிய வீணை இசை வித்தகன், இராவணேஸ்வரனின் மண்ணான ஈழத்திற்கும் இசைக்குமான பிணைப்புப்பற்றி சொல்லவேண்டிய அவசியமில்லை. ஈழதேசமும், யாழ்ப்பாணமும் இசைவளம்மிக்க பாரம்பரியத்தை கொண்டது. அந்தப் பாரம்பரியத்தின் வாரிசுகளில் பத்மநாதன் முக்கிமானவர்.

அவரைப் பார்க்கும்போது, அவரின் வித்தகவிரல்கள் நாதஸ்வரத்தில் நர்த்தனமிட்டு காற்றை இசையாக்கும் வித்துவத்திறனைப் பார்க்கும்போது உயிர்க்கும் அந்த உன்னத இசைப்பரவலுடன் ஒன்றித்துப் போகும் போது அந்த நாத வெள்ளப் பிரவாகத்தினுள் மூழ்கித்திழைக்கும் போது... ஏற்படும் ஆத்மச்சிலிர்ப்பு இருக்கிறதே... அதனை அனுபவித்து மட்டுமே உணரமுடியும். வார்த்தைகளால் அதனை வர்ணிப்பதென்பது சாத்தியமற்ற விடயமாகும். காற்றில் கலந்த இசையுடன் நாமும் கலந்து அதன் வசமாகி, நமையிழந்து, ககனப்பெருவெளியின் பவனப்பொதிகளுடன் ஒன்றித்து மிதக்கும் அந்த அனுபவம் பத்மநாதனின் நாதஸ்வர இசையின் போது நமக்குக் கிடைக்கும் என்றால் அது மிகையில்லை.

அளவையூர் - அல்லது அளவெட்டி என்பது அவரது பிறந்தமண் அவரது தந்தையார் N. கந்தசாமிப்பிள்ளையே அவரது முதல் ஞானகுரு. கும்பிளாவளை விநாயகர் ஆலயச் சூழல் அவரது இசைஞானத்தை வளர்க்க உதவியது.



நாதஸ்வரக் கலாநிதி
என். கே. பத்மநாதன்

பாரம்பரியக் கலை என்பதால் நாதஸ்வரம் அவர் கரங்களுள் புகுந்து கொண்டது. அது அவருக்கு தெய்வம் கொடுத்த வரமும் ஆயிற்று. அவர் சாஸ்த்திரீய சங்கீத விற்பன்னரான யாழ்ப்பாணம் எம்.பி. திருநாவுக்கரசு பிள்ளையிடம் நாதஸ்வரக்கலையின் நுணுக்கங்களை கற்றுத் தேர்ந்தார்.

நல்ல கலைஞனுக்கு நல்லகுரு கிடைப்பதை விடப்பேறு என்னவேண்டும்? அந்தப் பேறு பத்மநாதனுக்கு கிடைத்த தவப்பேறேயாகும். அத்துடன் வித்துவத் திறன்மிக்க அற்புதக் கலைஞர் பலருடன் இணைந்து வாசித்துத் தன கலைத்துவத்தை வளர்க்கும் வாய்ப்பும் அவருக்குக் கிடைக்க அவரது மாமனார் கணேசரத்தினம் பிள்ளை காரணமாயினார்.

அவரது மாமனாருடன் வந்து தங்கி நின்று வாழ்ந்த நாதஸ்வர மேதைகளின் அறிவூட்டலும், வழிகாட்டலும் பத்மநாதனுக்கு வரப்பிரசாதமாகியது. நாதனின் நாத வித்துவம் நாளுக்கு நாள் உயர... இடையறாத கேள்விஞானம்... தொடர்ச்சியான கடின பயிற்சி... விடா முயற்சி... நாதவடிவான இறைவன் மீதான பக்தி...

பத்மநாதனுள் நாதஸ்வர ஞானம் அபரிமிதமாக வளர்ச்சிபெற உதவியது.

அவர் நாதஸ்வரத்துடன் மேடையில் அமர்ந்தால் போதும்.

இணையற்ற கலைஞனின் கம்பீரமும் அங்கு கொலுவேறிவிடும். அது கர்வமற்ற கம்பீரம்...

வணங்கத்தோன்றும் கம்பீரம்...

அவர் வாசிக்கும் போது நாதஸ்வரத்தோடும், நாதத்தோடும் ஒன்றிவிடுவார் நாம் அவரின் நாதஸ்வர இசையோடு ஒன்றிவிடுவோம்.

அப்போது 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே...' என்று அவரை நோக்கிப்பாடத்தோன்றும்... ஆனால் நாவசையா... மனமசையா... நேரம் அதுவாகும்.

அவர் நாதஸ்வர இசைக் கலைஞருக்கே ஒரு தனிக் கௌரவத்தை - மரியாதையை ஏற்படுத்திக் கொடுத்த மாகலைஞர்.

நயனக்காரர் என்று சர்வசாதாரணமாக அழைக்கப்பட்ட அருந்தக் கலைப் பரம்பரையினர்க்கு, ஒரு சமூக அந்தஸ்தை பெற்றுக்கொடுத்தவர் அவர்.

அவருக்குக் கிடைத்த பட்டங்கள், கௌரவங்கள், பாராட்டுகள், புகழ் அனைத்தும் அவருடைய சமூகத்திற்குக் கிடைத்த மதிப்பிற்குரிய அங்கீ காரமாகவே கருதவேண்டும். அதுவே அவரது விருப்பமாகவும் இருந்தது.

அவர் தன் மகனையும் தனது பரம்பரைக் கலையின் வாரிசாக்க கடுமையாகமுயன்றார்.

பாரதம் சென்று வித்துவஞானம் பெற்று நாடு திரும்பி தந்தையின் இலட்சியத்தை தொடரமுயன்ற அவரின் மைந்தன் முரளியை அப்போது எமது தாயக மண்ணை ஆக்கிரமித்து நின்ற கலாசாரமற்ற மந்தபுத்தியுள்ள இந்தியப் படையினர் சுட்டுக் கொன்றமையானது அவருக்கு ஏற்பட்ட பெரும் அவலமாகும். ஈழத்தமிழிசைக்குக் கிடைத்த பேரிழப்புமாகும்.

மகனை இழந்த பின்னர் அவர் இசையில் தொய்வு ஏற்படவில்லையாயினும் மனதளவில் சோர்வுற்றவராகவே இருந்தார்.

இசைச்சேவையை இறை சேவையாக்குவதில் நாட்டமதிகமுடையவராகவும் இருந்தார். கடந்த வருடத்தில் அந்த இசைப்பிரவாகம் ஓய்ந்த பின்னர் அவருக்கு நாதஸ்வரக் 'கலாநிதி' பட்டளம் வழங்கிய யாழ்பல்கலைக் கழகம் வழமைபோல் தன் தாமத சிந்தனையை வெளிப்படுத்திக் கொண்டது... நமது அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களை இனம்கண்டு மரியாதையும் கௌரவமும் அளிக்கும் பண்பு நம் அறிவுசார் - கல்விசார் சமூகத்திற்கு தாமதமாகவே உருவாவது கவலைக்குரிய விடயமேயாகும்.

நாதன் ஓய்ந்தாலும் அவரின் நாதம் ஓயவில்லை.... இன்னும் காற்றில் மிதந்தபடியே...!

அட்சயன்

# காரசாரம்

## எதற்கும் ஒரு திட்டமிடல் வேண்டுமல்லோ...

வன்னியின் பெருமை அதன் வளத்திறனில்தான் தங்கியுள்ளது. நீர் வளம், நிலவளம் இரண்டும் சிறப்புற அமைந்த வன்னி கடந்த காலத்தில் சூரியக்கதிர் நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து வந்த லட்சக் கணக்கான மக்களைத் தாங்கிய நிலம். ஏராளமான நெல்வயல்களைக் கொண்டது. தமிழீழத்தின் நெல் உற்பத்தி என்பது சகல தமிழ் மக்களுக்குமானது தான். இதேபோன்று கால்நடை வளர்ப்பு, கால்நடைகள் விளை பயிர்கள், இரண்டும் ஒன்றிலொன்று தங்கியே உள்ளன. பால், நெய், தயிர், முட்டை, இறைச்சி, நெல்,பயறு, சோளம், குரக்கன், உழுந்து, எள், மா, பலா, வாழை, தோடை, எலுமிச்சை, பப்பாசி, கொய்யா, தென்னை, கமுகு, வெற்றிலை, புகையிலை, முந்திரி என்ன இல்லை. எதுவிளையாது.

எல்லாவற்றுக்கும் ஒரு காலத்தில் யாழ்ப்பாணமும் இடங் கொடுத்ததுதான். ஆனால் பெருகி வந்த சனத்தொகை, பணம் இரண்டும் சேர்ந்து அம்மண்ணை பெருமளவு கட்டடங்களின் இருப்பிடமாக மாற்றியது. விளைவு, தொழில் தேடி வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேலும் விரைவாகப் பெருகிவரும் வெளிநாட்டு வருவாய்களைத்திட்டமிடல் எதுவுமின்றி காணி வாங்கவும் வீடுகட்டவும் செலவிட்டதுதான். எல்லாப்பிள்ளைகளும் வெளிநாட்டில் இங்கே நாலுபரப்புக்காணியை நிரப்பி வீடுகட்டுவதும் அதற்குக்காவலாக வயோதிபப்பெற்றோரைத் தங்கவைப்பதும் வழமையாகிறது. அவர் தனது காணியில் தானே வீடுகட்டுகிறார் என்றாலும் அந்த நிலத்தில் நின்று பயன்தரக்கூடிய மா, பலா, தென்னை என்பன தேசிய வளமல்லவா?

கிளிநொச்சியிலும் பரந்தனிலும் அநேகமான விவசாய நிலங்கள், வயல்கள் ஏராளமான மண் கொட்டி நிரப்பப்பட்டு வீடு கட்டப் படுகிறது. அந்நிலத்தில் வருடாந்தம் விளைந்த நெல் இனி இல்லை. அதாவது ஏக்கருக்கு இருநூறு முதல் முன்னூறு புசல் வரையான நெல் உற்பத்தி குறைக்கப்பட்டு அவ்விடத்தில் பாரிய வீடுகள் கட்டப்படுகின்றன. ஒன்று, இயற்கைச் சமநிலை மாற்றத்தால் பெருவெள்ளநீர் திசை திரும்பி புதிய அழிவுகளைச் செய்யப் போகிறது. இரண்டு, வறிய மக்கள் குடியிருக்கும் பகுதிகளுள் இவை பாய்ச்சப்பட்டு, அவர்களையும் துன்புறுத்துவதுடன், உற்பத்தியும் இல்லாமற் போகப்போகிறது. எப்படியும் வீடு கட்ட அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதற்காக சிலர் தம் அருகில் வாழும் சிறிய குறுகிய நிலத்தில் வாழும்மக்களைக் கவனத்தில் எடுப்பதில்லை. மாடிமேல் மாடி கட்டி உயர்த்திக்கொண்டு போகும் போது பின்னுள்ள வீட்டிற்கு வெளிச்சம், காற்று இரண்டுமே தடைப்படுகிறது. (சட்டப்படி தவறு)

சரி இப்படித் தான் தோன்றித்தனமாக வீடு கட்டுபவர்கள் அதில வசிக்கப்போகிறார்களா? என்றால் அதுவுமில்லை. வெளிநாடுகளிலிருந்து எப்போதாவது இலங்கைக்கு வந்தால் தங்கிவிட்டுப்போகத்தான் இந்த வீடுகள், இவைகளை சொந்த மண்ணில் வாழ்பவர்கட்கு இவற்றை வாடகைக்குக் கூட கொடுக்கமாட்டார்கள்.

ஒருவர் வாழ எத்தனையடி நிலம் வேண்டும். தண்ணீர்த் தொட்டியொன்று போதுமென வாழ்ந்து காட்டினார் ஒரு அறிஞர். ஐந்தடி அகலம் பத்தடி நீளம் போதும் என்பது ஐநா சபையினரின் தீர்மானம். உதாரணம்: அகதிகளுக்கான குடியிருப்புகள் ஐந்துபேர் கொண்ட ஒரு குடும்பத்துக்குப் பத்தடி நீளம், பத்தடி அகலமான வீடுகளே வழங்கப்பட்டன.

'இடம்பட வீடெடேல்' என்று அவ்வையார் சொன்னதும் இதற்காகத்தான். அநாவசியமான பொருட் செலவில் ஆக்கப்படும் வீடுகளும் அதனுள் கொட்டிநிரப்பப்படும் பொருட்களும் எத்தனை வருடங்களுக்கு நிலைக்கும். ஆகக்கூடியது ஒரு மனிதனின் சராசரி ஆயுட்காலம் எழுபது ஆண்டுகள்தானே - அதன் பின் அவனது சந்ததி அந்தவீட்டில் வாழப்போகிறதா? அப்படியே வாழ வந்தாலும் காலமாற்றம் அந்த வீட்டை நாகரிகமாற்றத்துக்கேற்ப இடித்துக் கட்டவே சொல்லும். எம்மக்கள் செலவிடும் கோடிக்கணக்கான ரூபாய்களை தொழிற்சாலைகளாகவோ, உற்பத்திச் சாதனங்களாகவோ மாற்ற முன்வருவதில்லையே. யப்பானும் சீனாவும் தமக்கான வீடுகளைக் கட்டும் மக்களுக்கு, இவ்வளவுதான் கட்டலாம் என்று கட்டுப்பாட்டை விதித்துள்ளது. அந்த நாடுகளில் வாழும் மக்களும் தேசத்தை எப்படியாவது முன்னேற்றிவிடத் துடிப்பவர்களாகவே உள்ளனர்.

எங்கள் மண்ணின் துன்ப துயரங்களுக்கு, அவர்கள் அடைந்த இழப்புகள் அதிகம்தான் ஆனாலும் அவை தங்களைத் தக்கவைத்துக் கொண்டு முன்னேறியுள்ளன. எம்மவர்களுக்கும் நாடு முன்னேற வேண்டும் என்ற சிந்தனை வரவேண்டும். மக்களுடைய தேவைகள் உணவு, உடை, உறையுள் என்றுதான் அமைகிறது. உணவுத் தேவைக்கான உற்பத்தித் தொழில் என்பவற்றையும் உடைக்கான உற்பத்தியையும் கவனிக்காது. வீடுகளை விலாசமாக மன்னிக்கவும் விசாலமாகக் கட்டி விட்டால் போதுமா? நாடாதிருப்பதே நாடு, 'எதற்கும் எவரையும் நாடாதிருப்பதே நாடு - நாடு நலம் பெற்றால்தானே - வீட்டுக்கும் பெறுமதி உற்றவளங்களை ஒதுக்கி அழித்து விட்டு, அதன்மீது உல்லாச மாளிகை கட்டுவது, நாடு இக்கட்டான நிலையில் உள்ளபோது அதை கைவிடுவதற்குச் சமமாகும்.

## குளங்களை அழிக்கலாமா...

மாயா

அண்மையில் ஒரு வீதி நாடகத்தில். ஒரு பாத்திரம் பேசிய வசனம். "ஐயாவுக்கு வோட்டுப போடுங் கோ - குளத்தை நிரப்பி யெண்டாலும் வீடுகட்டித்தருவார்"

வன்னியின் வளங்களான குளங்களுக்கு வந்துவிட்ட ஆபத்தை இது மிகத் துல்லியமாகத் தெரிவிக்கும் வசனமாகும். வவுனியா நகரத்தையண்டி அமைந்துள்ள குளம் விளாங்குளம் என அழைக்கப்படும். தற்போது அதன் பெயர் மறைந்து வவுனியாக் குளம் எனப்படுகிறது. இதன் பரப்பெல்லை கிழக்கு நோக்கி நீண்டு றம்பைக்குளம் சின்னப்புதுக் குளம் வரை சென்று அகலவாட்டாக காத்தார் சின்னங்குளத்தையும் தொட்டு, மாமடுச் சந்திவரை பரவியிருந்தது. இன்று றம்பைக்குளம் முழுமையாக இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுவிட்டது. வவுனியாக் குளத்தின் உள்நோக்கிய குடியிருப்புக்கள் குளத்தின் பெரும் பகுதியை மண் கொட்டி நிரப்பிப் பெரும் வீடுகளாக மாறிவிட்டன. சின்னப்புதுக்குளம் காணாமல் போய்விட்டது. வெளிக் குளத்தில் வெறும் குழி மட்டும் மீதமுள்ளது. தவசி குளம் சிதம்பரபுரம் போன்ற குளங்களும் நிரப்பப்பட்டுப் போனதுடன் அவை இராணுவ இருப்பிடங்களாகிவிட்டன. கோயிற் குளம், கோவிற் புதுக்குளம் இரண்டும் கூட கட்டுகள் மட்டுமே மீதமுள்ளன. பாவனையிலுள்ள குளங்களின் விளை நிலங்களும் வீடுகளாகிவிட்டன.

குளத்தின் பரப்பளவு கொண்ட உபரிப் புல்வெளிக் குளத்தின் 'அலைகரை' எனப்படும். இவ் அலைகரையின் நிலம் அப்பகுதிக் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளாகும். இதன் மேற்புற நிலம் கொத்திக்கிளறி உழுது விடுவதெல்லாம் தடை செய்யப்படும். அக்குளத்தின் பங்காளிகளாக அக்கிராம மக்களே இருப்பதால் அதைச் செய்யவும் மாட்டார்கள். காரணம் கொத்தி உழுது கிள்றிய மண் மழை பெய்து நீர் குளத்தை நோக்கி ஓடும் போது மண்ணையும் அள்ளிச் சென்று குளத்தில் சேர்த்துவிடும். குளம் தூர்ந்து (நிறம்பி) போகும் என்பதால் தான் மழை நீருடன் மண் வருவதை அலைகரை புல் வெளி தடுக்கும். கால்நடைகளுக்கு அலைகரை புல்வெளி மேய்ச்சல் தரவையாகப் பயன் தரும் .

குளத்தை, குளத்தின் அலைகரையை மூடி வீடமைப்பது தேசத்துரோகமன்றி வேறென்ன? நாட்டை நேரடியாகச் சிதைத்து வளங்களை அழித்துக் கைப்பற்றி அழிக்கும் எதிரிக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி உயிரையும் கொடுத்த தமிழர் நாங்கள். இன்று குளங்களையும் குளத்தின் அயல் வசதிகளை அழிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை சிதைப்பதற்கு என்ன பெயர். குளத்துக்கும் வாய்க்காலுக்கும் நீரடையும் வழிகளுக்கும் நிலமொதுக்குவது தேசத்தின் வளத்தைப் பெருக்குவதற்குத் தான். நீ ரோடி வரும் வழியைத் தடுத்து மண் கொட்டி மூடப் பணம் படைத்தவர்கள் தயங்குவதேயில்லை. பாவம் ஏழை விவசாயிகளையும் அவர்களது கால்நடைகளின் தேவைகளையும் நசுக்குகிறோம் என்பதை அவர்கள் மட்டுமல்ல, அரசும் கவனிக்கவில்லை.

அண்மைக் காலங்களின் இப் போக்கு வன்னியையும் தொற்றிக்கொண்டுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. குடிநிலங்கள் எவ்வளவோ இருக்க, குளங்களை அழிப்பது நல்லதல்ல. காரோடி வாழ்பவனும் ஏரோடினால்தான் உண்ணலாம் சேறுகலக்கிப் பயிர் செய்தால் தான் சோறு தட்டில்வரும். குளங்களை மூடுமுன் நெஞ்சத்தில் தேசத்தின் வளங்களை அழிக்கிறோம் என்பதை சிந்தியுங்கள்.

# யுத்தநிறுத்தத்துக்குள் ஒரு யுத்தம்

இலங்கைத்தீவின் சமாதானம் ஒரு நூதனமான கட்டத்தை அடைந்துவிட்டது. உள்ளார்ந்த மென் தீவிரயுத்தம் ஒன்றை தன்னுள்வைத்திருக்கும் மிக அபத்தமான ஒரு யுத்தநிறுத்தமாகஇது மாறிவருகிறது. கிழக்கிலும் கொழும்பிலும் நடந்துகொண்டிருப்பவற்றைத் தொகுத்துப்பார்த்தால் நாட்டில் மென்தீவிர யுத்தமொன்று நடந்துகொண்டிருப்பது எந்தவொரு மிகச்சாதாரண அவதானிக்கும் தெரியவரும்.

ஆனால் அரசாங்கமோ அல்லது யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழுவோ நிகழும் சம்பவங்கள் எல்லாவற்றையும் யுத்தநிறுத்த மீறல்களாகப் பார்க்காத ஒருபோக்கே தூக்கலாகத் தெரிகிறது.

புலிகள் இதையொரு நிழல்யுத்தம் என்கிறார்கள். வேறுவார்த்தைகளில் சொன்னால் இது ஒரு புலனாய்வு யுத்தம் என்றும் சொல்ல முடியும்.

பீரங்கிகள் முழங்கவில்லை, குண்டு



வீச்சுவிமானங்கள் குத்திப்பறக்கவில்லை, துருப்புக்கள் பெருமெடுப்பில் நகரவில்லை என்பதைத்தவிர மற்றெல்லாவிதங்களிலும் ஒருவித சூட்சும யுத்தம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

எப்பொழுது கருணாவின் பிரச்சினையில் அரசாங்கம் சம்பந்தப்படுவதாக புலிகள் நம்பத்தொடங்கினரோ அப்பொழுதிலிருந்தே பிரயோக அர்த்தத்தில் இலங்கைத்தீவின் மிக நீண்ட யுத்தநிறுத்தம் ஒரு மென்தீவிர யுத்தத்தை

**நிலாந்தன்**

யும் தன்னுள் வைத்திருக்கத்தொடங்கிவிட்டது.

ஈழப்போரின் யுத்தபரிமாணங்களின் அடிப்படையில் கூறின், இது தீவிரம் குறைந்த ஒரு நிலையாகத் தோன்றலாம்தான். அதாவது, யுத்தநிறுத்தம் வந்தகாலத்திலிருந்த யுத்தப் பரிமாணங்களின்படி அரை நிறையடர்த்தி யுத்தமொன்று அப்பொழுது நிகழ்ந்துகொண்டிருந்தது. எனவே, அதன் அதிதீவிரத்தோடு ஒப்பிடுகையில், இப்பொழுது நடப்பது பொருட்படுத்தத் தக்கது அல்ல என்று சொல்லத்தோன்றும். ஆனால் இது யுத்தத்தின் பருமனைக்குறித்த ஒரு ஒப்பீட்டு அளவீடுதான். ஆனால் இங்கே பிரச்சினை, யுத்தத்தின் பருமனைக் குறித்த ஒப்பீடு அல்ல. மாறாக, நிகழும் சம்பவங்களின் பின்னாலிருக்கும் கசப்பு, வெறுப்பு, வன்மம், பழிவாங்கல் போன்றவற்றின் முடிவிடம் எது? என்பதுதான்.

இப்பொழுது எல்லா அவதானிகளின் மத்தியிலும் உள்ள பீதி நிறைந்த கேள்வி இதுதான் - இந்த மென்தீவிர யுத்தம் எப்பொழுது ஒரு முழுத்தீவிரயுத்தமாக மாறும்?

இலங்கைத்தீவின் இப்போதுள்ள பொருளாதார யதார்த்தத்தின்படியும் உலகளாவிய பொருளாதார யதார்த்தத்தின்படியும் சர்வதேச அளவில் புலிகளுக்கு வளர்ந்துவரும் அந்தஸ்தின் அடிப்படையிலும் கூறுமிடத்து யுத்தநிறுத்தத்தை முறிக்கக்கூடிய ஒரு முழுத்தீவிரயுத்தம் உடனடியாக வெடிக்கக்கூடிய நிலைமைகள் முழுவதும் வளர்ந்துவிடவில்லை எனலாம்.

ஆனால் யுத்தநிறுத்தம் உருவாகிய காலத்திலிருந்த நிலைமைகளை அண்மைக் காலங்களில் உண்டாகிய புதிய நிலைமைகளோடு ஒப்பிடுமிடத்து நாடு ஒரு யுத்தத்தை நோக்கிப்போகவில்லை என்று அடித்துக்கூற முடியாதிருக்கிறது. இது எப்படியென்று சிறிது விரிவாகப்பார்ப்போம்.

எல்லா யுத்தநிறுத்தங்களும் ஏதோவொரு வலுச்சமநிலையின் மீதே உருவாகின்றன. இலங்கைத்தீவின் யுத்தநிறுத்தம் சுமார் இரண்டரைவருடங்களுக்கு முன்பு உருவாகிய போது புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் ஒரு வலுச்சமநிலை இருந்தது. ஓயாத அலைகள் மூன்றிலிருந்துதொடங்கி கட்டுநாயக்க விமான நிலையத்தாக்குதல்வரையிலுமான தொடர் நடவடிக்கைகளின் பின் உருவாகிய வலுச்சமநிலை அது.

இந்த வலுச்சமநிலை அண்மை மாதங் கள்வரை மாறாதிருந்தது. என்பதால்தான் இடைக்கால நிர்வாக ஏற்பாட்டைக்குறித்து ரணில் அரசாங்கத்துடன் முரண்பாடு வந்து பேச்சுவார்த்தைகள் தேங்கி நின்றுவிட்ட ஒரு சூழலிலும் கூட யுத்தநிறுத்தம் கணிசமான அளவுபேணப்பட்டுவந்தது. ஆனால் அண்மைக் காலங்களில் நிகழ்ந்த இரண்டு மாற்றங்கள் இந்த வலுச்சமநிலையின் மீது அதிர்வுகளை ஏற்படுத்தின. அல்லது இந்த வலுச்சமநிலை மாறிவிடுமோ என்ற ஐயத்தைத் தோற்றிவித்தன.

இந்த அண்மைக்கால மாற்றங்களாவன - முதலாவது, சந்திரிகாவின் கூட்டுமுன்னணி கொண்டுவந்திருக்கும் ஸ்திரமற்ற ஆட்சி. இரண்டாவது, கருணாவிவகாரம்.

சந்திரிகாவின் ஸ்திரமற்ற ஆட்சி, அதிலும் குறிப்பாக அவர் ஜே.வி.பி.யுடன் வைத்துக்கொண்ட கூட்டு என்பன யுத்தநிறுத்தத்தில் ஈடுபடும் ஒருதரப்பாகிய அரசாங்கத்தின் நிலையை ஸதிரமற்றதாக்கின. தன்னை ஸ்திரப்படுத்துவதற்காக சந்திரிகா ஒரு யுத்தத்தைத்தொடங்கக்கூடு மென்றால் அதன் அர்த்தம் யுத்தநிறுத்தத்துக்கான ஏற்கனவே இருந்துவரும் வலுச்சமநிலையை அவர் மதிக்கவில்லை என்பதே.

இரண்டாவது, கருணாவிவகாரம். கருணாவின் பிரச்சினையோடு புலிகளின் பேரம்பேசும் சக்தி குறைந்துவிடும் என்றும் இதனால் யுத்தநிறுத்தவலுச்சமநிலை புலிகளுக்குப் பாதகமாக மாறிவிடும் என்றும் ரணிலும் எதிர்பார்த்தார் சந்திரிகாவும் எதிர்பார்த்தார், எதிர்பார்க்கிறார்.

ஆனால் புலிகள் கருணாவின்மீது மேற்கொண்ட படை நடவடிக்கைமூலம் யுத்தநிறுத்த வலுச்சமநிலையின் மாறாத்தன்மையை மறுபடியும் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துக் காட்டினர். ஆனால் அரசதரப்பு இதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லைப்போல தோன்றுகின்றது. இதுதான் இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும் மென்தீவிரயுத்தத்துக்குக்காரணம்.

கருணாவை மடக்குவதற்கு புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் கருணாவின் பிரச்சினை தொடங்கியதிலிருந்து சுமார் நாற்பது நாட்கள் வரை ஒருவித மென்தீவிர நிலையிலேயே காணப்பட்டன. ஆனால் கருணாவுக்கு எதிரான படைநடவடிக்கையின்போது யுத்தம் மென்தீவிர நிலையிலிருந்து அரைத்தீவிர நிலைக்கு வளர்ந்துசென்றது. ஆயினும் கருணா புறமுதுகிட்டதோடு அது மறுபடியும் மென் தீவிர நிலைக்கு இறங்கியது.

குறிப்பாக கடந்தகிழமை கொழும்பில் நடந்தவற்றை வைத்துப்பார்த்தால், கருணாவின் சிறகுகள் ஒவ்வொன்றாக அரியப்படுவது தெரிகிறது. அதாவது, வலுச்சமநிலை புலிகளுக்கு மேலும் சாதகமாக மாறிவருகிறது. இந்தநிலை தொடருமாயிருந்தால் யுத்தம் இப்போதுள்ள மென்தீவிர நிலையிலேயே தொடர்ந்தும் இருக்கும்.

ஆனால்அரசாங்கமும் கொழும்பிலுள்ள படைத்துறை நிபுணர்களும் கருணாவை வைத்து எதையாவது சாதிக்கலாம் என்று நம்பும்வரை இந்த யுத்தம் மென்தீவிர நிலையிலிருந்து தீவிரநிலைக்கு மாறும் ஆபத்து தொடர்ந்தும் இருக்கும்.

இது அரைத்தீவிர நிலைக்கோ அல்லது முழுத்தீவிரநிலைக்கோ வளர்ந்துவிடாதபடி தடுப்பதில் மேற்குநாடுகள் கரிசனையோடிருக்கின்றன என்பதனையே அண்மையில் உலக வங்கியின் அறிக்கையின் தமிழாக்கம் கிளிநொச்சியில் வெளியிடப்பட்ட வைபவம் குறிப்பால் உணர்த்துகிறது.



உலகவங்கியின் அறிக்கையின் தமிழ் வடிவம் கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது என்பது புலிகளின் ராஜீய அந்தஸ்தை உயர்த்தும் ஒரு செயலே.

கொழும்பில் மிகக்காட்டமாக விமர்சிக்கப்படும் இச்செயல்மூலம் மேற்கு நாடுகள் புலிகளைச் சாந்தப்படுத்த முயற்சிக்கின்றனவா? அதாவது, இப்போது நிலவும் மென்தீவிரயுத்தம் ஒரு அரைத்தீவிர யுத்தமாகவோ அல்லது முழுத்தீவிரயுத்தமாகவோ மாறிவிடக்கூடாது என்ற மேற்கு நாடுகளின் கவலை இதில் தெளிவாகத் தெரிகிறது.

ஆனால் அவர்கள் தமிழர்களுக்குத் தருவது அறிக்கையாகவும், அரசாங்கத்துக்குத் தருவது யுத்தக்கப்பலாகவும் இருப்பதே இங்குள்ளமுரணும் முக்கிய பிரச்சினையுமாகும்.

யுத்தமொன்று மூள்வதை அவர்கள் மெய்யாகவே விரும்பவில்லை என்றால் அவர்கள் அரசாங்கத்தின் மீது பயன்பொருத்தமான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டுமேதவிர, ஒரு மென்தீவிர யுத்தத்தில் நிகழ்பவற்றை யுத்தநிறுத்த மீறல்கள் அல்ல என்பது போல பாவனைசெய்யக்கூடாது.



இப்போதுள்ள களயதார்த்தத்தின்படி புலிகளின் ராஜீய அந்தஸ்தை உயர்த்துவது என்பது புலிகளின் பேரம்பேசும் சக்தி யுத்தநிறுத்தம் வந்தகாலத்தில் இருந்ததைப்போலவே இப்பொழுதும் மாறாதிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வதுதான். அதாவது, கருணாவின் விவகாரத்தால் புலிகளின் பேரம்பேசும் சக்தி குறைந்துபோய்விடவில்லை என்பதை ஒப்புக்கொண்டால்தான் யுத்தநிறுத்தத்தைக் காப்பாற்றமுடியும். இதிலிருந்தே அடுத்தகட்டச் சமாதானம் எனப்படுவது சாத்தியமாகும்.

இல்லையென்றால் ஏற்கனவே உள்ள வலுச்சமநிலை மாறவில்லை என்பதை அல்லது மற்றொரு புதிய வலுச்சமநிலை உருவாகிவிட்டது என்பதை நிரூபிப்பதற்கான மற்றொரு வன்தீவிர யுத்தத்துக்கு நாட்டை இட்டுச்செல்வதைத்தவிர வேறுவழியிருக்காது.

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...!
நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடர்
தமிழ் தேசியமே தமிழர் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...

## இந்தியா புரிந்து கொள்ளுமா...?



சமாதான முயற்சிகள் இழுபறி நிலைக்குள் தொடர்வதற்கு அரசின் முரண்நோக்குடன் கூடிய செயற்பாடுகளே காரணம் என்பதைச் சுட்டிக்காட்டும் வெளிப்படையான கருத்துக்களை அரசியல் ஆய்வாளர்கள் வெளியிடத்தொடங்கியுள்ளனர் என்றே கூறவேண்டும்.

சமாதான முயற்சிகளின் அனுசரணையாக செயற்பட நோர்வேக்கு மீண்டும் அழைப்பு விடுத்தவர் சந்திரிகாவே தான். ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை கலைத்தது முதல் சமாதான முயற்சிகளில் இருந்து மௌனம் காத்து வந்த நோர்வேயை மீண்டும் அழைக்கவேண்டிய அவசியம் சனாதிபதிக்கு ஏற்பட்டமைக்கு அவரின் சமாதானம் மீதான விருப்பார்வ அக்கறை காரணமல்ல.

சமாதானத்தின் அடிப்படையில் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்ட சர்வதேசக்கடன் உதவிகளை உடனடியாக எந்த யுக்தியை கையாண்டேனும் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தேவை அரசுக்கு தவிர்க்கமுடியாத அவசியமாகவே இருந்தது.

நோர்வேயின் அனுசரணையின்றி மேற்குலகத்தினதும் அதன் ஆதரவுச்சக்திகளினதும் உதவிகளைப்பெறுதல் முடியாது என்பதை சந்திரிகா தெளிவாகவே உணர்ந்திருந்தமையே சந்திரிகாவின் 'நோர்வே அழைப்பு' நாடக அரங்கேற்றத்திற்கான காரணமாகும்.

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நேர்மை அரசிடம் கிடையாது என்பதற்கு நோர்வே எதிர்ப்பாளர்களின் ஆதரவுடனே அரசு அமைந்துள்ளது என்பதே காரணமாகும்.

அவர்கள் நோர்வே எதிர்ப்பாளர்கள் மட்டுமல்ல சமாதான எதிர்ப்பாளர்களும் கூட...

இந்த நிலையில் சனாதிபதியால் அழைக்கப்பட்ட நோர்வேயோஒஸ்லோ கொழும்பு, வன்னி, வாஷிங்டன்,டில்லி என அல்லாடி அலைந்து களைத்து நொந்து போன சூழலில், அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரமதர் மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே சூடுகண்ட பூனையாக இருக்கும் இந்தியாவை சமாதான முயற்சிகளுக்குள் தலையிட வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.

இது "உள்ளதையும்கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்" என்ற பழமொழியை நினைவு படுத்தவே செய்கிறது. ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட சமாதான நகர்வுகளின் அமெரிக்க ஆதரவுச் சக்திகளின் கை ஓங்கி இருந்ததால் அதிருப்தி கொண்டிருக்கும் இந்தியா இலங்கைப்பிரச்சினைக்குள் எச்சரிக்கையுடன் மூக்கை நுழைக்கத் தருணம் பார்த்து நிற்கும் பலவீனம் குறித்து இலங்கையரசுக்கு நன்கு தெரியும்.

இலங்கைக்கோ சமாதானம் குழம்பவேண்டும்.. ஆனால் அதற்குக்காரணமாக தாம் இருக்கக்கூடாது... இந்தியாவை, இதற்குள் இழுத்துவிட்டால் நோர்வே இந்திய அணுகுமுறை முரண்பாடுகள் சமாதானத்தை இழுத்தடித்து விடுதலைப்புலிகளை போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டிலிருந்து விலகிப்போக வைக்கும் என்றே சிங்கள ஆட்சிபீடம் கணக்குப் போட்டு செயற்படுகிறது என்பது தெளிவு. முன்னர் "கெட் அவுட்" (வெளியே போ...!) என்றவர்களும் இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றி போதித்தவர்களும்... இன்று இந்தியாவுக்கு சுய நல அழைப்பு விடுக்கிறார்கள்...! இந்திய அரசு இதனைப் புரிந்துகொள்ளுமா?

---

## அரசின் உள் நோக்கம்...?



இலங்கை அரசின் 'விலாங்குக்' குண அணுகு முறையால் அமெரிக்கா-பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே இலங்கை மீதான தத்தமது ஆதிக்க மோகம் காரணமாக ஒரு திரைமறைவு போர் ஆரம்பமாகியுள்ளது.மீனுக்கு தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டி இரு தரப்பையும் பேய்க்காட்டிப் பிழைப்பு நடாத்தும் இயல்பு விலாங்கு மீனுக் கேயுரிய தனித்துவக் குணாம்சமாகும்.

இலங்கைமீது- இலங்கையின் உள் விவகாரங்களை- அதாவது இனப்பிரச்சினையைப் பயன்படுத்தி- ஏதோ ஒரு வகையில் நுழைந்து தமது ஆதிக்க வலுவைப்பிரயோகித்து, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது இராணுவ - அரசியல் இலக்குகளை எட்ட நெடுங்காலமாகவே இந்தியாவும் அமெரிக்காவும் பல்வேறு வகையில் முயன்று வருவது தெரிந்த விடயமேயாகும்.

இலங்கையில் ஏதோ வொருவகையிலாவது சமாதானம் ஏற்படுவதை இந்த இரு நாடுகளும் ஒரு போதுமே முழுமையாக விரும்பியது கிடையாது. போருக்கு ஆயத்தம் செய்யப் பயிற்சிகளையும், ஆயுத தளபாடங்களையும் வழங்கிக்கொண்டே சமாதானப் பாடலையும் இசைக்கும் போலித்தன அணுகுமுறையை இரு நாடுகளும் போட்டி போட்டுக்கொண்டு மாறிமாறி கையாண்டமையால் அனுகூல மடைந்தது சிங்கள ஆட்சி பீடங்கள் மட்டுமே ஆகும்.

இலங்கையை தங்கள் தங்கள் நாட்டின் கழிக்கப்பட்ட ஆயுத தளபாடக் குப்பைகளின் விற்பனைச் சந்தையாகக் கருதும் இந்த நாடுகள் அதனைத் தொடர்ந்தும் இலங்கையின் தலையில் கட்டி அடிக்க இங்கு யுத்த சூழலை அப்படியே வைத்துக்கொண்டு சமாதானம் பேசி வருவது தான் அயோக்கியத் தனமானதாகும்.

இலங்கையரச பீடத்தவர்க்கு இவ்விரு நாடுகளின் உள் நோக்கங்களின் தன்மையும் பலவீனமும் புரியும் என்பதால் தங்களின் பேரினவாதத் தேவைகளுக்கேற்ப இரு தரப்பினரையும் சமாளித்து பேய்க்காட்டி தமக்குத் தேவையானவற்றை பெற்றுவருவது நுட்பமான தந்திரோபாயமாகும்.

இருநாடுகளுடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்கின்றார்கள் இரு நாடுகளிடமிருந்தும் இராணுவ ஆயுத பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

இரு நாடுகளுக்கும் விசுவாசமானவர்கள் போல் இதுவரை நடித்தும் வருகின்றார்கள்....

ஆனால் அண்மைக்கால இந்திய இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் அமெரிக்கா-பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு கடும் சினத்தை உண்டு பண்ணியுள்ளதுடன் இலங்கைக்கு இராணுவ ஆயுத உதவிகள் வழங்குவது தொடர்பாக அமெரிக்கா மற்றும் அதன் சார்பு நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே கடும் மோதலை உருவாக்கியுமுள்ளது.

அவர்களிடையேயான மோதல் ஒரு புறமிருக்க போர் நிறுத்த உடன்பாட்டின் முக்கிய அம்சமான இராணுவச் சமநிலையை அரசுக்கு விடுதலைப்புலிகளுக்குமிடையே குழப்பவே இந்த நாடுகளின் இராணுவ உதவிகள் வழிவகுக்கும் என்பதால். இந்த மோதல் சமாதானத்தை குழப்பி போரை ஆரம்பிக்க வைக்கும் உள்நோக்கம் கொண்டவையாகவே உள்ளன.

---

## எதிர்பாராத எச்சரிக்கை



கடைசியில் நோர்வேயின் சமாதான ஏற்பாடுகளின் பொறுப்பில் இருக்கும் அந்த முக்கியமான மனிதர் தனது மனக் கொதிப்பையும் கோபத்தையும் வார்த்தைகளாக வெளிப்படுத்தியேவிட்டார்.

விதார் ஹெல்கேசனைத்தான் கூறுகிறோம்.

'நெருப்புடன் விளையாடாதீர்' என நறுக்கான வார்த்தைகள் மூலம் அவர் விடுத்துள்ள எச்சரிக்கை சிங்களப்பேரினவாதிகளின் அபிலாஷைகளுக்கேற்ப ஆட்டம் போடும் சிறிலங்கா அரசுக்கு கிடைத்துள்ள எதிர்பாராத எச்சரிக்கைதான்.

தனது வருகைக்கு முன்னர் நோர்வேயின் மனநிலையை வெளிப்படுத்தும் நோக்குடன் அவர் கூறியுள்ள கடுந்தொனிகொண்ட கருத்துக்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்கள் தொடர்பான சிங்கள அரசின் சறுகல் தந்திரோபாயங்களில் விடுதலைப்புலிகள் மட்டுமல்ல. நோர்வேயும் அதிருப்தி கொண்டுள்ளமையையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

தமிழர் தரப்பினரை - அதாவது விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் தமது நிலைப்பாட்டை தெளிவாக ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்துள்ளமையைக் கருத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

கடந்த ஐக்கிய தேசியமுன்னணி ஆட்சியின் போது ஆரம்பமான சமாதானப் பேச்சுவார்த்தை நகர்வுகளின் ஒவ்வொரு கட்டத்திலும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான, அர்ப்பணிப்புடன் கூடிய ஒத்துழைப்பினை விடுதலைப்புலிகள் தெளிவானதும், வெளிப்படையானதுமான ஒரு கொள்கை நிலைப்பாட்டுடன் சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கும் நோர்வேக்கு தமது முழு ஒத்துழைப்பை வழங்கியே வந்துள்ளனர்.

மாறாக சிறிலங்கா அரசு - அது ரணில் காலத்திலும் சரி, இன்றும் சரி இந்த சமாதான பேச்சுவார்த்தை தொடர்பான விடயத்தில் இன்னமும் உறுதியானதும் வெளிப்படையானதுமான ஒரு கொள்கையை முன்வைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

தென்பகுதி அரசியல் தலைமைகளிடையேயான ஆதிக்கப்போட்டியில் இனவிவகாரம் அவர்களின் அரசியல் எதிர்கால நலன் குறித்த முக்கிய விடயமாக இருப்பதால் அதற்கு ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வொன்றினைக் காணும் விசுவாசமான தேசநலனுடன் கூடிய சிந்தனையுடன் அவர்களால் துணிச்சலுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட முடியாதுள்ளது என்றே கூறவேண்டும்.

இந்த நிலைமையில் மாற்றம் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. சமாதானம் பேசிக்கொண்டே காலத்தைக்கடத்தி, மீண்டும் போர்ச் சூழல் ஒன்றை தோற்றுவிக்கும் பேரினவாத சிந்தனை அவர்களிடமிருந்து அகலும் என்று தோன்றவுமில்லை.

அவர்கள் நெருப்புடன் - அதாவது போருடன் விளையாடவே விரும்புகிறார்கள் என்பதையே உணரமுடிகிறது.

விட்ட இடத்திலிருந்து அதாவது இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான விடயத்திலிருந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டுமென்ற விடுதலைப்புலிகளின் நியாயமான கோரிக்கையில் விட்டுக்கொடுத்தல் என்பதும் சாத்தியமற்றதாகவே உள்ளது.

இந்த நிலையில் நோர்வேயின் எச்சரிக்கை எத்தகைய தாக்கத்தை அரசில் ஏற்படுத்தப் போகிறது.?

---

## எல்லோருமே மறுப்புத்தான்...!



கருணா விவகாரம் கடைசியில் அமெரிக்காவுக்கும் சிக்கலை ஏற்படுத்தும் ஒன்றாகிவிட்டது. கடந்த வார முடிவில் கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்கு சென்றதாகக் கூறப்படும் அந்தக் கிழக்கின் குழப்பவாதியான கருணாவை அங்கு சில அமெரிக்க அதிகாரிகள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கொழும்பின் பிரபல ஆங்கில வாரப்பத்திரிகையொன்று வெளியிட்டுள்ள செய்தியொன்றினால் கொழும்பில் அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்பட்டு விட்டுள்ளது.

ஆரம்பத்தில் கருணா கோமாளித்தனமாக தனது குழப்பவாதக் கூத்துக்களை தொடங்கிய வேளையில் அரசு அதை வைத்தே ஒரு அரசியல் நெருக்கடியை தோற்றுவித்து விடுதலைப்புலிகளிடையே பிளவினை ஏற்படுத்தும் சதியை மேற்கொண்டது. கருணாவுக்கும் அரசதரப்பினருக்குமிடையே ஏற்பட்ட ரகசியத் தொடர்புகள் குறித்த செய்திகள் வெளியான போது இராணுவத் தளபதி பலகல்லேயின் பெயர் அதில் சிக்கியது. அவர் கருணாவுக்கு நற்சான்றிதழ் வழங்கி அறிவிலித்தனமாக கௌரவிக்கவும் செய்தார்.

அதே அவருக்கு சிக்கலை ஏற்படுத்தவும் செய்தது. கருணாவிவகாரத்தில் அரசு அவருக்கு பாதுகாப்பளிப்பதோ அவரைப் பயன்படுத்த முயல்வதோ போர்நிறுத்த உடன்பாட்டுக்கு முரணானது என விடுதலைப் புலிகள் எச்சரித்த போது 'படா'ரெனப் பின்வாங்கி தமக்கும் கருணாவுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என அறிக்கை விட்டுத் தப்பிக்கப் பார்த்தார்.

அதனைத் தொடர்ந்து அரசும் அதேபோன்ற மறுப்பை பொய்யாக வெளியிட வேண்டியதாயிற்று.

கருணா கிழக்கிலிருந்து வெறும் மனிதனாய் துரத்தப்பட்ட போது அவரைப் பாதுகாத்துக் கொழும்புக்கு இராணுவ உதவியுடன் தப்பிச் செல்ல உதவியதில் அலிஸாகிர் மௌலானா மாட்டிக்கொள்ள அதற்காக ரணில் விக்கிரமசிங்க தேசியத் தலைவருக்குத் தனிப்பட கடிதம் எழுதி தனக்கும் கட்சிக்கும் அச்சம்பவத்துடன் தொடர்பில்லை என்று கூற வருத்தம் தெரிவிக்க மௌலானாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் கைவிட்டுப் போயிற்று.

கிழக்கில் கருணா கும்பல் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் கைக்கூலிகளாகச் செயற்பட்டு வன்முறைகள், கொலைகள் ஆகியவற்றை மேற் கொண்டதால் சமாதான முயற்சிகள் பாதிப்படைய இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட அதனை மறுத்து தமக்கும் அச்சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றார்.

ஆனால் அமைச்சர்கள் டக்ளஸ் மங்கள சமரவீரவுக்கும் கருணாவுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை உறுதி செய்ய பிரச்சினை மேலும் சிக்கலாகியது.

திடீரென கருணா அநுராவுடன் ஜோடிசேர்ந்து சிங்கப்பூருக்கு சென்றதாகச் செய்தி வர அநுரா அதை மறுத்துத் தனக்கு அந்த நபரையே தெரியாதென்று அறிக்கைவிட்டார்.

இப்போது அமெரிக்க அதிகாரிகள் சிங்கப்பூரில் கருணாவை சந்திக்கும் ஏற்பாடு குறித்த செய்தி வெளியானது அமெரிக்க தூதரக அதிகாரிகள் அதனை மறுத்துள்ளனர்.

ஆக ஒரு விடயம் தெளிவாகியுள்ளது.

கருணாவுடன் தமக்குத் தொடர்பிருப்பதென்பது ஒரு அசிங்கமான விடயமென்றே அனைத்துத் தரப்பும் (டக்ளஸை விடவும்) கருதுகின்றமை இப்போது அவரவர் மறுப்புகள் மூலம் தெரியவந்துள்ளது... உறுதியாகியுள்ளது.

செங்குட்டுவன்

# முறியடிக்கப்பட்ட சிங்களப் புலனாய்வுச் சதி

தமிழீழத் தேசிய ஊடகமான ஈழநாதம் தினசரி பத்திரிகைகளில் 1992 ஆம் ஆண்டு காலப் பகுதிச் செய்திகளை மீள் பார்வைக்குட்படுத்திய பொழுது, சிங்களப் புலனாய்வாளர்கள் புலிகளின் பகுதிகளுக்குள் நாச வேலை செய்ய முயன்றது பற்றியும், அம் முயற்சி இரு தமிழர்களின் தமிழ்த்தேசிய பக்தியால் முறியடிக்கப்பட்டிருந்தது பற்றியுமான செய்திகளைக் காண முடிந்தது.

அச்செய்திகளில் வெளிவந்த தலைப்புக்களை மட்டும் இங்கு முதலாவதாகக் கண்ணோக்குவோம்.

"இராணுவம் அனுப்பிய வெடிபொருட்கள் உயர்சக்தி வாய்ந்தவை" என்றொரு தலைப்பும்,

"படையினர் இரகசியமாக அனுப்பிய வெடிபொருட்கள் பார்வைக்கு" என்று இன்னுமொரு தலைப்பும்,

"பயணிகள் செல்லும் பாதையில் வெடிகுண்டு வைக்கச் சதி" என்று மற்றைய தலைப்பு என பல தலைப்புக்கள் பெரிய எழுத்துகளில் அச்சிடப்பட்டிருந்தன.

**இராணுவம் அனுப்பிய வெடிபொருட்கள் உயர் சக்தி வாய்ந்தவை**

(நந்து நிருபர்) ஓமந்தை சேமமடு வீதியில் பொதுமக்களை கொலைசெய்

நேற்றுமாலை விடுதலை புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெற்ற பத்

புரிந்து கொண்ட இந்த இரு வரும் உடனடியாக எம்முடன் தொடர்பு கொண்டனர்

இத்தலைப்புக்களின் உள்ளடக்கத்தில் சிங்களப் புலனாய்வாளர்களின் நாசவேலைக்கான முயற்சியை விபரித்த தகவல்கள் இருந்தன. அத்தோடு இரு தமிழர்களும் வெடிகுண்டை புலிகளின் புலனாய்வாளர்களிடம் ஒப்படைத்ததிற்காக 'அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்' என்கின்ற ஆசிரியர் தலையங்கத்தையும் பதிவு செய்திருந்ததினையும் பார்க்க முடிந்தது.

இப்பாராட்டுக்குரியவர்களான சிவனு கந்தசாமி, இராசமணி ஆகிய இருவரைப்பற்றியும், சிங்கள இராணுவப் புலனாய்வாளர்களான ராஜா, சுனில் ஆகிய இருவரது திரைமறைவு புலனாய்வு நகர்வுகள் பற்றியும் அலசி ஆராய்ந்து பார்த்த பொழுது, இன்னும் பல தகவல்கள் புலப்பட்டன.

சிங்கள தேசத்தின் மனிதாபிமானமற்ற பொருளாதாரத் தடைகளால் தமிழர்கள் துயரங்களை அனுபவித்தார்கள். இத்துயரங்களின் பிடியிலிருந்து விடுபட விரும்பி தம் தேவைக்கான பொருட்களை கொள்வனவு செய்யவும், வியாபாரம் செய்வதற்காக பொருட்களைக் கொள்வனவு செய்யவும் தமிழர்கள், சிங்கள அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சென்று வந்தார்கள்.

இப்பயணங்களின் போது அதிகளவு மக்கள் பல்வேறு வகைகளில் அனுபவித்த கடினங்களின் விளைவாக தமிழர்களின் உடலிலும், உள்ளத்திலும் நெருக்கீடுகள் ஏற்பட்டது. இந் நெருக்கீடுகளால் தமிழர்களைச் சூழ்ந்த துன்பத்தை சிங்களம் முதலீடாக்கி தமது புலனாய்வுப் பணிகளை முன்னெடுத்தது.

அப்புலனாய்வுப் பணியானது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைப்பதையும், தமிழ் மக்களைப் படுகொலை செய்வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

அந்தக் காலப்பகுதியில் தான் கடினமான வாழ்க்கையின் சுமையைச் சுமந்தபடி கந்தசாமியும், இராசமணியும் வியாபாரிகளாக வவுனியா நகருக்குச் சென்று வரலானார்கள். அதுவும் சிங்கள தேசத்தின் தமிழின ஒடுக்குமுறையால் நிர்ப்பந்திக்கப்பட்டு வியாபாரிகளாகத் தம் தொழிலை மேற் கொண்டார்கள்.

இவ்விருவரும் வவுனியா நகருக்குச் சென்று வரும் பொழுது, தடைமுகாமில் MI யைச் சேர்ந்த ராஜா, சுனில் ஆகியோருடன் இவர்களுக்கு உறவு ஏற்படச் சந்தர்ப்பம் உருவாகியது. இச்சந்தர்ப்பங்களின் பொழுது, ராஜாவும், சுனிலும் தம் புலனாய்வுப் பணிக்காக இவர்களை உள்வாங்கும் நோக்கத்துடன், விதம் விதமான அணுகுமுறைகளைக் கையாண்டார்கள். பின் ஒரு சந்தர்ப்பத்தில் தாம் தரும் வெடிகுண்டை புலிகளின் பகுதியினுள் வெடிக்க வைத்தால் பணம் மற்றும் சலுகைகள் தரலாம் என்கின்ற ஆசை வார்த்தைகளைக் கூறி, இருவரையும் நாச வேலையில் ஈடுபடுத்துவதற்கான ஆரம்ப முயற்சியை மேற்கொண்டார்கள்.

**பொறுப்புடன் நடந்த பொதுமக்கள் இருவர்**



ஓமந்தை — சேமமடு வீதியில் வைப்பதற்காக வவுனியாப் படையினர் வழங்கிய வெடிப் பொருள்களை நாசூக்காக அவர்களிடமிருந்து பெற்று வந்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்த தமிழீழ மக்கள் இருவரையுமே மேலே உள்ள படங்களில் காண்கிறீர்கள்.

நவரத்தினம் இராசமணி (பன்னைராயன்கட்டு), சிவனு கந்தசாமி (ஓமந்தை) ஆகிய இவர்கள் இருவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்களைப் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

அம்முயற்சியை ராஜாவும் சுனிலும் விடாப்பிடியாகச் செய்து தம் உழைப்பின் பயனை அறுவடை செய்வதற்குக் காத்திருந்தார்கள். அதிலே போதிய கவனத்தையும் அதீத அக்கறையும் செலுத்தினார்கள்.

இவை இப்படி இருக்க மறு

**—— நீலன் ——**

புறத்தில் கந்தசாமியும், இராசமணியும் புலிகள் தடைமுகாமிலுள்ள தமிழீழ புலனாய்வாளர்களிடம் ராஜா, சுனில் ஆகியோரின் தீய நோக்கம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் தெரியப் படுத்தினார்கள். அதாவது மாவீரன் பாபுவின் பொறுப்பின் கீழ் செயலாற்றிய போராளியான லதனிடமே தகவல்கள் பரிமாறப்பட்டன.

அத்தகவல்கள் அனைத்தும் புலிகளின் புலனாய்வுத்துறையினரால் கவனத்தில் கொள்ளப்பட்டன. அத்தகவல்களில் ஆழ்தளத்தில் இருக்கும் தீயநோக்கத்தை சீர்குலைக்கவும் சிங்களத்தின் நாச வேலையை முறியடிக்கவும் தீர்மானமொன்றை புலிகள் எடுத்தார்கள். அது யாதெனில் வெடிகுண்டை பெறுவதற்கான சம்மதத்தை இருவரும் சிங்களப்புலனாயவாளர்களிடம் தெரியப்படுத்துவதாகும்.

அந்த அங்கீகாரத்துடன் இரு தமிழர்களும் வெடிகுண்டை புலிகள் பகுதிக்குள் கொண்டு செல்வதற்கான விருப்பத்தை MI ராஜன், சுனில் ஆகியோரிடம் தெரியப்படுத்தினார்கள். இம்மாற்றம் தங்கள் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்கிற மகிழ்வில் மூழ்கியபடி விரைந்து செயலில் இறங்கினார்கள்.

இரு தமிழர்களையும் வவுனியா நகர்ப் பகுதியில் இரவு 7 மணியளவில் நிற்கும் படியும் தாம் வந்து சந்திப்பதாகவும் ராஜாவும் சுனிலும் அவர்களிடம் கூறினார்கள்.

அதற்கமைய வெள்ளை வான் மூலம் இரு தமிழர்களையும் ஏற்றியபடியே யோசேப் முகாம் வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள MI அதிகாரியான முத்தலிப்பு இருவரையும் சந்தித்து உரையாடினார்.

இவை நடந்து முடிந்ததும் வெடிகுண்டை வெடிக்க வைப்பதற்கான அறிவூட்டல்கள், விளக்கங்கள் ராஜா, சுனில் ஆகியோரால் இரு தமிழர்களுக்கும் கொடுக்கப்பட்டது. இதில் கந்தசாமி முன்னர் கல்லுடைக்கும் தொழில் செய்த காலத்தில் வெடிமருந்து வெடித்த காயம் பட்டிருந்த தகவலை MI யினர் அறிந்து இருந்தார்கள். இதனையும் தமக்குச் சாதகமான பக்கமாக இருப்பதனை நினைத்து தமக்குள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

இத் தயார்ப்படுத்தல்கள் முடிந்ததும் நாசகாரத் திட்டம் பற்றி விபரிக்கையில் இளமருதங்குளத்துக்கும்- நாவற்குளத்துக்கும் இடையில் இருக்கும் மதகடியில் வெடிகுண்டை தாக்கும் படியும், வாகனச்சில்லு ஏறக்கூடியவாறு அமுக்க பொறியை சரியான இடத்தில் புதைக்கும் படியும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

தமிழர்களையே பயன்படுத்தி தமிழ்மக்களுக்கு நாசம் விளைவிக்கும் நாசகார சதிவேலையில் தமக்கு வெற்றி நிச்சயம் என்கிற நம்பிக்கையோடு ராஜாவும் சுனிலும் வெடிகுண்டைப்புலிகளின் சோதனைக்குள் அகப்படாதவாறு பொதி செய்தார்கள்.

## பாராட்டுக்குரியவர்கள்

**ப**யணிகள் போக்கு வரத்துப் பாதையில் வெடி குண்டு வைத்து, தமிழ் மக்களைப் படுகொலை செய்ய சிங்கள இராணுவம் மேற்கொண்ட நாச

வெள்ளை நிறமுடைய C4 வெடிமருந்தை கோதுமை மாவினுள் மறைத்து ஒரு பொதியும் வெடிமருந்தை வெடிக்கவைக்கும் கருவிகளை கிறீம் கிறேக்கர் பிஸ்கட் பெட்டியினுள் மறைத்து மற்றொரு சிறிய பொதியும் ஒழுங்கு செய்து இரு தமிழர்களிடமும் MI யினர் ஒப்படைத்தார்கள்.

இவ்வொழுங்குகளைச் செய்து கொண்டிருந்த வேளையில் ஒரு சிங்களச் சிப்பாய் சிங்கள மொழியில் ராஜா, சுனிலுடன் கதைக்கும் போது எமக்கு உதவி செய்ய முன்வந்த இரு தமிழர்களும் புலிகளிடம் அகப்படாதவாறு பொதியை சிறந்ததாக செய்யவேண்டிய கருத்தினை தெரிவித்தார். இதன் போது வெடிகுண்டை கொண்டு செல்பவர்களும் தமிழர்கள் என்பதால் குண்டு அகப்பட்டால் சாவதும் தமிழர்கள், அகப்படாது தாம் சொல்லிய இடத்தில் வெடித்தால் கொல்லப்படுவதும் தமிழர்கள் எப்படி இருப்பினும் தமிழர்களுக்கே உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. அதுவும் நமக்கு இலாபம் தானே என சிங்களப் புலனாயவாளர்கள் சிப்பாய்க்கு எடுத்துக் கூறினார்கள். இவ்வுண்மையான உரையாடல் சிங்களம் தெரிந்த கந்தசாமியின் காதில் விழுந்தன.

**பயணிகள் செல்லும் பாதையில் வெடிகுண்டு வைக்க சதி**

**அரசின் நாசகார திட்டம் அம்பலம்**

எமது விடுதலைப் போராட் ...த்தை இராணுவ ரீதியாக

மக்களை இலக்கு வைத்து வெடிகுண்டுத் தாக்குதல்களை

நாசத் திட்டத்திற்குப் பயன் படுத்த எண்ணித் தொடர்பு

அவைகள் எதனையும் காட்டிக் கொள்ளாது MIயினரின் சதி வேலைக்கான முனைப்பிற்கு தாம் உடந்தையாளர்களாக இருப்பது போல் பாசாங்கு செய்து வெடிகுண்டுப் பொதியை இரு தமிழர்களும் பொறுப் பேற்றுக்கொண்டு புலிகளின் தடை முகாமிற்கு வந்து சேர்ந்தார்கள்.

சிங்களப்புலனாய்வாளர்கள் தாம் வெற்றிகரமாக அனுப்பிவைத்த குண்டு வெடித்து தமிழர்களுக்கு அழிவை ஏற்படுத்தப்போகும் செய்திக்காகக் காத்து இருந்தார்கள். ஆனால் இரு தமிழர்களிடமும் தாம் தோற்றுப் போன அதிர்ச்சியான செய்தியையே அவர்களால் அறியும் நிலை ஏற்பட்டது. அதாவது கந்தசாமியும் இராசமணியும் வெடிகுண்டை புலிகளின் புலனாய்வுத்துறையினரிடம் ஒப்படைத்து தம் தமிழ்த்தேசிய பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்கிற அடிப்படையில் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

இவ்விரு தமிழர்களின் பொறுப்புணர்வும் துணிகர செயலும் தமிழ்த் தேசம், மக்கள் எதிர்கொள்ளவிருந்த அழிவிலிருந்து பாதுகாத்தது.

இருவரும் தமிழ்மக்களின் அளப்பெரிய நன்மைக்காக தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி தம் பெயர்களை தமிழீழத்தில் நிலைக்கச்செய்துள்ளார்கள்.

இருவரும் ஏழ்மையினால் அல்லல்பட்டுக்கொண்டிருந்த போதிலும் அவர்களை வறுமை வாட்டியெடுத்த போதிலும் MIராஜா, சுனிலின் ஆசை வார்த்தைகளுக்குள் வீழ்ந்து விடவில்லை. மாறாக மனப்பலமுள்ளவர்களாக இருந்து சிங்களத்தின் நாசகாரநோக்கத்தை தோற்கடித்தார்கள். இதனால் கந்தசாமி, இராசமணி ஆகியோர்களை வரலாறு மறக்க முடியாத அளவுக்கு அவர்களின் பணி உயர்வானது.

இவ்வாறான தமிழ் தேசிய பக்தியுள்ளவர்களால் சிங்களப்புலனாய்வு அமைப்பு பலமுறைகள் தோல்வியினை சந்தித்து இருப்பினும் தம் மறைமுக நாசகாரவேலைகளை மேற்கொள்வதில் தொடர்ச்சியாக பேணி வருகின்றது. ஆதலால் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்கிற எச்சரிக்கை உணர்வு தமிழர்களிடம் இருக்குமானால் நாசகார வேலைகளை முறியடிக்க முடியும்.

இத்தகைய முறியடிப்புப் பணிகளை முன்னெடுத்து வரும் தமிழீழ புலனாய்வு அமைப்பிற்கு நண்பர்களாக தமிழர்கள் இருக்கும் போது மட்டுமே சிங்களத்தின் இரகசிய அச்சுறுத் தல்களிலிருந்து தமிழ் தேசத்தைப் பாதுகாக்கமுடியும்.

தமிழ்த் தேசிய பக்தியுள்ளவர்களின் உழைப்பும் கடமை யுணர்வும் தமிழீழப் புலனாய்வு அமைப்பை பலப்படுத்தும் போது சிங்களப்புலனாய்வாளர்களின் ஆற்றல்கள் தமிழ் தேசத்திடம் மண்டியிட்டுக் கிடக்கும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 30 . 07 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# யார் தேடிக் கொண்டது...?

கொழும்பு கொட்டாவப்பகுதியில் நடைபெற்ற சம்பவத்தையடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பு தொடர்பாக அரசு விசேட கவனம் செலுத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான உத்தரவை சனாதிபதி சந்திரிகா பிறப்பித்துள்ளதையடுத்து, ஏற்கெனவே நடைமுறையிலிருக்கும் பாதுகாப்புத் திட்டத்தை மறுசீரமைப்பதுடன் நிரந்தரமற்ற சோதனைச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளதுடன், இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் நடமாடும் படைப்பிரிவும் மீண்டும் செயற்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவல்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

கொழும்பின் பாதுகாப்பு என்றபெயரில் கொழும்பில் இனி தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப் போகும் அசௌகரியங்களையே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தவகையில் இனி கொழும்பில் தமிழ் இளைஞர்கள் மீது காரணமற்றவகையில் கைதுசெய்யப்பட்ட பின்பு கைது செய்தமைக்கான காரணங்கள் தேடப்படப் போகிறது.

அத்துடன் தலைநகர் கொழும்பு என்பது பெரும்பான்மை சிங்களவர்களைத் தவிர, வேறு எந்த இனத்தவர்களும் சந்தேகத்துடன் நோக்கப்படும் ஒரு இடமாக மாறப்போகிறது.

அரசு புலிகளுக்கிடையிலான சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட முன்னர் இத்தகையதொரு நிலையே காணப்பட்டது.

மீண்டும் அத்தகையதொரு நிலையை உருவாக்க முயற்சிக்கப்படுவதையே கொழும்பு பாதுகாப்பு விவகாரம் சுட்டிக்காட்டுகின்றது.

நடந்துவரும் சம்பவங்களின் அடிப்படையில் நோக்கும்போது கொழும்பின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் முக்கியத்துவம் பெறுவது போலத் தோன்றலாம்

ஆனால் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளின் மூலம் கொழும்பின் பாதுகாப்பை அரசினால் உறுதி செய்துவிட முடியுமா எனக்கேட்டால் முடியாது என்றே கூறவேண்டும்.

காரணம்- சிறிலங்காப்படைத்துறையின் எந்தப் பிரிவுகளாயினும் சரி பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான குழுக்களையும் மனிதர்களையும் பாதுகாக்க முனைந்து கொண்டு கொழும்பை பாதுகாக்கமுனைவது அரசின் பலவீனத்தையே வெளிப்படுத்தும்.

பதிலாக கொழும்பின் உண்மையான பாதுகாப்புத் தொடர்பாக அரசு அக்கறைகொள்வதாக இருந்தால் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளுக்காக அமைச் சரவையிலிருந்து அரச படை அதிகாரிகள்வரை விசேட விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படவேண்டும்.

ஏனெனில் கொழும்பின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக நடைபெற்ற சம்பவங்கள் அனைத்துமே ஒரே சம்பவத்துடன் தொடர்வுபட்டதாகவே இருக்கிறது.

ஆகவே பாதுகாப்பை பலப்படுத்தவேண்டுமாயின் எந்த சம்பவம் கொழும்பின் அச்சுறுத்தலுக்குக் காரணகாரியமாக இருக்கிறதோ அதனை அகற்றுவதே பொருத்தமாகும்.

ஏனெனில் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் சிலரின் அனுசரணையுடனும் சிறிலங்கா புலனாய்வுத் துறையினரின் ஆலோசனையின் படியும்தான் கொழும்பின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சக்திகள் கொழும்பில் மையமிட்டுள்ளன.

இவர்களை கொழும்பில் பாதுகாக்கப்படுவது அரசுக்கு அதிக இலாபங்களைத் தரவல்ல ஒரு சக்தி என்பதைவிட கொழும்புக்கு ஆபத்தை கவர்ந்திழுக்கும் ஒரு பொறி என்பதே பொருத்தமானதாகும்.

இந்தநிலையில் ஆபத்தை கவர்ந்திழுக்கும் காரியங்களில் அரசே ஈடுபட்டுக்கொண்டு, கொழும்பின் பாதுகாப்புத் தொடர்பாக அலட்டிக்கொள்வது வேலியில் போன ஓணானைப் பிடித்து காதிற்குள் விட்டு விட்டு குத்துதே குடையுதே என்று கூறுவது போல இருக்கும்.

## தூரனின்பார்வை

# அலைக்கழிக்கப்படும் சமாதானமும் அரசாங்கத்தின் புதிய பிரசாரகரும்

**விடுதலைப்புலிகள் சமாதானம் தொடர்பான தமது நிலைப்பாட்டின் ஒரேதன்மையுடன் இருந்தாலும், அரசு அமைதிநிலையைக் குழப்பும் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருவதால் சமாதானத்தின் எதிர்காலம் தொடர்பில் தமது நம்பிக்கையிழப்பை கெல்கேசனிடம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.**

பகுதி I

இன்று எல்லாவகையிலும் அதிகம அலைக்கழிகப்படுபவர்கள் சமாதான ஏற்பாட்டாளராக இலங்கைப்பிரச்சினைக்குள் தலையை நுழைத்துள்ள நோர்வே அரசின் பிரதிநிதிகள், அமைச்சர்கள் மற்றும் தூதுவர்கள், சிறப்புத்தூதுவர்கள் ஆகியோர்தான்.

ஒஸ்லோ, கொழும்பு, வன்னி, புதுடில்லி , வாஷிங்டன், லண்டன் என இறக்கை கட்டி, இடைவிடாது கடந்த இரண்டரை ஆண்டுகளாகப் பறந்தும்கூட சமாதான முயற்சிகள் இன்னமும் இம்மியளவுகூட நம்பிக்கையூட்டும் வகையில் முன்னேறவில்லையென்றால்... அவர்களின் மனநிலை எப்படி இருக்கும்?

மீண்டும் மீண்டும் தோளிலிருந்து பாய்ந்து முருங்கை மரத்தில் ஏறிக்கொள்ளும் வேதாளத்தை இழுத்தெடுத்துத் தோளில் சுமக்கும் சலியாத விக்கிரமாதித்த முயற்சி நோர்வேக்காரருக்கு இருக்கவே செய்கிறது.

சமாதானத்தை ஏற்படுத்த நினைக்கும் அவர்களின் சலியாத உழைப்புக்கு தலைவணங்கவே வேண்டும்.

ஆனாலும் சிறிலங்கா அரசு சமாதான முயற்சிகளுக்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கும் என அவர்கள் எதிர்பார்ப்பது தான் பரிதாபகரமான விடயமாகும். பௌத்த சிங்களப் பேரினவாதம் அவ்வளவு சுயமாக சமாதானவேதத்தை ஓதும் என நோர்வேக்காரர் நினைத்தால் அவர்கள் ஏமாந்துபோவது நிச்சயம் தான். கடந்த சில நாட்களின் முன்னரும் அந்த மதிப்புக்குரிய நோர்வேப் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கேசன் கொழும்புக்கு வந்து சிறிலங்காவின் சமாதானத்துக்கான யுத்தம் என்ற தத்துவத்தைக் கண்டுபிடித்த சனாதிபதியான சந்திரிகாவைச் சந்தித்தபின்னர் வன்னிக்கு வந்து அரசியல்துறைப்பொறுப்பாளரைச் சந்தித்துப்பேசியபின்னர் முன்னரைப்போன்று உறுதியாக எதனையும் சமாதானம் தொடர்பாக அவரால் பேசமுடியாது போய் விட்டதென்னமோ உண்மைதான்.

அரசதரப்பினரால் நம்பிக்கையை யூட்டும்வகையிலான செய்திகள் எதனையும் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக வழங்க முடியாதுபோய்விட்டது.

கொழும்புக்குப் புறப்படும் முன்னரே 'நெருப்போடு விளையாட வேண்டாம்' என்ற கடும்சொற்களைப் பிரயோகித்து ஒரு அறிவுறுத்தலை விடுத்தபோதே நோர்வேக்கு இந்த முயற்சிகளில் ஒருவித வெறுப்பும் சினமும் ஏற்பட்டுவிட்டதை அனுமானிக்கக்கூடியதாக இருந்தது.

அவர் எதிர்பார்த்ததுபோல் கொழும்பு அரசு சமாதான எண்ணத்தில் இன்னமும் உறுதியாக இல்லை....

விடுதலைப்புலிகள் சமாதானம் தொடர்பான தமது நிலைப்பாட்டில் ஒரேதன்மையுடன் இருந்தாலும் அரசு அமைதிநிலையைக் குழப்பும் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருவதால் சமாதானத்தின் எதிர்காலம் தொடர்பில் தமது நம்பிக்கையிழப்பை ஹெல்கேசனிடம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

மீண்டும் கொழும்பு சென்ற அவர் அடுத்து எங்கு செல்வார் என்பது உடனடியாகத்தெரியவில்லை.

ஆனால் அவர் மனதளவில் சோர்ந்துவிட்டார்.

'தற்போதைய சூழ்நிலையில் சிறிய சம்பவங்கள்கூட பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்' என்றுள்ளார்.

இது வெறும் எச்சரிக்கையா? அலுத்துப்போன நிலையில் வெளிவந்த வார்த்தைகளா?

ஆனால் அரசை சமாதானத்துக்குக்கொண்டுவருவது நோர்வேக்கு சுலபமானதாக இருக்கப் போவதில்லை என்பதுமட்டும் உண்மை.

பகுதி II

'எல்லோரும் ஏறிக்களைத்த குதிரையில் சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்' என்ற கதைபோல் இருக்கப்போகிறது கருணாவின் கதையும். முதலில் தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என்று கத்திக் கொண்டு அலிசாகிர் மௌலானாவில் 'குல்லா' வுக்குள் ஒளிந்து தேனகத்தையும் , மீனகத்தையும் மட்டுமல்ல, கிழக்குப்பிராந்தியம் முழுவதையும் விட்டே தப்பியோடி இராணுவத்தினரிடம் சரணடைந்து தலைமறைவாகிப் பின்னர் டக்ளஸ் தேவானந்தா என்ற 'ஒற்றைமெம்பர்' கட்சித்தலைவரோடு இணைந்து புதிய அரசியல் கட்சியை உருவாக்கப் போவதாகவும் போரில் குதித்து களைத்துவிட்டதால் சனநாயக நீரில் குத்திக்கப்போவதாகவும் பி.பி.சி.மூலம் விளம்பரம் செய்துவிட்டு அநுராபண்டாரநாயக்க என்ற அந்தப்பெரிய மனிதரின் பின்னால் சிங்கப்பூர் சென்றுவிட்டதாகக் கூறப்படும் விலாசமற்றுப்போன கருணா விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்வதாகவே சிங்கப்பூருக்கு அனுப்பப் பட்டுள்ளாராம்.

பாவம் கருணாவுக்குக் கிடைத்தது கடைசியில் ஒலிபெருக்கி ஸ்தானமா? வெட்கம்...வெட்கம்... அதனைவிட வெட்கம் அரசுக்கு..! கதிர்காமரின் பிரசாரம் மீதான நம்பிக்கையை அரசு இழந்துவிட்டதா? என்னடா சிறிலங்காவுக்கு வந்தசோதனை! அத்துலத்துமுதலி காலம் முதல் இன்றுவரை தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தை கொச்சைப் படுத்தவும், விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாக சித்திரிக்கவும் எத்தனை கருங்காலித் தமிழர்களை சிங்கள அரசு பயன்படுத்தியுள்ளது என்று பட்டியலிட்டுப்பாருங்கள்....

கே.டபிள்யூ. தேவநாயகம் , செ.இராசதுரை, டக்ளஸ் தேவானந்த, லக்ஸ்மன் கதிர்காமர் என்று வெளிப்படையாக இயங்கியோரைவிடவும் தலைமறைவாக இயங்கியோர் ஏராளம்.

இவர்களுக்காக அரசு செலவிட்டபணம் நிலாவரைக்கிணற்றில் போடப்பட்ட பொன்முடிச்சாகிப்போனது தான் உண்மை.

இப்போது கருணா தேர்வாகியிருக்கிறார் போலும். ஆனால் கதிர்காமரின் வெளிநாட்டுப்பிரசாரப் பிரிவுக்குள் அவர் போயிருப்பதுதான் விசித்திரம். கதிர்காமரையும் சேர்த்து இவர் இயக்கப்போகிறாரா, அல்லது கதிர்காமரின் பின்னால் இவர் பிற்பாட்டுப்பாடப்போகிறாரா என்பதே கேள்வி.

கருணா இங்கிருந்தால் பிரச்சினையென்று வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படும் அதேவேளை அவரை அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க ராஜதந்திரிகள் சந்தித்துபேசவுள்ளதாகவும் தெரிகிறது.

கருங்காலிகளுக்கு கை கொடுப்பதென்பது அமெரிக்காவுக்கு கைவந்தகலை. விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பைப்பற்றிய ரகசியங்களை அவரிடமிருந்து அறிந்துகொள்வதே அமெரிக்க ராஜதந்திரிகளின் நோக்கமாம்.

விடுதலைப்புலிகளின்-தனது கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கின் செயற்பாட்டு வலையமைப்பின் வலுவையே-ரகசியங்களையே சரியாக அறிந்திராததால் சிங்கப்பூர் வரை அவர் ஓடவேண்டி ஏற்பட்டது என்ற விடயம் தெரியாத அமெரிக்க ராஜதந்திரிகள் கருணாவிடம் சர்வதேச வலையமைப்பைப்பற்றி கேட்கப் போகிறார்களாம்...

கருணா கதை விடப்போகிறாரா?அல்லது 'ரீல்' விடப்போகிறாரா?

இலங்கையின் பிரசாரப்பலவீனம் தான் இப்படியென்றால்...

அமெரிக்காவின் புலனாய்வுப்பலவீனமும் கருணா மூலம் தெரியவரவேண்டுமா?

# சமாதானம் நிகழ்தகவாகிறதா?

சிறி.இந்திரகுமார்






அரசு தீர்மாணிக்கவேண்டிய விடயங்கள் இரண்டு- ஒன்று புலிகளை பலவீனப்படுத்தும் காரியங்களில் தொடர்ந்து ஈடுபடுவதா அல்லது - சமாதான வழி மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் விசுவாசமாக உழைப்பதா.

இந்த இரண்டில் ஒன்றைத்தான் அரசு தேர்ந்தெடுத்தாக வேண்டும். இரண்டையும் ஒன்றாகச் செய்ய முடியாது.

புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டுமென அரசு கருதினால் சமாதானத்தை கைநழுவிவிட்டு தீவிர யுத்தத்துக்குள் இறங்க வேண்டும்.

இரண்டாவது சமாதான வழிமூலமான தீர்வு ஒன்றுக்கு உழைப்பதாயின் புலிகளை பலவீனப்படுத்துவதாகக் கருதிக் கொண்டு அரசு செயற்படுத்தும் காரியங்களை உடனடியாகக் கைவிடுதல்வேண்டும்.

பதிலாக புலிகளைப் பலவீனப் படுத்தும் காரியங்களை ஒரு புறம் அரங்கேற்றிக்கொண்டு சமாதான முயற்சிகளில் ஈடுபடலாம்என அரசு கருதுமானால் அரசு கருதுவதுபோல புலிகளைப் பலவீனப் படுத்துவதற்குப்பதிலாக சமாதானத்தைப் பலவீனப்படுத்தியதாகவே முடியும்.

அரசு இதுவரை புலிகளை பலவீனப்படுத்துவதாகக் கருதிக் கொண்டு சமாதானத்தைத்தான் பலவீனப்படுத்தியுள்ளது. அதாவது இலங்கைத்தீவைப் பலவீனப்படுத்தியுள்ளது.

பலமற்ற ஒரு அரசாகத் திகழும் இந்த அரசு பலம்பொருந்திய எந்த முடிவையும் எடுக்கமுடியாத ஒரு நிலையில் பலவீனமான பாதைகளைத்தான் தேர்ந்தெடுத்தாகவேண்டும் என்ற ஒரு விதி இந்த அரசுக்கு இருக்கலாம்.

ஆனால் இந்த ஒற்றைக் கயிறால் நடக்கும் சர்க்கஸ் விளையாட்டுப் போன்ற இந்த விபரித நாடகத்தை அரசால் எதுவரை தொடரமுடியும் என்ற ஒருகட்டம் உண்டு.

அநேகமாக அரசின் இந்தக் கட்டம் அபாயக்கட்டத்தை நெருங்கிவிட்டதாகவே அவதானிக்கமுடிகிறது.

இதற்கு முதலாவது காரணம் புலிகள் பெருமளவுக்கு சகிப்புத் தன்மை இழக்கத்தொடங்கி விட்டார்கள்.

இரண்டாவது புலிகள் விட்டுக்கொடுப்பென்று எதுவுமே இல்லை என்கிற நிலைக்கு வந்துவிட்டார்கள்.

காரணம் அரசின் நாடகம் எல்லாம் நிர்வாணமாக்கப் பட்டுவிட்டது. அதாவது அரசு எவற்றை இரகசியமாகப் பேணவேண்டுமென்றும், பாதுகாக்கவேண்டுமென்றும் கருதி கொழும்பின் பல இரகசிய திட்டங்களை புதிதாக உருவாக்கியதோ அவையெல்லாம் அம்பலத்துக்கு வந்துவிட்டது.

கருணாவுக்குப் பாதுகாப்பளிப்பது, கருணாவுக்கு உதவுவது கருணாவின் பின்னணியில் அரசு செயற்படுவது எல்லாமே வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

இப்போது கருணாவின் விவகாரத்தில் அரசு மறுத்துரைப்பதெல்லாம் அரசின் அரசியல் நாகரிக வார்த்தைகளில் மட்டும்தான் இருக்கிறது.

இங்கு முக்கியமான இரண்டு விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டும். ஒன்று அரசின் சமாதான செயலகப்பணிப்பாளர் ஜயந்ததனபால அண்மையில் கூறிய விடயங்கள் இரண்டு. சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதில் உள்ள சிக்கல், புலிகளின் உள் வீட்டுக்குழப்பம்.

இரண்டு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் இலங்கைக்கு வரமுதலும் வந்த பின்னரும் தெரிவித்த எச்சரிக்கும் தொனியிலான நிலைமைகளின் மதிப்பீடு.

இந்தப் பின்னணியில் வைத்து இலங்கையின் எதிர்கால நகர்வுகளை மதிப்பீடு செய்யவேண்டியுள்ளது.

அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவின் கூற்றுப்படி நோக்கின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலை தயார்ப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் என்பது அரசின் பலவீனங்களால் ஏற்படுகின்ற சிக்கலேயொழிய புலிகளால் ஏற்படுகின்ற ஒரு விளைவு அல்ல.

ஏனெனில் இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வே பங்கெடுக்கத்தொடங்கியபோதே சில விடயங்கள் புலிகளால் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

அதாவது இந்த சமாதான முயற்சி நீண்டகால போக்கிலான ஒரு செயற்பாடு என்ற வகையில் தமிழ் மக்களின் அடிப்படை நெருக்கு வாரங்களை தீர்ப்பதற்கான முயற்சிகளை முன்னுரிமைப்படுத்துவது.

அடுத்தது தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு முயற்சி தொடர்பில் பேசுவது.

இந்த இரண்டு விவகாரங்களின் அடிப்படையில்தான் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் ஒரு அங்கமாக புலிகளிடம் இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்றை கையளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.

இந்த நிலைப்பாட்டின் நியாயங்களின் பிரகாரம் இதற்கான ஆதரவு சமிக்ஞைகளும் அப்போதே அரசிடமிருந்தும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் வெளிப்படுத்தப்பட்டது.

அடுத்தது ஜயந்த தனபால கூறும் புலிகளின் உள் வீட்டுக் குழப்பம் என்பது முடிவுற்றுவிட்டது. அதாவது கருணா விவகாரம் சமாதானத்தின் ஒரு பக்கவிளைவு.

இதனை புலிகள் மிக நேர்த்தியாகவே கையாண்டு அதனை முடிவுக்குக்கொண்டு வந்தனர். அதாவது கருணாவின் விவகாரம் புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினை என்பதற்கு ஒரு முடிவை கொண்டுவந்தனர்.

கருணாவின் விவகாரம் இப்போது ஒரு உள்வீட்டு விவகாரம் அல்ல, அதுவும் இப்போது அரசினுடைய ஒரு விவகாரமாகவே இருக்கிறது.

ஏனெனில், அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களும் படை தரப்பினராலுமே கருணா கையாளப்படுகிறார்.

ஆகவே நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் எச்சரித்தது போல் நெருப்போடு விளையாடக்கூடாது என கருதினால் இதற்கான முயற்சியை எடுக்கவேண்டியது அரசேயொழிய புலிகளல்ல.

புலிகளின் தரப்பில் புதிதாக எந்த நிபந்தனைகளையோ வாக்குறுதிகளையோ கோரினால் தான் புலிகளின் பக்கம் சமாதானத்துக்கு எதிரான முயற்சிகள் தொடரப்படுவதாகக் கருதவேண்டும்.

அதிலும் குறிப்பாக புலிகளை ஒரு யுத்த முனைப்போடு இருக்கும் நிலையை அரசு வலிந்து திணித்துக்கொண்டிருக்கிறது. இந்த யுத்த முனைப்பு சமாதானத்தைக்கேள்விக் குறியாக்கிக் கொண்டே இருக்கும். ஆனால் புலிகளுக்கு இந்த முனைப்பிலிருந்து கீழிறங்கமுடியாது. ஏனென்றால் புலிகள் யுத்தத்துக்குச் செல்லாதுவிட்டாலும் தங்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டிய ஒரு நிலையிருக்கிறது.

ஆகவே தான் இலங்கையின் சமாதான முயற்சியின் ஒரு அங்கமாக மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசனின் பயணம் புதிதாக எதனையும் அறுவடை செய்யப் போவதில்லை என்பதையே நிலைமைகள் சுட்டிநிற்கின்றன. ஆகவே சமாதான முயற்சியை முன்னெடுப்பதில் வெற்றி காண்பது நடக்கலாம் நடக்காமலும் விடலாம்.



# நேர்நோக்கு

## சமாதானத்துக்கு எதிராக...!



2002ஆம் ஆண்டின் முற்பகுதியில் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டபோது இலங்கை முழுவதும் காணப்பட்ட அது குறித்த ஆர்வம் இப்பொழுது பெரிதும் மங்கிப் போயுள்ளது. இந்தச் சமாதான முயற்சிகள் குறித்து இலங்கை மக்கள் மட்டுமல்ல சர்வதேச முமே பெரும் ஆர்வம் காட்டி வந்தது. இந்த முயற்சிகளிலே ஏற்றங்கள் இறக்கங்கள் காணப்பட்டாலும் கூட நம்பிக்கை கொள்ளக் கூடிய மனோநிலை பலர் மத்தியிலும் காணப் பட்டது.

ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற தேர்தலில் சமாதானத்துக்கு முற்றிலும் விரோதமான ஜே.வி.பியுடன் கூட்டுவைத்துக் கொண்டு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சியமைத்ததும் இந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் படிப்படியாகக் கரைந்து செல்லத் தொடங்கியது.

சர்வதேசத்தின் நிதியுதவியைப் பெறுவதற்காவது இச் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டிய தேவையிலுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கூட்டுக் கட்சியின் பிடியிலிருந்து விலகிச்செல்ல முடிய வில்லை. வழமை போலவே அவர் நெருக்கடிக் கும் சூழலுக்கும் ஏற்ப ஒவ்வொரு பேச்சுக்களைப் பேசிவருகின்றார். உருப்படியான நடவடிக்கை எதுவும் இல்லை.

இது ஒரு புறமிருக்க இச் சமாதான நடவடிக்கைகளின் மூலாதாரமாகவுள்ள புரிந் துணர்வு ஒப்பந்தத்தை மோசமாக மீறும் செயல் களில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டு வரு கிறது. இதற்கு அதுமிகப்பழமை வாய்ந்த நடைமுறையொன்றை கையாண்டு வருவதும் வெளிப்படையான விடயம். அதாவது புதிதாக உருவாக்கப்பட்ட ஆயுதக் குழுக்களை இந்தப் போர் நிறுத்த மீறல் செயல்களுக்குப் பயன் படுத்தி வருகிறது. அத்துடன் இந்த ஆயுதக் குழுவின் பெயரால் தமது படையினரையும் இந்த மீறல்களில் ஈடுபடுத்தி வருகின்றது.

இந்த மீறல்களைப் புரிபவர்களுக்கு சனாதிபதி சந்திரிகாவின் அமைச்சரவை உறுப் பினர் ஒருவர் வெளிப்படையாகவே ஆதரவளிக்க அது குறித்து மௌனம் சாதிப்பதும் மக்கள் சமாதான முயற்சிகள் குறித்து அவநம்பிக்கை கொள்ளக்காரணமாக இருக்கின்றது. அத்துடன் ஆட்சியின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி இந்த மீறல்களுக்குக் காரணமான ஆயுதக் குழுவுக்கு வக்காலத்து வாங்கும் செயலில் ஈடுபட்டுள்ளது.

இவற்றின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி அழித்து விடலாம் என்று இவர்களில் எவராவது எண்ணு வார்களாக இருந்தால் அது சமாதான முயற்சி களுக்கு நிரந்தரமாகவே விடைகொடுக்கும் செயலாகவே அமைந்து விடுமோ என்ற அச்சத்தையும் சமாதானம் விரும்புவோர் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலை தொடர்கையில் ஒரு சிறு சம்பவம் கூட சமாதான முயற்சிகளுக்கு பங்கம் விளைவிப்பதாக அமைந்துவிடலாம் என நோர்வே அனுசரணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இன்றைய நிலையில் சிறிலங்காவில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிப் பதவியால் மட்டும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் தேசிய முன்னணி அரசாங்கம் அரசாங்கத்தை நேர்மையான வழி யிலல்லாது ஆசை, சலுகைகளைக்காட்டி சிலரை விலைக்கு வாங்கி உறுதிப்படுத்தும் முயற்சி களை மேற்கொள்வதிலேயே தனது கவனத்தை கொண்டிருக்கிறது.

ஆனால் இந்த முயற்சி இதுவரை வெற்றி பெறாமைக்கும் இந்த ஆட்சியின் உறுதிப்பாடு குறித்த அவநம்பிக்கையே காரணமாக அமைகின்றது. இன்று இணைந் திருக்கும் ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தொடர்ந்தும் இவ் இணைப்பைப் பேணுமா என்ற சந்தேகம் இந்த அவநம்பிக்கையை ஏற்படுத்தக் காரணமாக இருக்கின்றது.

இரு துருவங்களான கொள்கைகள், நடவடிக்கைகள் குணாம்சங்களைக்கொண்ட இவ் இரு கட்சிகளும் நல்ல நோக்கத்துடன் மேற்கொண்ட கூட்டுறவு அல்ல இது. இது பெரும் பேரம் பேசல்கள், விட்டுக்கொடாத நிபந் தனைகள் மத்தியில் ஐக்கிய தேசிய முன் னணி ஆட்சியை கவிழ்த்து அதிகாரத்தைப் பெறுவது என்ற எண்ணத்துடன் உருவாகியுள்ள அமைப்பு இது.

கூட்டமைப்பை அமைப்பது குறித்த பேச்சுக்கள் நடக்கும் போதே நாட்டிற்கு என்ன நன்மைகளைச் செய்யலாம் என்பது குறித்து ஆராயாது இறுதியில் எந்தக் கட்சி அழியும் எந்தக் கட்சி எந்தக் கட்சியை விழுங்கும் என்று சீர்தூக்கிப் பார்த்து இணைந்து கொண்ட கூட்ட மைப்பு இது.

எனவே ஆட்சியைத்தக்க வைப்பது மட்டுமல்ல மற்றக் கட்சி விழுங்கிவிடாது.-அதா வது தமது அழிவிலிருந்த தம்மைப் பாதுகாக்க வேண்டிய இடைவிடாத எச்சரிக்கை உணர்வுட னும் இரு கட்சிகளும் இயங்கவேண்டிய நிலையில் உள்ளன.

இவ்வாறு சிக்கல் பட்டுக்கொண்டிருக் கும் ஒரு ஆட்சியுடன் இணைவது தற் கொலைக்கு ஒப்பான முயற்சியாக இருக்கும் என சிறிய கட்சிகள் எண்ணுகின்றன.

எனவே பலம் குன்றிய ஆட்சியானது இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? இறுதித் தீர்வொன்றை எட்ட முடியுமா? என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகின்றது.

இவற்றையெல்லாம் மறைத்து தாம் தேசப்பற்றுள்ளோர் போலக் காட்டிக்கொள்ள சமாதான முயற்சிகள் குறித்து சிங்களமக் களுக்குப் பூச்சாண்டி காட்டும் வேலையிலும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான மிக மோச மான நடவடிக்கைகளிலும் ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

**வேலவன்**

விடுதலைப்புலிகளுடன் உறவுகளைக்கொண்டிருக்கும் காலகட்டமிது. எனினும் எமது உள்ளத்தின் அடித்தளத்தில் அவர்கள் பயங்கரவாதிகள் என்ற எண்ணமே மேலோங்கியுள்ளது எனத்தெரிவிக்கிறார், பொலிஸ்பிரிவின் விசேட அதிரடிப்படைச்சிப்பாய் தயாசிறி. கிழக்கு மாகாணத்தில் கடந்த 24 வருடங்களாக கடமையில் ஈடுபடுத்தப்பட்ட இவரிடம் கடந்த வாரம் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செவ்வி கண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு என்றே அன்றைய காலகட்ட சனாதிபதி ஜே.ஆர்.ரினால் உருவாக்கப்பட்ட இந்த விசேட அதிரடிப்படைப்பிரிவின் ஆரம்ப காலம் முதலே செயற்படும் இவரின் மனநிலையே இன்றைய சிறிலங்கா படைத்தரப்பின் மனநிலைக்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு போல சிறந்த உதாரணமாகும். மட்டக்களப்பு மண்முனைப்பகுதியில் கடமையாற்றும் இவர் யுத்தத்துக்கு எப்போதுமே தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் தமிழ்த் தேசவிரோத ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படவேண்டும் எனு உடன்பாட்டிற்கு எதிராகத் தற்போது இராணுவப்புலனாய்வுப்பிரிவினரால் கருணா குழுவினர் புதிய ஆயுதக்குழுவாக உருவாக்கப்படுவதுடன் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில்




## இலங்கையின் சாபக்கேடு

புலிகள் மற்றும் பொதுமக்கள் மீதான படுகொலைகளுக்கும் காரணமாக அமைக்கின்றனர். இது யுத்த நிறுத்த உடன்படிக்கையை பாதிப்படைய வைக்கும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கடந்த கால அரசின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோரின் புரிந்துணர்வு உடன்படிக்கையை பேரினவாத கூட்டுக்கட்சிகளான சுதந்திரக்கட்சி-ஜே.வி.பிக் கூட்டுமுன்னணி புறந்தள்ளி இராணுவப் புலனாய்வு பிரிவினரால்ஒரு யுத்த சூழ்நிலையை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கான முனைப்பை கொண்டிருக்கும் ஒரு புறச்சூழ்நிலை உருவாகியுள்ளது.

சமாதானம் என்கின்ற சொல்லின் அர்த்தம் இலங்கையில் இரு தேசிய இனங் களிடையேயும் வேறு வேறு அர்த்தங்களைக்கொடுக்கும் கருதுகோள்களாகத் திரிவடைந்து விட்டமையே இலங்கைத்தீவின் இரத்தப்பெருக்குக்குக் காரணமாகிவிட்டது. இலங்கையின் முதல் தலைநகரமாக அநுராதபுரம் உருவாகி வரலாறாகப் பதியப்பெற்ற இருநூறு வருடங்களில் அரசாண்ட 22 மன்னர்களுள் 10 பேர் தமிழர்களாவர், இந்த தமிழர்களை இந்தியாவிலிருந்து வந்தவர்களாக திரிபு படுத்திய மகாநாமனின் மகாவம்ச புனைகதை பாளிமொழி இலக்கியங்களை இலங்கைத்தீவின் வரலாறாக மாற்றியதில் இருந்தே பௌத்த சிங்களப்பேரினவாதம் வேரூன்றி விட்டது. அன்றைய காலகட்டத்தில் இலங்கை முழுவதுமாக தமிழர் சிங்களவர்களுடையதுமான 260க்கு மேற்பட்ட சிற்றரசுகள் பரவலாக இருந்ததும், அன்றைய காலகட்டத்தில். இலங்கைக்கு படை எடுத்துவரமுடியாதளவு சங்ககாலச் சிற்றரசுகளே இந்தியாவிலும் இருந்தது என்பதெல்லாம் மறைக்கப்பட்டுவிட்டது. இன்றுவரை இலங்கையைப் பொறுத்தவரை தொல்லியல், மானுடவியல் போன்ற துறைகளின் வளர்ச்சியின்மையே "மகாவம்சம் " போன்ற இலக்கியங்கள் தேசத்தின் வரலாறாக மாறிய துர்ப்பாக்கிய நிலைமைக்குக் காரணமாகிவிட்டது.

பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் பிரித்தாளும் தந்திரத்தின் அடிப்படையில் நவீனத்துவம் பெற்ற "சிங்கள பௌத்த பேரினவாதம்" மீண்டும் புதிய வடிவங்களுடன் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையை ஆரம்பித்தது. மொழி உரிமைப்பறிப்பு, நிலப்பறிப்பு என்பவற்றுடன் ஆரம்பித்த சிங்கள பௌத்த பேரினவாத செயற்பாடுகளுக்கு எதிரான அரசியல் போராட்டங்களின் போதே கௌரவத்துடன் கூடிய சமத்துவமான வாழ்வுக்கான (Equalitywith dignity) கோரிக்கை வலுப் பெற்றது. அதன் இன்றைய வடிவமே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை இதன் மூலமே தமிழர்களுக்கான சமாதானக் கதவுகள் திறக்கப்பட முடியும்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை மரணபயமற்ற, குண்டுகள் வெடிக்காத, இரத்தம் சிந்தாத ஒரு ஆழ் நிலையே சமாதானமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இதனையே அதிகாரத்துக்கு வரும் அரசுகளும், பௌத்த பேரினவாத சக்திகளும் சமாதானமாக சிங்கள மக்களிடையே காட்டிவந்தனர். இதற்கு பெருமளவு சிங்கள ஊடகங்களும் பங்களித்து வந்துள்ளன. யுத்தம் நிறுத்தப்பட்ட கடந்த மூன்று ஆண்டுகளிலும் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடியாத ஆயிரக்கணக்கான தமிழர்களின் துயரங்களையோ இன்றும் கூட அவர்கள் அனுபவித்து வரும் இராணுவத்தின் நெருக்கடிகளையோ, வாழ்வுக்கான நெருக்கடிகளையோ சிங்கள மக்களுக்கும், உலகத்துக்கும் வெளிச்சமிட இலங்கையின் பெரும்பாலான சிங்கள, ஆங்கில ஊடகங்களும் அரசியல் வாதிகளும் மறுத்து வருகின்றனர்.

தமிழர்களின் தனித்துவமான தேசிய அடையாளத்தை ஏற்றுக் கொள்வதையே, அன்றி அவர்களின் தாயகத்தை அங்கீகரிப்பதையோ அவர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமக்கு சமஷ்டி அமைப்பை பெற்றுக்கொள்வதையோ இலங்கையின் அச்சுறுத்தலாகக் கூக்குரல் இடும் பேரினவாதச்சக்திகள் இன்று இலங்கைத்தீவில் ஆயிரத்துக்கு மேற்பட்ட சதுரக்கிலோமீற்றர் நிலப்பரப்பை சிறிலங்காப் படையினர் எட்டமுடியாது உள்ளனர் என்பதே புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வழிவகுத்தது என்பது பேரினவாதிகள் தங்கள் வாயால் சொல்ல முடியாதிருக்கும் உண்மையாகும். பத்துவருடங்களுக்கு மேலாக இலங்கைத்தீவில் இரண்டு வேறு வேறான எதிர் எதிரான மரபுரீதியான படையணிகள் இருப்பதும், இரண்டு தேசியக்கொடிகள் இலங்கைத்தீவில் ஏற்றப்படுவதும் இரண்டு வேறு வேறான நீதி நிர்வாகமுறைகள் இருப்பதும், சட்டம் ஒழுங்கைப்பேணும் வேறுவேறான இரண்டு காவல் துறைகள் இருப்பதும் பேரினவாதிகளின் கண்களுக்குத் தெரியாமல் இருப்பதுமே தான் இலங்கைதீவின் சாபக்கேடாய் அமைந்து விட்டது.

**அ.அ.அ**

நாற்றிசை நடப்பு

# பயங்கரவாதத்தின் பெயரால் உலகம் ஆளுகை செய்யப்படுமா...?

ஐங்கரன்

உலகத்தின் மீதான பிடியை இறுக்குவதற்கான தயார்ப்படுத் தலை அமெரிக்க நிர்வாகம் முடுக்கி விட்டுள்ளது. பயங்கரவாதத்தை நீடித்த நிலையான சித்தாந்தமாக மாற்றுவதற்குரிய வேலைத்திட்டமாகவே செப்ரெம்பர்(9/11) தாக்குதல் பற்றிய அறிக்கையை வரைந்துள்ளன. பத்துப்பேர் கொண்ட குழுவின் 567 பக்கங்களைக்கொண்ட அறிக்கை அமெரிக்க நிர்வாகத்தின் ஆரம்ப நடவடிக்கையில் குறைகளை சுட்டிக் காட்டினாலும் தற்போதைய போக்கை வரவேற்றதுடன் மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. இதன் மறுபக்கம் தீவிரவாத தலைமைகளோ, தீவிரவாதத்திலிருந்து மிதவாதத்திற்கு நுழைந்த தலைமைகளையோ அவர்களது அரசியல் நடவடிக்கைகளையோ எச்சரித்துள்ளதென்பதாகும். இஸ்லாமிய உலகம் மட்டுமல்லாது முழு உலகமும் பயங்கரவாதத்தினால் ஆளுகை செய்யப்படும் நிலையே அமெரிக்காவின் அடுத்தகட்ட அரசியல் நடத்தையாகும்.

### அரபாத் மீதான நெருக்கடி

தீவிரவாதத்திலிருந்து வெற்றிகர மாக மிதவாத அரசியலுக்குள் அரபாத் நுழைந்த போதும் பெரும் நெருக்கடிகளை கடந்த பல ஆண்டுகளாக எதிர்கொண்டவர். அவை அனைத்தும் அரபாத்தின் எதிரிகளால் அவருக்கு ஏற்படுத்தப்பட்ட நெருக்கடியாகும். எல்லாவற்றையும் அரபாத் வெற்றிகரமாக முறியடித்தே வந்துள்ளார். அரபாத்தின் போராட்டங்களின் போதெல்லாம் பின் புலத்தில் பலஸ்தீன மக்களும், ஆயுதப்போராட்ட அமைப்புக்களின் மறைமுக ஆதரவும் காணப்பட்டது. ஆனால் தற்போது பலஸ்தீன தீவிரவாத அல்லது கிளர்ச்சிக் குழுக்களால் அரபாத்துக்கு பெரும் நெருக்கடி ஆரம்பமாகியுள்ளது. குறிப்பாக காஸாப்பகுதி கிளர்ச்சிவாதிகளே அரபாத்துக்கு எதிரான போர்க் கொடியைத்தூக்கியுள்ளனர். அரபாத்தின் பிரதமரை பதவியிலிருந்து அகற்றுமளவுக்கு அவர்களது நடவடிக்கை தீவிரம் கண்டுவிட்டது. அதற்கான காரணமும் நியாயமற்றதெனக்கூறிவிட முடியாது. ஏனெனில் ஒரு இனம் ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை வைத்துச் செயற்படும்போது முழுமையான விடுதலை பற்றியே அதிக கவனம் கொள்கின்றனர். அத்தகைய விடுதலையில் மிதவாதம் தலை காட்டுவதும் அதனூடாக ஊழல், சுரண்டல், அடிமைத்தனம், பாதுகாப்பின்மை நிகழுமாயின் மக்கள் புதிய அணுகுமுறையையே பின்பற்ற முனைவார்கள். அப்படியான ஒரு நிலையே அரபாத்தின் நிர்வாக அமைப்புக்கும், தலைமைத்துவத்துக்கும் ஏற்பட்டுள்ளது.

பிரதமர் அகமது கியூரியை பதவியில் வைத்துக்கொண்டு நிலைமையை சமாளிக்கலாமென கணக்குப்போட்ட அரபாத்துக்கு காஸாப் பகுதி மக்களும், கிளர்ச்சிவாதிகளும் வீதியில் இறங்கிப்பெரும் அதிர்ச்சியை அவருக்குக் கொடுத்துள்ளனர். இதனால் அரபாத் பின்வாங்கியதுடன், கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியுள்ளது எனக்கூறலாம். இது அரபாத்தின் எதிரிகளுக்கு வாய்ப்பானதென்பதை விட காஸாவிலிருந்து இஸ்ரேல் தனது படைகளை பின்வாங்கும் சந்தர்ப்பத்தில் நிகழ்ந்ததென்பதே அதிக சந்தேகத்தை உலகளவில் ஏற்படுத்தியுள்ளது. அரபாத்தை அகற்ற இஸ்ரேல் போட்ட பல திட்டங்கள் சாத்தியப்படாத போது கிளர்ச்சியாளரைக் கொண்டு அரபாத்தை அகற்ற அவர்கள் திட்டமிட்டிருக் கலாம். அதன் ஒரு கட்டமே கிளர்ச்சியாளர்கள் அரபாத்துக்கு எதிராகத் திரண்டுள்ள நிகழ்வு நடைபெற்றுள்ளது.



சமகாலத்தில் தீவிரவாத தலைமைகள் மிதவாதிகளாக மாறி வெற்றி பெற்றதைவிட தோல்விகளையே அதிகம் அனுபவித்துள்ளனர். பல தீவிரவாத தலைமைகள் அழிக்கப்பட்டுள்ளனர். மக்களாலும் தீவிரவாத அமைப்புக்களாலுமே தீவிரவாதத் தலைமைகள் விலாசமின்றி அழிந்து போயுள்ளனர். அந்த வரிசையில் அரபாத் தாக்குப்பிடிப்பவராகக் காணப்பட்டாலும் இஸ்ரேலும் மேற்குலகமும் போடும் திட்டமிடலுக்குள் அகப்பட்டு அழிகின்ற நிலைக்குள்ளே தள்ளப்பட்டுக்கொண்டு வருகின்றார். இத்தகைய ஆபத் தான கட்டத்துக்கு மேற்குலகமே வித்திட்டது. சமாதானம், தீர்வுத்திட்டம் எனக் கூறிக்கொண்டு மிகமோசமான தடைகளையும் நெருக்கடிகளையும் அரபாத் மீது திணித்தது மேற்குலகம். தற்போது சமாதானமுமின்றி, தீர்வுமின்றி நிலைக்குள் அரபாத்தையும் பலஸ்தீனத்தையும் தள்ளியுள்ளது. இதுமட்டுமன்றி தலைமைத்துவத்திலிருந்து அரபாத்தை அகற்றிவிடவும் கிளர்ச்சியாளர்களை ஒரு ஆயுதமாக கையாண்டு வருகின்றது. இது உலக தீவிரவாதத்திற்கும் அதன் தலைமைகளுக்கும் விடப்பட்டுள்ள புதிய சவாலாகும். அரபாத்தையும் பலஸ்தீனத்தையும் அனுபவமாகக் கொண்ட மேற்குலகம் அதனை உலகின் ஏனைய தீவிரவாத அமைப்புகள் மீது பிரயோகிக்கத் திட்டமிட்டும் பிரயோகித்தும் வருகின்றது.

### ஈராக் அரசின் எச்சரிக்கை

ஈராக்கின் இடைக்கால அரசு பயங்கரவாதத்தை தூண்டும் அயல் நாடுகள் மீது பெரும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அவ்வாறு தீவிர வாத நடவடிக்கைகளை மேற்கொள் ளும் அரசுகள் தகுந்த பிரதிபலனை அனுபவிக்க வேண்டிவரும் என இடைக்கால அரசின் பாதுகாப்பமைச்சர் தெரிவித்துள்ளார். இவரது குற்றச்சாட்டின்படி ஈரானே அதிகமாகக்கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. இதே விடயம் வெளிவரும் சந்தர்ப்பத்திலேயே அமெரிக்க சனாதிபதி இன்னோர் அதிர்ச்சியான செய்திபற்றி கருத்துக்கூறினார். செப்ரெம்பர் தாக்குதலுக்கும் ஈரானுக்கும் தொடர்பு உண்டா என தாம் பரிசீலித்துவருவதாகவும் அது கண்டுபிடிக்கப்பட்டால் ஈரானுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றார். இருவரது கருத்தும் ஒன்றுதான் என்பது போல இருவரும் ஒரே ஆட்சியாளர்கள் என்பது நிறுவப்பட்டு விட்டது. ஈராக்கின் இடைக்கால அரசு அமெரிக்காவின் நிழல் அரசாங்கம் என்பதே அதன் அர்த்தமாகும். எனவே ஈராக் புதிய கட்டத்துக்கு மேற்காசியப் பிராந்தியத்தை நகர்த்தப்போவதுபோல் தென்படுகிறது. இன்னோர் இஸ்ரேல்மாதிரி ஈராக் அமெரிக்க செல்வாக்குடைய அரசாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் தீவிரவாதம் மறுபக்கத்தில் தாக்குதல்களையும், பணயக்கைதிகளையும் பயன்படுத்துவதுமாக புதிய வியூகங்களைவகுத்து வருகின்றது. பிலிப்பைன்ஸ் நாட்டவர்போல் இந்தியர்களும், எகிப்தியர்களும் தள்ளப்படுவார்களாயின் படிப்படியான வெற்றியை கிளர்ச்சியாளர்கள் அடைவார்கள். இந்தியாவின் நடவடிக்கையில் காணப்படும் தளம்பல் அதன் கொள்கையிலுள்ள தளம்பலாகும். வெளிப்படையான தகவல்களை இந்தியத்தரப்பு வெளியிட்டு வந்தாலும் அடிப்படையில் பாரிய முயற்சி எதனையும் எடுக்கவில்லைப்போலவே தென்படுகின்றது. ஆனால் இந்தியா நேரடியாகச் சம்பந்தப்படாதவிதத்தில் இந்நடவடிக்கை குவைத் மற்றும் அமெரிக்காவுடன் சம்பந்தப்பட்டுள்ளதுவும் அதன் நடவடிக்கைக்குக் காரணமாகக் கொள்ளலாம். ஆனால் எதிர்க்கட்சிகள் இந்தியாவில் காட்டும் அக்கறையும் பெரியளவில் இல்லைப் போலவே காணப்படுகின்றது.

### கொடுமையான அமெரிக்கா

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானிய நாகசாகி நகர் மீது அணுகுண்டை வீசிய அமெரிக்க இராணுவ ஜெனரல் சார்ள்ஸ் ஸ்வீனி தனது 82ஆவது வயதில் கடந்த வாரம் இறந்துள்ளார். 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 09ஆம் திகதி நடத்திய அணுகுண்டுத் தாக்குதலில் 130,000பேரின் உயிரை உடனடியாக குடித்தது. ஆனால் அதன் வடுக்கள் என்னுமே ஜப்பானிய மக்களை வதைத்துக்கொண்டேயிருக்கின்றது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அணுகுண்டு உதவியதாகத் தனது தாக்குதலை பின்னர் அமெரிக்கா நியாயப்படுத்த முயன்றது. இக்கொடுமையில் உலகத்தை ஆதிக்கம் செய்யத் தொடங்கியவர்களே அமெரிக்கர்கள் அவர்களது வரலாற்றில் முதல் கொடுமையாளனான கொலம்பஸ்ஸும் இரண்டாவது நிலையில் சார்ள்ஸ் ஸ்வீனியும் காணப்படுகின்றனர்.

இந்தவரிசையின் தொடர்ச்சியைச் தற்போதைய அமெரிக்க ஆளும்தரப்புப் பேணியே வருகின்றது. ஈராக்மீதான படையெடுப்பில் தனது தரப்பில் அமெரிக்கா இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தை இழந்துள்ளதாகப் புதிய தகவல்கள் வெளிவருகின்றன. அதைவிட கொடுமை அமெரிக்கர்கள் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் சிறைக்கைதிகளைச்சித்திரவதை செய்யும் நிகழ்வாகும். இச் சித்திரவதைகளுக்கும் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளருக்கும் நேரடித் தொடர்பிருந்ததாக காபூலில் தனி சித்திரவதை முகாமொன்றை நடாத்திய கே.டிமா என்ற அமெரிக்கர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே பாக்தாத் சிறைச்சாலையின் நடவடிக்கைக்கும் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் சனாதிபதிக்கும் தொடர்பு உண்டெனக் கூறப்பட்டது தெரிந்ததே. உலகில் மனித உரிமை சாசனங்களையும், பிரகடனங்களையும் வரைந்து அவற்றை வறியநாடுகளின் சட்ட வல்லுனர்களுக்கும், நீதி அமைப்புகளுக்கும் காட்டமுனையும் அமெரிக்கர்கள் தாம் எப்படிச் செயற்படுகின்றனர் என்பதை இவ்விடயங்கள் காட்டுகின்றன. உலகத்துக்கு ஒரு நீதி அமெரிக்க ஆதிக்க வெறியருக்கு ஒரு நீதி என அவர்கள் நோக்குகின்றனர். இத்தகைய கொடிய ஆட்சியாளரின் நடவடிக்கைகளையே உலகம் நியாயமெனக் கூறுகின்றது.

(25ஆம் பக்கம் பார்க்க)



# கருணாவுக்கு எஞ்சியிருப்பது துரோகி என்ற துர்நாற்றக்கந்தல் மட்டுமே


We, the several persons whose names and addresses are subscribed being subscribers to the Memorandum of Association hereby agree to the foregoing Articles of Association.

Names, Addresses and Descriptions Of Subscribers — Signature

(1) VITHYAPATHY MURALITHARAN, Nochchimunai, Kallady, Batticaloa. (Chairman) — V. Muralitharan

(2) KANTHAIYA SANTHIRASEKARAM, 28/1, Krishnan Kovil Road, Kallady, Batticaloa. (Managing Director)

Dated this 20th day of January 2004.

WITENESS to the above signatures.

Notary Public & Attorney-at-Law


The Companies Act, No. 17 of 1982

Private Company Limited by Shares

Memorandum

Articles of Association

of

MAHAJALA EXPORT & IMPORT COMPANY (PRIVATE) LIMITED


DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

The Companies Act, No. 17 of 1982

LIMITED COMPANY

CERTIFICATE OF INCORPORATION

I Hereby Certify that MAHAJALA EXPORT & IMPORT COMPANY (PRIVATE) LIMITED

மோசடி மூலம் திரட்டப்பட்ட நிதியைக்கொண்டு
கருணா தனது மனைவியின் பெயரில்
பதிவுசெய்த நிறுவனத்தின் சான்றிதழ்களின் நகல்கள்

கரடியனாற்றில் விவசாயப் பண்ணை நிறுவப்பட்ட நாட்களில் அங்கே நிரந்தரத் தொழிலாளியாகச் சேர்ந்து கொண்டவர் குஞ்சித்தம்பி. வாலிபப் பராயம் என்பதால் இன்றைய செங்கலடிபடக் கொட்டகைகளின் இன்றைய மூதாதையக் கொட்டிலில் ஓடிய படங்களின் இரவுக் காட்சியை பார்ப்பதற்கு கரடியனாற்றில் கால் நடையாகவே வந்து போனவர். கொடுவாமடுப் பள்ளத்தில் முடப் பூதமிருந்து சுருட்டுப் பற்ற வைக்க நெருப்புக் கேட்ட கதைகள் வலுவாக உலவிய காலத்தில் இரவுக் காட்சி முடிந்து நடையில் கரடியனாற்றிற்குத் திரும்புவதற்குத் சாதாரணத் துணிச்சல் மட்டும் போதாது. பகுத்தறிவும் வேண்டும்.

பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையை எழுத்துக் கூட்டி வாசிப்பவர்களே பெரும் மேதா விலாசம் காட்டிய நாட்களில் மகா பாரதம், இராமாயணம், நல்லதங்காள் மற்றும் நாட்டுப் புறக் கதைகளில் வரும் சகல பாத்திரங்களினதும் தனிச் சிறப்பான அம்சங்களை வர்ணிக்கும் அளவிற்குக் கதை தெரிந்தவர். அதோ வந்து விட்டான் செயத் திரதன் அபிமன்யூவின் பின்னால் என்று குஞ்சுப் பெத்தப்பா சொன்னால் கதை கேட்கும் எங்களுக்கு முதுகு கூசும். நல்லதங்காளின் தற்கொலைக் கூட்டத்தை விறாந்தையில் இருப்பவர்களுக்குச் சொன்னால் வீட்டுக்குள் இருந்தும் விசும்பல் கேட்கும். அரசியலும் பேசுவார். அவருக்குத் தெரியாத மரங்களுமில்லை. மனங்களுமில்லை.

எப்போதாவது தலை முழுகும் போது மட்டும் அவிழ்த்துக் கட்டப்படும்.அவரின் குடுமிக்கும் தனியான வரலாறு உண்டு. எந்தெந்த வயதில் எந்தெந்த முறையில் கட்டப்பட வேண்டும் என்ற முறை பிசகாது. சிறு வயதிலிருந்தே கட்டப்பட்டது அவரின் குடுமி. காதில் உள்ள கடுக்கனைப் போலவே அனுபவ மெருக்கேறிய கண்கள் பளபளக்க அவர் ஒரு கதை சொல்வார்.

கதை இதுதான்: குடியானவன் ஒரு வீட்டிலே ஒரு நாயையும் ஒரு கழுதையையும் வளர்த்து வந்தான். நாய் அவனது செல்லப் பிராணி. அது அவனது அருகிலே அமர்ந்து உணவுண்ணும். அவன் வெளியே எங்கேயாவது போய் வந்தால் அவன் மீது தாவிக் குதித்து தன் அன்பைத் தெரிவிக்கும். அவனும் பதிலுக்கு அதை வருடி அதன் அன்பை அங்கீகரிப்பான்.

அதே நேரம் இந்தக் கழுதைக்கோ மனம் புழுங்கும். நாள் முழுக்க நாமல்லவா வேலை செய்கிறோம். ஆனால் நமது எஜமான் நம்மை இப்படி ஒரு போதும் கொஞ்சியதில்லையே என்ற ஆதங்கம் உண்டாகும். ஆனால் அந்தக் குடியானவனோ இந்த விவகாரத்தை ஒரு போதும் அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தால் கழுதைக்கே சந்தியில் விலையுண்டு. நாட்டு நாய்க்கோ அங்கே பெறுமதி கிடையாது என்றோ அல்லது கழுதைக்கு தனிக் கொட்டிலும் தவிடு பிண்ணாக்கும் தரப்படுகிறது அதே நேரம் நாயோ மீதிச் சோற்றைத் தின்று இறவானத்தில் ஒதுங்கும் அற்ப ஜீவன் அல்லவா என்று விளக்கமளித்திருப்பான். அத்தகைய வாய்ப்பேதும் இல்லாது போனால் கழுதை தன் பாட்டில் சிந்தித்துத் தானும் நாயைப் போல நடந்து கொண்டால் என்ன என்று நினைத்துக் கொண்டது.

இரவிலே சிறிய சரசரப்புக் கேட்டாலும் நாயை முந்திக் கொண்டு கழுதை காள் காள் என்று கத்த ஆரம்பித்தது. தன் தனிக் கொட்டிலை விட்டு வெளியே வந்து நாய்க்குப் போட்டியாக இறவானத்தின் கீழ் பெரும் கிடங்குகளைக் கிண்டி நாய் போலச் சுருண்டு படுத்தது. கழுதையின் போக்கில் ஏற்பட்ட இந்த மாற்றங்களையெல்லாம் யோசித்துக்கவலைப்பட்டவாறு வயலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த குடியானவனின் மேல் நமது கழுதை பாய்ந்து அவன் தோளின் மீது முன்னங்கால்களை வைத்து முகத்தோடு முகத்தை உரசி நாயைப் போல ஊளையிடத் தொடங்கியது தான் உச்சக் கட்டம்.

சற்று நேரத்தின் பின் வேலியில் இருந்த மூன்று கதிகால்களும் கழுதையின் நாரியும் நொருங்கிக் கிடந்தன. அந்தக் கழுதையின் மூலம் குஞ்சுப் பெத்தப்பா சொல்ல வந்த நியதி என்னவென்றால் சமூகம் உன்மேல் கொண்டுள்ள மதிப்பை விட்டு நீ திமிறுதல் கூடாது.

இன்று போராளி என்ற மதிப்பீட்டிலிருந்து துரோக அரசியல் என்னும் நிலைப்பாட்டை நோக்கிக் குத்துக் கரணம் அடித்திருக்கும் கருணா இந்தக் கதையையே நியாயப்படுத்துவதாகத் தெரிகிறது.

போராளி என்ற அந்தஸ்த்திலிருந்தபோது கருணாவிற்கு இருந்த மதிப்பேதனி. கருணா வெளிநாடு சென்றபோதெல்லாம் விடுதலைப் போராளி என்ற ஒளி வட்டம் கருணாவின் மீது இருந்தது. சிங்களப் படைத் தளபதிகள் கூட கருணாவைப் பார்த்துப் பொறாமைப்பட்ட காலம் என்று ஒன்று இருக்கவே செய்தது. தலைவனின் வலது கை என்றும் நம்பகமான ஆசாமி என்றும் பெரும் தளபதி என்றும் கருணாவின் மேல் ஏகப்பட்ட ஒளி வட்டங்கள் இன்று கருணாவின் மீது எஞ்சியிருப்பது துரோகி என்ற துர் நாற்றக் கந்தல் மட்டுமே.

அன்று மிடுக்கோடு கை குலுக்கிய சிறிலங்காத் தளபதிகளிடம் கையேந்த வேண்டிய இழி நிலைக்குத் தாழ்ந்து போனதுதான் கருணாவின் இன்றைய சாதனை.

அன்று கருணாவின் கட்டளையில் செயற்பட்ட போராளிகளைக் காட்டிக்கொடுத்தும் பதுங்கித் தாக்கியும் கொன்று குவித்தவர்களுடன் இன்று கருணா உரையாடும் போது சகோதரபாசம் கரை புரண்டோடுவதாகத் தகவல். அன்று தன்னோடிருந்த போராளிகளின் பெற்றோர்களிடம் அரசியல் செய்ய வருகின்றாராம் கருணா. தப்பியோடும் போது மாவீரர் விபரப் பட்டியலையும் எரித்து விட்டு ஓடிய கருணா மாவீரருக்கு தீபம் ஏற்றுவாராம் என்ற நாசகாரக் கூச்சல் வேறு.

வடபுல வர்த்தகர்களையும் மாணவர்களையும் வெளியேற்றும் படி கொலைப் பாதகம் புரிந்த கருணா இப்போது தன் கற்பனை நிருவாகத்தில் வடபகுதி ஆட்களுக்கும் இடம் கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கின்றார். கிறிஸ்த்துவுக்கு முன், பின் என்பதுபோல கருணாவின் நிலைப்பாட்டை மட்டக்களப்பை விட்டு ஓடுவதற்கு முன், பின் என்று தொகுத்துத் தான் பார்க்க வேண்டும். பெயர் சூட்டும் முன்னமே பேச்சாளரைப் பறிகொடுத்த கட்சி என்றால் யாமறிந்த வகையில் அது கருணாவின் கட்சிதான்.

மாவட்ட அபிவிருத்திக்கென்றும் போராட்டத்திற்கென்றும் பலவழிகளிலும் சேகரித்த நிதியை மனைவியின் பெயரில் நிறுவனங்களை அமைத்தும் மலேசியா போன்ற நாடுகளில் நிலபுலன்கள் வாங்கியும் ஊழல் புரிந்தவர் கருணா. இதுவே அவரது அரசியற் தகுதி என்று கருதியே இப்போது கைகோர்த்து நிற்கும் மூத்த துரோகி இவரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்றும் பேசப்படுகிறது. இந்த மூத்தவரின் அலுவலகத்திற்கு இளையவரின் சகோதரர் போயிருந்த போது அங்கே ஏற்கனவே இருந்து வந்த இவர்களின் மைத்துனரைக் கண்டிருக்கிறார்.

கண்டதும் பயமும் பாசமும் பொங்க அத்தான் எப்படிச் சுகம் என்று நலம் விசாரித்ததாகத் தகவல். அந்தச் சம்பவத்தை வேறொருவருடன் பகிர்ந்து கொண்ட அந்த மைத்துனர் முதலில் நம்மைத் துரோகி என்றவன் இப்போது அத்தான் என்றல்லவா அழைக்கிறான் என்று கறுவினாராம் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

ஊடகங்களால் ஊதி ஊதிப் பெருப்பிக்கப்பட்ட கருணா வெகுசனத்தின் மத்தியில் ஒரு படைத்துறை வல்லுனராகத் தெரிந்ததில் ஆச்சரியமில்லை.அது பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசுவது போன்ற ஒரு தோற்றம் என்பதையே கருணா நிரூபித்துவிட்டார். இதுவரை காலமும் தலைவரின் திட்டங்களை அவரின் நேரடி வழிநடத்தலோடும் தலைவர் எவரும் அறியாது செய்து வைக்கும் சில முன்னேற்பாடுகளின் உதவியோடும் செயற்படுத்தியதால் ஏற்பட்ட பெயரே அது. ஆனால் பிரிந்து செல்லும் அறிக்கையை வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தந்தபோது காட்டிய மோட்டார் அணிவகுப்புப் பூச்சாண்டியும் ஆர்ப்பாட்டமான சூளுரைகளும் தலைவரின் திட்டவகுப்பில் நிகழ்ந்த இரவுத்தாக்குதலோடே வெலவெலத்துப்போகத்தன் சாயம் வெழுத்து வாலைச் சுருட்டிக் கொண்டு துண்டைக்காணோம் துணியைக் காணோம் என்று வறுகினார் கருணா. “வாரணம் பெருத்த மார்பும் வரதனை எடுத்த தோளும் நாரத முனிவர்கேற்பநயம்பட உரைத்த நாவும் தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும்” என்று இராவணன் களத்தில் இழந்து போனதாகக் கம்பன் சொல்கிறான். அது கற்பனை. ஆனால் மண்ணைவிட்டு வெளியேறிய கருணாவிடம் மானம், மரியாதை , சூடு சுரணை மட்டுமல்ல சுயஒழுக்கம் கூட மிஞ்சியிருக்கவில்லை. சூரியவெளிச்சத்தில் சுவாலைவிட்ட கூழாங்கல் சூரியனின் ஒளியை இழந்ததும் வெறுங்கல் லாயிற்று. அதை வைரம் என்று ஏமாந்தவர்கள் ஏமாந்தவர்களே!

எப்படியாவது அமைதியை நிலைநிறுத்தவேண்டும் என்று புலிகள் முழு மூச்சாகக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் போது அடியாட்களை வைத்து கொலைசெய்வதன் மூலம் மட்டக்களப்பில் இயல்பு நிலை திரும்பிவிடாது குழப்பியடித்து விடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார் கருணா. புலிகளின் அமைதி மீதான திடசங்கற்பத்தின் அடையாளமாக மட்டக்களப்பு நகரிலே ஆயுதமற்ற நிராயுதபாணியாக அரசியற்பணியில் செயற்பட்டவர் சேனாதி. சிங்களப் படைத் தலைமைகளின் பாதுகாப்பு உத்தரவாதங்களை நம்பி மக்கள் மத்தியில் மக்களுக்காக சிறகடித்துக் கொண்டிருந்தவர். இரண்டு மாவீரர்களைக்கொண்ட குடும்பங்களின் விபரங்களைத் திரட்டி தேசியத் தலைவர் நிதியத்திலிருந்து அதற்கான மாதாந்தக் கொடுப்பனவுகளை ஏற்பாடுசெய்துவிட்டு, அடுத்த கட்டமாகவறிய குடும்பங்களுக்கான கொடுப்பனவுக்கான விபரந்திரட்டல்களைச்செய்துகொண்டிருந்த போதுதான் சேனாதி என்ற சமாதானத் தேவதையைக் கருணா கொன்று விட்டார். அந்தக் கொலைக் கும்பலைச் சேர்ந்த பதினான்கு பேர் ஹிங்குராங்கொடை பௌத்த மடாலயத்தில் வைத்துக் கைதாகிய போதும் அவர்கள் உடனே விடுதலையானதில் இருந்து பேரினவாதத்தின் கை எங்கெல்லாம் நுழைகிறது என்பது புரியும்.ஊர் குழம்பினால் பேரினவாத சக்திகளுக்கு லாபம். ஊரைக் குழப்பிக்கொடுத்தால் அந்தச் சக்திகள் கருணாவிற்கே கூலி கொடுக்கும்.அந்தக்கூலிக்காகவே இத்தனை மாவீர்களினதும் தியாகங்களை அசிங்கப்படுத்தி நிற்கிறார் கருணா.

இத்தனை களங்கங்களுக்கும் ஆளாகி நிற்கும் கருணா எந்த முகத்தோடு இங்கே அரசியல் செய்ய வருவார்? நீலனையும் சேனாதியையும் கொன்ற முகத்தோடா, அல்லது மூத்த துரோகிகளின் காற்தூசி படிந்த மந்த முகத்தோடா, அல்லது மனைவியின் பெயரில் கோடிகள் சேர்த்த வஞ்சமுகத்தோடா? அல்லது. பேராசையும் கோழைத்தனமும் கொண்ட சொந்த முகத்தோடா பொறுத்துத்தான் பார்க்கவேண்டும்.

கருணா என்ற தனி மனிதன் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன என்று இருந்துவிடலாம். ஆனால் தமிழீழ விடுதலைக்கான தசாப்தகால முதலீட்டை மோசம் செய்ய நினைப்பதும் அதற்கெதிரான சக்திகளுடன் சேர்ந்து விடுதலைக்காக உயிர்தந்த அத்தனை மாவீரர்களுக்கும் மக்களுக்கும் ஒரு தேசத் துரோகம் இழைப்பதும் அவர் அசல் தமிழன்தானா? என்கின்ற சந்தேகத்தையே உருவாக்குகின்றது. “கருணா இப்போது ஆரம்பித்திருப்பது அரசியற் கட்சியல்ல. அது தமிழ் மக்கள் சிறுமைப்பட்டு மாள்வதற்கான இன்னுமோர் கொலைக்களம் என்பது பேரினவாதத்திற்குத் தெரியும். தமிழர்கள் நன்றாகப் புரிந்துகொண்டால் சரி.

இவ்வளவையும் செய்துவிட்டு இங்கே எதை நம்பிக் கருணா வரப்போகிறார் என்று முதலில் நாம் பார்க்கவேண்டும். வந்து கேட்கும் எவரையும் வாழவைக்கும் பண்பாடு கொண்டது இந்த மட்டக்களப்பு மண். ஆனால் கருணா அதை நம்பி வரவில்லை.அவர் எதை நம்பி வருகிறார் என்று பார்க்கவேண்டுமானால் அவரால் கைவிடப்பட்டு புலிகளிடம் திரும்ப வந்திருக்கும் அந்த நான்கு பெண் போராளிகள் கூறியவற்றை உற்றுக் கவனிக்கவேண்டும். “காசை வீசியெறிந்தால் மக்கள் என் பக்கம் திரும்பிவிடுவார்கள் என்று கருணா அவர்களிடம் சொன்னதை மட்டக்களப்பு மண் ஒரு போதும் மறக்கலாகாது” எங்கள் மக்களின் அறி வீனத்தைப் போக்குவதற்காக வெளிநாட்டு நிறுவனங்களே பாடுபடும்போது அறிவீனத்தையே முதலீடாக்க நினைக்கிறது நம் மண்ணிலே பிறந்த நச்சுமரம்.

ஆனால் எமது மக்கள் அந்தளவிற்கு அறிவீனர்கள் அல்லர் என்பதை முன்பும் நிரூபித்திருக்கின்றார்கள். இனியும் நிரூபிப்பார்கள். வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டால் நாங்கள் எங்கள் மண்ணிலேயே சிறுபான்மையினராகிவிடுவோம். என்பதும் தமிழீழத்திற்கான போர்நடக்கும் பிரதேசம் இடம்பெயர்ந்து அழிவுக்குள்ளாகி இன்னல்பட்டாலும் அது ஒட்டுமொத்த விடுதலைக்கானதே என்பதும் அங்கே நிகழும் தமிழீழத்தின் எல்லாப்பகுதிகளுமே அதற்கான நன்மையைப் பெறுகின்றன என்பதும் புலிகளின் பலமே. உலகத் தமிழரின் பலம் என்பதும் இங்குள்ள பலருக்கும் புரியும் என்பதால் கருணாவின் பருப்பு இங்கு வேகப்போவதில்லை.

தன்னை ஒரு கதாநாயகனாக நினைக்கும் பழக்கம் அனேகமாக எல்லோருக்கும் உண்டு. வாழ்கையின் ஏதோ ஒரு தருணத்திலாவது தான் தீரனாக உணரப்பட வேண்டும் என்ற கற்பனையே பலருக்கு இன்பம் தரவல்லது. இந்தியப்படை இங்கிருந்த நாட்களில் சவுக்கடி மீனவக் கிராமத்தில் நடந்த சம்பவம். முதல் நாள் நல்ல சூரன் பட்டதால் அன்றிரவு நல்ல மதுவை உண்டு உறங்கிய அந்த மீனவத் தொழிலாளிக்கு பொழுது கிளம்பிய பின்பு கூடமயக்கம் தீரவில்லை. யாரோ தட்டியெழுப்புவதை உணர்ந்து அரை மயக்கத்தில் எழுந்து நின்ற அவன் தான் படுத்து உழற்றிய மணல் தடத்தைக் காட்டி இது பார்ப்பதற்கு எம்.ஜி.ஆர் படுத்த இடம்போல இல்லையா ? என்று கேட்டிருக்கிறான். முதுகிலே மூர்க்கமாக இறங்கிய பூக்கம்பாளை இவன் எம்.ஜி.ஆர் ஆகமுடியாது என்பதையும் தற்போது இந்தியப் படையின் சுற்றிவளைப்பிற்குள் மாட்டியிருப்பதையும் நொடியில் புரியவைத்தது. அகந்தையும் பேரவாவும் கூட ஒருவகைமதுதான். ஒரு பூக்கம் பாளை சுழன்றால் எல்லாம் சரியாகிவிடும்.

**செல்வநாயகம்**



கோடி ரூபா பாதுகாப்புச் செலவீன ஒதுக்கீட்டில் சம்பளமும் ஏனைய நடைமுறைச்செலவுகளும் போக மிகுதி அனைத்துமே ஆயுதங்கள் வாங்கியமைக்கான கடனுக்கும் வட்டிக்குமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. அதேவேளை சிறிலங்காவின் அரசு விரும்பினாலும் கூட அதனுடைய பாதுகாப்பமைச்சுக்கான செலவீனத்தை இதைவிட குறைக்க முடியாதென ஒரு படைத்துறை ஆய்வாளர் குறிப்பிடும் அளவுக்கு சிறிலங்காவைப் போர் தின்னுவதற்குத் தூண்டுதலாக யூலைக்கலவரமே விளங்கியது.

இந்த ஆடிக்கலவரத்தை சந்திரிகா அம்மையார் தனது சுயநலன் அரசியலுக்கான பேசு

கடந்த ஞாயிறன்று ஈழத்தமிழினம் தன் மீது 21 வருடங்களின் முன்னர் நிகழ்த்தப்பட்ட படுபாதகமான வன்கொடுமையினை நினைவு கூர்ந்தது. “தமிழர்களின் உணர்வுகளைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நான் சிங்கள மக்களின் தலைவன்” எனப் பிரகடனஞ் செய்த ஜே.ஆரின் ஆட்சி தமிழரின் விடுதலைப்போரை அடக்குவதற்காக நிகழ்த்திய கோரம் அது. பேரினவாத

# நாடகம் மட்டுமல்ல



வெறியினால் வக்கிரமடைந்து போன திமிர் பிடித்த சிங்களத்தலைமைகள் தம் தலையில் தாமே மண் போட்டுக் கொண்டனர்.

உண்மையில் நான் இவ்வாறு சொல்வது உங்களுக்கு வியப்பினையோ அன்றிக் கோபத்தினையோ ஏற்படுத்தக்கூடும். ஆனால் 83 யூலைக் கலவரந்தான் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை வெகுஜனமயப்படுத்தியது என்பதனை எவரும் மறுக்கமுடியாது. ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் வடக்குக் கிழக்கின் எட்டுமாவட்டங்களிலிருந்தும், சிறிலங்காவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், ஏன் உலகெங்குமிருந்தும் வந்து விடுதலைப் போரில் இணைந்துகொண்டார்கள். உடன் தொடர்ந்த ஆண்டுகளில் அதன் தாக்கத்தை ஆட்சியாளர்கள் செயல்வடிவில் காணநேர்ந்தது.

அத்தோடு, ஜே.ஆர் அரசின் மேற்குலகு சார்ந்த வெளிநாட்டுக் கொள்கையினால் கடுப்படைந்திருந்த இந்தியாவுக்கு இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைப்பதற்கான பிடியும் 83 யூலைக் கலவரத்தின் மூலம் கிடைத்திருந்தது. மிகவேகமான பொருண்மிய மேம்பாட்டை எய்தியிருக்கவேண்டிய இலங்கைத்தீவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் 75ஆயிரம் ரூபா கடனுடன் பிறக்கும் இழிநிலைக்குத் தள்ளியதும் ஆடிக்கலவரமே. 6000

பொருளாகத் தேர்ந்துகொண்டிருக்கிறார். 21 வருடங்களின் முன்னர் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக இப்போது வருந்தும் சந்திரிகா அதற்காக அரசுத்தலைவர் என்ற கோதாவில் மன்னிப்பும் கேட்டுக்கொண்டிருக்கிறார்! கலவரத்துக்குக் காரணமானவர்களும் தமிழர்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென வலியுறுத்தியுமிருக்கிறார். அதோடு நின்றுவிடாமல் 03 வருடங்களுக்குமுன்னர் தான் நியமித்த சர்வானந்தா ஆணைக்குழுவின் அறிக்கையின் சிபார்சின்படி முப்பது பேருக்கு யூலை 23ஆம் திகதி சனாதிபதி மாளிகையில்வைத்து நட்டஈடும் வழங்கினார். (மொத்தம் 923 பேருக்கு 7.32 கோடிரூபா இவ்வாறு நட்டஈடாக வழங்கப்படவுள்ளதாம்)

கடந்த வாரத்தில் சந்திரிகா ஏந்தியிருந்த அரசியல்ஆயுதம் யூலைக் கலவரமே. அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக சந்திரிகா மிகவும் வருந்தினார். அத்தோடு நின்றுவிடாது தழிழர்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமெனவும், யூலைக்

கலவரத்துக்குக் காரணமானவர்களை வலியுறுத்தினார். 22ஆம் திகதி கண்டி அந்தோனியார் கல்லூரிப் பரிசளிப்பு விழாவின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலும் இதனையே பிரதான உள்ளுடனாக எடுத்துக்கொண்டிருந்தார் சந்திரிகா. அவருடைய உரையின் சில துளிகளை நீங்களும் ருசிபாருங்கள்.

“30 வருடங்களுக்கு முன்னர் வடக்கிலும் தெற்கிலும் வன்முறைக் கலாசாரம் உருவானது. இதன் உச்சக்கட்டமே கறுப்புயூலை கலவர

ஆண்ட தலைவர்கள் நினைத்திருந்தால் இவற்றை நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவர்கள் வன்முறையை வன்முறையால் தீர்க்க நினைத்தார்கள்.

தவறுகளை அறியும்போது தவறுகள் ஏன் ஏற்பட்டன என ஆராயவேண்டும். இதற்குத் தீர்வுகாண வேண்டும்.

எமது பிரச்சினைகளை பேச்சுமூலம், உரையாடல்மூலம், கருத்துப் பரிமாற்றம் மூலம் தீர்க்கப் பழகிக்கொள்ளவேண்டும். எந்த ஒன்றையும் வன்முறை மூலம்

தடை மூலமும், அதிதீவிரமான இராணுவத் தாக்குதல்கள் மூலமும் கொன்றொழித்ததை ஒரு பக்கத்தில் வைப்போம். சமாதான முயற்சிகளை ஆரம்பித்த ரணிலின் அரசாங்கத்தை ‘காற்றைப் பிடுங்கி’ வீட்டுக்கு அனுப்பியதையும் ஒரு பக்கம் வைப்போம். தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றிய அவரது அணுகுமுறையை என்ன சொல்லுவது?

இப்போது பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் மூலம் கருத்துப் பரிமாற்றம் ஏற்படுத்துவதற்கா சந்திரிகா அம்மையார் முயல்கிறார்?

மாகும். ஆனால் இவ்வன்முறைக்கு பொறுப்பானவர்கள் இதுவரை தமிழ்களிடம் மன்னிப்புக் கோரவில்லை. இனக்கலவரத்தினால் ஏழு இலட்சம் தமிழர்கள் இந்நாட்டைவிட்டு வெளியேறினார்கள். இதன் காரணமாக சிறந்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சிவில் உத்தியோகத்தர்களையும் எம் நாடு இழக்க நேர்ந்தது துரதிஸ்ரவசமானதாகும். எனவே தமிழ் மக்களிடம் தாம் மன்னிப்புக் கேட்கக் கடமைப்பட்டுள்ளோம்.

**பு.சத்தியமூர்த்தி**

வன்முறைமூலம் இந்த நாட்டை ஆளலாம் என நினைத்தார்கள். அதன் காரணமாகவே இன்றும் வன்முறைகள் தொடர்ந்தவண்ணமுள்ளன. சிலர் தமது உரிமைகளைக் கேட்டபோது, வீடுகள் எரிந்து சாம்பலாகின. நான் நாரஹேன்பிட்டியவில் வீடுகள் எரிவதை நேரில் பார்த்தேன். எனவே நாம் பின்னோக்கிப் பார்க்கவேண்டும். நாம் தமிழரிடம் மன்னிப்புக்கேட்கவேண்டும்.

அக்காலத்தில் நாட்டை

...க்கமுடியாது.

என்ன அற்புதமான உரை! உண்மையிலே இந்தப் பாதையிலே சிறிலங்காவின் அரசியல்வாதிகள் நடந்திருந்தால் நாம் ஒரு லட்சம் வரையான எமது மக்களையும் போராளிகளையும் இழக்க நேர்ந்திருக்காதே, என நினைக்கத் தோன்றுகிறதா?

‘ஒய்யாரக் கொண்டையாம், உள்ளே ஈரும் பேனுமாம்’ என்று எம் முன்னோர் இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். தனது உரையில் சுட்டிக் காட்டிய நற்பண்புகளை சந்திரிகா தனது கடந்த பத்து வருட ஆட்சியில் கடைப்பிடித்தவரா? குறைந்தது தற்போதாவது கடைப்பிடிக்கிறாரா?

தமிழர்களை ஜே.ஆர் அரசு கொழும்பிலிருந்து சிதம்பரம் கப்பலில் காங்கேசன் துறைக்கு அனுப்பியதை சந்திரிகா வெளிப்படுத்தினார். ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து 6 இலட்சம் தமிழர்களை சந்திரிகா துரத்தி விட்டதை, வன்னிப் பெருநிலப்பரப்புக்குள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி அல்லலுற்ற மக்களை பொருளாதாரத்

தமிழர்களின் கோரிக்கைகளுக்கு, இடைக்கால நிர்வாகத்துக்கு அவர் வழங்கும் பதில் என்ன?

கிழக்கிலிருந்து தப்பியோடிய முரளிதரனைப் பொத்தி வைத்துக் கொண்டு அவர் ஏற்படுத்தி வருகின்ற ரத்தக் களரிகளை எந்தவகைக்குள் சேர்ப்பது? தமது உரிமைகளை கேட்கும் தமிழர்களின் தலைமைத்துவ சக்தியான விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்த சந்திரிகா எடுக்கும் இந்தக் குள்ளத்தனமான நடவடிக்கைகள் எந்தவகையில் ஜே.ஆருக்குக் குறைந்தவை?

கடந்த 24 ஆம் திகதி இரவு பி.பி.சி தமிழோசைக்குப் பேட்டியளித்த ஒரு பத்திரிகையாளர் தெரிவித்தார், “சந்திரிகாவின் இந்தக் கூற்றுகளோ நட்டஈடு வழங்குதலோ வெறும் நாடகம் மட்டுமே. இவை தமிழ் மக்களின் காயங்களுக்கு மருந்து தடவப்போவதில்லை” உண்மைதான் இது ஒரு நாடகம் மட்டுமல்ல, தமிழர்களின் வலியையும் வேதனையையும் கொச்சைப்படுத்துவதுமாகும். ■



## மதவடி மயிலர்

*‘வணக்கம்’*

*‘என்னடா திடீரென்று மயிலர் வணக்கம் சொல்லுறார் என்று யோசிக்கிறீங்களா?’*

*‘எல்லாம் ஒரு சமாளிப்புக்காகத்தான்பாருங்கோ... போன கிழமையும் அதுக்கு முந்தின கிழமையும் உங்களைச் சந்திக்க முடியாமல் போச்சு... அதுகுத்தான் இந்த சுணக்க வணக்கம்.’*

*‘திடீரென்று இந்த இரண்டு கிழமைக்கை கன செய்திகள் வந்து போட்டுது.. சமாதானம் தூரத்தூரப் போய்க்கொண்டிருக்குப் போலை கிடக்கெல்லே பாருங்கோ....’*

*‘அரசும் சந்திரிகாவும் தொடர்ந்தும் சமாதான விடயத்தில் சாதகமாக நடந்துகொள்ளுறமாதிரித் தெரியேல்லை’....*

*‘நான் சமாதானம் என்று சொல்லுற மாதிரி சொல்லுறன், நீங்க அதை எதிர்க்கிற மாதிரி நடவுங்க... இப்படியே காலத்தைக் கடத்திப் போடலாம். பிறகு சலிச்சுப் போய் புலிகள் சண்டையைத் தொடங்கினா மீண்டும் சமாதானத்திற்கான யுத்தத்தை நாங்க ஆரம்பிக்கலாம் பிறகு பிரச்சினையே இல்லையென சந்திரிகாவும், ஜே.வி.பியும் சொல்லிவைச்சு செய்யினம் போலையெல்லே கிடக்கு பாருங்கோ...’*

*‘உதல்லாம் அவதந்தரம்... கடைசியிலை அவவுக்கே அந்தரமாகப் போகப் போகுது..... கெடுவான் கேடு நினைப்பான்.. அவ்வளவுதான் பாருங்கோ.’*

*‘இதுக்கிடையிலை கருணாவை பாதுகாக்க சந்திரிகா உதவ வேண்டுமாம்! டக்ளஸ் கோரிக்கை விடுத்துள்ளாராம்...! பாருங்கோ கருணாவின் கதி இப்படியாப் போட்டுது... தப்பியோடாமல் தற்கொலைசெய்து கொண்டிருந்தால் இப்படி அவமானங்களைச் சந்தித்திருக்க வேண்டியதில்லை.. பிரதேசவாதி என்ற அடையாளமாவது மிஞ்சியிருக்கும்.... இப்ப துரோகிகளின் அடியாள் என்ற அடையாளம் தான் மிஞ்சப் போகுது... கெட்டுத்தான் அழிவேன் என்று விடாப்பிடியா நிற்பவரை யார்தான் தடுக்கமுடியும் பாருங்கோ...’*

*‘இதுக்கிடையிலை ஜாதிகஹெல உறுமயவினர் விடுதலைப் புலிகளோடு பேச முயற்சி செய்கினமாம்... நல்லது. ஆனால் அரசியல் வாதம் பிடித்த பேரினவாதப்பிக்குகளாக வராமல்.. தர்ம நியாய சிந்தனை கொண்ட புத்தபகவானின் அடியொற்றிய சம தர்ம - நோக்குடன் கூடிய பிக்குகளாக வந்தால் நல்லது... அது சாத்தியமா என்பது சந்தேகம் தான்.’*

*அது சரி தனது தனிப்பட்ட வீட்டையும் சொத்துக்களையும் தான் ஹெல உறுமயக் காரர் பயன்படுத்துவதாகவும் உடனடியாக அங்கிருந்து அந்த அரசியல் வாத பிக்குகள் வெளியேறிவிட வேண்டும் என்றும் அந்த மாபெரும் பேரினவாத சிந்தனையாளரான திலக் கருணாரத்ன ஊளையிட்டுள்ளார்.... அவரும் ஹெல உறுமயவை விட்டு விலகிவிட்டாராம். காரணம் நாடாளுமன்றக் கதிரையை தனக்காக விட்டுத்தர ஒரு பிக்குவும் முன் வரவில்லையாம்...! அடபாவமே...! தர்மராஜ்ஜிய கோட்பாட்டாளருக்குள் இப்படி ஒரு பதவிப் போட்டியா?*

*‘நினைக்கவே தலையைச் சுத்துது...’*

*‘அடுத்த வாரம் மதவடிக்கு வாங்க கனக்கப் பேசுவம்’.*

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

தரைத்தொடர்பிருந்த மண்டைதீவு திரிவிடபலய ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் முழுமையாக வெளியேறியது. தாம் சேர்த்துவைத்த சொத்துக்களையெல்லாம் இழந்து இடம்பெயர்ந்தவர்கள் மண்டைதீவு மக்கள். ஏனெனில் இராணுவம் மண்டைதீவு நோக்கி முன்னேறுகையில் இராணுவம் நகர்ந்துவரும் திசைவழியாகவே அவர்கள் வெளியேறவேண்டியிருந்தது. இதனால் உயிரைமட்டும் காத்துக்கொள்ள சொத்து எதுவும் இல்லாமல் அவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்த இடப்பெயர்வுபற்றி ஒருபடைப்பாளி கூறுகிறார். மண்டைதீவு கலைச்செல்வி என்ற அவரை உருத்திரபுரத்தில் 2001ல் அவர் குடியிருந்த வீட்டில் சந்தித்தோம்.

"நான் இடம்பெயர்ந்த நாள்தொடக்கம் பல வருசமாக சித்தபிரமை பிடிச்சமாதிரி இருந்தனான். நான் என்ர இயல்பை இழந்துபோனேன். என்னால் ஒண்டும் செய்யமுடியாமல் இருந்தது. மூளையாலை எதையும் இயல்பாக நினைக்கமுடியவில்லை பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் என்னால ஓரளவு இயல்புக்கு




வரக்கூடியதாக இருந்தது" என்றார் அவர்.

ஏன் என்ன பிரச்சினை நடந்தது என அவரிடம் கேட்டோம்.

"எத்தனை வருசமாக நான் இருந்தஇடம் குருவிமாதிரி வைச்சசொத்துக்கள் அதைவிட நான் எழுதி எழுதி பிரசுரமான படைப்புக்கள் எல்லாத்தையும் கண்ணும் கருத்துமா சேமிச்சு வைச்சிருந்தனான்" ஒரு கணத்தில எல்லாத்தையும் கண்முன்னால விட்டிட்டு கையில குழந்தையோட குடும்பத்தோடு வந்தனான். கண்ணெதிரில அப்பிடியே விட்டிட்டுவர எனக்கு எல்லாத்தையும் இழந்தபிரமை பிடித்துவிட்டது. அதுவே பலவருசங்கள் செயலிழக்கச் செய்துபோட்டுது என்று மண்டைதீவு கலைச்செல்வி அந்த இடப்பெயர்வின் தாக்கத்தைச் சொன்னார்.

சரவணையில் ஒரு ஆசிரியை தன் மருமகளை தனது கண்முன்னாலேயே சிங்களப்படை சுட்டுக்கொன்றதால் பல வருசங்கள் சித்தபிரமைபிடித்துப்போன கதையை முதலில் பார்த்தோம்.

இன்னொருபெண் - மண்கும்பானைச்சேர்ந்தவர். புதிதாக திருமணம் செய்தவர். அவரது கணவர் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டார். அவர் கடைசிவரை திரும்பவேயில்லை. அப்பெண்ணும் மனப்பாதிப்பிற்குட்பட்டார். பாதுகாப்பு கருதி யாழ்ப்பாணத்தில் உள்ள இவர்களின் பெயர்களை குறிப்பிடவில்லை. ஏனென்றால் 1990இல் நடந்த இந்த கொடும்செயலை முறைப்பாடிட்டு - இவர்கள் சாட்சி சொல்லும் வாய்ப்பு இருப்பதால் - இவர்கள் தொடர்பில் அச்சம் உள்ளது. 1985இல் குமுதினிப்படகில் இடம்பெற்ற படுகொலையில் உயிர்தப்பிய படகுப்பணியாளர் ஒருவரை இன்றும் சிறிலங்காக்கடற்படையினர் தேடிவிசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சரி, மண்டைதீவு முழுமையாக இடம்பெயர்ந்துவிட்டது அல்லைப்பிட்டி, சாட்டி, வேலணையும் இடம்பெயர்ந்தது. புங்குடுதீவு, வேலணை ஊர்காவற்துறையின் மக்களும் இரவோடு இரவாக அராலிக்கடல்வழியாக வெளியேறிவிட்டார்கள்.

சிறிய எண்ணிக்கையான மக்கள் - குடும்பத்தில் வயதானவர்களே தம்வீடுகளில் காவலுக்காக இருந்தனர், ஏனையோர் வெளியேறிவிட்டனர்.

இப்பொழுது படைகள் மண்டைதீவிலும் ஊர்காவற்துறையிலும் மட்டுமே இருந்தனர். இந்த இடைவெளிக்கூடாக இப்பகுதி மக்கள் அராலித்துறைவழியாக மேற்கொண்டார்கள். சூரியன்மறைந்து இருளடைந்ததுமுதல் - காலை விடியும்வரை தான் இந்த வழிப்போக்குவரவு. இந்த இரவில்மட்டும் தான் தீவகத்தில் தங்கியிருப்போருக்கும் யாழ்ப்பாணத்துக்கு வந்தவர்களுக்குமான தொடர்பு ஏற்படும்.

அதிலும் காரைநகர் கடற்படைத்தளப்படையினர் மண்டைதீவுச்சந்திப் படைகள் இரவில்மேற்கொ ளும் பரா ஒளிக்குண்டுத் தாக்குதல் உலங்கு வானூர்தித் ; ங்குதல் என்பன இந்தத் தொடர்புகளையும் சிதைத்திருக்கின்றன இந்த அவலம் ஒருபுறமிருக்க தரைத்தொடர்பற்ற தீவுகளில் மக்களின் அவலம் இன்னமும் மோசம். நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகியவற்றின் மக்களே இரட்டை அவலத்தைச் சந்தித்தவர்கள்.

துருவன்




*உயிர்களின் மூலம் பற்றிய பரிசோதனைகளை நிகழ்த்தக்கூடிய ஆய்வுகூடமாக ரைற்ரன் இருக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். உயிர் உருவாக்கத்துக்கான சேதன மூலக்கூறுகள் (ORGANIC MOLECULES) ரைற்ரனில் இருக்கலாம் என்ற எண்ணமே கிளர்ச்சியூட்டுவதாக இருக்கிறது.*

# விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்க்கும் ரைற்ரன்

ஏழு வருடகால நீண்ட பயணத்துக்குப் பின்பு சனிக் கிரகத்தை எட்டிய விண்வெளி ஆய்வு செய்கோளான கஸினி (CASSINI) அக்கிரகத்தை சுற்றிவரத் தொடங்கியுள்ளது. விஞ்ஞானிகளைப் பொறுத்தவரை பேரார்வமான திட்டமாக இருந்த கஸினி திட்டத்துக்காக அவர்கள் இரண்டு தசாப்தகாலம் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்களது கவனத்தை ரைற்ரன் துணைக்கோள் ஈர்த்துக்கொண்டிருக்கிறது.இப்படி ஏன் அவர்கள் ஈர்க்கப்படுகிறார்கள்?

அந்தத் துணைக் கோளின் திண்மையான வளி மண்டலம் மற்றும் அதனைச் சூழ்ந்து கொண்டிருக்கின்ற மர்மமான மேகங்கள் காரணமாகப் பல தசாப்தங்களாகவே ஆர்வத்துக்கும், கிளர்ச்சிக்கும் உரிய ஒரு இலக்காக ரைற்ரன் இருந்து வருகிறது.

திண்மையான வளி மண்டலத்தால் சூழப்பட்டதாக சூரியக் குடும்பத்தில் காணப்படும் ஒரே ஒரு துணைக்கோளாக ரைற்ரன் இருக்கிறது. ரைற்ரனினுடைய இந்த திண்மையான



வளிமண்டலம் தொடர்பாகப் போதியளவிலான தகவல்கள் விஞ்ஞானிகளிடம் இல்லை. ஆனால் ரைற்ரனுக்குள்ளே ஏதோ ஒருவகை இரசாயனத் தாக்கங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன என்று அவர்கள் நீண்டகாலமாகவே சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

உயிர் உருவாக்கம் அங்கே நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

உயிர்களின் மூலம் பற்றிய பரிசோதனைகளை நிகழ்த்தக்கூடிய ஆய்வுகூடமாக ரைற்ரன் இருக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். உயிர் உருவாக்கத்துக்கான சேதன மூலக்கூறுகள் (ORGANIC MOLECULES) ரைற்ரனில் இருக்கலாம் என்ற எண்ணமே கிளர்ச்சியூட்டுவதாக இருக்கிறது.

காலம்சென்ற கலாநிதி கார்ல் ஸாகன் (Late Dr.CARL SAGAN) உம் ரைற்ரனில் ஏதோ ஒருவகை உயிரியல் தாக்கங்கள் நிகழ்ந்துகொண்டிருப்பதாக எண்ணினார். நில உலகுக்கு புறம்பாக உயிரினங்கள் உள்ளன. என்றும் எமது சூரியக் குடும்பத்துக்கு அப்பாலும் உயிரினங்கள் இருக்கின்றன என்றும் அவர் நம்பினார். எமது பால்வழி மண்டலத்தில் (MILKYWAY GALAXY) மட்டும் மில்லியன் கணக்கான அயற் பண்பான நாகரிகங்கள் (ALIEN CIVILISATION) இருக்கலாம் என அவரும் பேராசிரியர் பிறெட் ஹொய்ல் (PROT FRED HOYLE) உம் நம்பினார்கள்.




பால்வழி மண்டலமானது குடியேறி வாழக்கூடிய கிரகங்களால் நிறைந்திருக்கலாம் என்று கலாநிதி பிறாங்ட்றேக் (Dr. FRANK DRAKE) கூட நம்பினார். நில உலகுக்கு புறம்பாக உள்ள நுண்ணறிவுகள் தொடர்பான தேடுதலை கலாநிதி பிறாங்ட்றேக் தான் முதன் முதலில் தொடங்கி வைத்தார். இது இப்பொழுது ''செற்றி'' (SETI-THE SEARCH FOR EXTRATERRESTIAL INTELLIGENCE) திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

எமது பால்வழி மண்டலத்தில் உள்ள அயற்பண்பான நாகரிகங்களின் எண்ணிக்கையை கணிப்பதற்கான ட்றேக் சமன்பாடு (DRAKE EQUATION) என்ற புகழ்பெற்ற சமன்பாட்டை உருவாக்கியவராகும்.

நிலவுலகுக்குப் புறம்பான உயிரினங்கள் தொடர்பான தேடுதலை 1960 ஆம் ஆண்டில் ட்றேக் ஆரம்பித்தபொழுது (ஒஸ்மா திட்டம்-OZMA PROJECT) ஏனைய தாரகைகளை கிரகங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. எங்களுக்கு ஒரே ஒரு சூரியக்குடும்பத்தைப்பற்றி அதாவது எங்களது சூரியக்குடும்பத்தைப் பற்றியே தெரியும். ஆனால் இப்பொழுது 130 வரையான சூரியக்குடும்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் மேலும் கிரகங்கள் கண்டுபிடிக்கப்படும் அளவுக்கு பிரபஞ்சத்திலே நாம் தனியாக இல்லை. எமது பால்வழி மண்டலத்திலே நுண்ணறிவு கொண்ட வேறுவகை உயிரினங்களும் இருக்கலாம் என்ற நம்பிக்கைகள் பெருகிக்கொண்டிருக்கின்றன.

1960 ஆம் ஆண்டிலே சூரியனை ஒத்த இரு தாரகைகளைத் தெரிவுசெய்த ட்றேக் அவற்றை நோக்கி சமிக்ஞைகளை அனுப்பினார். ரோஸெற்றி (TAU CETI) மற்றும் எப்ஸைலோன் எறிடினி (EPSILON ERIDINI) ஆகியவையே அவையாகும். இவை இரண்டுமே பூமியிலிருந்து 10 மில்லியன் ஒளி வருடங்களுக்கு அப்பால் இருக்கின்றன. (ஒரு ஒளிவருடம் என்பது ஒளி ஒரு வருடத்தில் பயணம் செய்யக்கூடிய தூரமாகும்) இதில் ஆர்வமூட்டும் விடயமாக எப்ஸைலோன் எறிடினி தாரகையைச் சூழ ஒரு சூரியக்குடும்பம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது இருக்கிறது.

கஸினி செய்கோளானது, மர்மமான ரைற்ரன் கோளின் மேற்பரப்பை நோக்கி ஆய்வுக்கொள் கலன் ஒன்றை பரசூட் மூலம் இறக்கவிருக்கிறது. விரைவிலேயே இந்த உபகோளைப் பற்றியதும் அங்கிருக்கக்கூடிய உயிரினங்களின் மூலம் பற்றியதுமான ஆர்வமூட்டும் தகவல்களை நாம் அறியக்கூடியதாக இருக்கும். கஸினி செய்கோளானது 4 வருடங்களுக்கு சனிக் கிரகத்தைச் சுற்றி வந்து சனிக்கிரகம் அதன் உபகோள்கள் பற்றிய ஆர்வமூட்டும் தகவல்களைப் பெற்றுத்தரும்.

## இனி கண்டோஸ்



இங்கு கூடியிருக்கும் சிறார்களே..

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பத்துரூபாவிற்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தித் தற்போது சில்லறைக்குப் பதிலாக வழங்கப்படும் ரொபியை கண்டோசாகத் தர முயர்த்துவோம் என்பதை உங்களிற்கு மிகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.

# குகைவரைபுகள் ஒரு அறிமுகம்




வரைதல் என்பது மனித மூதாதைகளில் முதல் மொழிவரி வடிவ செயற்பாடு என்பது அறிஞர் கள் கூறும்கருத்து.

மனித மூதாதைகளின் அறிவியல் சிந்தனையின் வளர்ச்சிக் கட்டங்களில் கற்களை ஆயுதங்களாக்கியமை, தீயை கைப்பற்றி உணவுகளை பதப்படுத்தி உண்டமை, வேளாண்மையை கண்டுபிடித்தமை, மாந்தை மேய்ப்பு, நீர்ப்பாசனக்கட்டுமானம், மட்பாண்டத்தயாரிப்பு,


பம்பரகஸ்தலாவை குகை

உலோகங்களை கைப்பற்றியமை என்பன இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்புவரை நடந்தன. இது பெளதீக ரீதியான நடைமுறை களாகும்.

மனிதன் சைகைகளால் மட்டும் தன்னுடைய சிந்தனைகளை பரிமாறிக்கொண்டிருந்த லட்சக்கணக்கான ஆண்டுகளின் வளர்ச்சியில் மொழிகள் உருவாவதற்கு முன்பாகவே தனது எண்ணங்களைப் பதிவு செய்வதில் முயன்றான்.

இந்தப் பதிவுகளை மேற்கொள்ள அவனுக்கு ஒரு ஊடகம் கிடைக்கும்வரை அவன் அதுக்காகக் காத்திருந்தான்.

வெட்டவெளிகளில் வாழ்ந்த மனித மூதாதைகள் மலைக்குகைகளில் வாழத்தொடங்கியபோது அவனுக்கு அந்த ஊடகம் கிடைத்தது. குகைகளின் சுவர்களே அவன் தனது எண்ணங்களை பதிவுசெய்யக் கிடைத்த முதல் ஊடகமாகும்.

குகையில் வாழ்ந்த மனிதன் தீயைக் கைப்பற்றிய பின்னர் அதன்மூலம் குகைகளுள் ஒளியை ஊட்டிய பின்னரே அம்மனிதன் தன் அந்தப் புதிய பதிவை ஆரம்பித்தான். மனிதன் தான் அறிந்த விடயங்களை படங்களாகக் குகைச் சுவர்களில் வரையத்தொடங்கினான்.

அந்தப்படங்கள் மூலம் செய்திகளைக் கூற அவன் முயன்றான். இந்த முயற்சியே மனிதன் எழுத்து வரிவடிவங்களை உருவாக்க வித்திட்டது.

எம்மனித மூதாதை தான் கண்ட விலங்குகளை தனது குகைகளில் எரிந்த மரக்கறி, விலங்குக் கொழுப்பு எண்ணெய், தாவர சாறுகளைக் கொண்டு தயாரித்த மைகள் மூலம்


லெனாம குகை

வரைந்தான்.

உலகளாவிய ரீதியில் மனித மூதாதைகளின் குகைவரைபுகள் உள்ளன.

இன்றைவரைக்குமான கண்டுபிடிப்புகளில் பிரான்சின் குரோமக்னோன் குகையில் உள்ள குகைவரைபே மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்றது. பலவண்ணங்களில் அமைந்துள்ள இந்தக் குகை வரைபு கி.மு 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என காலக் கணிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவில் தமிழரின் தொன்மைவாழ்வு மூடிமறைக்கப்பட்டுள்ள நிலையில் தமிழர் தாயகப்பகுதியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொன்மையான குகைவரைபுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

உலகில் மூதாதைகளைப்போல எமது தாயகத்திலும் எமது மூதாதைகள் சிந்தனை வளர்ச்சிப் போக்கின் ஒரு கட்டமாகத் தமது எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் குகைகளில் வரைதலை மேற்கொண்டனர். இந்தக் குகைவரைபுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொன்மையானவை. ஆனால் இலங்கைத்தொல்லியல் திணைக்களம் அவற்றின் அறிவியல் பூர்வ காலக்கணிப்பினை வெளியிடவில்லை. இந்தக் குகை வரைபுகள் மக்கள் மயப்படுத்தப்படாது தொல்லியல் திணைக்களத்தில் அறிக்கைகளாகவே உள்ளன. இந்தக் குகை வரைபுகள் எமது தாயகத்தில் எமக்காக இருக்கும் ஒரு ஓவிய வரைபின் ஆரம்ப மரபாகவும் கொள்ளலாம் அதனால் எமது தாயகத்தின் மூதாதைகளின் வெளிப்பாடுகளை நாம் அறிந்து கொள்ள அவைபற்றி அறிமுகப்படுத்துகிறோம்.

எமது தாயகப்பகுதியில் மட்டக்களப்


உமேகந்தை குகை

பின் அரங்கொடகல, பம்பரகஸ்தலாவ, கமகந்தைகல், ஹிலானுஹே, கதுருபொக்குண, கனேகம, கிரிபொக்குண, குடும்பிமலை, லேனாம, பெகிலாகொடகல், மகலெனமா எலியா, மலையடி கந்தை, ராஜகல் கந்தை, உமகேகந்தை, வவுனியாவின் கோங்கராயன்குளம் ஆகிய கல்குன்றுகளின் குகைகளில் தொல்கால வரைபுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கான தொல்லியல் ஆணையாளர் H.C. பெல் 1897 இல் அனுராதபுரத்தில் தொல்கால


ராஜகல்கந்தை குகை

குகைவரைபை முதல் தடவையாக கண்டு பிடித்தார். அவை வேடர்களால் வரையப்பட்டதாக முடிவுசெய்யப்பட்டது.

தமிழர் தாயகத்தில் மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளின் மலைக்குகைகளில் 1950 களில் தொல்லுயிரியலாளரான P.E.P தெரனியகலை அதிகளவிலான குகை வரைபுகளைக் கண்டுபிடித்தார்.

இந்தக் குகை வரைபுகளின் தொழில் நுட்பம் எப்படியானது என்பது முக்கிய விடயமாகின்றது. சாம்பல், வெள்ளைக்களிமண், சுண்ணாம்பு, மஞ்சள், சிவப்பு, வர்ணமண் ஆகியன கலக்கப்பட்டு வரைதலுக்கான மை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மையைக் கொண்டு மனிதர்கள் சுட்டு விரலினாலோ அல்லது குச்சிகளின் முனைகளை தும்பாக்கி அதனாலோ வரைதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த வரைதலில் பயன்படும் மை குகைச் சுவரிலிருந்து அகன்று போகாதவாறு அதனுடன் மரங்களின் பிசின், தாவர இலைச்சாறு என்பன கலக்கப்பட்டிருக்கின்றன.

*01.அரங்கொடகல குகை*

இது மட்டக்களப்பில் உள்ளது. இலங்கை தொல்லியல் ஆணையாளராக இருந்த பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த H.C.P பெல் 1904, 1915, 1918 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வின் மூலம் இக்குகையில் வரைபுகளை கண்டு பிடித்தார். மனிதர், விலங்குகள் இதில் வரையப்பட்டிருக்கின்றன. வெள்ளை மையினால் அவை அமைந்துள்ளன.


கௌதுறபொக்கணை குகை

01.ஆண், 02.பெண், 03.குரங்கு, 04.மான், 05.தாமரை- சூரியன், 06.இலை, 07.அம்பு தொடுக்கப்பட்ட வில், 08.திருகோண கோலங்கள், 09.மலர்கள், 10.இனங்காணப்படாத வடிவங்கள் இக்குகைச் சுவர்களில் உள்ளன. அவை வயல்களினது அல்லது நீர்ப்பாசன வாய்க்கால்களினது வடிவங்களாக இருக்கலாம் என கருதப்படுகின்றது.இக்குகை வரைபுப்படங்கள் வெளியாகவில்லை.

*02.பம்பரகஸ்தலாவை குகை*

இது அம்பாறையில் உள்ளது 1957இல் தொல்லுயிரியல் ஆய்வாளரான P.E.P தெரனியகலை பம்பரகஸ்தலாவை குகையில் ஆய்வினை மேற்கொண்டார். சில விலங்குகளின் உருவங்கள் இக்குகைச்சுவரில் வரையப்பட்டுள்ளன.

*03.கமகந்தை கல் குகை*

மட்டக்களப்பில் நுவரகல் குன்றினருகே



மகா ஓயா பள்ளத்தாக்கில் இந்த கல்குகை உள்ளது.

இந்த வரைபு கூறும் பொருள் விளங்


கோணகொல்ல குகை

கப்படுத்தப்படவில்லை. 1911 C.G செலிக்மன், செலிக்மன் ஆகியோர் இவ்வரைபைக் கண்டு பிடித்தனர்.

*04.கனேகம் குகை*

அம்பாறையில் கல்லோயாப் பகுதியில் பல்லன் ஆறுக்கு மேற்கே 5 மைல் தொலைவில் கனேகம குகை உள்ளது. 1957இல் P.E.P தெரனியகலை இதில் ஆய்வினை மேற்கொண்டு யானை, முதலை, ஊரும் விலங்குகள், மனிதன் ஆகிய உருவங்கள் வரையப்பட்ட நிலையிலும் 4வரி ஆரம்ப பிராமி எழுத்து வடி


விஸிலாகொடை குகை



வங்களையும் கண்டார். இந்தக் குகை 100அடி நீளமும்,32அடி அகலமும், 40அடி உயரமும் கொண்டது.

*05.கோணகொல்ல குகை*

இது அம்பாறையில் கல்லோயா பள்ளத்தாக்கில் உள்ளது. L.K கருணாரட்ண என்பவர் இக்குகையை ஆராய்ந்துள்ளார். விலங்குகளின் கூட்டம், வேட்டையாடுதல் என்ற விடயங்கள் வெள்ளை வண்ணத்தில் கைவிரல்களால் வரையப்பட்டுள்ளன. கற்களை அரைத்து மாவாக்கி ஒரு பசைபோல உருவாக்கப்பட்டு அதனைக்கொண்டு இந்த உருவங்கள் வரையப்பட்டுள்ளன. பழச்சாறு,மரச்சாறு, என்பனவற்றைக் கலந்து வரைதலுக்கான தளம் குகையில் உருவாக்கப்பட்டது. 5 உருவங்கள் இதில் வரையப்பட்டுள்ளன.

*06.ஹீலானுகே*

அம்பாறையில் மொனறாகலை நெடுஞ் சாலையில் 188ஆவது மைல்கல் அருகே இந்தக்குகை உள்ளது.

1984இல் றொலன்ட் சில்வா என்பவர் இத்னை ஆராய்ந்தார். மனித உருவங்கள், மனிதர் விலங்குகளில் சவாரி செய்வது, யானை என்பன இதில் வரையப்பட்டுள்ளன.

*07.கதுறு பொக்கணை*

மட்டக்களப்பின் மகாலெனாமா குன்றினருகே 6 மைல் தொலைவில் இது உள்ளது.

1958இல் P.E.P தெரனியகலையினால் கண்டுபிடிக்கப்பட்ட இக்குகையில் உள்ள உருவ வரைபுகள் தமிழர் தாயகத்தில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்றது. கற்கால வேடர்கள் இதனை வரைந்திருக்கின்றதாக மதிப்பிடப்படுகின்றது.

77 அடி நீளமும், 30 அடி அகலமும், 18 அடி- 13 அடி உயரமுடைய இக்குகையில் தரையிலிருந்து மூன்றரை அடி உயரத்தில் சுவரில் படங்கள் வரையப்பட்டிருக்கின்றன. விலங்குகளின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன.


கமலகந்கல குகை

*08.கிரிபொக்கணை*

மட்டக்களப்பின் பாகுரே என்ற இடமருகே உள்ள இக்குகையில் 1951இல் P.E.P தெரனியகலை ஆய்வினை மேற்கொண்டார். கற்கால


கோணகொல்ல குகை

மனிதரால் வெள்ளை வண்ணத்தில் வரையப்பட்ட யானையின் உருவம் இக்குகையில் உள்ளது.

*09. கோங்கராயன் குள குகை*

வடபகுதியில் உள்ள தொல்கால வரைபுகளைக் கொண்ட ஒரேயொரு குகை இதுவென கருதப்படுகின்றது. வவுனியாவின் செட்டிகுளம் பிரதேசத்தின் தென் எல்லையில் அனுராதபுரத்தின் தந்திரிமலைக்கு வடக்கே 5 மைல் தொலைவல் கோங்கராயன் குளகுகை உள்ளது. 1984இல் எம்.எச. சிறிசோமா இறகு இரட்டைக் குகைகளில் ஆயவினை மேற்கொண்டார். இந்த இரட்டைக்குகைகளில் மனித உருவங்கள்,விலங்குகள் மற்றும்சில விளங்காத குறியீடுகள் வரையப்பட்டுள்ளன.

*குடும்பிமலை:-*

1963இல் ஏ.ரி. ரம்புக்வெல்ல என்பவர் மட்டக்களப்பிலுள்ள இக்குகையில் சுண்ணாம்பினால் வரையப்பட்ட உருவங்களைக் கண்டார்.

*லெனாமா:-*

மட்டக்களப்பிலுள்ள இக்குகையை 1963 இல் எஸ்.ஜே கதிர்காமர் என்பவர் ஆராய்ந்தார். லெனாம என்ற குகையுடன் மேலும் பல குகைகளும் இப்பகுதியில் உள்ளன. இவற்றில் யானைகள், பன்றிகள், கரடிகள், பறவைகள், மனிதர்களின் உருவப்படங்கள் சுண்ணாம்பினால் வரையப்பட்டுள்ளன.

*மகா லெனாமஎலியா- குகை*


கனேகம குகை





மட்டக்களப்பிலிலுள்ள இந்தக் குகையினில்1958இல் பி.இ.பி தெரனியகரை ஆய்வினை மேற்கொண்டார்.விலங்குகளின் உருவங்களுடன் ஆரம்ப பிராமி எழுத்துகளும் இதில் காணப்பட்டன.

*மலையடிகந்தை குகை*

அம்பாறையிலுள்ள இந்தக் குகையில் தொல்கால வரைபுகளும் ஆரம்ப பிராமி எழுத்துகளும் காணப்பட்டுள்ளன.

*ராஜல் கந்தை*

அம்பாறையில் கல்லோயாப்பகுதியில் உள்ள இக்குகை 1961இல் சி.இ.கொடகுமணவினால் ஆராயப்பட்டது. இந்த ராஜகல் கந்தை குகையில் உள்ள தொல்கால வரைபுகள் இது வரை விளங்கப்பட முடியாதவையாகவுள்ளன.

(படம் 201)

தமிழர் தாயகத்தில் தொல்கால வரைபுகளைக் கொண்டதாக கண்டுபிடிக்கப்பட்ட குகைகள் இவையாகும். மட்டக்களப்பு அம்பாறையிலேயே பெரும்பாலானதாக இக்குகைகளின் பெயர்கள் ஆய்வு அறிக்கையில் சிங்களத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கைக்கு தமிழர் சொந்தமானவர்கள் அல்ல விஜயன் வருகையே இலங்கையில் முதல் மனித வாழ்வு எனக் கூறும் சிங்கள இனவாத வரலாற்றாளர்களால் மறைக்கப்பட்டவற்றில் இந்தக்குகை வரைபுகளும் உண்டு.

உலகளவில் மனித மூதாதைகள் தமது சிந்தனையை வெளிப்படுத்திய அறிவியல் நுட்பம் எமது மூதாதைகளாலும் எமது தாயகத்தில் கையாளப்பட்டுள்ளது என்பதற்கு இந்தக் குகைவரைபுகள் சான்றுகளாகின்றன.

உசாத்துணை:-

ROCK ART SITES SRI LANKA A CALALOGUE BY B.E. NANDA DEVA- UNIVERSITY OF KELAYA

encyclopaedia brittanicca - 1993

குரலோன்



## மண்ணின் மைந்தர்களின் கதை

# உன்னது தலைவனின் நினைவுடனேயே உயிர்விட்ட மாவீரன்

டப்,...டப்...டப்...,டப்.. என சட சடத்த வேட்டுச்சத்தங்கள் வானைப் பிளந்துகொண்டு கேட்டுக்கொண்டிருந் தது. நேரம் மாலை 4.30 மணி என்றாலும் வெடிமருந்துகளின் புகை வானில் வட்டமிட்டு, ஒரு வித புகைத் திரையை உருவாக்கியிருந்தமை யினால் எங்களையும் , எதிரியையும் இனங்காண்பது கடினமாகவே இருந்தது. என்றாலும் எதிரியின் பச்சைநிற உடைகளும், இரும்புத் தலைக்கவசங்களும் அவனை அடையாளமிட்டுக்காட்டின. பாவம் சிலர் தங்களது உடமைப் பைகளை யும் கழற்றிவிட்டுக் கொண்டே தண்ணீரில் பாய்ந்தவன் பாய்ந்தோட, மற்றைய சிலர், எமது பிரன்ரக இயந்திரத்துப்பாக்கி சல்லடையாக்கும் பாலத்தினூடாகவே ஓடித் தப்பலா மென ஓடிய போதே உயிரை இழந்து உடல்களாய் கிடக்கிறார்கள். பெரும் பாலும் அவர்கள் நீச்சல்தெரியாதவர்க ளாகவே இருக்கவேண்டும் என உறுதியாக சொல்லமுடியும்.

எமது தாயக பிரதேசத்தின் எல்லைக்கிராமங்களைப் பிடித்து அவற்றை பெயர்மாற்றம் செய்து, சிங்கபுரம் என்பதை சிங்கபுர என் றாக்கி பொலநறுவையுடன் இணைத் திருந்தன சிங்கள அரசு. அந்தப் பாரம்பரிய தமிழ்க் கிராமத்தில் முற்றுமுழுதாக சிங்களக்குடியேற்றம். எனவே, அங்கே நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவம் எமது போராளி களின் போக்குவரத்து, விநியோகப் பாதைகளை தடைசெய்வதும், தொந் தரவு படுத்துவதும், எமது பெரும் பாலான போராளிகள்மீது பதுங்கித் தாக்குதல் செய்வதுமாகவே இருந் தமையினால் இந்த பகல்நேர பதுங்கித்தாக்குதல் திட்டமிடப்பட்டது. மட்டக்களப்பு, பொலநறுவை எல்லை யில் அமைந்துள்ள இந்தக் கிராமத் தில் சண்டை தொடங்கி விட்டி ருந்தது....

1992ஆம் ஆண்டின் இறு திக்காலப்பகுதி, வருடம் முடிவதற் குள் எப்படியும் எதிரியை பல இடங் களில் தாக்கி பெருத்த சேதத்தை ஏற்படுத்திவிடவேண்டும் என்பதே ஒவ்வொரு அணிகளினதும் பெருத்த ஆசையாகும். எனவே சண்டைக்கான அனைத்துத்திட்டங்களும் பூர்த்தியாகி தரவையிலிருந்து நடக்கத்தொடங்கி 03 நாட்களின்பின், குறித்த இடத்தை வந்துசேர்ந்துவிட்டோம். அணிகளின் பொறுப்பாளர் மாவீரன் லெப் கேணல் ஜீவன் சகலதிட்டங்களையும் விளங் கப்படுத்திவிட்டார். அடர்ந்த காடு களுக்குள்ளாக எமதுஅணி நகர்ந்து... சிங்கபுரம் வீதிக்குக் கிட்டவாக பதுங் கித்தாக்குவதற்கான வியூகம் எடுத்து விட்டோம். நிலைகொண்டு நீண்டநேர மாகிவிட்டது. வேவுத் தரவின்படி, எதிரி 4.30க்கு கிராம எல்லைப்பாது காப்புச் சுற்றைமுடித்துத் திரும்பி இருக்கவேண்டும். ஆனால், எதிரியை காணவில்லை என்பதனால், தொடர்ந்து நிலைகொண்டிருப்பது சிரமமாகவே இருந்தது. காரணம் மாடு மேய்க்கும் சிங்களவர்கள், சிலவேளை கண்டுவிடுவார்கள் என்ற பயமும் இருந்தது. நல்லவேளை எங்களை மாடு மேய்ப்பவர்கள் காண வில்லை.

நேரமோ 05மணியை எட்டிப்பிடிப்பதாய் இருந்தது, தூரத்தே ஒரு உழவு இயந்திரச்சத்தம் கேட்டது. நிச்சயமாக அது எதிரியுடையதாகவே இருக்கும் என்பதை உறுதிசெய்து, அனைவரும் உசாரானோம். வீர வேங்கை பரீத் தனது உந்துகணை செலுத்தியை சுடுவதற்கு தயார்ப் படுத்திவிட்டான். ஆனால் கப்டன் கிருஸ்ற்றியின், கைவேண்டாம் என சைகை செய்தது.... ஏன் எதற்கு என கேட்க அவசியமில்லாமல் போய் விட்டது. காரணம் எதிரியின் உழவு இயந்திரத்தில் தனி ஒரு இராணுவ சாரதிமட்டுமே இருந்தான். இவன் போய்த்தான் ஏனையவர்களை ஏற்றி வரவேண்டும், எனவே ஓடு மீன் ஓட உருப்படியான சிங்கள மீன்கள் வரட்டுமே என பொறுமை இழந்து காத்துக்கொண்டிருந்தோம். காத்திருப்பு வீண்போகவில்லை.

நேரம் 05 மணியை தாண்டி விட்டது. நாமிருந்த காட்டுப்பாதையை கடந்து வெட்டையில் எதிரியின் லாண்ட்குரோசர் வாகனம் ஒன்றும், முன்சென்ற உழவு இயந்திரத்திலும் எதிரி வந்துகொண்டிருந்தான், எதிரி எமக்கு நேரே மிக மிக கிட்டவாக வந்துவிட்டான். கப்டன் கிருஸ்ற்றியின் கரங்கள் அவனது ரீ-56-2 ரக சுடுகருவியை இறுகப்பிடிக்கின்றது. ஒரு கையால் சைகை செய்து வீரவேங்கை பரீத்தை உந்துகணை அடிக்கச்சொல்லிவிட்டு, சமநேரத்தில் சுட்டுவீழ்த்துகிறான் ஒருவனை. அதே நேரத்தில் பரீத்தின் உந்துகணை, இரண்டு ஊர்திகளுக்கும் இடையில் வெடிக்கிறது.... வெடித்த இடத்தில் கரும்புகை எழும்பும்போதே எதிரி பதற்றத்துடன் பாயத்தொடங்கினான் எதிரியைத் தப்பவிடாது ரஜனியின் ஜீ.பி.எம்.ஜி.இயந்திரத் துப்பாக்கி சடசடத்தது.... ரஜனி தொடர்ந்து சுட்டுக்கொண்டே இருந்தான், பரீத் இலக்கை தவறவிட்டுவிட்டான் என்பதற்காக, கிருஸ்ற்றி கத்துகிறான்.

டேய்... மடயா கோட்ட விட்டுட்டாயே... தாடா இங்க... என்று ஆவேசத்துடன் பறித்துஎடுத்து சரியாக இலக்கை நோக்கி அடிக்கிறான். இவ்வளவும்சொற்பநேரத்தில் நடந்தது. இலக்குத் தவறாது கிருஸ்ற்றி அடித்து விட்டான். உழவுஇயந்திரம் வெடித் துச் சரிகிறது... எஞ்சிய சிறிய ஊர்தி மாவீரன் லெப்கேணல் ஜீவனின் அணியிலுள்ள ஒரு போராளியின் உந்துகணையால் சிதைவுறுகின்றது. எதிரி பதற்றத்துடன் செத்தவன் போக ஏனையவன் ஓட்டமெடுக்கிறான்....

சண்டை நடந்துகொண்டி ருந்த போதே எதிரியின் முகாமி லிருந்து அவனுக்கு உதவிவந்து கொண்டிருக்கிறது. தொகையான எதிரியின் அணி ஒன்று முன்னேறி எம்மை நோக்கி வந்துகொண்டி ருக்கிறது. எமக்கும் அந்த முகாமிற் குமிடையில் பெரிய ஆறு ஒன்று ஓடுவது தெரிகிறது, எதிரி வருவதாக இருந்தால் அந்தஆற்றின் பாலத்தை கடந்தே வரவேண்டும், எனவே எமது அணிக்கு பொறுப்பாக வந்த மாவீரன் லெப்கேணல் உருத்திரன் ஆசிரியர் கிருஸ்ற்றியிடம் சொல்கிறார்.

கிருஸ்ற்றி இந்தப்பக்கத்தை ஜீவன் பார்க்கும். நீ உடனே காம்பிலிருந்து வாறவனைக்கவனி... விட்டு விடாதே....

சரி என்றதும் கிருஸ்ற்றியே முன்னால் செல்கிறான். ஆனால் எதிரி மிக கிட்டவாக வந்துவிட்டான். குறி த்த பாலத்தையும் சிலர் கடந்து விட்டனர்.

கிருஸ்ற்றி, மோகனிட மிருந்த இயந்திரத்துப்பாக்கியை பறித்துக்கொண்டு, ஆவேசமாக சுட்டுக்கொண்டே மூ...மூ...மூ... என்று முன்னேறினான். அவனது சூட்டில் முன்னேவந்த எதிரி 03பேர் சுருண்டு விழ எதிரியின் ரவைகள், மாறனை யும், மேலும் சில போராளிகளையும் துளைத்தது எதிரியின் கை எறிகுண் டொன்று வெடித்து சிறு சிதறல்துண்டு கிருஸ்ற்றியையும் துளைத்துவிட்டது. கிருஸ்ற்றிக்கு கோபம் தலைக்கேறி விட்டது.

எல்லாம் அடிச்சுக் கொண்டே மூவ்..பண்ணுங்கடா என்று சொல்லிவிட்டு மாறனின் இயந்திரத் துப்பாக்கியை அவனிடமே கொடுத்து விட்டு தனது துப்பாக்கியால் குறி பார்த்துச் சுட்டுச் சுட்டே முன்னேறி னான்... மேலும் எதிரிகள் வந்து குவிந் திடவே கட்டளைகளை வேகமாக வழங்கினான்....

தம்பி நீ குண்டடி...

தம்பி நீ நல்லா குறிபார்த்து, பார்த்துச் சுடு.... பாலத்தை கடக்கவிடாதே....

மச்சான் நீ தொடர்ச்சியா பாலத் திற்கே சுட்டுக்கொண்டேஇரு.....

மாறன் டேய் அந்த கட்ட டத்திற்குச்சுடு....

**க. மிரேசு**

டேய் பரீத் முதல் மாதிரி இல்லாம நல்லா குறிபார்த்து அடி.... அந்த உணரி(குரோஸ்) தெரிர கட்டடத்துக்கு... என கட்டளையை கொடுத்துக்கொண்டே காப்பெடுத்து சுட்டுக்கொண்டிருந்தான்... திடீரென மேலும் சில எதிரிகள் பாலத்தைக் கடக்க முயற்சிக்க எழுந்து நின்று ஆவேசத் துடன் சுட்டுக்கொண்டிருக்க....

கிருஸ்ற்றி அண்ணை.... என ஒருவன் கத்தினான். அவன் கத்திய பக்கம் பார்த்தவன், முந்திக்கொண்டு தனக்கு வலப்புறத்திலுள்ள புற்றுக்கு சுட்டான். அதே நேரத்தில் மோகன் ஒரு குண்டை கழற்றி எறிந்தான்... அது வெடித்துச்சிதறியபோது ஒரு இயந்திரத்துப்பாக்கியுடன் எதிரி ஒருவனும் உருண்டான்.

கப்டன் கிருஸ்ற்றியின் அபார துணிச்சலினாலும் அன்றைய அச் சண்டையை வெற்றிகொண்டு பலமைல்களுக்கு அப்பாலுள்ள முகாம் திரும்பினோம்....

கப்டன், கிருஸ்ற்றி வித்தி யாசமானவன், எந்நேரமும் அமைதி யாக இருந்தாலும். சுறுசுறுப்பாகவும் துடியாட்டத்துடனும் இருப்பான். சகலதுறைகளிலும் ஆர்வம் கொண் டவன். அதைவிட சண்டை என்றால் அவனுக்கு சாப்பாடே தேவை யில்லை, என்நேரமும் தனது சண் டைக்கதைகளைச் சொல்லிக் கொண்டும், எதிரிமுகாமை சுற்றி வளைத்தால் எப்படித்தாக்குவது, திடீரென எதிரி தாக்கிவிட்டால் என்னவென்று முறியடிப்பது என்று தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டே இருப்பான்.

மட்டக்களப்பின், காட்டு வாழ்க்கையின் கடுமையான துயர்தோய்ந்த நாட்களில் கிருஸ்ற்றி மிகவும் துன்பப்பட்டிருக்கிறான். தான் துன்பப்படுவதை பெரிதுபடுத்தாது, தனது போராளிகள் துன்பப்படக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பான். காட்டுவாழ்க்கை இருண்ட நாட்களாகவே இருந்தது எமக்கு. ஆனால் அவனோ எங்களை ஒரு நாளும் பட்டினி போடாமல் ஏதோ எமக்கு வேட்டையாடிக்கொண்டு வந்து தருவான்.

எல்லோரையும் போல் தனக்காக தருகின்ற ஒரு பேணி கஞ்சியை சிலவேளை முகாமிலுள்ள சிறிய போராளிகளுக்கு பங்கிட்டு கொடுத்துவிடுவான், சிலவேளை களில் மூன்று வேளையும் சாப்பிடாமல் இருந்துவிடுவதும் உண்டு. ஒரு சந்தர்ப்பத்தில் 03 நாட்கள் உணவே கிடைக் கவில்லை 04ஆவது நாள் காலை பக்கத்திலிருந்த குளம் ஒன்றிற்கு சென்று காத்திருந்து எப்படியோ 03 கொக்கும், ஒரு முத லையும் அடித்துவந்து கொடுத்து விட்டு அதையும் சாப்பிடாமல் சில போராளிகளைக் கூட்டிச்சென்று

(18ஆம் பக்கம் பார்க்க...)






# வெற்றியின் தடங்கள்

"அச்சும், அச்சும், ஆண்டி அப்பு ஓயாமல் இருமிக்கொண்டிருந்தார்"

"குமார், ராசா"

"என்ன காணும் சும்மாகிடந்து கத்திறியள் பேசாமல் கிடவுங்கோவன்." கண்மணி ஆச்சியின் புறுபுறுப்பு.

"வெத்திலை பாக்கு வேண்டியந்து தாவனப்பா. வாயும் கேக்குதில்ல ஒரே இருமலாக் கிடக்கு"

"உந்த வருத்தத்துக்கு அது நல்லதே சும்மா படுங்கோ"

முகம் கழுவிவிட்டு உள்நுழைந்த குமாரின் செவிகளில் ஆச்சியின் பேச்சுக்குரல் விழுந்தது.

அப்புவிடம் சென்றான்

"என்னப்பு"

ஆண்டி அப்பு மெது வாக எட்டிப்பார்த்துவிட்டு குமாரின் கைகளைப் பிடித்தபடி "ராசா வெத்திலை வேண்டித்தாவண்டா." கெஞ்சும் குரலில் கேட்ட அப்புவைப் பார்த்ததும் குமாருக்குக் கவலையாக இருந்தது. ஆச்சியில் அப்பு கொண்டுள்ள பயத்தைப் பார்த்ததும் சிரிப்பாகவும் இருந்தது.

"ஓம் அப்பு வேண்டிவாறன்."

"குமார் என்னவாமடா உந்த மனுசன் ." அப்பு ஒன்றும் பேசாமல் படுத்து விட்டார்"

"அவர் ஒண்டும் கேக்கல்லையென" குமார் கதையை மாத்தினான்.

"ஆச்சி நான் ஒருக்கா ராசன் சம்மாட்டிவீட்ட போட்டுவாறன்."

"சரி மோன."

குமாரின் சயிக்கிள் வேகமெடுத்தது அவன் நினை வுகளோ சீ.... அந்தநாள் வாழ்க்கையை மறந்திட வேணும் பலசிந்தனைகள் வடிவில் உருவமெடுத்தது. அப்புவின் சிறுபிள்ளைத் தனத்தை நினைப்பதா? ஆச்சியின் புறுபுறுப்பை எண்ணுவதா? அம்மா அப்பாவுடன் அன்பு மகனாக வாழ்ந்த பொழுதை தட்டிப்பார்ப்பதா? எதை? கனக்கற்ற காயங்களுடன், அவன் மனது அசைபோட்டது. கால்கள் மட்டும் பெடலை மிதித்தவண்ணம் இருந்தன.

'குமாரண்ணை, குமா ரண்ணை"

நிலைக்கு வந்தவன், எதிர்பாராத அழைப்பினை யிட்டுத்திரும்பினான்.

"கரனே வாடா, வா."

'எண்ணண்ணை பலமான கற்பனையில போறியள் எண்டெல்லை நான் நினைச்சன்"'

"அது....ஒண்டுமில்லையடா" நீ எங்கால வாறாய்"

"இண்டைக்கு கடலுக்குப் போகேலாதாம், எண்டு ராசன் சம்மாட்டியார் சொல்லிவிடச் சொன்னவர்."

"ஏன்ரா போகேலாதாம்"

"உந்தச் சனியன் பிடிச்ச நேவிக்காறன், சமாதானப்பேச்சு எண்டு தன்ர வாயாலேயே கத்திப்போட்டு எங்கட அண்ணாக்கள் 12 பேர் போன கப்பலை ஆயுதக்கப்பல் எண்டு சொல்லி அழிச்சிப்போட்டாங்களாம். 12 பேரும் வீரச்சாவாம்."

குமாரின் மனதில் இடி இறங்கியது போன்றிருந்தது. அந்தச்செய்தி தன் உயிருக்கே ஆபத்து என்பது போல உணர்ந்தவன் தனது மனதைச்சிரமப்படுத்தி ஒரு நிலைப்படுத்தினான்.

"சரி, கரன் நான் கடைக்கு ஒருக்காப் போட்டுவாறன்."

"சரி அண்ண நான் வாறன்."

கரன் சென்றதும், குமார் கடையில் சென்று அப்பு கேட்ட வெத்திலை பாக்கை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தான்.

சயிக்கிளை ஓரமாக நிறுத் தியவன் எதுவும் பேசாமல் அப்புவிடம் சென்று வெத்திலையைக் கொடுத்து விட்டு வர.



"ராசா என்ர ராசா." அப்புவிடம் திரும்பியவன்.

"நீ பல்லாண்டு காலம் வாழ்வாயடா." என்று விட்டுக் கண்ணீர் சிந்தி அழுதார். குமார் அவரருகில் சென்று அவரது முகத்தைத்துடைத்து விட்டவாறு,

"அப்பு, சும்மா அழாதேங்கோ." என்றவன் மனதும் அழுதது பாயை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்பின்னாலுள்ள வேப்பமர நிழலிற்குச் சென்றான். சிறிது தூக்கம் போட எண்ணிப் பாயை விரித்துப்படுத்தான். வேப்பமரக்காற்று அவனைத்தாலாட்டியது. தன்தாயின் மடியில் படுத்து உறங்குவது போன்று தன் மடியைத் தடவிச்செல்லும் காற்றுத் தன்னை ஆசையோடு தடவிப்பார்க்கும் தந்தையாகவும் எண்ணிக்கண்களை மெல்ல மூடினான். மூடிய கண்களுள், பேரினவாதிகளின் வெறிமுகங்களே தோன்றின. நீண்ட தாடியுடனும், கத்திகளுடனும் தன்னை நோக்கி வருவதைப்போன்று கற்பனை செய்தவன், கத்தினான் அம்மா.... அம்மா...

குமார் செல்லம் என்னையா நடந்தது."

ஆச்சியின் மடியில் இருந்து எழுந்தவன். ஒன்றும் பேசவில்லை முகத்தை நன்றாகக்கழுவிவிட்டு வந்தான். ஆச்சி ஒண்டுங்கேக்கேல்ல.

"கண்மணி குமார் என்னவாமப்பா" ஏன் பின்ன கத்தினவானான்."

"உங்கள முதலில பாருங்கோ பிறகு நீங்கள் அவனைப்பார்க்கலாம். எழும்பவே ஏலாமக்கிடந்து கொண்டு வேற கதையுங்கோ."

**துளசி**

"இஞ்சரும் நீர் விசர்க்கதை கதையாத என்ர பேரன நான் தானே பார்க்கோணும் என்ர பிள்ளையை நான் தானே வளர்க்கோணும் என்னால ஏலாது தான் அதுவும் இப்ப... இப்ப."

என்று விட்டுட்டு அவர் அழுதார். கேட்டுக்கொண்டிருந்த குமாருக்குக் கோபம் வந்திட்டுது.

"ஆச்சி உந்த விசர்க்கதையளை விட்டுப்போட்டுப்பேசாமல் இருங்கோ"

அப்பு நீங்கள் ஏன் இப்ப அழுறியள்."

"உன்னை உழைச்சுப்பாக்க வேண்டிய நேரத்தில எனக்கு இந்த வியாதி வந்திட்டுதேடா அதை... நினைச்சுத்தான்ரா..." அதையெல்லாம் இந்த நேரத்திலேயே நினைக்கிறது. நான் என்னத்துக்கு இருக்கிறன் உங்கட குறையலெல்லாம் பாக்க எனக்குத் தெரியும்தானே. பிறகு சும்மா ரெண்டுபேரும் சண்டை பிடியுங்கோ."

கோபத்துடன் பேசிவிட்டு வீட்டின் குந்தில் அமர்ந்தான்.

அன்றைய பத்திரிகையைப் படித்தவனுக்கு அந்தச்செய்தி சீ.. இந்த நேவியளைத் தானாவது துண்டாக்க வேணும் எங்கட மக்களைக்கண்டாலே வெட்டியும் சுட்டும் கொல்லுறாங்கள். போதாமல் சமாதானமெண்டு சர்வதேசம் முழுக்கப் பறைசாற்றிப்போட்டு பேந்து புலிகளைக்கூட கொண்டிட்டாங்களே போர் வெறிபிடிச்ச சனியனுகள்: என்று மனதில் எண்ணியவாறு பத்திரிகையை கீழே வைத்தவனிடம்,

"குமார், என்னை மன்னிச்சிடடா, நான் ஏதோ மன நிலையில் தான்ரா அப்பிடிப் பேசுற நான் இனிமேல் பேசவே மாட்டன்ரா."

"ராசா நாங்கள் ரண்டு பேரும் இனிச்சண்டையே போட்மாட்டமடா, எங்களை மன்னிச்சுக்கொள் ஐயா." ஆண்டி அப்புவின் கண்ணீர் அவனுக்குத் தெளிவைக்கொடுத்தது.

"அப்பு நான் அதையெல்லாம் மறந்திட்டன்." என்று விட்டு அவர்களை ஆறுதல்படுத்தினான்.

நாட்கள் நகர்ந்தன. குமாரின் போக்கில் மாற்றங்கள் காணப்பட்டன. ஆச்சி அப்புவில் அதிகளவு அன்பைக்காட்டினாள். வேலை நேரங்களில் வேலையும் ஓய்வு நேரங்களில் சிந்தனையுமாக வேப்பமரத்தடியே தஞ்சமென்று குந்தியிருந்து வந்தான். இவனது நடவடிக்கையைப்பார்த்ததும் கண்மணிக்கோ யோசனை மேலிட்டது. இவன் முதல் மாதிரியே இல்ல இப்பதானும் தன்ர பாடுமாத்திரியிறான். கடவுளே, என்ர பேரனை நீ தான் காப்பாற்றவேணும் காளியம்மா என்று வேண்டுதலோடு நெற்றியில் திருநீற்றை அள்ளிப்பூசினார்.

"ஆச்சி... ஆச்சி...."

"அம்பியே வாமோன."

"ஆச்சி, அப்பு எங்கை"

"என்ர ராசா அவர் கிணத்தடிக்குப்போட்டாரடா."

குமாரின் மனசில் பெரிய சந்தோசம் ஆண்டி அப்பு இப்ப தன்ர சொந்தக்காலில செயற்படத்தொடங்கியிட்டார். ஆச்சிகூட அப்புவில நல்ல பிரியமா இருக்கிறா.

"நான் கடலுக்குப் போறனணை அப்பு போட்டு வாறன்."

என்று கூறியவன் அவர்களது முகத்தைப்பார்த்து பார்த்துக்கொண்டே சென்றான் இருள் தொடங்கிறது.

"இஞ்சாரப்பா தம்பிய இன்னுங்கானேல்ல."

"ராசன் வீட்டுப்பக்கந்தானே போனவன் வரட்டும்."

நீண்ட பெருமூச்சுடன் பார்த்திருந்தவர்கள் பார்வையிலேயே படாமலே போய்விட்டான். ஏங்கிடும் விழிகளுக்குள் பேரனை இருத்தி நீண்ட காலமாகக்காத்திருந்தாள். கண்மணி ஆச்சி அப்புவும் போய்ச்சேர்ந்திட்டார். ஆச்சியின் பார்வையும் குறுகியது குருட்டுக்கிழவி என்று அயலில் உள்ளவர்களின் அரவணைப்பிலே வாழ்ந்தாள்.

குமார் கடற்கரும்புலி அணியில் இணைந்து தன் கடற்பரப்பிற்கே தாக்குதலுக்குச் செல்லக்கூடியதொரு வெடிமனிதனாகவே உலவி வந்தான்.

அவனது பொறுப்பாளரின் அனுமதியுடன் வீட்டிற்குப் புறப்பட்டான். வாசலில் சென்ற வனுக்கு அப்புவுமில்லை. ஆச்சி என்ன செய்வாவோ என்ற வேதனை நெஞ்சை அரித்தது சென்றவன் ஆச்சி வீடு கூட்டுவதைப்பார்த்ததும், வேதனை மிகுதியால் அழுது விட்டான்.

'ஆச்சி... ஆ.ச்..சி..."

"குமாரே... ராசா.."

என்று அவனைக்கட்டிப்பிடிச்சு அழுதாள் அவனுக்கு தன்னிட முள்ளவற்றைக்கொண்டு சமைத்து உணவை ஊட்டிவிட்டாள். குமார் ஒன்றும் பேசாமல் ஆச்சியின் அரவணைப்பில் அன்று பூராகவும் தங்கிவிட்டுக்காலையில் செல்லப்புறப்பட்டான்.

ஆச்சி அவனைக் கட்டிப் பிடித்து அழுதபடி தன்மனதைத் தேற்றியவள்.

"வெற்றியோட வாடா"

என்று பேரனை வழியனுப்பினாள். பாட்டிக்கு கையசைத்தவன் வெல்ல முடியாதது என்று ஒன்றுமில்லை. செல்கிறேன் வெற்றியின் பின்தான் அடுத்தவை என்ற முடிவுடன் தனது தடங்களை எடுத்துவைத்தபின் முகாமிற்கு விரைந்தான்.




## சூரியன்

சக்தியின் முதல்வன் சூரியன்
சகத்தைகாக்கும் சூரியன்
சந்ததியாவும் வாழவே
சகலதும் தருவான் சூரியன்

விந்தை மிக்க சூரியன்
விண்ணிற்கு நாயகன் சூரியன்
வீறுடன் உலகம் வாழவே
வேண்டும் வரங்கள் தந்திடுவான்

செம்மை நிறத்தில் சூரியன்
செந்நெல் காக்கும் சூரியன்
வெம்மை தருவான் நிழல் தருவான்
விரைந்து அவனைப் பணிந்திடுவோம்.

ஆதிரை தேவராசா

# எங்கள் அழுங்கு

அழுங்குப்பிடி ஏன்று கேள்விப்பட்டிருப்பீகள் அல்லவா, அந்த அழுங்கு என்றால் என்ன? அழுங்குப்பிடி என்றால் என்ன என்பது பற்றி நீங்கள் யோசிக்கவில்லையா? அப்படி இல்லாவிட்டாலும் பரவாயில்லை இப்பபாப்பம்.

எனக்கும் இந்த அழுங்குப்பிடி எண்டால் என்னெண்டு தெரியாது. வன்னிக்கு இடம்பெயர்ந்து வந்தபிறகு வேட்டைக்காரரோடு கதைக்கேக்கதான் அழுங்குபற்றி கேள்விப்பட்டனான். நான் முதல் புத்தகங்களில வாசிக்கேக்கை 'எறும்புதின்னி' எண்டவிலங்கைப்பற்றி அறிஞ்சனான். அதின்ர பொதுப்பெயர் 'பாங்கோலின்' அதின்ர பிரதான உணவு எறும்பு எண்டதால அதை எறும்புதின்னி என்று சொல்கிறார்கள்.



நல்ல நீண்ட கட்டை விலங்கு முதுகில செதில் செதிலா ஓடுகள் இருக்கும் எறும்புப்புத்தைக் கண்டவுடன் அதுக்குக்கிட்டப்போய் வாயால உறிஞ்சி எறும்பைச் சாப்பிடும். இல்லாட்டி எறும்புபோற பாதையில செத்தமாதிரிக் கிடக்கும். அப்ப அதில எறும்புகளெல்லாம் மொய்க்கும். எறும்புகள் மொய்க்க- அது சடாரென்று எழும்பி கிட்ட இருக்கிற நீர் நிலைக்கு ஓடி தொப்பெண்டு தண்ணிக்குள் விழும் அந்த எறும்பு தின்னியில இருந்த எறும்புகளெல்லாம் தண்ணீரில மிதக்கத்தொடங்கும் அதுகளை இந்த எறும்புதின்னி வாயால உறிஞ்சிச் சாப்பிடும். இப்பிடி தந்திரங்களை கொண்ட அந்த எறும்பு தின்னிதான் அழுங்கு எண்டு எனக்கு வன்னி வேட்டைக்காரர் சொல்லேக்க தெரிஞ்சது. அழுங்கு கறையான் புத்துகளைச் சிதைத்து கறையான்களையும் விரும்பிச்சாப்பிடும். எறும்புதின்னி பாங்கோலின் இந்தபெயர்களைக்கொண்ட எமது மண்ணின் பூர்வீக விலங்கு அழுங்கு.

முதுகெல்லாம் ஓடுகளைகொண்ட அழுங்குக்கு வாயில் பற்கள் இல்லை. தனக்கு ஏதாவது ஆபத்து என்றால் தனக்கு கிட்டஇருக்கிறதை சுருண்டு இறுகப் பற்றிக்கொள்ளும். அந்தப் பிடியை எவராலும் கழட்ட முடியாது.

ஒருதடவை வன்னி பனங்காமத்துக்கு சென்று மக்களுடன் இதுபற்றி கதைக்கேக்கை காட்டுக்குள் சில வேளை தேன் எடுக்கப் போகேக்கிள்ள இந்த அழுங்கு திடீரென பயத்தாலை சுருட்டிப் பிடித்ததாம். அநேகமாக காலைப்பிடிக்குமாம் அதை கழட்டவே ஏலாதாம் அப்ப கத்தியாலை வெட்டித்தான் அதைஅகற்றினதாம். முந்தி ஒருக்கா ஒரு ஆளின்ர கழுத்தை சுத்திப்பிடிச்சு - பிடி இறுகிஅவர் செத்த தெண்டும் ஆக்கள் சொன்னவை.

அழுங்கின் நீளம் - இரண்டரை அடி, இதில அரைவாசிநீளம் வால். அழுங்கு மரத்திலும் ஏறும் வல்லமைகொண்டது. அழுங்கின்முதுகு பெரும்பாரத்தை வைத்தாலும் தாங்கக்கூடியது. பகலில் நிலத்தில் சுரங்கம்தோண்டி அதற்குள் இருக்கும். அதன் நடமாட்டம் அதிகம் இரவில் தான் இருக்கும்.

வன்னிக்காடுகளில் இருக்கும் அழுங்குகள் நல்ல இறைச்சி எனவும் மக்கள் கூறுகின்றனர்.

இன்று அழுங்கும் எம் தாயகத்தில் அருகிவரும் விலங்கு ஆகும். படத்தில் மரம் ஒன்றை பற்றியிருக்கும் அழுங்கைப் பார்க்கிறீர்கள்.

அழுங்கின் உயிரியல்பெயர்
மணிஸ் சராசி கெளடாட்டா

(தி.த)

### பூவா... தலையா...



டொஸ் போடுறதற்கு சில்லறைக்குப் பதிலா ரொபியைத் தான் எறிவனெண்டு அம்பயர் அடம் பிடிக்கிறார். அதுதான் பூவா, தலையா சொல்லுற பிரச்சினையிலை கப்ரின்மார் ரெண்டுபேரும் புடுங்குப்படுகினம்.

## சொற்சிலம்பம் - 46

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓ | ச | கா | ச | த் | வ | பெ |
| யி | க் | ப | கு | ழ | கே | பூ |
| லி | ன் | து | ர | ளை | ரு | ங் |
| ங் | ள | ய | மா | உ | டி | ல் |
| மு | ம | ர் | ம் | ந் | தா | ன் |
| எ | ல | ரி | தா | ம் | தி | கி |
| னி | வா | மு | ளி | ளீ | பி | நா |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -44 இன் விடைகள்

01. கபடி.
02. கிளித்தட்டு.

01. திருகோணமலை.
02. காங்கேசன்துறை.

### சொற்சிலம்பம் - 44 இன் பரிசுக்குரியவர்

அ.அனிஸ்ரன்,
54,D8, உருத்திரபுரம்
கிழக்கு, கிளிநொச்சி.

### சொற்சிலம்பம் - 44 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ம.சதுஜன்,
இல.111,
வவுனியா.

02. யூ.நேயன்,
இரணைமடு,
கிளிநொச்சி.

03. வி. கோகுலநாதன்,
அ.த.க.பாடசாலை,
இயக்கச்சி.

04. எஸ். ஜானுஜா,
பு.ச.பெ.தெ.கல்லூரி,
மன்னார்.

05. சு. தர்சிகா,
87/1,திருவையாறு,
கிளிநொச்சி.

06. சி.பிரியங்கா,
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

01. இலங்கையில் ஆட்சிபுரிந்த மேலைத்தேய நாட்டவர்கள் இருவரின் பெயர்கள்?

01) ..................................
02) ..................................

02. முலையூட்டிப் பறவைகள் இரண்டு?

01) ..................................
02) ..................................

பெயர் :- ..................................

முகவரி :- ..................................

..................................

சொற்சிலம்பம்-46
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

# கரடியின் சப்பாத்துக் கடை பகுதி-02



# குற்றுயிர் நிலையில் தமிழ்

கவிதைகள்

தாய்மொழியும் தாய்நாடும் இரு விழிகளென்பதனை
தமிழா நீ இன்னுமறியாதல் சரியாமோ!
வாய் நுழையா வேற்றானின் வளமில்லா வார்த்தைகளை
பேய்போலத் தலை சுமந்தாடுதல் முறையாமோ!

தேன் சொட்டித் தித்திக்கும் தமிழ்ப் பெயர்கள் பலவிருக்க
சீழ் சொட்டிச் சிதறுகின்ற சிறுபெயர்கள் உனக்கெதற்கு.
வாய் மணக்கும் தாய்மொழியில் அழகுப்பெயர் பலவிருக்க
பாழ்பட்ட பொருளுரைக்கும் பெயர் சூட்டும் உந்தனுக்கு நாவெதற்கு.

தமிழ்மொழி நெடுங்கணக்கின் எழுத்தவை போதாதென்று
அயல்மொழி நெடுங்கணக்கில் எழுத்துக்கள் கடன்பெற்று
உயர்திணையோடகிறிணைக்கும் "இஸ" என்றும் "புஸ்" என்றும்
காற்றூதும் உச்சரிப்பில் என்னடா பெயர் சூட்டுகிறாய்.

தமிழ்த்தாயின் மடி பிறந்த தமிழீழச் சந்ததியும்
மனை மாளிகை மட்டுமன்றி விடுதிகள், ஊர்திகளும்
தொழிலகங்கள், வாணிபங்கள், நிறுவனங்கள் எங்கனுமே
அயல்மொழியின் ஆக்கிரமிப்பு உன்னால் தான் நீ உணர்வாய்.

எழிலகம் எனத்தொடங்கி எழிலோடை எனவாகி
சுடரகம் எனத்தொடங்கி சுடர்நிலா எனவாகும்
அழகுத்தமிழ் மொழியினிலே ஆயிரம் பெயரிருக்க
வடமொழிப் பெயர் சூட்டி ஆடுதல் சரியாமோ!

வெள்ளையனின் வார்த்தைகளை வாய் நிறைய உச்சரித்தால்
வெள்ளையனை வென்றதெனப் பெருநினைப்போ உனக்கு – தமிழ்ப்
பிள்ளையெனப் பெற்றவுனை நாயெனவே பெற்றிருந்தால்
கொள்ளியிலே போனபின்னும் உனக்கிருக்கும் மொழிப்பற்று.

தமிழனுக்கும் தமிழிச்சிக்கும் தப்பாமல் பிறந்தவனே
தப்புவழிப் பிறந்தவன் போல் தாய்மொழியை மறப்பதுவோ!
தமிழ்க்குடியின் மரபறியா மடைத்தமிழா – உன்னை
மறத்தமிழன் என்று சொல்லல் மாபெரும் குற்றமல்லோ

குற்றுயிராய்க் கிடக்குமெம் தாய்மொழி தலைநிமிர – தமிழனே
புத்துயிர் கொடுப்பதுன் தலையாய கடமையல்லோ!
வெற்றுயிர் இருந்துன்னில் பயனென்ன நீ புழுக – மடையனே
செத்துயிர் போயினும் தமிழுக்கு உயிர்கொடுத்தல் கடனல்லோ.

உரும்பையூரான்

# இன்றுமா சந்தேகம் தோன்றும்

வீதித்தடையும், விரும்பும் இடம் மறுப்பும்,
நீதிக்கு மாறாக தமிழ்ச்சாதிக்கு ஒரு நெறியும்,
போதித்து வந்தவர்கள், பொருந்த நடித்தாலும்
சாதிக்க நினைக்காமல், சமமாக நினைப்பாரா?

வாழ்விலே முன்னேற, வயது ஓர் தடையில்லை,
ஊழிலே உறுதி கொண்டு, உறங்கினால் விடியவில்லை.
நாடிடும் கருமம் எல்லாம், நம்பியே இயற்றல் வேண்டும்.
மேடிடும் வாழ்வை நோக்கி, மென்மேலும் உயர வேண்டும்.

உள்ளத்தில் உறுதிவேண்டும், உண்மைக்கே(காய்)உழைக்க வேண்டும்.
உரிமைக்குக் குரல் கொடுக்கின், ஓங்கியே ஒலிக்க வேண்டும்.
தெளிவுறு சிந்தை வேண்டும், சீரிய எண்ணம் வேண்டும்.
நலிவுறும் மாந்தர்க்கெல்லாம், நாடியே உதவல் வேண்டும்.

அரசியல் தெளிவுவேண்டும். அன்றாடம் செய்திவேண்டும்.
நிரந்தர அமைதிகிட்டா, நிலையினைத் தெளிதல் வேண்டும்.
நிரந்தரஅமைதி வேண்டும் என்றும் நிம்மதி வேண்டும் என்றால்
இதந்தரும் இடைக்காலத்தீர்வு இன்றேல் ஈழமே அமையவேண்டும்.

இனவாதப் பேய்களெல்லாம் இலங்கையில் ஒன்று கூடி
சினந்தரப் பேசும் பேச்சு, எம் சிந்தையில் கொள்ளவேண்டும்.
பேச்சென அமைவதெல்லாம், எம் வீச்சினுக்கமைவாய் வேண்டும்.
பேரம் பேசிடும் நிலையில் என்றும், பின் தங்காத, வலிமை வேண்டும்.

விரைவுடன் பலத்தைக் கூட்டி, எம் விடியலை ஒடுக்கும் நோக்கில்
சமபலம் பேணும் கொள்கை, சரியுது சிறிலங்காவால்
பாதுகாப்பென்னும் போர்வை, பலம் பெறும் ஒப்பந்தங்கள்.
அந்நியப் போர்ப்பயிற்சி, ஆங்காங்கே ஆயுதங்கள்.

எதிர்கால முடிவில் என்றும் இன்றுமா சந்தேகம் தோன்றும்
எழுச்சியைக் காட்டவேண்டும். எம்பலம் கூட்டவேண்டும்.
விரைந்திடும் விடிவைநோக்கி வீரப் புலியுடன் தோள்கொடுக்க
தினம் தினம் எழுதல்வேண்டும். தீர்ந்திடச் சிறுமை எல்லாம்.

கதிரவேலு பூபதிராசா



ஒருமுறை வாங்கினால் இருவருடத்திற்கு இலவசம் அத்துடன் 3000 ரூபா பணப்பரிசும் உண்டு என்ற அதிரடி அறிவிப்புடன் "மானச தீபம்" என்னும் சஞ்சிகையின் முதலாவது இதழ் தை-மாசி இதழாக 2003இல் வெளிவந்தது. அதன் இரண்டாவது இதழ் பங்குனி-சித்திரை 2003இல் வெளிவந்தது. அதன் பின்னர் இதன் இதழ்கள் வெளிவந்ததா? என்பதை உறுதி செய்யமுடியவில்லை.

# இலக்கியப்பகிர்வு

## மானசதீபம்




அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தினை தளமாகக்கொண்டு வெளிவந்து நின்று மீண்டும் வெளிவந்து நின்றுபோன சஞ்சிகைகளில் இதுவும் ஒன்று என முடிவு செய்யமுடியவில்லை. அவ்வாறு நினைப்பதும் துன்பமாக உள்ளது.

ஐம்பத்திரண்டு பக்கங்களைக்கொண்ட இந்த சஞ்சிகையின் ஆசிரியர்களாக நா. நவராஜ், க.பிறட்லி ஆகியோர் உள்ளனர்.

"நந்தா விளக்காய் யாவர்
மனங்களிலும் ஒளியேற்ற
வேண்டும் என்ற
முனைப்போடு மான தீபம்
ஏற்றப்படுகின்றது. இது
ஒற்றைத்தீபமல்ல
இலக்கியம் உளவியல் ஆத்மீகம்
எனப் பலமுகம் கொண்டு ஒளிசெய்யும்"

என ஆசிரியர் முதலாம் பக்கத்தில் தம் எண்ணக்கருத்தினை வெளிப்படுத்துகிறார்.

அவர்கள் தெரிவித்த கருத்துக்கு அமைவாக இலக்கியம் உளவியல், ஆத்மீகம் என பல்வகைப்பட்ட ஆக்கங்கள் இதில் உள்ளன.

"ஆசிய மூலிகை மருத்துவம் மேலை நாடுகளைக்கவர்கின்றது." என்ற ஆ.சபாரத்தினம் அவர்களின் கட்டுரை பல உபயோகமான தகவல்களை சுவையான முறையில் கூறுகின்றது.

"சீன மருத்துவமுறை 1950 களின் பின்னர் உலகில் கவனத்தை ஈர்த்தது. அக்குபஞ்சர் உட்பட பல சீன முறைகளை மேனாட்டு மருத்துவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மேனாட்டு கல்வியில் உயர்ந்த சீன அறிஞர் அவர்களைவிடக் கூடிய அளவில் விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தமது மூலிகை மருந்துகளுக்கு உலகச் சந்தையில் கிராக்கி ஏற்படச் செய்துள்ளனர்.

ஆனால் எம்மவரின் அடிமைப்புத்தியால் எம்மரபுவழி மருத்துவமுறை பிறநாடுகளின் கவனத்தைக்கவரமுடியவில்லை எனக் கட்டுரையாளர் கூறுவது கவனிப்புக்கு உரியது.

சஞ்சிகையில் உள்ள ஒரே ஒரு சிறுகதை சி.கதிர்காமநாதன் எழுதிய "செத்துப்போன.....?" என்ற தலைப்பில் அமைந்துள்ளது. அதிகமான "கடி" வசனங்களைக்கொண்ட சுவையான நடை கொண்டது இக்கதை. கதையின் முடிவு யோசிக்க வைக்கிறது.

ரவீந்திரநாத தாகூர் அவர்களின் கீதாஞ்சலி பற்றிய குறிப்பும், "தாய் மொழியை மதியுங்கள்" என்ற தாகூர் அவர்களின் கருத்தும் பெறுமதிமிக்கன.

பல உபயோகமான குறிப்புக்களையும் கட்டுரைகளையும் கொண்ட இந்தச் சஞ்சிகையின் கட்டுரைகளின் இடையே வெளியான இரண்டு அர்த்தமுள்ள கதைகளை இங்கு சுட்டிக்காட்டலாம் என நினைக்கின்றேன்.

01. பூங்காவில் இரண்டு வெண்கலச் சிலைகள் இருந்தன. ஓர் ஆணும் பெண்ணும் காதலால் ஏங்கித் தவிப்பது போன்ற உணர்கவி பாவத்துடன் வைக்கப்பட்டிருந்தன. முன்னூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தன.

அந்த வழியால் சென்ற ஒரு மந்திரவாதி அந்தச் சிலைகளைக் கண்டான். "என்மந்திர சக்தியால் இவர்களுக்கு ஒரு மணி நேரம் உயிர் கொடுத்துவிட்டால் இவர்களது ஏக்கம் நிறைவடையும். அவர்கள் அணைத்துக்கொள்ளலாம். முத்தமிட்டுக்கொள்ளலாம். ஒருவரை ஒருவர் காதலித்துக் கொள்ளலாம் என நினைத்து அவற்றை உயிர்ப்பித்தான்.

உயிர் பெற்றவுடன் இருவரும் கைகோர்த்துக்கொண்டு அங்கிருந்து புதருக்குப்பின்புறம் மறைந்தனர். புதருக்குப் பின்னால் ஆனந்த ஆரவாரம் உண்டாயிற்று, ஆவலை அடக்க முடியாத மந்திரவாதி புதரின் இலைகளை ஒதுக்கிக்கொண்டு எட்டிப்பார்த்தான்.

அங்கே அந்த அழகி குத்துக் காலிட்டுக் குந்தியிருந்தாள். அவர் ஒரு பறவையை அவளுக்கு அடியில் பிடித்துக்கொண்டிருந்தார். சிறிது நேரம் பொறுத்து அவள் திடீரெனக் கத்தத்தொடங்கினாள்.

இப்பொழுது முறை அந்தப்பறவையை என் அடியில் பிடித்துக்கொள் அதன் மீது மலம் கழிக்கிறேன் என்றாள்.

முன்னூறு ஆண்டுகளாக அவர்கள் மீது பறவைகள் எச்சமிட்டுக்கொண்டிருந்தன. அவர்கள் சிலையாக இருந்ததால் அவர்களால் ஏதும் செய்யமுடியவில்லை. உயிர் பெற்றதும் காதல் அவர்களுக்கு இனிக்கவில்லை. முன்னூறு ஆண்டுகளாக அடக்கப்பட்ட உணர்வுகளை பறவை மீது மலம் கழிப்பதன் மூலம் தீர்த்தார்கள்.

02) போதகர் ஒருவர் தமது எல்லைக்குட்பட்ட ஒரு புல்வெளிப்பிரதேசத்தில் உள்ள தேவாலயமொன்றுக்குத் தனது முதலாவது போதனையைச்செய்வதற்காக வந்திருந்தார். ஆனால் ஒரு மாட்டுக்காரனைத்தவிர வேறு யாருமே போதனையைக்கேட்பதற்காக வந்திருக்கவில்லை. தனது பிரசங்கத்தை ஆரம்பிப்பதா? இல்லையா? என்று தெரியவில்லையே என்று வாய் விட்டுச்சொன்னார். மாட்டுக்காரன் இவ்வாறு பதிலளித்தான்.

நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று எனக்குச்சொல்லமுடியாது. நான் ஒரு சாதாரண மாட்டுக்காரன் ஆனால் நான் மாடுகளுக்குத்தீனி போடுவதற்கு வந்தேனேயானால் ஒரு மாடு வந்திருந்தாலும் நான் அதற்கு உணவளிப்பதா வேண்டாமா என்று யோசிக்கவே துணிய மாட்டேன்.

போதகர் அவனுக்கு நன்றி கூறிவிட்டு மணிக்கணக்காகப் பேசுவதற்கெனத் தான் தயாரித்து வந்திருந்த தனது பிரசங்கத்தை நடத்தி முடித்தார். அவர் அதை முடித்த பின் அவனுக்கு தனது பேச்சு பிடித்ததா என்று கேட்டார். பதில் இவ்வாறு அமைந்திருந்தது.

"எனக்கு இத்தகைய பிரசங்கங்கள் பற்றி அதிகம் தெரியாது. நான் ஒரு சாதாரண மாட்டுக்காரன். ஆனால் நான் எனது மாடுகளுக்குத் தீனி போடுவதற்காக வரும் வேளையில் ஒரு மாடு மட்டுமே அங்கு நிற்குமானால் அதற்கு எல்லா மாடுகட்குமாகக் கொண்டு வந்த முழு உணவையும் கொடுக்கத்துணியமாட்டேன்.

எஸ்.கே விக்கினேஸ்வரன் மொழி பெயர்ப்பில் வெளியான "குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே" என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்ட கட்டுரையில் மேற்படி கதை வருகின்றது.

எத்துணை அர்த்தபுஷ்டியான கதை எங்கள் படைப்பாளிகள், பேச்சாளர்கள், ஏனைய புலமைசார் பெரியோருக்கு இதில் மாபெரும் செய்தி உண்டல்லவா?

"மானசதீபம்" அர்த்தமுள்ள விடயங்களைக் கொண்டு வெளிவந்தது. தொடர்ந்து வெளிவருமா தெரியவில்லை.

எனினும் சஞ்சிகையின் அச்சு, அமைப்பு, அட்டைத் தலைப்பு எழுத்து வடிவம் போன்றவற்றில் அக்கறை செலுத்தவேண்டும். செலுத்தினால் அழகான வடிவமைப்புடன் சஞ்சிகை வெளியாகும்.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்.



இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புடன் இங்கு வந்த பார்த்தீனியம் இன்று எங்கள் மண்ணின் வளங்களை அழிக்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது தெரிந்ததே.

தமிழ் மக்கள் வாழும் பகுதியெங்கும் பார்த்தீனியம் பெரும் வீச்சுடன் பரவிக்கொண்டிருக்கிறது. பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களும் இயன்றவரை தங்களால் ஆன முயற்சிகளை மேற்கொண்டு பார்த்தீனியத்தை அழித்து வருகின்றார்கள்.

பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

## சிதம்பரதிரு

எனினும் பார்த்தீனியம் செடியை அழிப்பது என்பது இலகுவான ஒரு காரியம் அல்ல. கடின்மான ஒரு பணியாகும். இக்கடினமான செயற்பாடு காரணத்தாலேயே இதனை அழிப்பது கஷ்டமாக உள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பார்த்தீனியம் செடியை அழிப்பதற்கான புதிய முறை ஒன்றினை அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்தப் புதிய முறை பூரணமாக வெற்றியளித்து இருப்பதாக கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

பார்த்தீனியத்தை அழிக்கும் புதிய முறையில் கறியுப்பே பிரதானமாக பாவிக்கப்படுகிறது. கறியுப்பை நன்றாகக் கரைத்து அதனை பார்த்தீனியச் செடியின் மீது நன்றாகத் தெளிப்பதன் மூலம் ஓரிரு நாட்களில் செடி முற்றாகக் கருகி அழிந்து விடும் எனச் சொல்லப்படுகிறது.

இந்தத் தாவரத்தை இரசாயன மருந்துகள் பாவித்து அழிக்க முடியாத தன்மை உள்ளது. எனவே இப் புதிய முறை அதிக பயன் தரும் முறையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செலவு குறைந்த இந்த முறையால் மக்களும் இலகுவாகத் தமது அயல் பிரதேசங்களில் உள்ள செடிகளை அழிக்க முடியும்.

இப்புதியமுறை ஒரு முன்னோடி விவசாயியின் கருத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது போன்ற புதிய முயற்சிகள் நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியதும், தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டியதுமாகும்.

(சீ-9609)

# கோழிக் குஞ்சுகளை நாமே உற்பத்தி செய்வோம்

கோழிக் குஞ்சுகளை வெளிவியாபாரிகளிடம் இருந்து பெறுவதைவிட நாமே உற்பத்தி செய்து கொள்ளலாம். நல்லினக் கோழி முட்டைகளை தெரிவு செய்து கொள்வது நல்லது. முட்டைகளை தெரிவு செய்யும் போது சூழலுக்கு ஏற்ற இனமாகவும், கூடிய முட்டைகளை இடக்கூடியதாகவும், வெருட்சித் தன்மை அற்றதாகவும், அடை கிடவாத இனமாகவும், நல்ல பருமனுடையதாகவும், முட்டை இடக் கூடியதாகவும், குறைந்த தீவனத்தில் வளரக் கூடிய இனக் கோழிகளில் இருந்து முட்டைகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5-6 கோழிகளுக்கு ஒரு சேவல் வீதம் விடப்பட்ட கோழிகளில் இருந்து முட்டைகளைப் பெற வேண்டும். முட்டை இட்டு 24 மணித்தியாலத்தின் பின்பும் முட்டை இட்டு 7 நாட்களும் முட்டையை அடை வைக்கலாம். அடைவைக்கும் போது முட்டையின் நிறை 60 கிராம் நிறையுடையதாய் இருத்தல் அவசியம். சாதாரண முட்டை வடிவிலும், வெடிப்பற்ற சுத்தமானதாகவும் வெளிப்புறக்கோது கரடு முரடாக இல்லாது இருத்தல் வேண்டும்.

கோழி முட்டையிடத்தொடங்கி 6 மாதங்களின் பின்தான் முட்டைகளைத் தெரிவு செய்தல் வேண்டும். அதாவது கோழி 1வயதை அடைந்த பின்பே இடுகின்ற முட்டைகளை அடை வைக்கத் தெரிவு செய்தல் வேண்டும்.

தூர இடங்களில் இருந்து அடைக்கான முட்டைகளைச் சேகரித்து எடுத்து வந்தால் அந்த முட்டைகளை அகன்ற பக்கம் மேலிருக்கக் கூடியதாக 24 மணித்தியாலங்கள் ஓரிடத்தில் வைத்து ஓய்வு கொடுத்த பின்பே அடை வைத்தல் வேண்டும்.

அடை முட்டைகளைச் சேகரிக்கும் போது குளிர்மையான சுத்தமான காற்றோட்டமுள்ள அறையில் சேமித்தல் வேண்டும். ஈரப்பதன் 70 வீதம் இருத்தல் அவசியமானது. சேமிக்கும் போது குலுக்குப்படாமலும் விசையாக அசையாமலும் இருத்தல் அவசியம். முட்டைகளைச் சேமிக்கும் போது அகன்ற பக்கம் மேல் நோக்கி இருக்க கூடியவாறு வைத்துச் சேமித்தல் வேண்டும்.

அடை வைக்க தயார்ப்படுத்தும் கோழி தாய்த்தன்மையுடையதாகவும் நீண்ட நாள் அடைபடுக்கும் தன்மையுடையதாகவும், ஆரோக்கியமானதாகவும், வெளி ஒட்டுண்ணி அற்றதாகவும், அமைதித்தன்மையுள்ளதாகவும், முட்டைகளை உள்ளடக்கிப் பாதுகாக்கக்கூடிய உடலமைப்பினைக் கொண்டதாகவும், காலில சொறித்தன்மை அற்றதாகவும் இருத்தல் முக்கியமானதாகும்.

கோழி அடைபடுக்கும் போது முட்டை இடுவதை நிறுத்தும், இருட்டான இடத்தை நாடும், இறக்கையைச் சிலுர்த்துத் தாக்க முயலும், உணவு உண்ணுதலைக் குறைக்கும், தேகத்தில் சூடு அதிகரித்தல் போன்றன காணப்படும். இது அநேகமாக நாட்டுக் கோழிகளில் காணப்படும். 1 1/2 வயதுக்கு மேற்பட்ட நாட்டுக் கோழிகளே அடைவைக்கச் சிறந்ததாகும்.

அடைவைக்கும் கோழியில் பரீட்சார்த்தமாக 2-3 முட்டை அடைவைக்கும் போது கோழி முட்டைகளை அணைத்துப்படுத்தால் ஏனைய முட்டைகளையும் அடைவைக்கலாம். அடைவைக்கும் பெட்டி சுத்தமாக இருத்தல் வேண்டும். பேன், தெள்ளு போன்ற பிற ஒட்டுண்ணிகளால் தாக்கம் ஏற்படாமல் இருத்தல் அவசியமாகும். முட்டைகளை அடை வைக்கும் போது அடைவைக்கும் பெட்டிக்குள் வைக்கோல் அல்லது உமி போட்டு வைத்தல் வேண்டும். வெப்ப காலத்தில் அடை வைக்கும் போது கீழே ஈர மண் பரவி அதன் மேல் முட்டைப் பெட்டியை வைக்கலாம். எலி, கறையான், எறும்பு போன்றவற்றால் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாத்தல் வேண்டும். ஒரு கோழியில் 10-13 முட்டைகள் வைக்கலாம். அடை வைத்த பெட்டியை பாதுகாப்பாகவும் இருட்டான இடத்திலும் சனசந்தடி சத்தமில்லாத இடத்திலும் காற்றோட்டமுள்ள இடத்திலும் வைக்க வேண்டும்.

கடும் மழைகாலத்திலும் கடும் வெப்பகாலத்திலும் அடை வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். அடைவைத்த கோழியை அடிக்கடி குழப்பக்கூடாது. அடைவைத்த கோழிக்கு உணவு நீர் கொடுத்தல் நல்லது.

அடை வைத்து 21 ஆம் நாள் முட்டையில் இருந்து குஞ்சு வெளிவரும். குஞ்சு பொரிக்க ஆரம்பித்து 24 மணி நேரத்துள் எல்லா முட்டைகளும் பொரித்துவிடும். குஞ்சு முட்டையில் இருந்து வெளியேறி மேலும் 24 மணித்தியாலம் குஞ்சுகளை வெளியேற்றக்கூடாது. கோதுகளையும் பொரிக்காத முட்டைகளையும் வெளியே எடுத்து விடுதல் வேண்டும். இதன் பின்னர் அடைப் பெட்டியில் இருந்து சுத்தமான வேறு இடத்துக்குக் குஞ்சுகளை மாற்றிச் சுத்தமான நீரும் தானியக் குறுணலும கொடுத்துப் பராமரிக்கலாம். குஞ்சுகளுக்கு வெப்பம் கொடுகக கூடிய பிற வசதிகள் இருப்பின் தாய்க் கோழியைப் பிரித்து விடலாம். வசதி இல்லாவிடின் ஒரு மாதம் வரை தாய் மூலம் குஞ்சுகளுக்கு வெப்பம் கொடுத்து அதன் பின்னர் தாயில் இருந்து பிரிக்கலாம்.

**சிவகமலா**

(14ஆம் பக்கத்தொடர்ச்சி)

எப்படியோ எதிரியின் கண்ணில் மண்ணைத்தூவிவிட்டு அடுத்தநாள் விடிவதற்குள் உணவு கொண்டுவந்து சேர்த்தான். தான் முகாம் பொறுப்பாளர் என்றாலும். இயக்க நடைமுறைக்கு ஒரு துளியேனும் விலகாமலும் தலைவரிடத்தில் விசுவாசமாகவும் செயற்படுவான்.

எப்போது பார்த்தாலும் நீல நிற மேற்சட்டையும், காக்கிநிற காற்சட்டையுமே அணிந்திருப்பான். இரவு கழுவிப்போட்டுவிட்டு காலை உடுத்துவான். உடுப்பு ஈரம் என்றாலும் உறுதிப்பிரமாணத்திற்கு ஒரு நாளும் வராமல் இருக்கமாட்டான். போராளிகள் அந்த உடையை மாற்றச்சொன்னாலும் மச்சான் நான் இதை மாற்றுவேன் எப்பதெரியுமா... என்றைக்காவது தலைவரைக் காணப்போகும்போதுதான். இல்லாவிட்டால் எனது வீரச்சாவிற்குப் பின் நீங்கள் மாற்றிவிடுங்கள் என்பான். சற்றும் பெருமை இல்லாத கிருஸ்ற்ரி, இறுதிவரை தனது உடையை மாற்றவில்லை. எங்களையே மாற்றிவிடச்செய்துவிட்டான்.

எமது விடுதலையை முற்றுமுழுதாக நேசித்த கிருஸ்ற்ரி, தான் வீரச்சாவடைவதற்குள் ஒரு முறையேனும் தலைவரை பார்த்துவிடவேண்டும் என்றே ஆசைப்பட்டான். தனது பொறுப்பாளரான உருத்திரன் ஆசிரியருடன் இறுதியாக கதைத்தபோது, கிருஸ்ற்ரி என்ற ஒருவன் உங்களை பார்க்க எவ்வளவோ ஆசைப்பட்டு இறுதியில் பார்க்காமலேயே வீரச்சா அடைந்துவிட்டான் என்று சொல்லிவிடுங்கள் என்று கூறிவிட்டே இறுதிச்சண்டைக்குச் சென்றான்.

மாவீரன் கப்டன் கிருஸ்ற்ரியின் நினைவுகளைமீட்கும்போதெல்லாம் அவனது விசுவாசமும் நேர்மையும், அயராத உழைப்பும், வீரம்மிகுந்த சண்டையுமே கண் முன்னே நிழலாடுகிறது.

வாழைச் சேனைக்குக் கிட்டவாகக் கொழும்பு வீதியில் நடந்த சண்டை ஒன்றில் கிருஸ்ற்ரி வழமையாகச் சண்டைசெய்வது போல் செய்து கொண்டிருந்தான். கிருஸ்ற்ரி மறைந்திருந்து சுட்டுக்கொண்டிருந்த இடத்திற்கு அருகாமையில் மாவீரன் லெப் இலக்கியனும் சுட்டுக்கொண்டிருந்தான்.

திடீரென கிருஸ்ற்ரி இலக்கியனை நோக்கிக் குறிபார்க்கும் எதிரி ஒருவனை கண்டுவிட்டான். அதே நேரத்தில் தன்னை நோக்கியும் ஒருவன் சுட்டுக்கொண்டே இருப்பதை அவதானித்தாலும் மின்னலெனப் பாய்ந்து இலக்கியனை இழுத்து எறிந்துவிட்டு, அந்த எதிரியை நோக்கிச் சுட்டான். அதே நேரத்தில், ஏற்கனவே கிருஸ்ற்ரியை குறிபார்த்த எதிரி முந்திக்கொண்டு சுட்டான், கிருஸ்ற்ரியின் தொடையில் காயம் ஏற்பட்டுவிட்டது. என்றாலும் அவன் எதிரியை நோக்கிச் சுடுவதை நிறுத்தவில்லை. இப்படியாகவே அவனது கதைதொடர்ந்தது.

இதைப்போலவே கப்டன் கிருஸ்ற்ரி புலனாய்வு சார்ந்த வேலைகளை திறம்படச்செய்து முடிப்பான். அவனது வித்தியாசமான புலனாய்வுச் செயற்பாடுகளை இனங்கண்டுகொண்ட தளபதி நியூட்டன், தளபதி றமணன், தளபதி லெப் கேணல் உருத்திரன் ஆசிரியர் ஆகியோர் மிகவும் கடினமான வேலைகளையும், இக்கட்டான நிலைமையிலான வேலைகளையும் கொடுப்பார்கள், அதுபோலவே அவனும் அதை திறம்படச் செய்துமுடிப்பான். மட்டக்களப்பில் விரல்விட்டு எண்ணக்கூடிய புலனாய்வுப் போராளிகள் இருந்தபோது போராட்டத்திற்கு அச்சுறுத்தலான பல துரோகிகளையும், எதிரியையும் சுட்டுக் கொன்றான். குறித்த சில தாக்குதல்களை தனிமையாகவே சென்று செய்திருக்கிறான்.

இப்படிப்பட்ட அவனது பல தாக்குதல்களில் சித்தாண்டி அதிரடித் தாக்குதல் முக்கியமானது. உருத்திரன் ஆசிரியருடன் இருந்து ஒரு வித்தியாசமான தாக்குதலுக்குத் திட்டமிட்டான்.

சண்டைக்கான வேவு நடவடிக்கையை கிருஸ்ற்ரியே தலைமைஏற்றுச் செய்துமுடித்தான். எனவே அவனே சண்டைக்கும் நேரடிப் பொறுப்பாளராக வந்தான்.

1992ஆம் ஆண்டின் நடுப்பகுதியின் ஒரு மாலைப்பொழுது - வட்டவான் காட்டுப்பகுதியை கடந்த இராணுவ உடைஅணிந்த எமது அணிமிகக் கவனமாக நிதானமாக சந்தனமடு ஆற்றைக்கடந்து அங்குல அங்குலமாக நகர்ந்துகொண்டிருந்தோம். நாய்களின் இடைவிடாத சத்தம் எம்மை காட்டிக்கொடுத்து விடுமோ என்றிருக்க, நாய்குரைக்க திறந்த படலைகள் உடனே பூட்டிக்கொணடன. காரணம் ஆமி வருகிறான் என்ற... எண்ணம். எனவே ஒருவாறு பல தடைகளை தாண்டி மட்டக்களப்புப் பிரதான வீதியையும் கடந்து ஒரு சிதைவுண்ட கட்டடத்திற்குச் சென்று மறைந்துவிட்டோம்.

காலை விடிந்துவிட்டது வீர வேங்கைகளான லெப் பாரதி, லெப் விதுரன், கப்டன் சுதாகரன், இவர்களுடன் சுதா பாடசாலைமாணவர்களாகவும், மீன்காரனாகவும், மாம்பழ வியாபாரியாகவும் வெளியில் தங்களது வேலைகளை செய்து கொண்டிருக்க, குறிக்கப்பட்டநேரத்தில் அந்த எதிரி மேஜர் ஒருவனின் வாகனம் வரவில்லை. குறித்த நேரத்தைவிட 1 1/2 மணித்தியாலம் ஆகிவிட்டது. எதிரி தனது காவலுக்கு என சந்தி சந்தியாக மூன்று மூன்று பேராக விட்டுக் கொண்டுவந்து நாம் பதுங்கி இருந்த சித்தாண்டி காந்திசிலை அடியிலும்விட்டுவிட்டான்.

நிலைமை மோசமாகிறது. எமக்கு முன்னே 100யார் தூரத்தில் ஒரு தொலைத்தொடர்புடன் ஒரு இயந்திரத்துப்பாக்கி, ஒரு துப்பாக்கியுடனும் மூன்று எதிரி, பின்பக்கமாகவும் 03 பேர் மூன்று துப்பாக்கிகளுடன் இப்போது என்ன செய்வது, நேரம் 8.40 ஆகிவிட்டது. எனவே பாடசாலை மாணவர்கள் இருவரும் செல்ல ஆயத்தமாகி துவிச்சக்கரவண்டியில் ஏறிவிட்டனர். இப்போது ஏதோ ஒரு பெரிய ஆபத்து எம்மை சூழப் போகிறது. எனவே கிருஸ்ற்ரி தன்னுடன் இரண்டுபேரை பெளதீசன் லெப் மோகன் இருவரையும் கூட்டிக் கொண்டு, பின்பக்கத்தால் வெளியேறுகிறான். முன்னால் நிற்கின்ற மூன்று பேரை என்றாலும் தாக்கலாம் என நினைத்து வெளியில் எதிரியைப் போலவே உடையணிந்து மூவரும் போக எதிரி அசட்டையாகவே தங்களுடைய ஆட்களென நினைத்து விட்டிருக்கின்றான்.

எல்லோருக்கும் நெஞ்சு படபடக்கிறது... அது நீடிக்கவில்லை. லெப் விதுரன் சைகைகாட்டிவிட்டான். நாம் எழும்புவதற்கு முன்பாகவே கிருஸ்ற்ரியின் துப்பாக்கி அந்த மூவரையும் பார்த்துச் சுட்டுத்தீர்த்தது. கப்டன் சுதாகரனும், சுதாவும், குண்டை வாகனத்தைநோக்கி எறிந்தனர். அதுவெடித்தவுடன் கிருஸ்ற்ரி ஆவேசமுடன் பாய்ந்து வீதியில் நின்று வாகனத்தை நோக்கிச் சுட்டான்.

வாகனம் நிலைதடுமாறி பக்கத்திலுள்ள மதிலுடன் மோதியது. தொடர்ந்து வாகனத்தை தாக்கிக் கொண்டே முன்னேற அதற்குப் பின்னால் வழமைக்கு மாறாக வந்த, இராணுவ ரக்கிலிருந்து எதிரி சுடத் தொடங்கினான். அதைவிட வலம் இடம் எங்கும் காவலுக்கு நின்ற எதிரி தாக்கத்தொடங்கினான். கிருஸ்ற்ரி பின்வாங்க உத்தரவிட்டபோதே எதிரியின் குண்டொன்று அவனது வயிற்றை துளைத்தது. அவன் தடுமாறிக்கீழே விழுந்தான்.

மதியழகன் அவனை தூக்கச்சென்றான். மச்சான் என்னை தூக்கவேண்டாம் நான் குப்பி கடிக்கிறேன் கிட்டவந்திட்டான் ஓடுங்கடா... என்றான். ஆனால் நாம் அவனை விடவில்லை. தூக்கிக் கொண்டே பின்நகர்ந்தோம். நாம் சென்ற பாதையை தொடர்ந்து எதிரி எம்மை சுற்றிவளைத்துவிட்டான். கிருஸ்ற்ரிக்கு மருத்துவம் செய்ய முடியாமல் போய்விட்டது. அவனது உணர்வான இரத்தமெல்லாம் வழிந்தோடி அவன் பிறந்த மண்ணிற்கு உரம்சேர்க்கத்தொடங்கிவிட்டது.

இறுதி வார்த்தைகள் அவனிடமிருந்து வருகிறது. உருத்திரன் ஆசிரியர், தன்னை பெற்றெடுத்த அன்புத்தாயார், தனது ஒரேஒரு ஆசைத்தங்கச்சி, தனது அணியிலுள்ள இளையசகோதரன், கப்டன் இந்துபாலன் என கேட்டுக்கொண்டே போனவன். தலைவர்... தலைவர்... என்றவாறே தனது இறுதிமூச்சை விட தயாராகும் முன் நாதளர்ந்த போதும், எல்லோரையும் பார்த்து கண்களில் நீர்வடிய கவனமாகப் போக வேணுமென கைச்சாடை சொல்லி, களத்திலே வீரப்புலியாகி வீரச்சாவடைந்தான்.

### எனக்குச் சலரோகம்...



தம்பி எனக்குச் சலரோகமடா இனிப்பில்லாத சில்லறை ஏதும் தந்தியெண்டால் நல்லது.



# நம்பிக்கை தரும் எதிர்காலம் உதைபந்தாட்டத்துக்கு உண்டா?

விளையாட்டு ஈடுபாடு ஒருபோதும் கல்விக்கு இடையூறு இல்லை என்பதை என்னுடைய மாணவர்கள் நிரூபித்துள்ளனர் என்கிறார் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு.சுப்பிரமணியம் புண்ணியசீலன். ஐந்துவருடங்கள் தொடர்ந்து எமது பாடசாலை வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்ற மாணவிகள் ஐந்துபேர் மிகச்சிறந்த பெறு பேறுகளைப்பெற்று பல்கலைக்கழக அனுமதிபெற்றுள்ளனர். இவர்களில் மூவர் 3A பெற்றுள்ளனர். செல்வி கலைவாணி சுந்தரலிங்கம் என்பவர் மருத்துவபீடத்துக்கும், செல்வி மாலினி மகாலிங்கம் முகாமைத்துவத்துக்கும் (இவர் தமிழீழவலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றவர்) தர்மினி சண்முகலிங்கம் கலைப்பீடத்துக்கும் தெரிவு செய்யப்பட்டவர்களாவர். துளசி தேசிங்குராஜா மற்றும் செல்வி சைலஜா என்பவர்கள் 2A,B பெற்று கலைப்பீடத்துக்கும் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள்



வடகிழக்கு மாகாணப் போட்டிகளில் வெற்றிபெற்று அகில இலங்கைப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கிறார்கள்.

கல்வி என்பது மாணவர்களை இணைப்பாடவிதானச்செயற்பாடுகளிலும் தேர்ச்சியுடையவர்களாக்குவதன் ஊடாக, முழுமையை நோக்கிநகர்த்தப்பட வேண்டியவிடயமாகும். இதனை கவனத்தில் கொண்டு திட்டமிட்டுச் செயற்படுத்தும் போது மட்டுமே எமது இலக்கை அடைந்துகொள்ளமுடியும். யூனியன் கல்லூரியைப் பொறுத்தவரை இன்றும் உயர்பாதுகாப்பு வலயத்துள் பாடசாலையை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. பாடசாலை நேரங்களுக்கு மேலதிகமாகப் பாடசாலையில் கற்கமுடியாது. இதனால் காலை வேளைகளில் முதலாம் பாடவேளையை அதற்கேற்ற முறையில் திட்மிட்டுள்ளோம்.

அதுமட்டுமல்ல ஆசிரியர்களும், இந்த மாணவர்களின் பாடங்களில் மேலதிகமான கவனத்தை காட்டுகின்றனர். இதனாலேயே எமது பிள்ளைகள் விளையாட்டுத்துறையில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது என்றார் அவர்.

இப்போது யாழ்.மாவட்ட பாடசாலைகளில் விளையாட்டு விருத்திக்கான செயற்பாடுகளில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. முன்னர் சிறப்புடன் இயங்கிய யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம் பிரித்தானிய தமிழர் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கத்தின் உதவியுடன் பல்வேறு வகையான போட்டிகள், பயிற்சிச் செயற்பாடுகளை நோக்கித் திரும்பியுள்ளது. இதன் வெளிப்பாடு யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சிறப்பாக துலங்கும் எனத் தெரிவித்த திரு. புண்ணியசீலன் இவர் இப்போது எழுச்சி பெற்றுவரும் வலிகாமம் உதைபந்தாட்டலீக்கின் தலைவராகவும் செயற்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் கிளிநொச்சியில் நடந்து முடிந்த தமிழீழத் தேசிய இளையோர் உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டு முக்கிய விடயங்கள் நடைபெற்றன. ஒன்று புலம்பெயர்ந்த உறவுகளின் அணிகளின் சார்பில் சுவிற்சலாந்து தமிழர் இளையோர் அணிகலந்து கொண்டது. மற்றது பெண்களுக்கான அணிகளும் இப்போட்டியில் இடம் பெற்றது. யுத்த முனையில் ஆண் களுடன் சரிசமமாக சாதனைகள் புரிந்த பெண்கள், வலுமிக்க விளையாட்டு களிலும் சாதனைபுரியக்கூடியவர்கள் என்பதை இப்போட்டிகள் உணர்த்து கின்றன என்றார் தமிழீழமகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி. யுத்தமும் அதன் நெருக்கடிகளையும் கடந்து சாதனை புரியும் வேகம், முல்லைத்தீவு அணிப் பெண்களிடம் காணப்பட்டதை அவர் பாராட்டியுள்ளார்.

இதேபோன்று சுவிற்சலாந்து 14வயதுக்குட்பட்ட இளையோரின் அணி ஆழவேரோடி நின்ற தங்கள் தாயகத்தின் உறவுகளுடனான சந்திப்பில் நெகிழ்வை ஏற்படுத்திய சந்தர்ப்பம் ஒன்றுண்டு. முல்லைத்தீவு மாவட்டத்தின் சார்பில் போட்டியிட்ட உடையார்கட்டு கனிஷ்ட வித்தியாலயத்தின் மாணவர்களின் திறமையைப்பாராட்டி உதைபந்தாட்ட உபகரணங்கள், மற்றும் பதினையாயிரம் பணம் என்பவற்றை பரிசளித்திருந்தனர். இது எங்கள் மண்ணில் ஏற்படப்போகும் விளையாட்டு அபிவிருத்திக்கு முன்னோடியாக விளங்கி நின்ற ஒரு அன்புப்பாலத்தின் ஒரு அடையாளமாகும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பதின்னாலு வயதுக் குட்பட்ட சிறுவர்களின் அணிகள் கடந்த வருடத்தைவிட இம்முறை சிறப்பான ஆட்டத்திறன் விருத்தியை அடைந்துள்ளார்கள். கிளிநொச்சி மாவட்ட அணி அரையிறுதி வரை முன்னேறியுள்ளது. என சுவிற்சலாந்து தமிழர் விளையாட்டுச் செயற்பாடுகளின் இளையோர் அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருக்கின்ற மதி



சு.புண்ணியசீலன்

அவர்கள் தெரிவித்தார். இந்நிலை தொடர்ச்சியாக வளர்ச்சிபெறுமாயின் இவர்கள் சிறந்த வீரர்களாக உருவாகுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். இவர்களுக்கான விசேட பயிற்சித்திட்டம் தொடரப்பட வேண்டும் என அவர் ஆலோசனை வழங்கினார்.

அம்பாறை மாவட்டப் பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தின் இணைப்பாளர் திரு. ஷைசர் இவ்வாறான போட்டிகள் தொடர்ந்தும் நடத்தப்படுமாயின் எமது வடகிழக்கு மாகாண உதைபந்தாட்டத்தின் தரம் மேலும் உயரும் எனத்தெரிவித்தார். பாடசாலைச் சிறுவர்களிடையே ஏற்படும் அபிவிருத்தியே எதிர்காலத்தில் எமது தாயகத்தின் உதைபந்தாட்ட அபிவிருத்தியாகும் எனக்குறிப்பிட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் திரு.பாப்பா, தமிழீழ கல்விக் கழகத்துடன் இணைந்து தமிழர் தாயகத்தில் மாவட்டங்கள் தோறும் இவ்வாறான பாடசாலைகள் உதைபந்தாட்டச்சங்கம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்திருந்தார்.

**அன்ரன் அன்பழகன்**




# சாதனைகள் பல படைத்த மெக்ஸிக்கோ ஒலிம்பிக்

நவீன ஒலிம்பிக் போட்டிகளில் நிகழ்ந்துள்ள பல்வேறு சுவாரஸ்யங்களில் 1968-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரையிலான போட்டிகளில் முக்கிய துளிகள் இதோ! மெக்ஸிக்கோ (1968) 1968 இல் நடைபெற்ற விளையாட்டுக்களில்தான் மாணவர் புரட்சி ஆண்டு என்று அழைக்கப்படும் அரசியல் நேரடியாகத் தலையிட்டது. 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தை சாதனை நேரத்தில் ஓடி தங்கப்பதக்கம் வென்ற டாமி ஸ்மித்தும் மூன்றாவதாக வந்த ஜான் கார்லோஸும் கறுப்பு இனத்தவரின் சிறப்பைக் குறிக்கும் 'பிளாக் பவர் சல்யூட்' அடித்தார்கள். இதைத் தொடர்ந்து அவர்கள் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் ஒலிம்பிக் கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். நில நடுக்கோட்டுப் பகுதியில் இருக்கும் மெக்ஸிக்கோவில் காற்றின் அடர்த்தி மிகவும் குறைவாக இருந்ததால் பல உலக சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. ஜிம் ஹைன்ஸ் 100 மீற்றர் ஓட்டத்திலும் ஜீ இவான்ஸ் 400 மீட்டர் ஓட்டத்திலும் டேவிட் ஹெமிரி 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்திலும் உலக சாதனை படைத்தார்கள். நீளம் தாண்டுதலில் பாப் பீமன் 8.9 மீட்டர் தூரம் தாண்டி சாதனை படைத்தார். போட்டிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களத்தையே அவர் தாண்டிக்குதித்ததால் கட்டட ஆய்வாளர்கள் பயன்படுத்தும் எஃகு டேப்பைப் பயன்படுத்தி அவர் தாண்டிய தூரம் அளக்கப்பட்டது. உயரம் தாண்டுதலில் பின்புறமாகச் சுழன்று தாண்டும் புதிய பாணியை டிக் பாஸ்புரி அறிமுகப்படுத்தினார். அதையே அனைத்து விளையாட்டு வீர்களும் தற்போது பின்பற்றி வருகின்றனர். யூனிக் (1972) ஒலிம்பிக் வரலாற்றிலேயே 1972 செப்டம்பர் 5 கறுப்பு தினமாகக் கருதப்படுகிறது. ஒலிம்பிக் கிராமத்தில் பலத்த பாதுகாப்பையும் மீறி புகுந்த பலஸ்தீனத் தீவிரவாதிகள் இஸ்ரேலியர்கள் தங்கியுள்ள இடத்துக்குச் சென்றனர். இரு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். 9பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். பின்னர் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 9 பணயக்கைதிகளும் 5 பலஸ்தீனர்களும் ஒரு பொலிசும் கொல்லப்பட்டனர். மார்க் ஸ்பிட்ஸ் 7 தங்கப்பதக்கங்களை



வென்று சாதனை படைத்தார். சோவியத் ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை கோர்பட் அனைத்து ரசிகர்களையும் கவர்ந்தார் ஃபின் லாஸ் வைரன் ஐயாயிரம் மற்றும் பத்தாயிரம் மீட்டர் ஓட்டங்களில் தங்கம் வென்றார். மாண்ட்ரியல் (1976) இம் முறை ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஆபிரிக்காவிலிருந்து புதிய ஆபத்து வந்தது. நிறவெறிக் கொள்கையைப் பின்பற்றியதால் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து விலக்கப்பட்ட தென்னாபிரிக்காவுக்கு நியூஸிலாந்து ரக்பி அணி சென்றது. இதை எதிர்த்து 24 ஆபிரிக்க நாடுகளும் மேற்கு இந்தியத் தீவுகளில் அமைந்துள்ள நாடுகளும் ஒலிம்பிக் போட்டி யைப் புறக்கணித்தன. 1,500 மீட்டர் ஓட்டத்தில் சாதனை புரிந்த தன்ஸானிய வீரர் ஃபில்பர்ட் பாயிருக்கும் நியூஸிலாந்து வீரர் ஜான் வாக்கருக்கும் இடையே நடைபெறப் போகும் போட்டியைக் காண ரசிகர்கள் ஆவலோடு இருந்தனர். தன்ஸானியா கலந்து கொள்ளாததால் அவர்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்தனர். கியூபாவைச் சேர்ந்த ஆல்பர்ட் ஜுவான்டோரினா 400 மீட்டர் 800 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் வெற்றி பெற்றார். இதுவரை ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில் ஒரு தங்கம் கூட வெல்லாத கிழக்கு ஜெர்மனி வீராங்கனைகள், இம்முறை 13 தங்கப் பதக்கங்களுக்கான போட்டிகளில் 11-இல் வென்றனர். மூன்று சாதனைகளை நிகழ்த்தினர். அறிவியல் ரீதியான பயிற்சிகளே இதற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. ஆனால் 1989-இல் பெர்லின் சுவர் தகர்ந்த பின் கிடைத்த ஆவணங்களில் கிழக்கு ஜெர்மனி வீராங்கனைகள் ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரிய வந்தது. ஒலிம்பிக் வரலாற்றில் போட்டியை நடத்தும் நாடு முதல் முதலாகத் தங்கப் பதக்கம் வெல்லாமல் போனதுஇம் முறையே!






'எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே....' என்பது ஒரு பாடலின் ஆரம்பவரிகள். இந்த நல்ல குழந்தையை வல்லவனாகவும் நல்லவனாகவும் வளர்க்கின்ற பொறுப்பு பெற்றோர், ஆசிரியர், உறவினர், நண்பர் என எல்லோரது கைகளிலும்தான் உள்ளது.

குழந்தை என்கின்ற சொல் பொதுவானது. அது ஆண், பெண் குழந்தை என பாகுபாடற்றது. குழந்தைகள் நல்லவர்களாக்கப்படுவதற்கு பல வழிகள் இருக்கின்றன. இவர்கள் ஒரு செயலைச்செய்யும் போது தம் சார்ந்தவர்களிடம் பாராட்டுக்களையே எதிர்பார்க்கிறார்கள். பாராட்டுகள் இவர்களை உற்சாகமடைய வைக்கின்றன.

குழந்தை ஒன்று வீட்டுச்சுவரில் எதையாவது கீறிவிட்டால் அல்லது கிறுக்கிவிட்டால் அதை கண்டிக்கின்ற அல்லது தண்டிக்கின்ற பெரியவர்களே அதிகம். சுவர்களில் கிறுக்குவது நல்லதல்ல என்பதை பக்குவமாக எடுத்துக்கூறி எழுதுபலகையோ அன்றி வரைதாளோ கொடுத்து உற்சாகப்படுத்தும் மனதினர் எத்தனைபேர் இருக்கின்றார்கள்? அதிலும்-

# பெண்பிள்ளைகளின் முயற்சிகளும், எத்தனிப்புகளும் தட்டிக்கொடுக்கப்பட வேண்டும்

கிறுக்கியது பெண்பிள்ளையாயிருந்தால்...?

பெண் பிள்ளைகளின் முயற்சிகள் அல்லது எத்தனிப்புக்கள் பொதுவாகவே புறக்கணிப்புக்குள்ளாவது. அதிகம், தற்கால சூழலில் பெண் குழந்தைகளின் ஆர்வங்களும் ஆற்றல்களும் ஓரளவு உற்சாகப்படுத்தப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனாலும் சிலசில சந்தர்ப்பங்களில் இது சாத்தியமற்றுப்போய் விடுவதை நாம் கண்கூடாய் காண்கிறோம்.

முற்றத்தில் நிற்கும சயிக்கிளை ஒரு பெண்குழந்தை உருட்டினால் அதை அதட்டுவோரும், கேலி செய்வோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். முற்றாக ஒழிந்துபோய்விடவில்லை.

அப்பா தோட்டத்திற்கு கொண்டு செல்லும் மண்வெட்டியை எடுத்து முற்றத்தில் கொத்தும் சிறுமியை அதட்டும் பண்பும் இன்றும் நின்று விடவில்லை.

பாடநூல்கள் கூட பெண் மாணவிகளை பாரபட்சம் காட்டு



வனவாகவே அமைவதை நாம் காணலாம். ஆண் மாணாக்கர்கள் பாலம் கட்டுவதாகவும் பெண் மாணாக்கர்கள் அவர்களுக்குத் தேநீர் தயாரித்து வழங்குவதாகவுமே இன்றும் பாடப்புத்தகங்கள் புகட்டி வருகின்றன.

பெண் பிள்ளை ஒன்று போட்டியில் வெற்றியீட்டினால் "நீயோ?" என்று அதிர்வடைவதும் 'ஏதொ கடவுள் செயலால் வென்று விட்டாய்' என்று வாழ்த்துவதும் ஆங்காங்கே இன்னமும் நம் செவிகளில் விழாமல் இல்லை.

குடும்பத்தில் ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது - பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுவிட்டால் 'நீபடிச்சு என்னத்தைக் கிழிக்கப்போறாய்?... ' என்று கேட்டு பெண் பிள்ளையின் படிப்பை நிறுத்தி அதன் எதிர்காலத்தை இருளடைய வைப்பவர்களும் இருக்கிறார்கள்...

இவையெல்லாம் பெரிய பெரிய அளவில் நிகழாவிட்டாலும் மூலைக்கு மூலை நிகழ்ந்துகொண்டுமிருக்கின்றன என்பது உண்மை.

ஏன் இவ்வாறெல்லாம் நடக்கின்றது என்று ஆராய்ந்து பார்த்தால் காலம் காலமாய் சமூகத்தின் இயக்கம் அல்லது நகர்வு இவ்வாறுதான் வழிவந்திருக்கிறது என்பதை அறியலாம்.

ஒரு பெண் வழமைக்கு மாறான புதிய அல்லது மாறுபட்ட முயற்சியை மேற்கொள்வது என்பது அவள் சார்ந்தோராலும் சமூகத்தினாலும் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது இன்றும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இத்தகைய தடைகளுக்கும் தண்டனைகளுக்கும் உள்ளாக்குவது பெருமளவில் பெண்களே என்பது மிகவும் வெட்கப்படவேண்டிய விடயமாக இருக்கின்றது.

பெண்களின் முன்னேற்றம் அல்லது அதற்கான முயற்சி என்பது எல்லாராலும் வரவேற்கப்படவேண்டியதாக இருக்கிறது. இன்று வரையும் பெண்களை மன உளைச்சல்களுக்கு உள்ளாக்கிக்கொண்டிருக்கின்ற மூடக்கொள்கைகளும், பிற்போக்குத்தனமான சிந்தனைகளும், அறியாமைகளும் அகற்றப்படவேண்டிய அகமாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். ஆணும் பெண்ணும் சமூகத்தின் அங்கங்கள் என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும். இந்தப்புரிந்துணர்வே பெண்விடுதலையின் உச்சப் பயன்பாடாகவும், பெறுமானமாகவும் அமையும்.

**ஆதிலட்சுமி சிவகுமார்.**

# வீட்டு வேலை ஒரு சுமையா?

இன்று பரவலாக ஒரு குற்றச்சாட்டு நிலவுகிறது. "வேலைக்குப் போகும் பெண் ஒழுங்காக வீட்டைக் கவனிக்க மாட்டாள" என்பதே அது வாகும். இதனால் வேலைக்குப் போகும் பெண்களைத் திருமணம் செய்யக் கூடப் பல ஆண்கள் பயப்படுகிறார்கள். "பட்டணத்துப் பெண்டுகளின் லட்சணத்தைக் கண்டா, பயப்படாமல் மஞ்சள் தாலி கட்டுறவன் உண்டா" என்று சினிமாப் பாடல் வரிகள் கூட வெளிவந்திருக்கின்றன. இந்த நிலைக்கு எமது பெண்களும் ஒரு காரணமாக இருக்கிறார்கள். "வேலைக்குப் போகிறேன்" என்ற ஒன்றைக் காரணம் காட்டியே பல பெண்கள் வீட்டு வேலைகள் செய்வதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். பெண்கள் இந்த மன நிலையிலிருந்து மாற வேண்டும்.

பெண் என்பவள் சக்தி அவள் இருக்கும் இடங்கள் எல்லாம் பிரகாசமாகவும், சந்தோசமாகவும், கலகலப்பாகவும் இருக்க வேண்டும். அத்தகைய ஒரு நிலையைப் பெண்கள் நினைத்தால் நிச்சயமாக உருவாக்க முடியும். எந்த வேலையானாலும் அதனைச் சந்தோசமாகச் செய்யப் பழகுங்கள். உங்கள் உத்தியோகத்தைப் போலவே வீட்டு வேலைகளையும் நேசியுங்கள் உங்களுடைய வீட்டு வேலைகளையும் அலுவலக வேலைகளையும் ஒரு ஒழுங்கமைப்பிற்குள் கொண்டு வந்து இயன்ற அளவு விரைவாகவும் சுத்தமாகவும் சந்தோசத்துடனும் பொறுப்புணர்வுடனும் செய்து முடிக்க முயற்சி செய்யுங்கள் வேலைக்குப் போகும் பெண்களில் சிலர் உத்தியோகத்தலங்களிலும், வீட்டிலும் ஊர்க்கதை பேசியே பொழுதைப் போக்குவர். இதனால் விளைவது வீண் பிரச்சினைகளே. ஊர்க்கதை பேசும் நேரத்திற்கு உங்கள் வீட்டு வேலைகளைக் கவனித்தால் வீட்டிலும் பெருமை. வெளியிலும் பெருமை.

**க.கவிதா**

## கத்தரிக்காய் வற்றல்




**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| கத்தரிக்காய் | -1/2 கிலோ |
| உப்பு | -தேவையான அளவு |

**செய்முறை:-**

கத்தரிக்காய்கள் ஒவ்வொன்றையும் நான்கு துண்டுகளாக நறுக்கி ஒரு அகலமான பாத்திரத்தில் போட்டுக் கொள்ளவும்.

அதில் இரண்டு டம்ளர் தண்ணீர் இரண்டு கைப்பிடி அளவு உப்பு சேர்த்து அடுப்பில் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்.

வேக வைத்த காயை எடுத்து சுத்தமான முறம் அல்லது மூங்கில் பாயில் பரவலாகக் கொட்டி வெயிலில் காய விடவும்.

இதே மாதிரி தினசரி காயவைத்து கத்தரிக்காய் மிக நன்றாக சுக்குப் போல காய்ந்தவுடன் ஈரமில்லாத பாத்திரத்தில் எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ளவும். தேவையான பொழுது எண்ணெயில் வறுத்து வற்றல் குழம்புடன் சேர்த்துக் கொள்ளவும்.

இதே முறையில் அவரைக்காய், கொத்தவரங்காய் வற்றலும் தயாரிக்கலாம். காய்களைப் பொடியாக நறுக்காமல், தலையும் வாலும் மட்டும் கிள்ளி எடுத்து விட்டு முழுதாக அப்படியே வேகவிட வேண்டும்.

**மேலும் சில வற்றல் வகைகள்:-**

வெண்டைக்காய், தக்காளிக்காயிலும் வற்றல் தயாரிக்கலாம். இந்தக் காய்களை வேக வைக்கக் கூடாது. அதற்குப் பதிலாக தயிரில் தேவையான உப்பு,மிளகாய்ப் பொடி சேர்த்து நறுக்கிய காய்களை அதில் ஊற வைக்க வேண்டும்.

பின்னர் அவற்றை சுத்தமான முறம் அல்லது மூங்கில் பாயில் பரவலாகக் கொட்டி வெயிலில் காய விடவும்.

இதே மாதிரி தனசரி காய வைத்து வற்றல் மிக நன்றாகக் காய்ந்தவுடன் ஈரமில்லாத பாத்திரத்தில் எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும். தேவையான பொழுது எண்ணெயில் வறுத்து எடுத்து வற்றல் குழம்புடன் சேர்த்துக் கொள்ளவும்.

குடமிளகாய் எனச் சொல்லப்படும் பெரிய பச்சை மிளகாய்களை நீளவாக்கில் கொஞ்சம் கீறி தேவையான அளவு மோர், உப்புத் தூள் சேர்த்து இரண்டு நாள்கள் ஊற விடவும். பின்னர் அதை எடுத்து சுத்தமான முறம் அல்லது மூங்கில் பாயில் பரவலாகக் கொட்டி வெயிலில் காய வைக்கவும்.

இப்படி காய வைத்த மிளகாய்களை மாலையில் எடுத்து மிளகாயை ஊற வைத்து மீதமிருக்கும். மோரில் மீண்டும் ஊறவிடவும் மறு நாளும் இதே போல் வெயிலில் காய விடவும். இந்த விதமாக மோர் தீரும் வரை வற்றலை அதிலேயே போட்டு எடுத்து மறுநாள் காலையில் வெயிலில் காய வைக்கவும்.

மிளகாய் மிக நன்றாகக் காய்ந்தவுடன் எடுத்து ஈரமில்லாத டப்பாக்களில் நிரப்பிக் கொள்ளவும் தேவையான பொழுது எண்ணெயில் வறுத்துக் கொள்ளவும். மோர் சாதத்திற்குத் தொட்டுக்கொள்ள மிகவும் அருமையாக இருக்கும்.

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

வீடு,
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# இப்படிச் செய்யலாம்...

தெர்மாஸ் ப்ளாஸ்கைச் சுத்தம் செய்யும் போது அதனுள் தண்ணீரை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்ற வேண்டும். பிறகு கார்க்கைப் போட்டுக் குலுக்கி விட்டுத் தண்ணீரை வெளியே ஊற்ற வேண்டும். தெர்மாஸ் ப்ளாஸ்கை அப்படியே தண்ணீரில் போட்டு முக்கி எடுத்தால் ப்ளாஸ்க் கெட்டுவிடும் ப்ளாஸ்கின் இடையில் காற்றுப் புகாத இடம் இருக்கிறது. அதனுள் தண்ணீர் போய் விட்டால் அது கெட்டுப் போகும்.

* * *

கிணற்றில் தண்ணீர் இறைக்க உபயோகிக்கும் கயிறு இருக்கிறதே, அந்தக் கயிறை ஈரத்தோடு சுருட்டி வைக்கக் கூடாது. வெயிலில் காயவைத்து எடுத்து வைக்க வேண்டும். இப்படிச் செய்தால், கயிரு நீண்ட நாள் உழைக்கும்.

* * *

ஒரு வீட்டில் மிகவும் முக்கியமானது சமையல் அறை. குடும்பத்தாருடைய உயிரே இந்தச் சமையல் அறையில் தான் இருக்கிறது. சமையல் அறையில் நிறைய வெளிச்சம் இருக்க வேண்டும். சமையல் அறைச் சுவர்களில் புகைபிடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சமையல் அறையில் இருள் இருக்கக் கூடாது. இருள் இருந் தால், ஈரம் இருந்தால் பூச்சிகள் வரும் நிறைய வரும்!.

* * *




குமரகுரு அழகுப்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனில் 10ஐ எமக்கு நிரப்பி அனுப்ப வேண்டும். அனுப்பி வைக்கப்படும் கூப்பன்களில் குலுக்கள் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது. உங்கள் கூப்பன்களை வெள்ளிநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

குமரகுரு பரிசுத்திட்டம்-07

பெயர்:...........................................

முகவரி:...........................................

...........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# இளவயதில் திருமணம் செய்யலாமா....?



தமிழ் பிரதேசங்களில் இன்றும் இளவயதுத் திருமணங்கள் நடந்து வருகின்றன. இங்கு இளவயதுத் திருமணம் என்று நாம் குறிப்பிடுவது 14-18 வயதிற்கிடைப்பட்ட பெண்களுக்கு நடைபெறும் திருமணத்தையே குறிக்கின்றது.

நம் முன்னோர்காலத்தில் இவ் இளவயதுத் திருமணங்கள் மிக அதிகமாக நடந்துள்ளன.

பொதுவாக பூப்பெய்திய மறு வருடமே பெண்ணுக்கு அதிலும் முறைமாப்பிளை (மச்சான்)யைத் திருமணம் செய்வது அன்றைய வழமையான ஒரு விடயமாக இருந்தது.

இன்று அறிவியல் வளர்ச்சி கண்டுள்ள இக்கால கட்டத்தில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் பிரகாரம் இள வயதுத் திருமணங்களும், சொந்தத்தில் செய்யும் திருமணங்களும் பாரிய பின் விளைவுகளை குறிப்பாக பிறக்கும் குழந்தைகளுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்துவதை கண்டறிந்துள்ளனர்.

இதனை அறிந்து கொண்ட மக்களில் பலர் இவை இரண்டினையும் இயலுமானவரையில் தவிர்த்து வருகின்றனர்.

ஆனால் மட்டு - அம்பாறை மாவட்டங்களில் பொதுவாக கிராமங்களில் வயல்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் டிக்கள் மத்தியில் இளவயதுத் திருமணங்கள் இன்றும் அதிகமாக நடைபெற்று வருவதைக் காண்கிறோம்.

இவ்வாறு இளவயதிலும், சொந்தத்திலும் திருமணம் செய்வதினால் கருச்சிதைவு, பிறப்புக்குறைபாட்டுடன் குழந்தைகள் பிறத்தல், நிறை குறைவான குழந்தைகள் பிறத்தல், மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் பிறத்தல், பரம்பரை நோய்கள் ஏற்படல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுவதாக மருத்துவ ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இளவயதில் திருமணம் செய்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

அதில் ஒன்று வறுமை, பொருளாதாரக் கஷ்டம், இன்றைய நடைமுறையில் உள்ள சீதனக் கொடுமையின் நிமிர்த்தம் சீதனமின்றி தானாக வரும் மாப்பிளைக்கு மகளின் வயதினையும் பொருட்படுத்தாது திருமணம் செய்து வைக்கும் பெற்றோரும் உள்ளனர்.

அடுத்ததாகப் பிள்ளைகளைக் கல்விகற்க பாடசாலைக்கு அனுப்புவதில்லை. சாதாரணமாக பெண்பிள்ளைகள் கல்விக்கூடங்களுக்குச் சென்று அறிவைப் பெறுவதுடன் உயர்தர வகுப்புவரை கல்வியைத் தொடர்கின்ற போது இளவயது பாடசாலை வாழ்க்கையுடன் கழிகின்றது.

உதாரணமாக ஒரு பெண்ணை உயர்தர கல்வி வரை படிக்க அனுமதிக்கும் போது அவள் தனது 18 வது வயது வரை படிக்கிறாள், அதற்குப் பிற்பாடே பெற்றோர் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள்.

மூன்றாவது காரணம் அறியாமை, இளவயதுத் திருமணங்களினாலும், சொந்தத்தில் திருமணம் செய்வதினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பற்றியும், இவ்வாறான திருமணத்தின் மூலம் பெண்கள் எதிர்கொள்கின்றது உடல், உள ரீதியான பாதிப்புக்கள் பற்றியும் அறிந்திருக்காத பெற்றோர்களே இவ்வாறான திருமணங்களைச் செய்து வைக்கின்றார்கள்.

ஒரு பெண் பூப்பெய்துகின்றபோது அது அவளின் இனப் பெருக்கத் தொகுதி கருத்தரித்தலுக்கு அதாவது இனவிருத்திக்குத் தயாராகின்றது என்பதையே குறிகாட்டுகின்றது. எனினும் பூப்பெய்திய பின்பு இனப்பெருக்க உறுப்புக்கள் முதிர்ச்சியடைவதற்கும், தமது தொழிற்பாட்டை சீராக்கி ஒழுங்காக மாதவிடாய் வருவதற்கும் சில வருடங்கள் தேவைப்படுகின்றன.

அதற்கிடையில் நாம் எம் பிள்ளைகளுக்கு அவசரப்பட்டு திருமணம் செய்து வைக்கின்ற போது முதிர்ச்சியற்ற, சீரற்ற செயற்பாட்டினால் உருவாகின்ற முட்டை ஆரோக்கியமில்லாது இருப்பதினால் கருச்சிதைவு ஏற்பட சாத்தியமுள்ளது.

மேலும் பூப்பெய்த முதல் குழந்தையாக ஓடித்திரிந்த பெண் பூப்பெய்தியவுடன் தாயாகும் மனப்பக்குவத்தினை திடீரெனப் பெற்று விடுவாள் என நாம் எதிர்பார்க்க முடியாது, எதிர்பார்க்கவும் கூடாது.

வைத்திய கலாநிதி
**எழுமதி கரிகாலன்**

உண்மையில் ஒரு பெண் பூப்பெய்துகின்றபோது அவளில் உடல் உள மாற்றங்கள் நிகழ்கின்றன. மாதாமாதம் மாதவிடாய் எனும் நிகழ்வுடன் குருதிவெளியேறுதலும், வீட்டில் பெற்றோரினால் இதுவரையும் கொடுக்கப்பட்டுவந்த சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதினால் ஏற்படுகின்ற உளவியல் நெருக்கடியும் ஓர் இனம் தெரியாத மன அழுத்தத்தினை, பயத்தினை அப்பெண்ணுக்கு ஏற்படுத்துகின்றது.

மேலும் சில பெண்களுக்கு மாதவிடாயின் போது ஏற்படுகின் வயிற்றுவலி, சத்தி, கடுமையான குருதிப்பெருக்கு போன்றவை மிகவும் உடல் உள நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றன.

ஆக மொத்தத்தில் இதுவரையும் சிட்டாக, சுதந்திரமாக திரிந்த பெண் ஓர் பொறுப்புள்ள, பொறுமை நிறைந்த தாய்மை உலகினுள் காலடி எடுத்து வைக்கின்றாள்.

புதிய சவால்கள், பிரச்சினைகள், நெருக்கடிகள் நிறைந்த இந்தப் புதிய உலகில் சந்தோசமாக வாழ்வதற்கு அவள் நிறையப் படிக்க வேண்டியுள்ளது.சுயதேடலின் மூலம் புத்தகங்கள் பலவற்றை அவள் வாசித்தறிய வேண்டும். தன்னைச் சுற்றியுள்ள பெண்களிடமிருந்து அனுப வரீதியிலான பல தகவல்களை பெற்றறிய வேண்டும். இதற்கு மேலாகக் கர்ப்பகால பராமரிப்பு, மகப்பேறு, தாய்ப் பாலூட்டல், குழந்தைகளை வளர்த்தல், குடும்ப நிர்வாகம், தொழிலுடன் குடும்பத்தினை நிர்வகித்தல் போன்ற பல்வேறு துறை சார்ந்த அறிவினைப் பெற்று முதிர்ச்சி யடைய வேண்டும்.

இதற்கு சில காலங்கள் தேவைப்படும். ஒரு பெண் தானாக உடல் உள பக்குவத்தினை பெறும்வரை

(23ஆம் பக்கம் பார்க்க...)

---

மருத்துவம்

# விசர்நாய்க்கடிநோய் (RABIES)

**விசர்நாய்க்கடி நோய் வந்தால் மரணம் நிச்சயம்!**
**ஆனால் வராமல் தடுக்கலாம்.**

இந்நோய் விலங்கு விசர்நோய், நீர்வெறுப்பு நோய், றேபிஸ் (RABIES) போன்ற பல பெயர்களால் அழைக்கப் படுகின்றது.

**றேபிஸ் என்றால் என்ன?**

இது விலங்குகளில் இருந்து (நாய், பூனை, நரி,கீரி,எலி) மனிதனுக்குத் தொற்றுகின்ற உயிராபத்தான நரம்புத் தொகுதியில் வைரசினால் ஏற்படுகின்ற ஒரு நோய் ஆகும்.

எமது பிரதேசத்தில் விலங்குவிசர் நோயை மனிதனுக்குப் பரப்புவதில் நாய்களே முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்நோய்க்கான காரணி ஒரு வைரஸ் ஆகும்.

**வீசர்நாயை உங்களாலும் இனம் காண முடியும்**

அவை பின்வரும் இயல்புகளைக் காட்டும்.

- நடத்தையில் மாற்றம்.
- இருண்ட மூலையில் ஒதுங்குதல் அல்லது வெறியுடன் தாக்குதல்.
- அதிகளவு உமிழ்நீர் வாயின் ஊடாக நுரைபோன்று வழிதல்.
- கால்களும், வாலும் சோர்ந்து காணப்படல்.
- உணவை வெறுத்தல்.
- குறிக்கோள் இன்றி ஓடித்திரிதல்.
- கண்கள் சிவந்திருத்தல்.
- முகம் வீங்கியிருத்தல்.
- வித்தியாசமாகக் குரைத்தல்.
- தண்ணீரைக் கண்டு மிரளுதல். (நீரை வெறுத்தல்).
- உணவை விழுங்குவதில் சிரமம் இருக்கும்.
- நாய்கள் 10-14 நாட்களுக்குள் இறக்கலாம்.

**குறிப்பு:**~ சிலவேளை சாதாரண நாய் போன்றும் காணப்படலாம்.

விலங்குவிசர் நோய் எவ்வாறு மனிதனுக்குத் தொற்றுகின்றது?

இந்நோய் விலங்கு விசர் நோயுள்ள நாய் கடிப்பதனாலோ அல்லது காயங்களை நக்குவதனாலோ ஏற்படுகின்றது. நோய்க் காரணியான றேபில்வைரஸ் ஆனது நாய்களின் உமிழ்நீரில் காணப்படுகின்றது. விசர்நாய் கடித்து 2வாரம் தொடக் கம் 2ஆண்டு காலப்பகுதியினுள் நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

**அவதானம:**~ விசர்நாய் கடித்து 2ஆண்டின் பின்பும் நோய் ஏற்படலாம்.

**விலங்கு விசர்நோய் ஏற்பட்டதாக சந்தேகிக்கப்படும் நாய்கடித்தால் என்ன செய்யவேண்டும்.?**

- கடிபட்ட இடத்தை ஓடும் நீரினால் சவர்க்காரம் போட்டுக் கழுவவும். பின்பு அயடீன் மதுசாரம் இடவும்.
- உடனடியாக வைத்தியசாலையை நாடவும். தலை, தலைக்கு அண்மையான பகுதிகள் (உதாரணம் - கை,கழுத்து, விரல்நுனி)மறைவிடங்கள் (ஆண்,பெண் உறுப்புக்களில்) கடித்தால் மிகவும் உடனடியாக வைத்தியசாலையை நாடவும்.
- நாயை அவதானித்தல், கடித்த நாயை 10நாட்கள் வரை அவதானிக்கவும் இக்காலப் பகுதிக்குள் நாய் இறந்தால் அல்லது காணாமல் போனால் அல்லது அது ஒரு கட்டாக் காலி நாய் என்றாலும் அதனை வைத்தியருக்குத் தெரியப் படுத்தல் வேண்டும்.
- வைத்திய சிகிச்சைகளை ஒழுங்குமுறைப்படி பின்பற்ற வேண்டும்.

**மனிதனில் விலங்கு விசர் நோயின் குணங்குறிகள்**

- நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் பயந்த நிலையில் காணப்படுவர்.
- காய்ச்சல்
- தலையிடி
- வலிப்பு, தசை இறுக்கம்.
- சாதாரண மனித நடத்தையில் இருந்து மாற்றம் தண்ணீரைக்கண்டவுடன் அல்லது தண்ணீர் ஓடம் சத்தம் கேட்டவுடன் மூச்சுத்திணறுதல், அவஸ்தைப்படல்.
- காற்று உடலில் படும்போது அவஸ்தைப்படல்.

**விலங்குவிசர் நோயைத் தடுப்போம்.**

விசர் நாய்க்கடி நோய் தொற்றினால் மரணம் சம்பவிப்பது நிச்சயம். எனவே நோயில் இருந்து பாதுகாப்பாக இருப்பதில் (தடுப்பதில்) தீவிர கவனம் செலுத்த வேண்டும். அதற்காக,

- நாய்களுக்கு நோய் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். வளர்ப்புப்பிராணிகளுக்குத் தகுந்த நேரத்தில் தடுப்பூசி ஏற்றவேண்டும். 5வார வயதிற்கு மேற்பட்ட நாய்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை தடுப்பூசி போடவும்.
- ஊர்களில் திரியும் கட்டாக்காலி நாய்களை அவ்வப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேசசபை, பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
- வீட்டு நாயில் விலங்குவிசர் நோய் இருப்பதாகச் சந்தேகம் இருந்தால் அதனை உடனடியாகக் கட்டிவைத்து அவதானிக்க வேண்டும்.
- கால்நடை வைத்திய அதிகாரியை நாடி நாய் விசரால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவேண்டும்.
- விலங்குவிசர் நோயுள்ள நாய் கடித்தால் அந்நோய் ஏற்படாதவாறு வைத்தியரின் ஆலோசனைப்படி தடுப்பூசி ஏற்றல் வேண்டும்.

**தடுப்பூசி போடவேண்டிய சந்தர்ப்பங்கள்.**

- விலங்கு விசர்நோய் உள்ளதாகச் சந்தேகிக்கப்படும் நாய் கடித்தால் தடுப்பூசி குறித்த தவணைகளில் போடப்பட வேண்டும்.

  1ஆவது தடுப்பூசி கடித்தவுடன்
  2ஆவது தடுப்பூசி 3ஆம் நாள் (1ஆவது ஊசிபோட்ட தினத்தில் இருந்து)
  3ஆவது தடுப்பூசி 7ஆம் நாள்.
  4ஆவது தடுப்பூசி 14ஆம் நாள்.
  5ஆவது தடுப்பூசி 30ஆம் நாள்.
  6ஆவது தடுப்பூசி 90ஆம் நாள்.
- விலங்குடன் கூடிய தொடர்புடையவர்கள்(உதாரணம் - கால்நடை வைத்தியர், அங்கு வேலை செய்வோர் முன் எச்சரிக்கையாக தடுப்பூசி போடப்பட வேண்டும்.

எனவே உயிரா பத்தை விளைவிக்கும் உயிர்க் கொல்லி நோயான விசர்நாய்க்கடி நோயில் இருந்து நீங்கள் வளர்க்கும் அன்பான மிருகங்களையும் உங்களையும் பாதுகாத்துக்கொள்ள மிகவும் எச்சரிக்கையாகச் செயற்படுங்கள்.

**செ.சுகந்தன்**
மருத்துவபீட மாணவன்




காயங்களுக்கு மருந்து கட்டும் வெள்ளைத்துணியை தலையில் கட்டியபடி கையில் துப்பாக்கியும் ரவையுமாக எந்த கட்டுக்கோப்பும் இல்லாது இந்திய இராணுவகாலத்தில் திடீர் திடீரென ஊரிற்குள் புகுந்து அட்டகாசம் புரிவதே தொழிலென திரியும் 'திரிஸ்ரார்' என அழைக்கப்படும் ஈ.என்.டி.எல்.எப். அந்த ஊரிற்குள் புகுந்தது.

அவர்களது ஒரே நோக்கம் எந்தக்காலத்திலும் மாசு மறுவற்ற தங்கள் ஆதரவை




புலிகளுக்கு வழங்கி வரும் அந்தக் குடும்பத்தை இலக்கு வைப்பதே.

வீட்டில் புதிதாகக் கிணறு வெட்டத்தொடங்கியிருந்தார்கள். அதனால் அங்கு கிணறு வெட்டும் தொழிலாளர்கள் நாலைந்துபேர் வேலைசெய்து கொண்டிருந்ததால் சம்பளபாக்கி கொடுக்கவேண்டியிருந்தது.

சின்னவனைக் கூப்பிட்ட அப்பா... தம்பி உந்தக் காசை மாத்திக்கொண்டுவா.... என ஆயிரம் ரூபாவைக் கொடுத்து கடைத்தெருவுக்கு அனுப்பியவர் தெருவுக்குப்போன சின்னவன் போன வேகத்திலேயே தலை தெறிக்க பதகளித்தபடி ஓடிவந்தான்.

பிள்ளைவரும் வேகத்தைப் பார்த்த அப்பா ஏன்... என்ன நடந்தது என சின்னவனை அணைத்தபடி கேட்டார். மேனி நடுங்க கன்னத்தில் அடிபட்ட அடையாளத்தைத் தடவியபடி உங்கட மாமாமார் உங்களை வரட்டாம் என்றான்.

யார்...வரட்டாம்... என்ன நடந்தது என ஆறுதலாகக் கேட்ட தந்தைக்கு சின்னவன் கூறினான். 'திரிஸ்ரார்'காரங்கள் உங்க சந்தியில நிக்கிறாங்கள் என்ன அடிச்சுப்போட்டு தலை கீழாத் தூக்கி நிலத்தில அடிக்க வெளிக்கிட்டவர்கள் பிறகு என்ன நினைத்தாங்களோ தெரியாது உங்களை உடன கூட்டிக் கொண்டுவரட்டாம் என்றான்.

அப்பாவுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. யாரோ மூத்தவனை இயக்கத்துக்கு அப்பாவே கொண்டுபோய் ஒப்படைத்துவிட்டு வந்ததை இவர்களுக்குச் சொல்லி விட்டார்கள். இதனால் வஞ்சம் தீர்க்க இவர்கள் புறப்பட்டுவிட்டார்கள் என்பது.

வீட்டில் இப்போது ஒப்பாரி ஓவென ஒலிக்கத்தொடங்கி விட்டது. எல்லோரும் அப்பாவை வீட்டின் பின்புறத்தால் தப்பி ஓடும்படி கெஞ்சிக்கொண்டிருக்க அப்பா மறுத்துவிட்டார்.

என்ன நடந்தாலும் அவங்களிட்டப் போவம் என்னண்டு பார்ப்பம் என்றவர் 'சேட்டை' மேலில் போட்டவர் நடக்கத் தொடங்கிவிட்டார்.

அப்பாவைக் கண்ட திரிஸ்ரார்காரர்கள் கடையின் பின்புறம் அழைத்துப் போய் நிலத்தில் விழுத்திப்போட்டு தலைமுதல் கால் வரை இரவல் பூட்ஸ்கால்களால் மிதித்து துவம்சம் செய்தார்கள்.

பின்னர் வீதியால் அந்த குடும்பத்தையே ஊர்வலமாக 'துரோகிகள்' என்ற பட்டத்தோடு அழைத்துப்போனார்கள்.

இவ்வளவு அநியாயங்களையும் பொறுத்த அந்தக் குடும்பம் இனியும் பொறுக்கமுடியாது என்றபோது துரோகக்கும்பலுக்கும் இவர்களுக்கும் வாய்த்தர்க்கம் முற்றியது. எந்தளவுக்கு துரோகிகளை திட்ட முடியுமோ அந்தளவுக்கு ஆத்திரம் தீரும் மட்டும் திட்டித்தீர்த்தார்கள்.

ஊரின் மத்தியில் ஊரவர் முன்னணியில் தங்களை அவமானமாகத் திட்டத்தொடங்கி விட்டதை பார்த்த 'திரிஸ்ரார்' என்ற துரோகக் கும்பலில் ஒருவன் ஈ.என்.டி.எல்.எப் பின் தாகம் புலிகளின் இரத்தத்தை உறிஞ்சுவது என்றான். பதிலுக்கு அக்கா காட்டேரிகளின் தொழில் இரத்தத்தை உறிஞ்சுவதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும் என்றாள்.

கொதிப்பேறிப் போன ஒருவன் ஓடிவந்து அக்காவின் வாயில் துப்பாக்கியின் குழலை திணித்தான், பின்னர் ஊரே குவிந்து நிற்கும்போது எதுவும் செய்ய முடியாது பின்வாங்கி அந்தக் குடும்பத்தைவிட்டு விலகினார்கள்.

ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் வீதியில் வந்த குடும்பத்தில் அக்காவைப் பார்த்து காவலுக்கு நின்ற ஒரு கூர்க்கா கேட்டான்.

யுவ......பிரதர்...எல்...ரி... ரிஈ... என்று.

அக்கா நெஞ்சில் கையால் தட்டி கூர்க்காவுக்குக் கூறினாள் யேஸ்.... அக்கா யேஸ்... என கூறியதில் இருந்த துணிவும் வேகமும் பெருமையும் அவள் அதுவரை பட்ட துயரத்தையெல்லாம் கழுவிப் போவது போல இருந்தது.

---

வன்னியில் ஒதுக்குப்புறமான கிராமம் அது. அந்தக் கிராமத்தைக் கடந்தால் அடர்ந்தகாடு.

விறகு வெட்டப்போனவர்களாலும் வேட்டையாடப்போனவர்களது காற்தடங்கள் பதிந்து ஒற்றையடிப்பாதையை உருவாக்கியதைத் தவிர வேறு எந்தப் பாதையும் அந்த காட்டுக்கு இல்லை.

ஆனால் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் புலிகளின் முகாம் அந்த அடர்காட்டுக்குள் அமைந்ததன் பின்னர் புலிவீரர்களின் பாதத்தால் அந்த ஒற்றையடிப்பாதை அடிக்கடி பாதங்கள் பதியும் பாதையாக மாறிப்போனது.

அந்த ஒற்றையடிப் பாதையில் நீண்ட வரிசையில் சாரமும் சேட்டும் கால்களில் செருப்புக்கூட இல்லாது ஒரு ஒழுங்குமுறையில் நடந்து போகும் புலிவீரர்களைப் பார்ப்பதே ஒரு அலாதியாக இருக்கும்.

இந்தப் போராளிகளுக்குத் தேவையான பொருட்களை நகருக்குள் வந்து வாங்கிக்கொண்டு போய்க் கொடுப்பது, திடீர் என இந்தியச் சிப்பாய்கள் நகரத் தொடங்கினால் தகவல் கொடுப்பது என அநேகமான காரியங்களை செய்வது ஊரின்முடிவிலுள்ள குடிசைகளில் வாழும் அந்தக் குடும்பம் தான்.

ஆனால் காட்டுக்குள் எங்கு புலிவீரர்களின் முகாம் இருக்கிறது என்பதோ எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதோ எதுவுமே அவர்களுக்குத் தெரியாது.

காலை எட்டு ஒன்பது மணியென்றால் போராளிகள் காட்டுக்கு வெளியில் தலைகாட்டுவார்கள்.

இப்படியிருக்க, ஒருநாள் அதிகாலைஅந்தக் குடிசையைச்சுற்றி ஏராளமான இந்திய சிப்பாய்கள் நிலையெடுத்திருந்தார்கள்.

அதிகாலை நகர்ந்து காட்டின் எல்லைவரை முன்னேறிய இந்திய சிப்பாய்களைப்பற்றி எவருக்கும் எதுவும் தெரியாது.

நிலம் வெளிக்கத்தான் தலைப்பாகைகளும் தொப்பிகளும்




கண்களுக்குத் தெரிந்தன. அதோடு வீட்டிலிருந்த எல்லோரையும் சிறைப்பிடித்துவிட்டார்கள் இந்திய சிப்பாய்கள்.

இப்போது எல்லோருக்கும் ஒரேபதட்டம். காட்டின் எல்லைக்கு வரும்போராளிகள் இராணுவத்தினர் சுற்றிவளைத்திருப்பது தெரியாமல் இருந்தால் நிலைமை விபரீதமாகிவிடும்.

நேரம் செல்லச்செல்ல அதிக பதட்டத்தோடு, காத்திருந்தார்கள் நேரமோ ஆறுமணி, ஏழுமணி, எட்டுமணி, ஒன்பதுமணி, பத்துமணி என நேரம் கழிந்து கொண்டிருந்தது.

ஆனால் வழமையாக வரும் போராளிகள் இன்று வரவில்லை என்பது ஆறுதலாக இருந்தது. ஆனால் வந்துவிட்டால்... என்று நினைத்தால் தான் பயமாக இருந்தது.

ஒருவாறு நேரம் பதினொரு மணியானபோது எல்லோரையும் பயமுறுத்திய இந்திய சிப்பாய்கள எல்ரி.ரி.ஈ க்கு உதவி செய்யக்கூடாது என வெருட்டிவிட்டு முகாம் திரும்பத் தொடங்கினார்கள்.

போராளிகள் எப்படியோ நிலைமையை புரிந்து கொண்டார்கள் என எல்லோரும் பேசிக்கொண்டிருந்தபோது வீட்டில் இருக்கும் கடைக்குட்டிகள் இரண்டு பேரும் நிலைமையை விளக்கினார்கள். உங்கள ஆமிக்காரங்கள் பிடித்து வைத்திருக்க நாங்கள் காட்டு எல்லைக்குப்போய் 'கொப்பு முறிச்சு' பாதைக்குக் குறுக்கா போட்டுட்டு வந்திட்டம் அதுதான் மாமாக்கள் வரயில்ல என்றார்கள். வியந்துபோன எல்லோரும் அடுத்தநாள் போராளிகள் வந்து தாங்கள் அதனால்தான் வரவில்லை என்றபோது இந்த சின்னவர்களை பாராட்டினார்கள்.

வேழினி

---

கதைக்கும் சத்தம் கூட பெரிதாக கேட்காது... மெல்லிய உருவம்... எதையும் அலட்சியமாய் பார்க்கும் பாங்கு.... ஆனால் அந்த உருவத்திற்குள் இருக்கும் துணிவு மட்டும் அளவிட முடியாதது. அதுதான் அந்தப் போராளிகள் கரைந்துறையும் அந்த வீட்டின் தலைவி.

அம்மா என எல்லோரும் வாய் நிறைய அழைக்கும் அம்மா.

அந்த வீட்டிற்குப் போகும் எல்லாப் போராளிகளினதும் சேம நலன்களிலும் அக்கறை எடுப்பதோடு எப்படியும் அந்தப்போராளிகளின் குடும்பநலன், சொந்த ஊர் என அவர்கள் பற்றிய தகவல் திரட்டி போராட்ட ரகசியங்களை தவிர்த்து ஏனையவற்றை சேகரித்து வைத்திருப்பார்.

அம்மாவுக்கு செல்லப்பிள்ளையாய் அந்த வீட்டில் இடம் பிடித்து வைத்திருந்தான் ஒரு குட்டிப் புலி.

அவனில் அம்மாவுக்கு ஈர்ப்பு... பல மைல் தூரம் தூக்கமுடியா சுமையாகக் கனக்கும் வெடிமருந்து பொதிகளையும் துப்பாக்கிகளையும் சுமந்து வரும் போராளிகளில் அந்த குட்டிப் புலியை ஏக்கத்தோடு பார்ப்பாள்.

அவன் பாதங்களை தன் கரங்களால் தடவி சின்னச் சின்ன கரும்புள்ளிகளாய் தசைகளுக்குள் ஒளிந்திருக்கும் தெட்டாவாடி முதல் பெயர் தெரியா முற்களையெல்லாம் தேடி எடுப்பாள்.

அவனுக்கு அம்மாவோடு செல்லம் கொஞ்சாமல் போவது என்றால் பிடிக்காது. ஏனைய போராளிகளின் கேலிகளை எல்லாம் அவன் கவனத்தில் எடுப்பதே இல்லை.

அன்று அப்படித்தான் அம்மாவிடம் பழஞ்சோறு குழையலை வாங்கிச் சாப்பிட்டு விட்டு புறப்பட்டவன். பிரதான வீதியை கடக்க முற்பட சடாரென வந்து நின்றது இந்திய சிப்பாய்களின் மொட்ட ஜீப் சட..சட.. என துப்பாக்கிகள்




முழங்க போராளிகள் ஒரு பாதுகாப்பான பின்வாங்கலுக்கான ஒரு சிறு சண்டையைச் செய்து கொண்டே பின் வாங்கினார்கள்.

ஆனால் அம்மாவின் அந்த செல்லப்பிள்ளை விழுப்புண் அடைந்து ஆபத்தான நிலையில் போராளிகளால் அம்மாவின் வீட்டுக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள்.

முகம் வெளிற நாவறண்டு பேச முடியாது "செச்சரில்" கிடந்தான் அம்மாவின் செல்லப்பிள்ளை.

என்ன செய்ய முடியும் அம்மா ஓடினாள்... தன்னால் முடிந்த எல்லா முயற்சிகளையும் செய்தாள். ஆனால் இறுகியிருந்த முற்றுகை அம்மாவின் செல்லப்பிள்ளையைக் காப்பாற்ற எந்த மார்க்கத்தையும் விடவில்லை.

அம்மாவின் கரங்கள் அவன் தலையை தடவியபடி கண்கள் நீரை உருக்க அவன் அம்மாவின் மடியிலேயே உயிர்துறந்தான்.

அம்மா அழுது புலம்பினாள் இனியும் அவன் உடலை வைத்திருந்தால் அம்மாவை கட்டுப்படுத்த முடியாது என முடிவெடுத்த போராளிகள் அவனின் இறுதிப்பயணத்துக்கு தயார்படுத்தினார்கள்.

ஆனால் அம்மா மறுத்துவிட்டாள், என்ர செல்லப்பிள்ளை தன் அம்மாவை பார்க்கக் கிடைக்கயில்ல என்று என்னட்ட சொன்னவன், அவன் தன் அம்மாவை பார்க்கயில்லை. அம்மாவாவது பிள்ளையை பார்க்கோணும் என்றவள் பெட்டியெடுத்து ஒரு விபத்தில் இறந்து போனவன் என்ற பொய்யோடு பழைய ஆனையிறவைக் கடந்து சந்து பொந்து எல்லாம் காப்பரண் அமைத்து காவல் இருந்த இந்திய சிப்பாய்களை ஏமாற்றி யாழ்ப்பாணத்தில் அவனின் அம்மாவிடம் கொண்டுபோய் ஒப்படைத்த போதுதான் அவளுக்குள் ஒரு திருப்தி.

---

**கருணை உள்ளங்களே...!**



கருணை உள்ளங்களே சில்லறைக்குப் பதிலாக தயவு செய்து ரொபிகளைப் பிச்சை யிடவேண்டாமென உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

# பனைமரமே பனைமரமே...!

வெளிவாசல்பாலன்

நிகழ்ந்துகொண்டிருக்கிற போர் நிறுத்தச் சூழலில் இரண்டு காரியங்கள் கூடுதலாக நடக்கின்றன. ஒன்று வீடு கட்டுதல், மற்றது போக முடியாத இடங்களுக்கு உறவினர்களிடமும் நண்பர்களிடமும் வேறு அலுவல்களுக்காகவும் போய் வருதல். இதில் புலம் பெயர்ந்தவர்கள் வரையில் வருவர்.

இதில் முக்கியமானது காணி வாங்குதலும் வீடு கட்டுதலும்தான்.

யுத்தத்தில் இழந்த பலவற்றில் முக்கியமானது வீடு. அகதி வாழ்வின் பாடுகளில் பெரிதும் இன்னற்பட்டதும் வீட்டுக்காகத் தான். இப்போது தேவைப்படுவதும் வீடுதான். நாடொன்று நமக்கென்று கிடைக்கும் வரையில் எதுவும் நிரந்தரமில்லை என்று உணரப்பட்டதில் முதலாவதும் வீடுதான்.

ஆக, இப்பொழுது வீடு முதலாவது தேவையும் விருப்பமுமாகிவிட்டது. எதைச் செய்வதற்கும் வீடு ஒருஅடிப்படையானது. எதற்கும் அது தேவை என்பதால் வீட்டைக்கட்டுவது தவிர்க்கமுடியாதது. மிகவும் அவசியமானது.

ஆகவே வீடுகட்டும் படலம் எங்கும் பரவலாகியிருக்கிறது. இதற்குப் போர் நிறுத்தச் சூழல் மிகவும் உதவுகிறது.

இடிந்த வீடுகள், அழிந்த வீடுகள், புதிய வீடுகள் என எல்லாம் அந்தந்த வகையில் கட்டப்படுகின்றன.

வீடுகட்டும் போது முக்கியமாக இரண்டு பிரச்சினைகள் வருகின்றன. அப்படியென்றால் உடனே யாரும் கட்டுவேலைக்காரரையும் தச்சு வேலைக்காரரையும் யோசிக்கக்கூடும். அதுவல்ல இங்கே பிரச்சினை. வீட்டுக்குத் தேவையான பனை மரத்தையும், நிலை, கதவு, தளபாடங்களுக்குரிய காட்டுமரங்களையும் பெறுவதுதான் பெரும் பிரச்சினை. இந்த இரண்டையும் எடுத்துவிட்டால் வீடு கட்டியதற்குச்சமன் என்று சொல்கிற பலரை நீங்கள் பார்த்திருப்பீர்கள். உண்மை நிலையும் அதுதான்.

பனைக்கும் காட்டுமரத்துக்கும் இவ்வளவு தட்டுப்பாடா என்று புலம்பெயர்ந்து போயிருந்த நண்பர் ஒருவர் இங்கே வந்திருந்தபோது இந்த விடயம் தொடர்பாகப் பேசிக்கொண்டிருக்கையில் கேட்டார்.

பனைமரத்துக்கும் காட்டுத்தடிக்கும் பலகைக்கும் இன்றோ நாங்கள் படுகின்ற பாடுகள் கொஞ்சமுமல்ல; சாதாரண மானது மல்ல. முன்பு பனையும், காடும் எங்களுக்குத் தாராளமாக இருந்தது.

பனை எங்கள் வாழ்வின் எல்லா அம்சங்களிலும் ஒன்றாக இணைந்திருந்தது.

பனம் பண்டங்கள், பனந்தளபாடங்கள், பனம் உபகரணங்கள், பனம் பாவனை பொருட்கள் என்று பனையினாலான பல பயன்களை நாங்கள் பெற்றிருந்தோம். ஓலைவீட்டு வாழ்க்கை இருந்த காலத்தில் பனைதான் அதில் அடிப்படையாகவும், முதன்மையான தாகவும் இருந்தது.

இப்பொழுதுகூட பனை தருகின்ற பயன்விளைவுகள் அதிகம் தான். இன்னும் அறிவுபூர்வமாகப் பனையை பயன்படுத்த விளைந்தால் அது நன்றாக நெகிழ்ந்து தந்து இன்னுமின்னும் பலன் தரும். நம் பொருளியல் வாழ்வை உயர்த்தியும்விடும்.

தமிழர் வாழ்வின் ஒரு பிரதான குறியீடாகப் பனை அடையாளம் பெற்றிருப்பதையும் இங்கே சேர்த்து நோக்கலாம். பனையைக் கண்டதும் உடனே தமிழர் என்ற அடையாளம் வந்துவிடுகிறது.



அந்தளவுக்கு பனையும் தமிழர் வாழ்வும் ஒன்று கலந்தது.

ஆனால் இன்றோ பனையை சிறு தேவைக்குப் பயன்படுத்துவதற்கே போதாத நிலைமை யொன்று உருவாகியிருக்கிறது.

ஒரு புறத்தில் படையினர் பெருமளவு பனையை அழித்துவிட்டனர். தங்களுடைய காவலரண்களுக்கும் பிற தேவைக்களுக் குமாக அவர்கள் அழித்த பனைகள் லட்சக்கணக்கானவை.



மறுபக்கத்தில் நாங்களும் பனையை வளர்ப்பதில் பின்னின்றுவிட்டோம். அதே வேளை பனை தறிப்பதை நாம் குறைத்து விடவும் இல்லை. பதிலாகப் பனையை தறிப்பதில் இன்றும் கூடுதலாக ஈடுபட்டிருக்கிறோம்.

கீரை முளைத்து பயன்தருவது போல பனை குறுகிய காலத்தில் பயன்தரும் மரமல்ல. அது ஒரு நாள் தேவையுடன் முடிந்து போகும் பண்பு கொண்டதுமல்ல.

"பனை நின்றாலும் ஐநூறு ஆண்டு, பட்டாலும் ஐநூறு ஆண்டு" என்பார்கள். அவ்வளவுக்குப் பனையின் வாழ்வும் பயனும் பெரியது.

முன்பு, எந்த ஊரில் பார்த்தாலும் பனந்தோப்புகள் நிறைந்திருக்கும். வடலிகள் பெருகியிருக்கும். 'ஊர்' என்ற அடையாளத்தை சித்திரிக்க வேண்டுமென்றால் பனங்கூடலையும் ஒரு வீட்டையும் வரைந்து விட்டாலே போதும். அவ்வளவுக்குப் பனை ஊருடன் ஒன்றித்தது.

இப்பொழுது பனைகளுக்குப்பதிலாக வெறும் வானம் விரிந்து கிடக்கிறது. சில இடங்களில் இன்னும் பனங்கூடல்கள் இருக்கின்றன[illegible], குறிப்[illegible]கரையோரங்களில். ஆனால் அவையும் எ[illegible]கட்டுப்பாடும் இல்லாமல் அழிக்கப்படுகின்றன.

ஏதோ இன்றைய தேவை முடிந்தால் போதும் என்ற மனோ நிலையில் நிற்கும் பனைகளும் தறிக்கப்படுகின்றன. ஏற்பட்டிருக்கிற பனைமரத்தேவைக்காக இளைய பனைகள், முதிராத பனைகள் எல்லாம் தறிக்கப்படுகின்றன. இப்படித்தறிக்கப்படும் பிஞ்சுப்பனைகளின் 'வெள்ளை மரங்களை' எந்த சஞ்சலமும் இல்லாது சில பனைமரக்காலைகள் விற்பனையும் செய்கின்றன. வாங்குவோரும் வேறு வழியில்லாமல் திருப்தியில்லாத மனதோடு அவற்றை வாங்கிப்போகிறார்கள்.

பனை மரங்கள் கடந்த நாற்பது ஆண்டுகளில் தறிக்கப்பட்ட அளவுக்கு அவற்றின் பெருக்கம் நிகழவில்லை. அதிலும் படையினரின் யுத்த சந்நதம் நிகழ்ந்த கடந்த பதினைந்து ஆண்டுகளில் அழிக்கப்பட்ட பனைகளின் மூன்றில் ஒரு பங்குப்பனை அபிவிருத்தி நிகழவில்லை.

ஆனால் "பனைஅபிவிருத்திச் சபை" என்ற ஒன்று பனை அபிவிருத்திக்காக அதிகமதிகம் காசையும் பிற செலவுகளையும் செலவழித்தலும் இந்த பனை அழிவுக்காலத்தில்தான் அது செலவழித்த செலவுகளுக்கேற்ற பலனில் சிறிதும் இதுவரை எட்டியதாகவும் இல்லை.

இதனைவிட 'மில்க்வைற்', கனகராசா பனை நடுகையில் சாதித்தது அதிகமானதே 'மில்க்வைற் கனகராசா' என்றவுடன் நினைவுக்கு வருவது பனை நடுகையும் வேப்பம் விதைச் சேகரிப்பும் தான். அந்தளவுக்கு அவர் தனிமனித செயற்பாட்டு நிறுவனமாகத் தன்னை மாற்றி இயங்கிச் சாதித்தார்.

பிறகு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கோடி பனை நடுகைத்திட்டத்தில் பல இலட்சம் பனைகளை நடுகை பண்ணியது.

திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் போர்ச்சூழல் மாறினாலும் முடிந்தவரை நடுகை முயற்சிகளும், பனை அபிவிருத்திச் செயற்பாடுகளும்தொடர்ந்தபடிதானிருக்கின்றன.

ஆனால் பனை நடுகையையும் விட பனை அபிவிருத்திகளையும் விட பனைத்தறிப்பும் பனை அழிப்பும்தான் கூடுதலாக இருக்கிறது.

காரணம், பனை எல்லாத் தேவைகளுக்கும் ஒரு நிவாரணியாக இருப்பதால் அது எல்லோருக்கும் அவசியமாக இருக்கிறது.

இதனால் இன்று பனைக்குத் தட்டுப்பாடுமட்டும் ஏற்பட்டிருக்கவில்லை; விலையும் கூடியிருக்கிறது என்பதையும் கவனிக்கவேண்டும்.

பனை அபிவிருத்திச்சபை புதிய பனை நடுகையை துரிதமாக்காவிட்டாலும் பரவாயில்லை; இலட்சக்கணக்கான பனைகள் படையினரால் அழிக்கப்பட்டதையாவது தடுத்திருக்கலாம். ஆனால் அது அதையும் செய்யவில்லை. அப்படி அது தடுத்திருந்தால் இன்று ஏற்பட்டுள்ள பனைக்கான தட்டுப்பாடு குறைந்திருக்கும். இந்தளவுக்கு நெருக்கடியாக இருந்திராது.

இன்னும் மிஞ்சியிருக்கிற பனைகள் முதிர்ந்தவையாகவே இருக்கின்றன. அல்லது வளர்ந்தவையாக உள்ளன.

வடலிப் பனைகள் எங்குமில்லை. படையினரின் பிடியிலிருந்த கண்ணிவெடிப் பிரதேசங்களாக இன்றுள்ள பகுதிகளில்மட்டும் ஓரளவுக்கு வடலிகள் முளைத்திருக்கின்றன. வேறிடங்களில் வடலிகள் குறைவு. புதிதாக வடலிக்கூடல்கள் இருந்தால்தான் நாளைஅவை பனங்கூடலாகும்.

ஆனால் இதைப் பற்றிய கவலையும் அக்கறையும் எங்களிடம் பரவலாக இல்லை.

பனையோ செலவின்றி வளரும் பயன்மிகத்தரும் தாவரம், வளர்வதற்கான இடத்தைக் கூட அதிகம் பிடிக்காத மரம். வளரும் பருவத்திலிருந்து அது பட்டபின்னும் பயன் தரும் கற்பக விருட்சம்.

நாம்தான் இதன் பெருமை இன்னும் தெரியாமல் இருக்கிறோம். ●

---

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

காத்திருக்காது அவள் மீது அவசரப்பட்டு திருமண பந்தத்தினைத் திணிப்பது தானாக ஒரு பழத்தினை முற்றிக்கனிய விடாது அதனை அடித்துக் கனியவைப்பது போல இருக்கும்.

இங்கு அடித்துக் கனிய வைக்கும் பழம் எப்போதும் சுவை குறைந்ததாகவே இருக்கும். சில சமயம் அக்கனி அழுகிவிடும் இதனை சகல பெற்றோர்களும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு பெண் பூப்பெய்துகின்ற போது அவளின் உடலமைப்பிலும் உடற்றொழிலிலும் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன என ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

இங்கு பாலியல் ஓமோன்களின் சுரப்பும் செயற்பாடும் அதிகரிக்கின்றது. இதனால் பாலியல் உணர்வு தட்டிஎழுப்பப்படுகின்றது. இது ஆரம்பத்தில் ஓர் எதிற்பால்கவர்ச்சியை ஏற்படுத்துகின்றது இந்த காலகட்டத்தில் அப் பெண்ணானவள் ஆண் பிள்ளைகளைக் கண்டதும் மருளுவாள், அளவுக்கு அதிகமாக வெட்கப்படுவாள் எனினும் கதைக்கவும் ஆசைப்படுவாள், மேலும் தன்னை அழகு படுத்துவதில் நீண்ட நேரத்தைச் செலவிடுவாள். இவற்றை எல்லாம் பார்க்கும் பெற்றோர்கள் பருவமடைந்த தம் பெண்பிள்ளைகளை வீட்டினுள் வைத்திருக்கப் பயப்படுகின்றனர்.

இந்த வேளையில் அப் பெண்ணுக்கு பாதுகாவலராக இருந்து அறிவுரைகள் கூறி மனதினை நல்வழிப் படுத்தி படிப்பு, தொழில் போன்ற சிந்தனை மாற்றச் செயற்பாடுகளில் ஈடுபட வைக்கவேண்டும்.

இவ்வாறு புத்திசாலித்தனமாகச் செயற்பட முடியாத பல பெற்றோர்கள் வயது வந்த பெண்களைப் பாதுகாக்க முடியாது எனப் பயந்து "நெருப்பை மடியில் கட்டிவைத்திருப்பது" போன்று நினைத்து தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழித்துத் தங்களது நிம்மதிக்காக அவரச அவசரமாக ஒருத்தனின் கையில் அவளைப் பிடித்துக்கொடுக்கின்றார்கள். இவ்வாறான திருமணங்களுக்கு, வறுமையும் அறியாமையும் உந்துசக்தியாக விளங்குகின்றன.

இவ்வாறு இளவயதில் திருமணத்தினைச் செய்து வைக்கின்ற போது குழந்தை மன நிலையுள்ள அவள் இன்னொரு குழந்தையைச் சுமக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. இதனால் அக் குழந்தையை ஆரோக்கியமாக வளர்க்க முடியாது அச்சிறு பெண் திண்டாடுகின்றாள்.

பொதுவாக 16 வயதுப் பெண்ணிற்குப் பிறக்கும் குழந்தைக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால் அப் பெண்ணின் தாயார்தான் மருத்துவமனைக்குக் குழந்தையைத் தூக்கி வருவாள். குழந்தையின் தாயான அச் சிறு பெண் தாய்க்குப் பின்னால் ஒரு கைப்பையுடன் வருவாள். குழந்தையை தாயிடம் கொடுங்கள் என மருத்துவர் கூறும் போது அதற்கு அத் தாயார் "அவளுக்கு ஒன்றும் தெரியாது அவளுக்கு 16 வயதுதான் சின்னப்பிள்ளையம்மா" என்கின்ற நிலையை பல இடங்களில் அனுபவ ரீதியாகக் கண்டுள்ளோம். ஒன்றும் தெரியாத சின்னப் பிள்ளைக்கு ஏன் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பதே எம்முன் இப்போது எழுந்து நிற்கும் கேள்வியாகும். இதற்கான விடையைப் பெற்றோர்கள்தான் தீர்வாகவைக்க வேண்டும்.

இங்கு இளவயதுத் திருமணத்தினால் பாதிப்புக்கள் ஏற்படுவது போல முதுவயதுத் திருமணம் (35 வயதிற்குப் பிறகு) செய்கின்ற போது மகப்பேற்றுச் சிக்கல்கள், பிறப்புக் குறைபாட்டுடன் மகப்பேறு போன்ற பாதிப்புக்கள் வர வாய்ப்புண்டு.

எனவே எமது பெற்றோர்களே! உங்களின் பிள்ளைகளுக்கு திருமணம் செய்ய முதல் அவளுக்கு உடல் உள முதிர்வு ஏற்பட்டுள்ளதா? என உறுதிப்படுத்துங்கள். ஆரோக்கியமான குழந்தையைப் பெற்று நலத்துடன் வளர்ப்பதற்கும், குடும்பம் எனும் விருட்சத்துடன் தனது தனிப்பட்ட தொழிலையும் திறம்பட நிர்வகித்து நலமான, சந்தோசமான குடும்ப வாழ்வினை ஏற்படுத்துவதற்கும் ஒரு பெண் சரியான வயதில் திருமணபந்தத்தில் புகவேண்டும். அதற்குரிய ஆரோக்கியமான வயதெல்லை 20 வயதில் இருந்து 28 வயது வரை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். ●

## பிள்ளையார்



பிள்ளையாரப்பா!

இண்டைக்குச் சாமான் வாங்கிவாற மிச்சக்காசை உண்டியலுக்கை போடுவனெண்டு நேத்தி வச்சனான். ரெண்டுரொபிதான் கிடைச்சுது குறைநினைக்காமல் ஏற்றுக்கொள்வாயாக...

# பழமையின் வாழ்வும் புதுமையின் அவலமும்



'பனைமரமே பனைமரமே ஏன் வளர்ந்தாய் பனை மரமே'' என்ற தமிழீழத் தேசத்தின் எழுச்சிப் பாடலைக்கேட்டவுடன் படித்தவர் தொடக்கம் பாமரர் வரை பனை மரத் தின் பயன்கள் பற்றி முழுமையாக அறிந்து கொள்வர். தமிழீழப்பிரதேசங்கள் பெரும்பாலும் கற்பகதருவால் வளம் கொளிப்பனவாகக்காணப்பட்டன. சிங்கள இராணுவத்தினர் மேற் கொண்ட போர் அனர்த்தங்களால் வெட்டப்பட்டும், குண்டுகள் துளைக்கப்பட்டும், முறிந்தும் சிதைந்து போனது. இன்று பனைகளை பாதுகாக்கும் நோக்குடன் இராணு வக்கட்டுப்பாட்டில்லாத பிரதேசங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் அனுசரணையுடன் அவை பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

தமிழீழத்தில் பண்டைக்காலம் தொட்டு பனை மரம் வாழ்வாதாரப்பயிராகக் காணப்பட்டதை யாரும் மறுப்பதற்கில்லை. பனையிலிருந்து பெறப்படும் பொருட்களினால் 'வீட்டு உபகரணங்கள், அலங்காரப் பொருட்கள், உணவு என்பன தயாரித்து தம் ஜீவனோபாயத்தைபெருக்கினர். பனையின் பாகங்களை மூலப்பொருளா கக்கொண்டு குடிசைக் கைத்தொழில் அமைத்து வேலை வாய்ப்பு பணம் சம்பாதித்தல் தாராள உணவு என்பனவற்றை அதிலிருந்து பெற்றனர். அதன் பயனாக தூய்மையான சூழலில் சுகமாக வாழ்வை நடாத்தினர். விழாக் களில் கூட பனம் பண்டம் பயன் படுத்தும் வழக்கம் தமிழர்களுக்கு உண்டு. சோமசுந்தரம் புலவர் "ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே'' என்ற பாட்டிலிருந்து பழம் தமிழர் வரலாற்றில் பனையின், பனம் பண்டங்களின் பாவனை பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆனால் இன்று எமது பிரதேசங்களின் எமது மக்களின் வாழ்க்கை முறையை எடுத்து நோக்கினால் பெரும் சோகம் கொண்டதாகவே காணப்படுகின்றது. வைகாசி பிறந்து விட்டால் வன்னிப் பெருநிலப்பரப் பெங்கும் விழாக்கோலம் பூண்டுவிடும். ஆங்காங்கே அமைந்திருக்கும் வரலாற்றுச்சிறப்பு மிக்க ஆலயங்களில் பொங்கல் விழா நடந்தேறும். இம் முறையும் மிகச் சிறப்பாக விழாக்கள் நடந்தன. பெரும் திரளான அடியார்கள் ஆலயத்தில் குழுமினர். பல ஆலயங்களில் அர்ச்சனைப் பொருட்கள் பொலித்தின் பைகளில் விற்கப்பட்டன. சில ஆலயங்களில் பனையோலைப்பெட்டிகளில் அர்ச்சனைப்பொருட்கள் விற்கப்பட்டன. திருவிழா முடிந்ததும் பெட்டிகள் விற்கப்பட்ட ஆலயங்கள் தூய்மையாகவும் பொலித்தின் பைகளில் விற்கப்பட்ட இடம் குப்பையும் கூழமுகமாகக்காட்சியளித்தன.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல என்பதற்காக எம்மையும், எம் சூழலையும் மாசு படுத்தும் பொருட்களை வில்லங்கத்திற்கு விலை கொடுத்து வாங்குவது போலாகின்றது. அழகான அந்தப் பனைமரங்கள் ஆயிரம் ஆயிரம் இருக்கும் போது நாகரிகம் என்று கூறிக்கொண்டு சூழலை அசிங்கப்படுத்தும் பொருட்களை நாம் பயன்படுத்துவது வேதனைக்குரிய விடயமாகும்.

இயற்கையில் கிடைக்கும் பொருட்களை முழுமையாகப் பயன் படுத்தினால் வருமானம், சூழல் பாதுகாப்பு என்பனவற்றை நாம் பேணலாம். அதை விடுத்து சூழலை மாசுபடுத்தும் தேவையில்லாப் பொருட்களின் பாவனையால் நம்மை நாமே அசிங்கப்படுத்தி வாழ்வை சீரகுலைக்கின்றோம். இதை எப்போது எமது மக்கள் உணரப்போகிறார்கள்.

**பா.றுஜினா**

---

# ஏ9-ஏரம்பு



எல்லாருக்கும் வணக்கம்! நல்ல சுகமா இருப்பியள் எண்டு நினைக்கிறன். என்னை ஞாபகம் வைச்சிருக்கிறியளோ, இல்லாட்டி மறந்திட்டியளோ? நான் மட்டும் உங்களை மறக்கவேமாட்டன். அதாலைதான் இங்கே முகமாலை இராணுவச்சோதனைச்சாவடிக்கு முன்னால நிண்டு, உங்களுக்கு எழுதிக்கொண்டிருக்கிறன். அண்டைக்கு அந்தச்சம்பவத்துக்குப்பிறகு போக்குவரவுக்கழகத்தின்ரை லைன் பஸ்ஸில போவோமெண்டு, இண்டைக்கு வெளிக்கிட்டு முகமாலை மட்டும் வந்தனான் செக்கிங் முடிஞ்சதும் இன்னும் ஒரு பஸ் எடுக்கோணும். கரைச்சலும், அலைச்சலும்தான்! இருந்தாலும் மனசுக்கு நிம்மதியா இருக்கு இந்தப்பயணம்.

உங்கை பாருங்கோ! எங்கட நாட்டுக்குள்ளை நாங்கள் சுத்தித்திரியிறதுக்கு, உவங்கள் சிங்களவரிட்டை நாங்கள் அனுமதி பெறோணுமாம் உதை என்னெண்டு சொல்லிறது? "ஏய் பொடி மல்லி இங்கே வா! நான் உங்களை பொது அறிவுக்கேள்வி ஒண்டு கேட்கிறது. தம்பி சொல்லிறது. ஓகேயா?" முன்னுக்கு நிண்டு கொண்டிருந்த ஆமிக்காரன் ஒரு சின்னப்பொடியனைப்பார்த்துக் கேட்டான். தாயோட நிண்டு கொண்டிருந்த அந்தப்பொடியனுக்கு மிஞ்சிப்போனால் 10,11 வயசு தானிருக்கும் . எட ஆமிக்காரன் ஏதாவது கேட்டு அந்தப்பொடிக்குத் தெரியாட்டி எவ்வளவு மரியாதைக்கேடு. ஒரு தமிழன் சிங்களவனிட்ட பிடி கொடுத்த மாதிரி எல்லே ஆகிவிடும். "ஆமித்தம்பி! அது சின்னப்பொடி. உம்மட கேள்வியை என்னிட்டைக்கேளும். "முண்டியடிச்சுக்கொண்டு நான் சொன்னன். "ஓ" அப்பு சொல்லப்போறது. ஓகே! ஓகே! உலக வங்கிக்கு கிளைகள் கூடின இடம் எது? சொல்லுங்கோ பார்ப்போம்!" இதென்னடா கரைச்சல்? உவன் உப்பிடித்தெரியாத கேள்வியைக்கேக்கிறான். சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த மாதிரி, மரியாதைகெடவேண்டிவந்திட்டிது. எப்பிடியும் உதவி தேவைப்படுற பெரிய நாடாத்தானிருக்கும், அப்பிடிப்பார்த்தால் இந்தியா, சீனா, பிறேசில் எண்டு வரும். சீனா கொமினிஸ்ற்நாடு, அடுத்தவங்களிட்ட கை நீட்ட விரும்பாது. இந்தியா எண்டால் சுகமாக்கண்டு பிடிக்கலாமெண்டு உவன் கேட்டிருக்க மாட்டான். ஏதோ ஒரு சின்ன நம்பிக் கையில "பிறேசில்" எண்டு சொன்னன். "நோ அப்பு! றோங்க் ஆன்சர். தமிழ் பொம்பிளைங்கை கழுத்து கையெல்லாம் சின்னச்சின்ன மொபைல் உலகவங்கி தானே! என்னா நீங்க இதுவே தெரியேல்லை. எங்கட கஸ்ரகாலம் கண்ணுக்குள்ள குத்தினாலும், ஒப்பந்தத்தால கைவைக்க ஏலாது,'' பெருமூச்சோடு சிரிச்சுக்கொண்டு சொன்னான். "ஆமித்தம்பி! அதெல்லாம் உலகவங்கி இல்லை. உதவாத வங்கி!" எண்டு சொன்னபடியே, யுத்தம் தொடங்கோணுமெண்டு அவங்கள் தீவிரமாநிக்கிறதுக்கான காரணம், தமிழனை அப்பதான் நினைச்சபடி சூறையாடலாம் எண்டதாலதான், எண்டிற விசயத்தை விளங்கிக்கொண்டன். அடிமைப்படலத்தை விரிச்சுவிரிச்சுப்போட்டு விட்டு தூரத்தில நிண்ட பஸ்ஸில ஏறிக்கொண்டன்.

கண்டக்ரர் பொடியன் தட்டியெழுப்பின நேரம்தான், மணி நித்திரை கொண்டிருக்கிறன் எண்டது விளங்கிச்சு.நல்லகாலம்! பொடியன் நான் எங்கை போவேணும் எண்டு சொன்னதை ஞாபகம் வைச்சு எழுப்பிப்போட்டான். நித்திரை கொண்டதும் ஒரு வகையில நல்லதாப்போச்சு. உற்சாகமா இருந்திச்சு. ஏன் வீண்காசு ஓட்டோவுக்கு! ஒரு மைல்தானே இஞ்சையிருந்து வீடு. நேரமும் 4 மணி; வெயில் தணிஞ்சு நல்லாயிருந்திச்சு. பஸ்ஸால இறங்கி, கனகாலத்துக்குப்பிறகு நான் பழகின றோட்டில ஏற்பட்டிருந்த மாற்றங்களைப் பார்த்தபடி நடக்கத் தொடங்கினன்.

"டேய்! அப்புவின்ர அட்ரெசை விசாரி! பேத்திமார் இருந்தால் எங்கட 'வீதிவல' லிஸ்ற்றில போட்டு வைக்கலாம்! "சத்தம் வந்த திசையைப் பார்த்தன். 5,6 இளவட்டங்கள் ஆளுக்கொரு மோட்டார் சைக்கிளோட சந்தியை நிறைச்சுக்கொண்டு நிண்டாங்கள். ஆக்களைப்பார்க்க ஏதோ தமிழ்ப்படங்களில வாற வில்லன்மாரின்ரை கையாட்கள் மாதிரி இருந்திச்சு. உடம்பு தெரியிற கையில்லாத பெனியன், கிட்டத்தட்டை மொட்டை எண்டே சொல்லக்கூடிய தலைவெட்டு, என்ன பிறவியள் எண்டு விபரிக்கேலாத ஒரு தோற்றம்.

உதுகளோட எனக்கென்ன கதை எண்டு விட்டு நான் பதிலொண்டும் சொல்லேல. அந்த நேரம் தான் ரியூசன் முடிச்சு வரிகினம் போல 3,4 பொம்பிளைப்பிள்ளையள் சைக்கிளில வர்றதைப்பாத்திட்டு, றோட்டை மறிச்சுக்கொண்டு குறுக்கால மோட்டார்சைக்கிள்களை நிறுத்தினாங்கள். ஏதோ தங்களுக்கிள்ளை கதைச்சுக்கதைச்சு சிரிச்சாங்கள். "உன்னை நான் லவ் பண்ணிறன், உன் தங்கச்சியை லைக் பண்ணிறன்..." எண்டு பாடினபடி போய், ஒரு பிள்ளையின்ரை சைக்கிள் கைபிடியை தன்ர கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டு வந்தான். அது பாவம் மிரண்டு மிரண்டு முழிச்சுது. காதலைப் பற்றி அந்தக் காலத்தில இருந்து எத்தனையோ பாட்டுகளைக் கேட்டிருக்கிறன். ஆனால் உப்பிடி ஒரு நாசம் அறுத்த (அல்லது கேடு கெட்ட) பாட்டை இதுவரைக்கும் கேட்கவே இல்லை. "ஏய்! எத்தனை தரமடி உனக்குச் சொல்லிறது காதலிக்கச் சொல்லி பெரிய ரதி எண்ட நினைப்போ? இண்டைக்கு எனக்கொரு முடிவு சொல்லாமல் இதால நீ ஒழுங்கா வீட்டை போகமாட்டாய். ஒழுங்கா வழிக்குவராட்டி , ஒப்பாரிதான் மிஞ்சும்," எண்டு கத்தியைக்காட்டி உறுக்கிபவடி அந்தப்பிள்ளையின்ர பின்னலைப்பிடிச்சு உலுப்பினான்.

எனக்கேதோ கனவு மாதிரி இருந்திச்சு. எட நடுறோட்டிலை வயசுக்கு வந்த ஒரு பொம்பிளைப்பிள்ளையை மரியாதைகெடுக்கிறான். மற்றப்பிள்ளையளையும் ஏனையவங்கள் சுத்தி நிண்டு கொண்டு பாட்டுகள் பாடிச்சிரிச்சாங்கள். எனக்குப் பார்க்கத் தாங்கேலாமப்போச்சு. "தம்பியவை! அந்தப்பிள்ளையளை வீட்டை போகவிடுங்கோ! நீங்களும் அக்கா, தங்கச்சியோட தானே பிறந்திருப்பியள்!'' "டேய்! அப்புவுக்குத் தன்ரை அப்புவைப்பார்க்க ஆசையா இருக்குப்போல.. நைன்ரி! நிலத்துக்குள்ளை இருக்கவேண்டிய வயசில நீ மண்ணுக்கு மேல இருக்கமுடியுதே எண்டு சந்தோசப்படு! அதை விட்டுட்டு எங்கட வழியில குறுக்கிட்டால்,அந்தச்சந்தோசம் நீடிக்காது," "சுட்டு விரலைக்காட்டி எனக்குச்சொன்னான். "காதல் எண்டது கத்தியைக்காட்டி வாறதில்லை. புத்தியைப்பயன்படுத்தி நீங்கள் ஒழுங்காப்படிச்சு முன்னேறி, நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதைச் செய்தால், நீ நினைக்கிறது நிச்சயம் கைகூடும் அதோட 1995 ஆம் ஆண்டு இதே சந்தியை ஆமியிட்டை இருந்து காப்பாற்ற, எங்கட பொம்பிளைப்பிள்ளையள் எத்தினை தங்கட உயிரைக்குடுத்திருக்கினம் எண்டு யோசிச்சுப்பாருங்கோ!" "நைன்ரீ! தாங்கள் நல்ல வசதியாய் இருக்கிறம் உந்தப்பழைய காலத்து வரலாறொண்டும் நாங்கள் உன்னட்டை கேட்கேல்லை. 'தில்' இருந்தால் எங்களிட்டை இருந்து இவளவையைக்காப்பாற்று பார்ப்போம்!"

எனக்குப்பத்திக்கொண்டு வந்திச்சு. "என்னடா! தில்லும், பல்லும்! உன்னை மாதிரி அமெரிக்கன் மா திண்ட சோத்து மாடில்லை நான், குரக்கன் ஒடியல் திண்டு உரமேறின உடம்படா இது! எங்க வா பார்ப்போம்! வசதியாய் இருக்கிறியோ நீ? பரிசு கெட்ட பந்தயத்தில வந்த வசதியாக்கும். ஆர்றா அவன் ஐந்நூறு ரூபாவுக்கு அவுத்துப்போட்டு ஓடின மானங்கெட்டவன்? நான் எல்லாம் அறிஞ்சனான். எங்கே அவன் இஞ்சால வா! ஐம்பதாயிரம் தாறன் பாக்குநீரிணையைக்கட! அஞ்சு லட்சம் தாறன் இமயமலை உச்சியிலை ஏறு! அதுக்கு வக்கில்லை, கண்டறியாத பரிசுகெட்ட பந்தயம் சே! கொப்பர் கொம்மாவை வெருட்டி 'ஹீரோ கொண்டா(HERO HONDA)எண்டு தவம் கிடக்கிறது. அதுக்குப்பிறகு ஹீரோயின் கொண்டா எண்டு நிக்கிறதெல்லாம் எனக்குத்தெரியும். டேய்! அந்தக்காலத்தில சிங்கம் புலியை அடக்கித்தான், தான் விரும்பினவளை மணம் முடிக்கிறது. நீ என்னடா எண்டால் பெத்ததுகளை அடக்கி நினைச்சதைச் சாதிக்கப்பார்க்கிறாய்! உப்பிடி ஒரு வாழ்க்கை தேவையே உங்களுக்கெல்லாம்? நீ காட்டிற அதே ரௌடித்தனத்தை இன்னுமொருத்தன் உன்ர தங்கச்சியோ, அக்கா மேல காட்டுவான். அப்பிடியான ஒரு சமூகத்தை உருவாக்க நினைக்கிற சிரங்கடா நீங்கள் எல்லாம்!

அதற்குள்ள அங்கே கனசனம் கூடிட்டுது. அவ்வளவு சனத்தையும் கண்டிட்டு, என்னை ஒரு மாதிரிப்பார்வை பார்த்துக் கொண்டு அவங்கள் வெளியேறினாங்கள். சனத்தைப்பார்த்தன். அந்த A/L படிக்கிற பிள்ளை ஒண்டை கடத்திக் கொண்டு போகேக்கை, நீங்கள் எல்லாரும் சேர்ந்து போய்க்காப்பாற்றினீங்கள். உண்மையிலேயே பெருமை தரக்கூடிய விசயம். அப்படியான ஒரு உணர்வோட, ஒவ்வொருத்தனும் அநியாயத்துக்கு எதிராகுரல் கொடுக்க முன்வரோணும்'' என்று கூறியபடி எஞ்சிய சிறு தூரத்தையும் காலாலேயே தொடர்ந்தேன்.

**பொம்பிளைப் பிள்ளை...**



உந்தக் கடைக்காரருக்கு ஒவ்வொரு கிழமையும் பொம்பிளைப்பிள்ளை பிறக்குதோ?

இல்லை - போன கிழமை வரேக்கையும் ரொபி தந்தவர் அதுதான்... கேக்கிறன்.

# ஈரவலய மண் ஆய்வு



விவசாயத்தேசத்தின் செல்வமாக மண் கருதப்படுகின்றது. அமெரிக்க சனாதிபதியாக 1880களில் இருந்த தியடோர் ருஸ்வெல்ட் (Theadore Roosevelt) ஒரு தேசம் தனது மண்ணை சீரழிக்குமாயின் அது தன்னையே அழித்துக்கொள்வதற்கு ஒத்ததாகும் என விமர்சித்தார். இலங்கை ஒரு விவசாய நாடாக இருப்பதன் காரணமாக தாவர போசணை முகங்களின் ஆதாரமாக உள்ள மண்ணை நாம் எந்தளவு சாதுரியமாக பரிபாலிக்கின்றோம் என்பதிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. கைத்தொழில்துறையில் நாம் வெற்றியடையவேண்டுமானாலும் கூட, அதற்குவேண்டிய மூலப்பொருட்களை நாம் எமது மண்ணிலிருந்தே உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. இதை விட எமது நாட்டின் உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்த மண்ணை வினைத்திறனாக பரிபாலித்து மண் வளத்தை விருத்தி செய்தல் வேண்டும்.

எமது நாட்டின் மொத்த நிலப்பரப்பான 6.5 மில்லியன் ஹெக்டாரில் 1/3 பகுதி மாத்திரமே பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலமாக காணப்படுகின்றது. எஞ்சிய நிலங்கள் யாவும் நிலப்பரப்பினாலும், நீர்ப்பரப்பாலும் வேறு தேவைகட்கு ஒதுக்கப்பட்ட நிலங்களாகவும், பயிர்ச்செய்கைக்கு உகந்ததல்லாத மேட்டு நிலங்களாகவும் காணப்படுவதன் காரணமாக ஒரு தனி நபருக்கான தலா விளை நிலமாக 0.3ஹெக்டார் மாத்திரமே எஞ்சியுள்ளது. இலங்கை மண்ணின் புதிய தகவல்களை சேகரிக்கும் முயற்சியின் முதற்கட்டமாக ஈரவலயப் பிரதேசத்தைத்தேர்ந்தெடுத்ததன் நோக்கம் இப்பிரதேச மண் பாவனையில் ஏற்பட்டிருக்கும் பாரிய அழுத்தம் காரணமாகவேயாகும். இலங்கையின் ஈரவலயமாவது சாதாரணமாக 2,500 மீ.மீக்கும் கூடிய சராசரி வருட மழை வீழ்ச்சியையும் மிகக்குறுகிய வறண்ட கால சூழலையும்கொண்ட பிரதேசத்தை உள்ளடக்குகின்றது. இப் பிரதேசம் மிகக்கூடிய சனத்தொகையான 13.5 மில்லியன் (இலங்கை சனத்தொகையில் ஏறத்தாழ75 வீதம் ) மக்களை 1.35 மில்லியன் ஹெக்டார் நிலப்பரப்பில் அடங்கியுள்ளது. விவசாய ஏற்றுமதிப் பயிர்களான தென்னை, தேயிலை, இறப்பர் போன்றவற்றுடன் வாசனைத் திரவியப் பயிர்கள் போன்றன இப்பிரதேசத்தில் அதிகமாக பயிர்செய்யப்பட்டு வருகின்றன. விவசாயத்துறையில் அதியுயர் ஏற்றுமதி வருமானத்தை எமது நாட்டுக்குப் பெற்றுத்தரும் பயிர்களும் இவையேயாகும். ஈரவலயப் பிரதேசத்திலுள்ள மிகப் பிரதான மண் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாக மண் வளத்தன்மையில் குறைவும் மண் அரிப்புமே அடையாளம் காணப்பட்டுள்ளது. நகராக்கம் மும்முரமாக நடைபெறுவதன் காரணமாக ஈரவலயத்திலுள்ள நிலங்களில் சில பகுதி விவசாயத்திற்குப் புறம்பான தேவைகளுக்காகவும் ஒதுக்கப்படவேண்டியுள்ளது. இதன் காரணமாக அதிக விளைச்சலைத் தரக்கூடிய வளமான நிலப்பிரதேசங்கள் பிரித்தறியப்பட்டு அந்நிலங்களை விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதோடு, ஏனைய நிலங்களை வேறு தேவைகட்கு பயன்படுத்துவதற்காக விடுவிக்கமுடியும். இதை விட ஈரவலயப் பிரதேசங்களில் பிரதானமாகப் பெருந்தோட்டப் பயிர் விளைச்சல்களில் தேக்க நிலை காணப்படுவதும், நிலத் தரக்குறைபாடு அதிகரித்துச் செல்வதும் அண்மைக் காலங்களில் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் இப்பிரதேச மண் சம்பந்தமான அறிவை விருத்திசெய்து அதன் மூலம் பாரிய மீளத்திருத்த முடியாதளவு நிலத்தரக் குறைபாடுகள் ஏற்படுவதை தடுத்தல் வேண்டும்.

இலங்கையின் ஈரவலய மண் சம்பந்தமான அறிவில் குறிப்பிடத்தக்களவு இடைவெளி காணப்படுவது மண் விஞ்ஞானிகளினால் தெளிவாக உணரப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையின் உலர்வலயத்திற்கான புதிய நீர்ப்பாசனத்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்ட போது அப்பிரதேசங்களில் மிகப்பெரிய அளவில் மண் சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்பட்டதன் காரணமாக அப்பிரதேச மண் சம்பந்தமான அறிவும் அதிகரிக்கக் காரணமாக இருந்தது. இந்த நடவடிக்கைகள் உலர் வலயத்தில் ஓரளவு இலகுவாக அமைந்ததற்கு காரணம் இப்பிரதேச நில இயற்கை அமைப்பு மிகக்குறைந்த மேடு பள்ளங்களைக் கொண்டதாலேயாகும். இதற்கு எதிர்மாறாக இலங்கையின் ஈரவலயநில இயற்கை அமைப்பு மிகவும் சிக்கல் வாய்ந்ததாகவும், மழைவீழ்ச்சியில் பாரிய வேறுபாடுகள் நிறைந்ததாகவும், பாரிய மேடு பள்ளங்களுடனான மலை அமைப்பும், மலைச்சரிவுகள் காலநிலை வலயங்களின் எல்லைகளாக அமைவதாலும் இப்பிரதேச நிலங்களில் பாரிய வேறுபாடுகளை ஏற்படுத்திப் பல்வேறு வகைப்பட்ட மண்தொகுதிகள் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது. எனவே இப்பிரதேச மண் இயல்புகள் சரியான முறையில் அடையாளம் காணப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு இவ்வறிவு நீண்டகால நோக்கில் மண்ணைப் பரிபாலிக்கும் முறைகளை விருத்தி செய்ய உதவ வேண்டும்.

இலங்கையின் ஈரவலய மண்களை, அதன் இயல்புகள் அடிப்படையில் வகைப்படுத்தலோ அல்லது அது போன்ற ஆய்வுகள் எவையுமோ ஓர் குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் இதுவரை செய்யப்பட வில்லை. இவ்வாய்வுகள் நிலப் பாவனை சம்பந்தமான திட்டமிடலின் போது மண் அளவை மூலம்பெறப்படும் தரவுகளை விபரிப்பதில் பெரிதும் பயன்படும். சர்வதேச முறைகளை பயன்படுத்தி ஈரவலய மண்ணை அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துவதன் மூலம் பெறப்படும் அறிவைக்கொண்டு ஓரிடத்திலுள்ள விவசாய தொழில் நுட்பங்களை அதே போன்ற சூழலிலுள்ள வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்கு மிகவும் உதவியாக அமையும்.

இவை போன்ற பல நோக்கங்களை மனதில் கொண்டும் ஈரவலய மண்களின் உருவாக்கத்தை நன்கு விளங்கிக்கொள்ளவும் அவற்றின் நிலைபேறான பாவனைக்கான சிறந்த பரிபாலன முறைகளை விருத்தி செய்யவுமாக அம்மண் வளங்களை சரியான முறையில் இயல்பு வருணனை செய்து பாகுபாடு செய்யவும் இலங்கை மண் விஞ்ஞான மன்றம் கனேடியமண் விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து சிறிகன்சோல் (SRICANSOL) எனும் திட்டத்தினை உருவாக்கியதன் மூலம அவற்றை நனவாக்க முடிந்தது.

இத் திட்டத்தின் முதற் கட்டப் பணியாக உருவாகியதே இலங்கையின் ஈரவலய மண் சம்பந்தமான தகவல்கள் அடங்கிய தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் வெளிவந்துள்ள புத்தகங்களும்,28 மண் பக்கப் பார்வைகளின் (Soilprofiles) மூலக் குறிநிலையங்களைத் (Benchmark sites) தீர்மானித்து அவற்றை வர்ணித்து பகுப்பாய்வு செய்து பெறப்பட்ட தகவல்களுமாகும். இத்தகவல்கள் யாவும் கணினிகளில் சேகரிக்கப்பட்டதோடு தரவு ஏடுகளாகவும் சேகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் போது ஈரவலயத்தில் 28 வெவ்வேறு வகையான மண் தொடர்கள் (soilseries) மூலக் குறி மண்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. மூலக் குறி மண் என்பது அப் பிரதேசத்தின் மண் இயல்புகளை மிகத் துல்லியமாக பிரதி நிதித்துவப்படுத்தும் இடத்தின் மண் இயல்பினைக் குறிக்கின்றது.

இ.றஜித்

---

(09ஆம் பக்கத்தொடர்ச்சி)

**பாக் - இந்தியஉரையாடல்**

பாகிஸ்தான் இந்திய நெருக்கம் அண்மைய சார்க் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான சந்திப்புடன் அதிகரித்திருப்பதாகவே தெரியவந்தது. ஆனால் சுமூகமாக ஆரம்பித்த உறவானது நல்ல நிலையை அடைய முன்பே முறிகின்ற நிலைப்பாட்டை இந்திய ஊடகங்கள் முன்வைத்துவருகின்றன. பேச்சுக்களுக்கு புறம்பாக பாகிஸ்தானிய அதிகாரிகள் அறிக்கைவிடுவதாகக் கூறும் இந்திய ஊடகங்கள் காஷ்மீர் விடயத்தைப்பற்றி பேசமுடியாதென திட்டவட்டமாக மறுத்துள்ளன. பாதுகாப்புச் சூழல் போக்குவரத்து நிலை மற்றும் வர்த்தகப்பொருளாதார உறவுகள் தேக்கமின்றி தொடர்ந்தாலும் காஷ்மீர் விடயத்தை முதன்மைப்படுத்த முடியாதென இந்தியா அறிவித்து விட்டது.

ஆனால் சார்க் விதிகளின்படி இருதரப்பு அரசியல் பேசமுடியாதென்பதே அதன் கொள்கைகளில் முதன்மையானதாக விளங்குகின்றது. அதனையும் மீறி பாகிஸ்தான் தரப்பு பேச எடுப்பது இந்தியத்தரப்பை சரி செய்து விட முயல்வதனையே காட்டுகின்றது. பாகிஸ்தானை பொறுத்தவரை இந்தியாவை ராஜதந்திர நகர்வினால் முறியடித்து விடுவதென்பதே அதன் நோக்கமாக உள்ளது. அதனை அடைவதற்கான சூழலைத் தயார்செய்துகொண்டு செயற்படும் பாகிஸ்தான் இந்தியாவை அதிகம் நிர்ப்பந்திக்கமுயலுகின்றது.

ஏற்கனவே புதிய அரசு செயற்பட்டது போலல்லாமல் இந்தியத்தரப்பு மிகத் திறமையாக செயற்படுகின்றதை காணமுடிகின்றது. இத்தகைய போக்கு இந்தியாவுக்கு பாதுகாப்பானதாகவே அமைந்துள்ளது. ஆனால் காஷ்மீர் என்பது காஷ்மீர் மக்களுக்கே உரியதென்ற கோட்பாடு எப்போது இருதரப்பும் ஏற்றுக்கொள்கின்றனவோ அப்போதே முறுகலும், மோதலும் முடிவுக்கு வரும்.

எனவே முழு உலகத்திலும் காணப்படும் மாறுதலில் மிதவாதத்தின் போக்கு தீவிரவாதத்தின் நடவடிக்கையால் பாதிப்படைந்துள்ளதாகக் காணப்பட்டாலும் தீவிரவாத தலைமைகள் மிகக் தந்திரமாக நகர்வுகளை ஆற்றும் ஒரு மாறுதல் காலகட்டம் ஏற்பட்டுள்ளது. இதனை உணர்ந்துகொண்டு தீவிரவாத அமைப்புக்களும் அதன் தலைமையும் செயற்படுவது அவசியமானது. அமெரிக்கா ஒரு நீண்ட பாச்சலுக்குத் திட்டமிட்டுத் தனது உளவுப் பிரிவையும் நிர்வாகக் கட்டமைப்பையும் சரி செய்து வருகின்றது. இஸ்லாமிய சமூகத்தின் தனித்துவம் உடைக்கும் நடவடிக்கையில் மீண்டும் அமெரிக்கா தீவிரம் காட்டத்தொடங்கி விட்டது. எந்தத் தீவிரவாதமும் மிதவாத அரசியலுக்குள் நுழையலாம். ஆனால் நிரந்தரமான, பாதுகாப்பான நியாயமான தீர்வு எட்டப்பட்ட பின்பே அதற்குத் தயாராகவேண்டும்.

---


ஹீரோ துவிச்சக்கர வண்டி

வாடிக்கையாளர்கட்கு ஓர் நற்செய்தி

2004 ஆவணி 28ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை வன்னி யாழ் ஹீரோ துவிச்சக்கர வண்டி பாவனையாளர்களின் நலன் கருதி பைசால் ஹாட்வெயார் நிறுவனத்தினர் இலவசமாக சுத்திகரிப்பினை நடாத்த இருப்பதால் 01-08-2004 தொடக்கம் 20-08-2004 வரை எமது வடமாகாணத்தின்ஏகவிநியோகஸ்தர்களான சேரன் வாணிபம்கண்டிச்சாலை பரந்தன் முகவரியில் முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

குறிப்பு:
ஹீரோ துவிச்சக்கரவண்டி மட்டுமே சுத்திகரிக்கப்படும்.
உதிரிப்பாகங்கள் எவையும் மாற்றி கொடுக்கப்படமாட்டாது.

Sole Agent:
Faizal Hardware Stores
74,Dam Street, Colombo 12 Tel: 94 11 2433727, 2423273, 2384250-4
Fax: 94 11 2446088 Email: faisto@sri.lanka.nat
சி-9763



செட்டிகுளம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம். (வ-து)

பகிரங்க அறிவித்தல்

அன்பான வாடிக்கையாளர்களே!

செட்டிகுளம் ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கியில், 2003ம் ஆண்டுக்கு முன்பு நிலையான, சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் எதிர்வரும் 2004-12-31ம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து கணக்குகளை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

2004-12-31ம் திகதி வரை உரிமைகோரப்படாத கணக்குகள் யாவும் முடிவுறுத்தப்பட்டு அந்நிதி சங்கநிதியாக மாற்றம் செய்யப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**குறிப்பு: 2004.12.31ம் திகதிக்குப் பின் உரிய ஆவணங்களுடன் வரும் வாடிக்கையாளர்களுக்கு 2004.12.31ம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய வட்டியும் முதலும் மாத்திரமே வழங்கப்படும்.**

~நன்றி~

தலைவர்,
பொது முகாமையாளர்,
செ.ப.நோ.கூ.சங்கம்,
செட்டிகுளம். (10038) 2004.07.15



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 02**

பகுதி -07



# முடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பி.யோசப்

அதனால், தான் அவனது பிரச்சினை வெறும் மனவளர்ச்சிகுன்றல் என்பதற்கும் அப்பா லிருப்பதாக நாங்கள் நினைக்கிறோம். அவன் அளவுக்கு மிஞ்சி உணர்ச்சி வசப்படுபவனாக இருக்கிறான். இதோ சில பிள்ளைகள் வருகிறார்கள்."

ஒவ்வொருவராக பிள்ளைகள் வந்து சேரத் தொடங்கினார்கள். மகிழ்ச்சியான எதிர்பார்ப்புக்கள் முகங்களில் துலங்கியபடி அவர்கள் வந்தார்கள்.

அவர்கள் இந்தப் பாடசாலையில் கல கலப்பாகவும் சௌகரியமாகவும் இருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரிந்தது. அவர்கள் உரத்தக் குரலில் ஒருவருக்கொருவர் முகமன் கனை கூறிக்கொண்டார்கள். ஆசிரியர்களுக்கும் அவ்வாறே முகமன் கூறினார்கள். சிலர் என்னோடு வந்து கதைத்தார்கள். எனது பெயரைக் கேட்டார்கள். ஏன் அங்கே வந்திருக்கிறேன் என்பதைக் கேட்டார்கள். தங்கள் தொப்பி களையும் மேல் கோட்டு களையும் தங்கள் தங் களுக்குரிய அலுமாரிகளில் தொங்க விட்டார்கள். முதலாவது பாடமாக அவர்கள் விரும் பியதை செய்வது இருந்தது. தாமா கவே ஏதாவது விளையாட்டுப் பொருட்களை தெரிந்து எடுத்துக் கொண்டு அல்லது தங்களுக்கு ஆர்வமுள்ள செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு வரோடொருவர் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த வேளையில் டிப்ஸ் வந்து சேர்ந்தான். அவனது தாயார் அந்த அறைக்குள் அவனை அழைத்து வந்தார். அவர் சிறிது நேரம் ஜேன் மிஸ்சுடன் உரையாடிவிட்டு, பிரியா விடை சொல்லிய பின் டிப்ஸ்யை அங்கே விட்டுக் கிளம்பிவிட்டதால் அவரை அதிகம் பார்க்க முடியவில்லை. டிப்ஸ் சாம்பல் நிற கோட்டையும் தொப்பியையும் அணிந்திருந்தான் தாயார் விட்டுச் சென்ற இடத்தில் அப்படியே நின்று கொண்டிருந்தான். ஜேன் அவனோடு கதைத்தார். கோட்டையும் தொப்பியையும். தொங்க விடுவோமா என்று கேட்டார். அவன் எந்தப் பதிலையும் சொல்லவில்லை.

அவனுடைய வயதை மீறிய உடல் வளர்ச்சி அவனில் தெரிந்தது. அவனது முகம் மிகவும் வெளிறியிருந்தது. ஜேன்மிஸ் அவனது தொப்பியை கழற்றிய பொழுது அவனுடைய சுருண்ட,கருமையான கேசங்களை நான் கவனித்தேன். அவனது கைகள் அவனது பக்கவாட்டில் சோர்ந்து போய் தொங்கிக் கொண்டிருந்தன. அவனது கோட்டைக் கழற்ற ஜேன் மிஸ் உதவினார். அவற்றுக்கு ஒத்து ழைப்பவனாக அவன் தெரியவில்லை. அவனது கோட்டையும் தொப்பியையும் ஜேன் மிஸ்ஸே அவனது அலுமாரியில் தொங்கவிட்டார்.

அவர் எனக்கு அண்மையாக வந்த போது,"அதோ டிப்ஸ் வந்து விட்டான். தனது கோட்டையும் தொப்பியையும் ஒருபோதும் தானே கழற்றமாட்டான். நாங்கள். தான் இப்போது அவற்றை கழற்றிவிடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறோம். சில வேளைகளில் ஏதோ ஒரு செயற்பாட்டில் மற்றப்பிள்ளைகளுடன் இணைந்து கொள்ளும் படி தூண்ட அல்லது குறிப்பிட்ட வேலை ஏதாவதை செய்ய வைப்பதற்கு முயற்சி செய்வோம். ஆனால் அவன் எங்கள் முயற்சிகள் எல்லாவற்றையும் நிராகரித்து விடுவான். இன்றைக்கு நாங்கள் அவனை அவனுடைய பாட்டில் விட்டு விடுகிறோம். அவன் என்ன செய்கிறான் என் பதை நீங்களே பார்த்துக் கொள்ளலாம். அவன் அந்த இடத்திலேயே நீண்ட.....நீண்ட... நேரம் நிற்கக்கூடும். அல்லது ஒரு பொருளிலிருந்து இன்னொன்றுக்கு நகரக்கூடும். சிலவேளை களில், எதிலுமே கவனம் செலுத்தாமல் நகர்ந்து கொண்டிருப்பது போல் தோன்றும். சில வேளை ஏதாவது ஒன்றின் மீது ஒரு மணித்தியா லயத்துக்கு கவனம் செலுத்திக்கொண்டிருப் பான். எல்லாமே அந்தந்த வேளையில் அவன் மனநிலை எப்படி யிருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அமையும்'' சொல்லிவிட்டு ஜேன்மிஸ் வேறு சில பிள்ளைகளை நோக்கி நடந்தார். நான் அவனில் கவனம் செலுத்துவது வெளிப்படை யாகத் தெரியாமல் அவனை நான் அவதா னித்துக் கொணடிருந்தேன்.



அங்கேயே அவன் நின்று கொண்டிருந்தான் பின்பு வேண்டு மென்றே செய்வது போல் மிக மெதுவாக திரும்பினான். ஏமாற்ற உணர்வை வெளிப்படுத்தும் விதத்தில் கைகளைமேலே உயர்த்தி விட்டு,பக்க வாட்டில் மீண்டும் தொங்கவிட்டான். மீண்டும் அவன் திரும்பினான். இப்போது அவன் பார் வைப் புலத் துக்குள் நான் இருந்தேன். அதாவது அவன் என் னைப் பார்க்க விரும்பி யிருந்தால்.... ஒரு முறை பெருமூச்சை விட்டு அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு அங்கேயே நின்றிருந்தான்.

ஒரு சிறிய பையன் அவனை நோக்கி ஒடிவந்தான். ''ஏய்.....டிப்ஸ்.. வா விளையாடுவோம்'' என்றான். டிப்ஸ் அந்தப் பையனுக்கு அடிக்க கையை வீசினான். அந்தப் பையன் பின் னுக்குப் பாய்ந்து தப்பியிரா விட் டால் நகத்தால் விறாண்டி யிருப்பான். பின்னால் பாய்ந்த சிறுவன் ''பூனை...பூனை.... பூனை'' என்று டிப்ஸ்ஸைக் கேலி செய்தான்.

அவர்களை நோக்கி வந்த ஜேன்மிஸ் அந்தப் பையனை அறையின் வேறு பகு திக்குச் சென்று மற்றப் பிள்ளை களுடன் விளையாடும்படி கூறி அனுப்பிவிட்டார். சுவரொன்றுக்கு அருகே இருந்த சிறிய மேசைக்கு கிட்டவாக டிப்ஸ் நடந்து சென் றான்.

(தொடரும்....)

## கலியாணம்



ஏன்டா கை கட்டிக்கொண்டு நிற்கிறாய்.

பிச்சையெடுக்கப்போன இடத்தில இனிப்புச்சில்லறை தந்திட்டாங்கள் அதான் யோசிக்கிறான்.

**தொடர் - 29**



# காட்டு வெளியிடை

(கென்யப் பயணக்கட்டுரை)

சாந்தன்

நய்வாஷா, இரண்டு நாட்களுக்கு முன்னர் தாண்டிய போது தோன்றிய மாதிரி அழகான சிறிய நகராய்த்தா னிருந்தது. அதற்கு சற்று அப்பாலிருந்த 'நய்வாஷாவிடுதி,' வாவிக் கரையோடு படர்ந்து கிடந்த ஒரு வேலமரத் தோப்பின் நடுவில் மிக அழகாக இருந்தது.வாவியில் நிறைய நீர் யானைகளிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் நாங்கள் போய் பார்த்த அந்த மாலை வேளையில் தண்ணீருக்கு மேலால் தலையை நீட்டிய ஒன்றைக் கூடக் காணவில்லை.

"இரவில்தான் பார்க்கலாம்", வாவியின் படகுத்துறைப் பாலத்தில் காற்று வாங்கிக் கொண்டு நின்ற இளம் பெண் சொன்னாள். வாவி பரந்து கிடந்தது. மாலை வெயிலில் மின்னுகிற நீர்பரப்பு பறவைக்குரல்கள் மட்டும் குழப்புகிற நிசப்தம்.

"இரவிலா?"

"அங்கே பாருங்கள்", அவள் காட்டிய திசையில், தோப்பின் விளிம்போடு, வாவியிலிருந்து ஒரு நூறுயார் தொலைவில் ஒரு மண்டபம். பதினைந்தடி உயரத்தில், கனத்த கொங்கிறீற் மற்றும் இரும்புத் தூண்களில் நின்று கொண்டிருந்தது.

"அது எதற்கு?"

"இரவில் அங்கே நின்றுதான் பார்க்க வேண்டும்."

எனக்கு விளங்கவில்லை. அவள் சொன்னாள்.

"தண்ணீரிலிருந்து வெளிவந்து தரையில் மூர்க்கமாக ஓடி வரும். அப்போது பாதுகாப்பாக நின்று பார்ப்பதற்காக இப்படி"



இரவு உணவு முடிந்தபின், ஒன்பதரை பத்து மணியளவில் தான் இதைப்பார்க்கலாம் என்றாள் அவள்.

ஆனால், உணவு முடிந்த பின், நீர் யானையிலும் நித்திரை தான் பெரி தாகப்பட்டது எங்களுக்கு.

அடுத்த நாள் காலை நைரோபி திரும்பி,அன்று மத்தியானம் கொழும்பு புறப்பட வேண்டும்.

"எப்படியாவது ஒரு தடவை கேரன் பிளிக்ஸன் மியூசியத்தைப் பார்த்து விட முடியாதா?", அன்று காலையிலுங் கேட்டார் விமுக்தி.

நய்வாஷாவிலிருந்து நைரோபி போகும் வழியில் ஒரு அரை மணி நேர விலகல் தூரத்திலிருந்தது மியூசியம். எனக்கும் மியூசியத்தைப் பார்க்க விருப்பம் தான். ஆங்கிலத்திலும் டேனிஷ் மொழியிலும் எழுதிய கேரன் பிளிக்ஸன், டென்மார்க்கில் பிறந்து தமது முப்பதாவது வயதிலிருந்து நாற்பத்தைந்தாவது வயது வரை கென்யாவில் கோப்பிப் பண்ணையாளராக வாழ்ந்தவர். உலகப் புகழ் பெற்ற 'குளிர்காலக் கதைகள்', 'ஆபிரிக்காவுக்கு வெளியே' போன்ற ஆக்கங்களைப் படைத்தவர். இதில் பின்னது படமாகவும் வந்ததாகத் தெரிகிறது. அவருடைய 'கனவுகாணும் பிள்ளை' கதைத் தொகுப்பைப் படித்திருந்தேன்.

ஆனால், மியூசியம் பார்க்கப் போனால் நைரோபியில் புத்தகக் கடைகளைப் பார்க்க முடியாது என்பதும் புரிந்தது. "மியூசியத்திற்குப் போனால், பிந்தி விடுமே!" என்றார் அயூப் ஆனால், உண்மையில், பயண ஒழுங்கில் குறிப் பிடாத ஒரு இடத்திற்குப் போக அவர் விரும்பவில்லை, நியாயந்தான். பேசாமல் நைரோபி, திரும்பி நகரில் சூறாவளியாகச் சுழன்றும் கடைசியில் வாங்கியது ஒன்றுமில்லை. வெள்ளைக்காரக் கிழவரின் மூவிக் கமெராவைத் திருப்பிக் கொடுத்து விட்டு அலிஸின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஒரு சிறு வழியனுப்பு நிகழ்விலுங் கலந்து கொண்டு, அவசர அவசரமாக விமானநிலையம் போக வேண்டியிருந்தது.

கைகுலுக்கி விடைதந்த அயூப், "மீண்டும் வருவீர்களா?" என்றது வெறும் முகமனுக்காகக் கேட்ட கேள்வியாகப் படவில்லை. விமான நிலையத்தினுள் நுழையுமுன்பே, கண்ணாடித் தடுப்பின் பின்னாலிருந்து கை காட்டிய ஒரு உருவம் தென்பட்டது. க்வாம்பாய்! அவர் கடமை நேரம் பன்னிரண்டுக்கே முடிவடைந்து விட்டாலும் ஒரு மணி நேரம் எமக்காகக்காத்திருந்திருக்கிறார். அதன் பிறகும் ஒரு மணிநேரம் கூட இருந்தார்.

நைரோபியிலிருந்து பஹ்ரைன் வந்து அங்கிருந்து நள்ளிரவு மீண்டும் கொழும்பு புறப்பட்ட போது அந்த விமானம் மத்தியகிழக்குப் பணியாளர்களால் நிரம்பியிருந்தது. போகும் போது அவர்கள் பாற் கிளர்ந்த அனுதாபத்தை 'மறுபரிசீலனை' செய்ய வேண்டுமோ என்று நினைக்கத் தூண்டுகிற அளவுக்கு இருந்தது அவர்களில் மிகப்பலர் இரவிரவாக அடித்த கும்மாளம். கீழ் வானில் சூரியன் தலை தெரிகிற வேலையில் கட்டு நாயக்கவில் கால் பதித்ததும் கண்ட முதல் மனிதரே அந்த விமான நிலைய இன்ஸ் பெக்டர் தான்! படியால் இறங்கியதுமே உற்றுப்பார்த்துவிட்டு, "போய் வந்துவிட்டீர்களா?" என்று புன்னகையுடன் கை நீட்டினார்.

(முற்றும்)

பாவலன் பதில்கள் என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

# பாவலன் பதில்கள்



*"ஹக்கீம் கெட்டதும் பெண்ணாலே" என்கிறார்களே உண்மையாகவா?*

சி.கோபி.
இரத்தினபுரம்.

ஆமாம்... முதலில் சந்திரிகாவால், அடுத்து பேரியல் அஷ்ரப்பால் இப்போது நீங்கள் குறிப்பிடும் அந்தப் பெண்ணால்....

*இந்தியாவின் இடைக்கால நிர்வாகம் குறித்த அறிக்கை தமிழர்களின் நெஞ்சில் ஈட்டியால் குத்தியது போன்றது தானே பாவலரே?*

பிரியங்கா.
வட்டக்கச்சி.

இந்தியா ஏற்கெனவே இந்திய இலங்கை உடன்பாட்டால் தமிழர் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது தெரிந்ததுதானே இனி ஈட்டியால் குத்தியென்ன...! சம்மட்டியால் அடித்தென்ன...!

*சமாதான நடுநிலையாளர்களின் தற்போதைய நிலை?*

மதனி.
பளை.

நிலையில்லா நிலைமையுள் அவர்கள் அங்குமிங்கும் அலைகிறார்கள் பதற்ற நிலைக்குள் சமாதானம்... பதறிய நிலையில் அவர்கள்...

*இயமனுக்கு சிவன் "ஹைஏஸ்" கொடுத்து கண்டி வீதிக்கு அனுப்பியதாகக் கூறுகிறார்களே நீர் பார்த்ததில்லையா?*

பிரியன்.
இரணைமடு.

நான் கண்டி வீதியில் 'ஹைஏஸ்' வானைக் கண்டாலே கண்ணை மூடிக் காததூரம் ஓடி ஒளிந்து கொள்கிறேன்.

*கிழக்கு மாகாணத்தில் கருணாவின் பெயரிலான செயற்பாடு எப்போது முடிவுக்கு வரும.*

ரூபி.
செல்வபுரம்.

இராணுவத்தின் செயற்பாடுகள் முற்றாக ஒழிக்கப்படும்போது. கருணா இப்போது இராணுவக் கூலிப் படையின் உறுப்பினர்தானே!

*ரட்ணசிறி விக்கிரமநாயக்க முகமாலை, ஓமந்தை பகுதிகளுக்கு திடீர் விஜயம் செய்ததன் நோக்கம் என்னவாக இருக்கும்?*

ராணி.
கிளிநொச்சி.

திடீர் யுத்தமொன்றிற்கு படையினரை தயார்ப்படுத்தும் நோக்கமாகவும் இருக்கலாம்.

*பாவலர் அவர்களே சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க கூடாது என்று J.V.P கூறியது பற்றி?*

இந்திரன்.
தருமபுரம்.

சண்டையில் தோற்று சரணாகதி அடைந்தவர்களுக்கு சமாதானப் பேச்சு என்பது ஒவ்வாமைக்குரிய ஒன்றேயாகும். போரில் வெற்றி நிலையில் இருப்போனே சமாதானம் பேசும் தகுதியை வென்றவன்.

ஜே.வி.பி யினர் தமது புரட்சியில் தோற்று புறமுதுகு காட்டி ஓடி ஒளிந்தவர்கள்... உதைத்த காலை நக்கி சரணாகதியடைந்தவர்களுக்கு சமாதானம் என்பது ஒவ்வாமையைக்குரிய ஒன்று தான்.

*ஹிங்கிராங்கொட விகாரைக்குள் ஆயுதங்களுடன் 14 இளைஞர்கள் கைதாகியது பற்றித் தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?*

சுதன்.
திருநகர்.

விகாரைகள் விகாரமான மனிதர்களின் புகலிடமாகிவருகின்றது.

*கருணா ஒரு அரசியல் கட்சி அமைக்கப் போவதாக டக்ளஸ் அறிக்கை விடுகிறாரே பாவலரே அது பற்றி என்ன நினைக்கிறீர்?*

பிரியா.
யாழ்ப்பாணம்.

இவர்கட்சியே ஒற்றைக் கால் பந்தலாக அல்லாடுகிறதாம் இவர் அவர் கட்சிக்கு ஆலவட்டம் பிடிக்கப்போகிறார்...

*ஈராக்கில் ஆப்பிழுத்த குரங்காக அவதிப்படும் அமெரிக்காவுக்கு தங்களின் அறிவுரை என்ன?*

கீதன். முல்லைதீவு.

கெடுகுடி சொற்கேளாது தம்பீ... அறிவுள்ளவனுக்குத்தான் அறிவுரை பயனளிக்கும்....

*பாவலன் அவர்களே வாகன விபத்து நடக்கும் போது சம்பந்தப்பட்ட வாகனத்தை எரிக்கிறார்களே?*

ரதீஸ்
ஸ்கந்தபுரம்.

வாகன சாரதியை எரிக்காமல் விடுகிறார்களே... அது போதாதா? எய்தவனிருக்க அம்பை நோகும் இனமையா நாங்கள்.

# தெருப்பேச்சு



ஏன்ரா வருத்தக்காறப் பிள்ளையத் தூக்கிக் குலுக்கிறாய்.

வைத்தியர் குலுக்கிப் போட்டுத்தான் மருந்து குடுக்கச் சொன்னவர்.

* * *

சண்டியன் சீனித்தம்பியின்ர வாயையே அடைச்சவர், அந்த டொக்டர்.

அவ்வளவு கெட்டிக்காரனோ

பின்ன, அவர்தானே அவனுக்கு பல்வைத்தியம் பார்த்தவர்.

* * *

**ராசன்:-**
இந்த ஆஸ்பத்திரியில நான் படுக்காத வாட்டே இல்லை. அவ்வளவு வருத்தம்.

**சுதா:-**
வெருட்டாத, நீ பிரசவ வாட்டில படுத்திருக்கமாட்டாய்.

**ராசன்:-**
பிறந்த உடன அங்கதானே படுத்தனான்.

* * *

**வைத்தியர்:-** ம்...ம்... என்ன செய்யுது இப்ப.
**நோயாளி:-** சண்டை துவங்கீற்றுது
**வைத்தியர்:-** அ.... எங்க
**நோயாளி:-** வெளியில ரீவியில.

* * *

**வயோதிபர்:-** முக்குறாராம், முனகுறாராம், கக்குறாராம், கழியுறாராம் அது தான் வருத்தம்-

இது வருத்தமேயில்லை. சாப்பாட்டைக் குடுக்காம விடுங்கோ.

* * *

இதில இருந்த நோயாளி எங்க போட்டார்.

தியேட்டருக்கு.

ஏன்? இதில ஓடுற படம் சரியில்லையாமோ?

* * *

**நோயாளி:-** டொக்டர்- எனக்கு உட்காருமிடத்தில் கட்டி
**வைத்தியர்:-** வேறிடத்தில் உட்காருவதுதானே.

* * *

**வந்தவர்:-** டொக்டர் ஒரு நாலு நாளைக்கு நான் வாட்டில நிக்கப் போறன்.
**வைத்தியர்:-** ஆளுங்கட்சியா எதிர்க்கட்சியா?

* * *

**வந்தவர்:-** லேசா- முட்டு மூண்டு வேளைக்கு வென்டோலின் தாங்கோ அதோடகாய்ச்சல் அதுக்கு பீ.சீ.ரி (P.C.T)க்கு பிரிட்டோனும் அன்ரிபயாடிக்கா அமெக்சிலினும் தாங்கோ டொக்டர்.
**வைத்தியர்:-** இந்தாருங்கோ பேனை மருந்தக் குடுத்து விடுங்கோ.

* * *

**வைத்தியர்:-** நேற்றுத்தானே மூன்று நாட்களுக்கான மருந்து எடுத்தநீ?
**வந்தவர்:-** அது உடன விலைப் பட்டிட்டுது.

* * *

நீயும் நீபடுத்த பாயும், நீ கொண்ட நோயும் நினைவிலயே நிக்குதப்பா. எப்ப நீ சுயமாக் கவிதையெழுதப் போறாய்.

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-79



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்-79

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -78



ப. கிருஷ்ணபிள்ளை,
இடதுகரை,
முத்துஐயன்கட்டு.

### பரிசுக்குரிய வரிகள்

*மிதிவெடிகள் புதைந்திருந்த மண்ணினிலே - நீர் மனம் துணிந்து பண்படுத்தி பசுமை புரட்சி செய்து விளைந்த வெங்காயத்தை வெயில் பனி பாராது அறுத்து உணவுக்காய் வழங்கும் உழவரே எம் முதுகெலும்பு!*

### பாராட்டுக்குரிய வரிகள்

*மானத்தை உயிராய் நேசிக்கும் மறத்தமிழர் பரம்பரை எம் பரம்பரை மாற்றானுக்கு அடிமைப்படாது எம்மண்ணின் வளத்தைப் பயன்படுத்தி உழைக்கும் தாயே! நீ சிந்திடும் வியர்வை நாளை மலரும் எம்மீழத்துக்கு நீராகின்றது.*

த.கோகுலன்,
புளியங்குளம்.

*தொலைந்த வாழ்வு மீண்டும் வருமா?*
*கலைந்த உறவுகள் கூடு சேருமா?*
*உயிர் பிரிந்த பிள்ளை மீண்டு வருமா?*
*எந்தன் வாழ்வில் வசந்தம் துளிர்க்குமா?*

ம.கலைநிலா,
புதுக்குடியிருப்பு.

*எம்மை அடக்க நினைத்தவர்கள்*
*இப்போ ஆள நினைக்கிறார்கள்*
*எத்தனை பேர்தான் வந்து போனால் என்ன*
*எம் துயர் தீருமா இப்போ?*

தெ. ரேகா,
புதுக்குடியிருப்பு.

*மனதிலே பாரம்*
*கையிலே வேலையின் சுமைகள்*
*காலத்தின் கோலமோ இது.*
*கட்டளையின் சோகமோ.*

ந. ஜெகதீஸ்வரி,
54D8, உருத்திரபுரம்.

*செங்குருதிபட்டு செழித்த பயிரம்மா, உன்பிள்ளை குருதிசிந்தி மீட்டநிலத்திடையே நீவளர்த்த பயிரதனை கண்ணிலொற்றி கையிலெடு. உன் பொருண்மிய வாழ்விற்கு வழிசமைக்க வருகிறோம். நிமிர்ந்துவிடு.*

கவிப்பிரபா.வே,
வடமராட்சி கிழக்கு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு யூன் மாதம் 30 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி-15 | 30 -07-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -163

படச்சுருள்கள் அனைத்தையும் கணிவிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்,
R.V
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.
டந்தல் சேவை, தர்மபுரம்.


# ஜே.வி.பி.இன் மிரட்டலுக்கு அஞ்சவேண்டாம்

# இ.த.அ.சபை பற்றிப் பேசின் ஐ.தே.க. ஆதரிக்கும்

## ஐ.தே.கட்சிப் பேச்சாளர் அரசிற்கு உறுதி

(கொழும்பு)

**இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பி.யினர் விடுக்கும் மிரட்டல்களுக்கு அஞ்ச வேண்டாம். சனாதிபதி பேச்சுக்களை ஆரம்பித்தால் அதற்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது என ஐ.தே.கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:- இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு சனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் அடுத்த நாளே கூட்டணி அரசாங்கம் முடிவுக்கு வருமென ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச கேகாலை மாவட்டத்தில் நடத்திய ஐந்தாவது மாநாட்டில் எச்சரித்திருந்தார். இது குறித்து சனாதிபதி அஞ்சத்

(IVஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவடைந்த 57 சிறுத்தைகளின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வு

இதயபூமி என்று அழைக்கப்படும் மணலாற்றுப்பகுதியில் பகைவன் குகைக்குள் புகுந்து ஆட்லறி அதர்மத்தை அழித்தொழித்த 57 சிறுத்தைகளின் 9ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மேடையில் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை போராளி தமிழ்க்கவி அவர்கள் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை கேணல் ஜெயம் அவர்கள் ஏற்றினார். ஈகச்சுடரினை பிள்ளையார் மாஸ்ரர் ஏற்றினார். லெப். கேணல் கோமளாவின் திருவுருவப்படத்திற்கு தாயார் மலர்மாலை அணிவித்தார். சிறுத்தைப் படை அணி

(IVஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சுவார்த்தையை எங்கு,எப்போது நடத்தவும் அரசு தயார்

### நிகழ்ச்சி நிரலும் அனுப்பப்பட்டுள்ளதென்கிறார் மங்கள சமரவீர

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் இடைக்கால நிர்வாக யோசனைகளையும் உள்ளடக்கிய தான பேச்சுக்களை எங்கேயும், எப்போதும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுக்கொழும்பில்நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தேவையும், பொறுப்பும் அரசாங்கத்துக்கு உள்ளதென இங்கு தெரிவித்துள்ள அமைச்சர் மங்கள சமரவீர புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புலிகள் பேச்சுவார்த்தைக்கு அவர்களது அக்கறையையும், அர்ப்பணிப்பையும் வெளிப்

(IVஆம் பக்கம் பார்க்க)

## கனடாவிலிருந்து வந்த வைத்திய நிபுணர் கிளி.இல் புற்றுநோய் பற்றிக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

கனடா - மனிற்ரோபா பல்கலைக் கழக விரிவுரையாளரும் வைத்திய கலாநிதியுமாகிய திருமதி சிறிறஞ்சன் நேற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புற்றுநோய் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நடாத்தியுள்ளார்.

கனடாவில் இருந்து வருகைதந்த டாக்டர் யாழ்ப்பாணத்திலும், பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கும் இந்த புற்றுநோய் சம்பந்தமாக கருத்தரங்கினை கடந்த செவ்வாய்க்கிழமை நடாத்தினார்.

நேற்று மாலை 7.30 மணியளவில் கிளிநொச்சி வைத்திய சாலையிலும் இக்கருத்தரங்கினை நடத்தினார்.

அவருடைய இந்தப் புற்றுநோய் பற்றிய கருத்தரங்கில் முக்கியமாக புற்றுநோயை முற்கூட்டியே அறிந்து கொள்ளல் மற்றும் புற்றுநோய் தடுத்தல், புற்றுநோயினை உடனடியாக

(IVஆம் பக்கம் பார்க்க)

## இ.த.அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படக்கூடாது

### ஜே.வி.பி.யின் பா.உறுப்பினர் இ.சந்திரசேகரன்

(கொழும்பு)

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை இலங்கையில் வாழ்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு மிகவும் பாதகமான தொன்று. எனவேதான் அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படக்கூடாதென ஜே.வி.பி வலியுறுத்துகிறதென ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்

ஐ.ம.சு கட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அல்லது, கொள்கை ஒன்றுள்ளது. அக்கொள்கையின் அடிப்படையில் தான் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டுமென நாம் உறுதியாகவுள்ளோம். அதே வேளை சனாதிபதியால் இவ்வாறான முடிவுகள் தனிப்பட்ட ரீதியாக அறிவிக்கப்படுகின்ற வேளை ஜே.வி.பியுடன் பேசி அல்லது எமது கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் அல்ல இவ்விடயத்தை சனாதிபதி எங்களுக்கு ஏற்கனவே தெரிவித்து விட்டார்.

இவ்வாறான முடிவுகள் தன்னிச்சையாக அறிவிக்கப்படுகின்ற வேளை அல்லது ஒரு கூட்டரசாங்கத்தில் ஏனைய கட்சிகளுடன் ஏனைய தலைவர்களுடன் கலந்தாலோசிக்காமல் தனிப்பட்ட முடிவுகள் எடுக்கப்படுகின்ற போது இது தொடர்பாக முற்றுமுழுதான பொறுப்பை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

## ஆசிரியர் பீடத்தினரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த அரசு தவறிவிட்டது

### தமிழ் நெற் பொலிஸ் அதிகாரிக்கு கடிதம்

(கொழும்பு)

தமிழ் நெற் ஆசிரியர் பீடத்தின் அங்கத்தவர் டி.சிவராமின் வீட்டை அத்துமீறிப்பரிசோதனை செய்தும் அவரைப் பயமுறுத்திய செயல் முழு ஆசிரியர் பீடத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு தவறிவிட்டதையே வெளிப்படுத்துகிறது என சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபருக்குத் தமிழ் நெற ஆசிரியர் பீடம் அறிவித்துள்ளது.

சுதந்திர ஊடகத்துறை அறிவிப்பாளர் சுசந்த தேசபிரிய இதை அறிவித்துள்ளார்.இம் மாதம் 23 ஆம திகதி சிவராமின் வீட்டைப் பரிசோதனை செய்தும் எந்தத் தடயங்களையும் பொலிசார் கைப்பற்றவில்லை எனப் பொலிஸ்மா அதிபருக்கு சுட்டிக் காட்டி அறிக்கை ஒன்றினை ஊடகவியலாளர் சங்கம் அனுப்பி உள்ளது.

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஐக்கிய தேசியக் கட்சி மீது பாய்ச்சல்

(கொழும்பு)

தற்போதைய அரசு மேற்கொண்டு வருகின்ற செயற்திட்டங்களை முற்றாக குழப்புவதற்கான சதிமுயற்சிகளாக ஐ.தே.கட்சியின் பிரச்சாரங்களை நாம் கருதுவதாக வேலையற்ற பட்டதாரிகளின் கூட்டு சம்மேளனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இரண்டாண்டு கால ஆட்சிக்காலத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஐ.தே கட்சி என்ன செய்தது என்பதை நிரூபிக்க முடியுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளது. இதேவேளை பட்டதாரிகளுக்கான இரண்டாண்டு பயிற்சிகாலம் ஓராண்டாக மாற்றப்பட்டுள்ளதென மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

## கொல்லப்படுமுன் கருணாவின் சகாக்களுக்கு மயக்க மருந்து கொடுத்து கொல்லப்படவில்லை

### சிறிலங்காப் பொலிசார் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பின் புறநகரான கொட்டாவவில் கொல்லப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த எட்டுப் பேரும் மயக்கமருந்து கொடுத்த பின்னரே கொல்லப்பட்டதாக வெளியான செய்திகளை சிறிலங்கா பொலிஸ் மறுத்துள்ளது.

கொல்லப்பட்ட கருணா குழுவுக்கு நிதி மற்றும் சமையல் பொறுப்புக்களை மேற்கொண்டு வந்த தாபோ என்பவர் மயக்க மருந்து கலந்த பாயசத்தை வழங்கி, வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து வைத்ததாகவும், இதையடுத்து பின்வாசல் வழியாக உள்நுழைந்த ஆறு பே கொண்ட குழுவினரே இந்த எட்டுப் பேரையும் கொலை செய்ததாகவும் கருணாவின் பெயரைப் பாவித்து பிரச்சாரம் செய்யும் இணையத்தளமொன்றை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டி ருந்தது., இதனையே பொலிசார் மறுத்துள்ளனர்.

இவர்கள் நித்திரையில் இருந்தவேளை இவர்களின் சகாக்களால் சுட்டுக்கொல்லப்பட்டதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இதே வேளை, இச்சம்பவம் நடைபெற்ற வீட்டில் நிறுத்தி

(IVஆம் பக்கம் பார்க்க)

# பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களால் வேலையற்ற பட்டதாரிகள் குழப்பம்

(அலுவலக செய்தியாளர்)

நிதி அமைச்சினால் அண்மையில் வேலையற்ற பட்டதாரிகளைப் பொருத்தமான அரசதுறைப் பதவிகளில் ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த பல விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பாக திறைசேரி பிரதிச் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமையின் காரணமாக மேற்படி பலர் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்; மேற்படி வேலையற்ற பட்டதாரிகள் ஆட்சேர்ப்பிற்கென திறைசேரி பிரதிச்செயலாளர் எஸ்.பீ.திவாரத்தினால் விண்ணபதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களில் அனேகமானவை விண்ணப்ப முடிவு திகதியான 27.07.2004 இற்கு பின்பாக 28 ஆம், 29ஆம் திகதிகளிலேயே கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் காரணமாக பொருத்தமான அரச துறைப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் திறைசேரி பிரதிச்செயலர் மூலம் அனுப்பி வைக்கப்பெற்றுள்ள சுற்றுநிருபத்தில் திறைசேரி பிரதிச் செயலரினால் கையொப்பமிடப்பட்டது என எழுதப்பட்டுள்ள பொழுதிலும் பிரதிச்செயலரின் கையொப்பமின்றியே மேற்படி சுற்று நிரூபம் அனுப்பி வைக்கப்பெற்றுள்ளமையின் காரணமாக விண்ணபதாரிகள் மத்தியில் பெரும் குழப்பநிலை தோன்றியுள்ளதனையும் அவதானிக்க முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# முல்லை முன்பள்ளிகளுக்கிடையே பிரதேச விளையாட்டு விழா

முல்லைப் பிரதேச 14 முன்பள்ளிகளுக்கிடையேயான பிரதேச விளையாட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு முல்லை. மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது. முல்லைப் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் திரு. சுரேஸ்குமார் தலைமையில் ஆரம்பமானது. மங்கல விளக்கினை முல்லைப் பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரும், கள்ளப்பாடு வைரவர் ஆலயக் குருக்களும் ஏற்றினார்கள்

தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை முல்லை மக்கள் நலன்புரிச்சங்க நிர்வாக இணைப்பாளா திருமதி விஜயகுமாரி ஏற்றினார். ஆசியுரையினை முல்லை. வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் ஜெயம்சபாபதி நிகழ்த்தினார்.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறப்பாக நடைபெற்ற இசையும் அசைவும் போட்டி நிகழ்வு - 14 முன்பள்ளி மாணவர்களினால் நடாத்தப்பட்ட போட்டியில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு புனித இராயப்பர் முன்பள்ளி பெற்றுக்கொண்டது. இரண்டாம் இடத்தை செம்மலை சரிதா முன்பள்ளியும், மூன்றாம் இடத்தை அளம்பில் கடற்கரை அன்னை வேளாங்கன்னி முன்பள்ளியும் பெற்றுக்கொண்டன. (20)


## வரிவிளம்பரம்

### மீட்டல் வகுப்பு (2005 A/L)

உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறுகின்றது. (4634)

### அறிவித்தல்

யாழ். தொழில் நுட்ப நிலையம், தண்ணீரூற்று - றேடியோ மற்றும் இலத்திரனியல் திருத்தகம் மேற்படி நிலையத்தில் திருத்த வேலைக்கென தங்களால் வழங்கப்பட்ட பொருட்களை கடந்த 28.07.04 தொடக்கம் 15.08.04 வரையான காலப்பகுதியில் கிழமை நாட்களில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள். நிலையம் முற்றாக மூடப்படவுள்ளதால் ஒத்துழைப்பு நல்குமாறு வாடிக்கையாளர்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். தகவல் : நிலைய நடத்துநர். (சி-9170)

### பொக்ஸ் செற் விற்பனைக்கு

ஒரிஜினல் கென்வூட் ஜப்பான் அம்புலிவயர் (ஐந்து அடுக்கு) செற்றுடன் மேலதிகமாக இரண்டு ஒரிஜினல்(LO.D) பொக்ஸ (100X2W) விற்பனைக்கு உண்டு. நவம் கடை, கண்ணன் கோயில்வீதி, 07ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு(4673)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத் தேவையான தென்னை, மாதுளை, பலா, மா, எலுமிச்சை (தேசி), தோடை, கயூ, கமுகு, கொய்யா, கொடித்தோடை, நெல்லி, சவுக்கு, சமண்டலை, தவசி, அகத்தி, கறிவேப்பிலை, தூதுவளை, பப்பாசி (றெட்லேடி) போன்ற பலதரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறறுக்கொள்ள இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (9895)



## ஆண்டு நினைவலைகள்

17ஆம் ஆண்டு



தோற்றம் 1945 - 08 - 07 மறைவு 1987 - 11 - 14

அமரர் செல்லையா-தாமோதரம்பிள்ளை

01 ஆம் ஆண்டு



தோற்றம் 1950 - 01 - 08 மறைவு 2003 - 08 - 10

அமரர் தாமோதரம்பிள்ளை பொன்னம்மா

திதி-30.07.2004

எமது அன்புத் தெய்வங்களின் ஆண்டு நினைவாக எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டுத் திவசத்தில் அனைவரையும் கலந்து கொண்டு ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்குமாறும் அன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

தகவல்-மகன் பார்தீவன்

முகவரி- 01ஆம் வட்டாரம்,
உலகளந்தபிள்ளையார்கோவிலடி, புதுக்குடியிருப்பு.

(4847)



## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

# நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்:-**

01. கல்வித்தகைமை :- க.பொ.த.(சாதாரணம்) கற்றிருத்தல்
02. அகவை :- 20 தொடக்கம் 35 வரை
03. உயரம் :- 05 அடி 05 அங்குலம்

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் :- 06.08.2004
02. சம்பளம் :- நிதித்துறை சம்பளத்திட்டம் படி
03. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு :- 09.08.2004 ஆம் நாள் பாண்டியன் வாணிபம் கிளிநொச்சி கரடிப்போக்கு பணிமனையில் நடைபெறும்
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி-*
முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழ போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி-9762)






## வன்னி மண்ணில் முதன் முதலாக

# உடல் வலுவூட்டும் நிலையம் (GYM)





அரிய சந்தர்ப்பம் இன்றே உங்களது விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்

- நீண்ட கால ஆயுளுக்கும்,
- ஆரோக்கியமான வாழ்விற்கு
- உடல் கட்டழகை பேணுவதற்கும்,
- எல்லா விதமான நோய்களையும் இல்லாமல் ஒழிப்பதற்கும்

சிறந்த இடமே ஈழக்கதிர் உடல்வலுவூட்டும் நிலையம்

பெண்கள் - மாலை 03:30 தொடக்கம் 05:30 வரை
(செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில்)
ஆண்கள் காலை 05.00 தொடக்கம் 10.00 மணிவரை வரலாம்.
பெண்களின் பயிற்சி நேரத்தில் ஆண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கரடிப்போக்கு ,கிளிநொச்சி. (சி.10046) Tp - 021.2285748

# சட்டத்தையும், ஒழுங்கையும் பன்னிரண்டு வருடங்களாக காவல்துறையும், நீதித்துறையும் சரியாக நிலைநாட்டியுள்ளன

## தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா



(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தான் சட்டம், ஒழுங்கு சரியான முறையில் பேணப்படுகிறது. மனித உரிமைகள் மதிக்கப்படுகிறது. மக்களின் கலாசாரம், பண்பாடு போன்ற அனைத்தும் பேணப்பட்டு வருகிறது. இவ்வாறு தமிழீழ நீதி நிர்வாகத் துறைப்பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

மன்னார் அடம்பன் பகுதியில் மன்னார் மாவட்டத்துக்கான தமிழீழ நீதிமன்றத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்திலே வசிக்கின்ற மக்கள் நீதிபெறுவதற்காக நீண்டதூரம் பயணித்து பெரும் சிரமங்களை சந்திக்க வேண்டிய நிலை காணப்பட்டதால் அந்த மக்களின் சிரமத்தை நீக்கும் பொருட்டு மன்னார் மாவட்டத்தில் ஒரு நீதி மன்றத்தை அமைக்குமாறு தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் எமக்குப் பணித்திருந்தார். அதற்கமைவாக பலரது ஒத்துழைப்பின் அடிப்படையில் நாம் இந்த நீதிமன்றத்தை குறுகிய காலத்தில் நிறுவியிருக்கின்றோம்.

தாயக விடுதலைப் போருக்காக எமது மக்கள் பலர் தம்முயிரை ஆகுதி ஆக்கியுள்ளனர். அதேவேளை 17 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகள் தாயக மீட்புப் போரில் தம்முயிர்களை ஆகுதியாக்கியுள்ளனர். இவ்வாறு பல தியாகங்களைச் செய்த இந்த மண்ணிலே வாழ்கின்ற மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் அன்றாட வாழ்வில் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படக் கூடாது என்பதற்காக சட்டத்தையும் ஒழுங்கையும் சரியாக நிலைநாட்டுகின்ற பொறுப்பை தமிழீழ காவல்துறை, தமிழீழ நீதிநிர்வாகத்துறை போன்றவற்றின் ஊடாக கடந்த 12 வருடமாக மிகத்திறமையாக எமது தேசியத் தலைவர் அவர்கள் முன்னெடுத்து வருகிறார்.

இதனால் இன்று எமது பகுதிகளிலே மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். குற்றச் செயல்கள் வெகுவாக குறைந்திருக்கிறது. உயர் பண்புமிக்க தமிழீழ கலாசாரத்தைப் பேணுகின்றஆரோக்கியமான சமூகம்கட்டி வளர்க்கப்பட்டு வருகிறது.

இன்று சில நாடுகளை எடுத்துப் பார்த்தால் புரியும், நீதி மன்றங்களுக்கு வருபவர்கள் நீதிமன்ற வளாகத்தினுள்ளே வைத்து கடத்தப்படுகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள். மனித உரிமைகள் மதிக்கப் படாத நிலை காணப்படுகிறது. நீதி விலை பேசி விற்கப்படுகிறது. சட்டத்தையும் ஒழுங்கையும் சரியாக நடைமுறைப்படுத்த முடியாது தள்ளாடுகிறார்கள்.

ஆனால் எமது பகுதிகளில் ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்கும் சிறப்பான கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கும் தமிழீழ நீதிநிர்வாகத்துறையும் தமிழீழ காவல் துறையும் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகிறது. இது உலகமே அறிந்த உண்மை.

எமது மக்களின் நலனுக்காக எங்கள் பணியை மேலும் விரிவு படுத்தி உயரிய சேவை புரிகின்ற நோக்கமாகவே எமது செயற்பாடுகள் அமையும். அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி அங்கே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி இந்த மக்களின் நலனையும், பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் பேணுகின்ற வகையில் நாங்கள் செயற்படுவோம்.

நாம் மனித உரிமைகளைச் சரியான முறையில் மதித்து வருகிறோம். இங்கேதான் மக்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள். அவர்களின் சுதந்திரம் சரியான முறையில் பேணப்பட்டு வருகிறது. கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், சமூக அபிவிருத்தி என்பன அனைத்திலுமே அவர்களுக்குரிய சுதந்திரம் பேணப்பட்டு அவர்கள் சுதந்திர நற்பிரஜைகளாக வாழ வேண்டும் என்ற நல்நோக்குடன் தான் தமிழீழத் தேசியத்தலைவர் இந்த நீதிமன்றங்களை உருவாக்கினார்.

இன்று எமது கட்டுபாட்டில் இல்லாத எமது தாயகப்பகுதிகளில் எதிரி திட்டமிட்டு கலாசார சீரழிவுகளையும், குற்றச்செயல்களையும் அதிகரித்து எமது இனத்தை அழிவுப்பாதையில் கொண்டு செல்வதற்கு எதிரி திட்டமிட்டு செயற்பட்டு வருகிறான். எமது தாயகத்தின் எந்தப்பகுதிகளிலானாலும் சரி மக்களின் நலனுக்குக் குந்தகம் ஏற்படுத்துபவர்கள் மீது தமிழீழ நீதிமன்றம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

(லோ,தீ)

# கொழும்பு முன்னாள் துணைமேஜருக்கு நீதிமன்றில் பிடியாணை பிறப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் கொழும்பு துணை மேஜருக்கு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யூ.எல்.ரிரஸ் பெரேரா என்பவருக்கே வழக்கொன்றிற்காக நீதிமன்றில் சமூகமளிக்காமையினால் கொழும்பு மாவட்ட மேலதிக நீதவானால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சிறில.பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் திட்டமிட்டபடி வவு. வரவில்லை

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்புஅமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க வவுனியாவுக்கு செவ்வாய்க்கிழமை வருவதாகத் தெரிவித்த போதும் அவரின் பயணம் குறிப்பிட்டவாறு இடம்பெறவில்லை.

கடந்த சனியன்று வன்னி இராணுவத்தளபதி சிசிற விஜயசூரிய வன்னிச்செய்தியாளர்களை அழைத்து இவரின் பயணத்தினை உறுதிசெய்திருந்தார். எனினும் திட்டமிட்டவாறு அவரின் பயணம் இடம்பெறவில்லை.

# குடிவரவு,குடியகல்வு சட்டங்களை மீறுவோருக்கு 20 வருட கடுங்காவல்

## அமைச்சர் ரணவிராஜா

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வுச் சட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 20 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என மக்கள் பாதுகாப்பு சமாதான அமைச்சர் ரணவிராஜா இம்மாதம் 17 ஆம் திகதி அறிவித்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு சட்டங்கள் தற்பொழுது திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது. இச்சட்டம் திருத்தி அமைக்கப்பட்டால் குடிவரவு, குடியகல்வில் நடைபெறும் ஊழல்கள் நின்றுவிடும் எனவும், குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களங்களில் நடைபெறும் ஊழல்களை ஒழிப்பதற்காக மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை அங்கு கடமை புரியும் ஊழியர்களை இடமாற்றம் செய்வதற்கும் திணைக்களம் தீர்மானம் எடுத்துள்ளது.

# துணுக்காய் பிரதேச மட்டத்தில் சிறுவர் தொடர்பான பயிற்சி நெறி

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேச மட்டத்திலான சிறுவர் தொடர்பான பயிற்சி நெறி கடந்த செவ்வாய்க்கிழமை துணுக்காய்ப் பிரதேசசபை கேட்போர் கூடத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 வரை துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் ப.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கருத்துரைகளை துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் வி.சிவபால சுப்பிரமணியம் ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (24)

# சமுதாய அபிவிருத்தி தொடர்பாக செம்மலையில் கருத்தரங்கு

முல்லை மாவட்டத்தில் சமுதாய அபிவிருத்தி தொடர்பாகவும், அக்கிராம மக்களின் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கான கருத்தரங்கு நேற்று முன்தினம் செம்மலைக் கிராமத்தில் நடைபெற்றது.

போரினால் அழிந்த இக்கிராமத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்காக நிக்கொட் நிறுவனம் திட்டத்தை வகுத்து வருகிறது. இதற்கான தேவைகளை இனம் கண்டு செயற்படுவதற்காகவே இக் கலந்தரையாடல் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த திரு.பிறைன், எஸ்.மனோகரன், வடக்கு கிழக்கு மாகாண சமுதாய அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் திரு.ஏ.ஜீ.எஸ்.பாலச்சந்திரன், சமுதாய அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் திருஎவ்.ரி.குரூஸ் முல்லை மாவட்ட நிக்கொட் திட்டப் பணிப்பாளர் திரு எஸ்.ரகுநாதப்பிள்ளை, நிக்கொட் உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.ரவி, முல்லை மாவட்ட சமுதாய அபிவிருத்தி இணைப்பாளர் திரு.வி.நவநீதன், நிக்கொட் திட்டப் பொறியியலாளர் திரு.ஜெ.ஜெயவீரசிங்கம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் திரு.எ.சுதர்சன், முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் திரு.செல்வரட்ணம், முல்லை மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் திரு.நிவேகாந்தன், கடற்புலிகளின் அரச கட்டமைப்புத் தொடர்பாளர் திரு சிலம்பரசன், கிராம அலுவலர்கள், கிராம மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# ஓமந்தை ,தாண்டிக்குளத்தில் இராணுவத்தினருக்குப் பயிற்சி

ஓமந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஓமந்தை, தாண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் காலை ஓமந்தைப் பகுதியில் 20 இற்கு மேற்பட்ட ராங்கிகள் சகிதம் ஏராளமான இராணுவத்தினர் கனரக ஆயுதங்களுடன் பயிற்சியில் ஈடுபட்டனர். இதனை அவ் வீதியால் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அவதானித்தனர். (36)

# முல்லை. நுண்கலைக்கல்லூரியின் ஆடி மாத தமிழ் இசைவிருந்து

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஆடி மாதத் தமிழ் இசைவிருந்து கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக் க்ல்லூரி மண்டபத்தில், நுண்கலைக் கல்லூரிகளின் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக மங்கலவிளக்கேற்றல் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி வேழினி ஏற்றி வைத்தார். தொடர்ந்து இசை நிகழ்வுகள் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு தமிழிசை விருந்தாக இன்னிசை வேந்தர் உமாரமண சர்மாவின் இன்னிசை நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து இறுதியாக இன்னிசை வேந்தர் உமாரமண சர்மாவின் கர்நாடக சங்கீத பாடல் நூல்கள் ஒரு தொகுதியும், ஒலிநாடா ஒரு தொகுதியும் நுண்கலைக் கல்லூரிகளின் பொறுப்பாளர் அவர்களிடம் கையளித்தார். (08)

# ஒட்டுசுட்டான் ம.வி. மாணவன் தேசிய மட்டத்திற்குத் தெரிவு

(ஒட்டுசுட்டான்)



ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவன் திறனாய்வுப் போட்டியில் 15 வயதுப் பிரிவுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் மாகாண, மாவட்டங்கள் ரீதியாக 3 ஆம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டித் தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டங்களுடனான திறனாய்வுப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டியமைக்கான பதக்கத்தை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய உப அதிபர் செல்வி வி.நிர்மலா தேவி மேற்படி மாணவனுக்கு வழங்கிக் கௌரவித்தார். (05)

# சுகாதாரப் பணியாளருக்கு ஆற்றலை விளக்கும் பயிற்சி

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்டத்திலுள்ள சகல சுகாதார பணியாளர்களுக்குமான துறைசார் ஆற்றல் வளர்க்கும் பயிற்சி 26-07-2004 ஆரம்பித்து நடை பெற்று வருகின்றது.

நீர்ப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் முல்லை. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் இப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

26, 27, 28ஆகிய மூன்று தினங்களும் சுகாதார அலுவலகங்களில் கடமை புரியும் எழுதுவினைஞர்களுக்கும்,

29, 30 ஆகிய இரு தினங்களும் மக்களுடன் நேரடியாகப் பணிபுரியும் தாதிமார்கள், மருத்துவமாதுக்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர்களுக்கான பயிற்சியும் நடைபெறுகின்றது எனவும்

இதன் மூலம் சுகாதாரப் பணியாளர்கள் தமது துறைசார் ஆற்றலை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு உதவும் எனவும் முல்லை. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி. ஜெயக்குலராஜா தெரிவித்துள்ளார். (20)

# மற்றுமொரு ஆட்கொணர்வு வழக்கில்

# இராணுவத் தளபதிக்கு அழைப்பாணை

1996/97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக் கள் மீதான விசாரணைகளிற்கு படைத் தரப்பு ஒத்துழைப்பு வழங் காது தொடர்ந்தும் இழுத்தடித்து வருகின்றது.

இந்நிலையில், சாவகச்சேரி நீதி மன்றில் நேற்று இடம்பெற்ற ஆட் கொணர்வு மனு மீதான விசார ணையின்போது படை அதிகாரி களோ அல்லது அவர்கள் சார்பி லான சட்டத்தரணிகளோ ஆஜராகி யிருக்கவில்லை. இதையடுத்து இவ் ஆட்கொணர்வு மனுக்களில் எதிரிகளாக குறிப்பிடப்பட்ட படை உயரதிகாரி லெப். கேணல் டுமிந்த ஹெப்பற்றிக்கொலாவா மற்றும் யாழ். மாவட்ட படைகளின் கட்ட ளைத் தளபதி ஆகியோருக்கான நீதிமன்ற அழைப்பாணைகளை யாழ். மாவட்ட பொலிஸ் அத்தி யட்சகருடாக விநியோக்குமாறு நீதி வான் பா.சுப்பிரமணியம் உத்தர விட்டுள்ளரர்.

1996/97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தென்மராட்சி தெற்கின் கைதடி- நாவற்குழி கிராமம் சுற்றி வளைக்கப்பட்ட வேளையில் காணாமற்போன 20 இற்கும் அதிகமான இளைஞர்களில், எழு வர் சார்பில் ஆட்கொணர்வு மனுக் கள் உறவினர்களால் தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

இம்மனுக்கள் மீதான விசா ரணை நேற்று சாவகச்சேரி நீதி மன்றில் நீதிவான் பா.சுப்பிர மணியம் முன்னிலையில் இடம் பெற்றிருந்தது. இம்மனுக்களில் முதலாம் எதிரியாக படை அதிகாரி யான லெப். கேணல் டுமிந்த ஹெப்பற்றிக்கொலாவாவும் இரண் டாம் எதிரியாக யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதியும் 3 ஆம், 4ஆம் எதிரிகளாக இராணு வத்தளபதியும், சட்டமா அதிபரும் குறிப்பிடப்பட்டிருந்தனர். ஆயினும் இன்றைய விசாரணைகளில் எதிரிகளோ அல்லது அவர்கள் சார்பு சட்டத்தரணியான கப்டன் குறூரப்புவோ ஆஜராகியிருக்க வில்லை, சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி ஆஜராகியிருந்தார்.

இதேவேளை மனுதாரர் சார் பில் சட்டத்தரணிகளான அ.விநாய கமூர்த்தி மற்றும் எம்.ஜெ. மீடியஸ் ஆஜராகியிருந்தனர். விசார ணைகளை மேற்கொண்டிருந்த நீதிவான் முதலாம், இரண்டாம் எதிரிகளுக்கான அழைப்பாணை களை யாழ். மாவட்டப்பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக விநியோ கிக்க உத்தரவிட்டார். அத்துடன் இராணுவத் தளபதிக்கான அழைப்பாணையினை இலங்கை இராணுவத்தின் சட்டப்பிரிவிற்கான பொறுப்பதிகாரியூடாக அறிவிக் கவும் நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் விசாரணைகளை எதிர்வரும் ஓகஸ்ட் 9 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். இதனிடையே குறித்த முதலாம் எதிரியான லெப். கேணல் டுமிந்த ஹெப்பற்றிக் கொலாவ தற்போது பலாலி இராணு வத்தளத்தின் சிரேஷ்ட அதிகாரியாக கடமையாற்றி வருகின்றார். விசாரணை களுக்காக ஆஜராகுமாறு கடந்த ஆறு மாதங்களாக நீதிமன்றத்தால் அழைப்பாணைகள் அனுப்பப் படுவது குறிப்பிடத்தக்கது. (27,33)

# படை உயரதிகாரிகளின் பணிப்பின் பேரிலேயே உங்கள் பிள்ளைகளைக் கைது செய்தேன்

## -கோப்ரல் ராஜபக்ஷ தெரிவிப்பு

“படை உயரதிகாரிகளின் பணிப் பின் பேரிலேயே அரியாலைப் பகுதிகளில் உங்கள் பிள்ளைகளை கைதுசெய்தேன். கைது செய் தவர்களை அவ்வதிகாரிகளிடம் நான் உடனடியாக கையளித்து விட்டேன்” என்றார் கோப்ரல் ராஜ பக்ஷ.

நீதிமன்ற அமர்வின் மதிய இடைவேளையின் போது காணாமற்போன பிள்ளைகளது பெற்றோர்கள் ராஜபக்ஷவிடம் தமது பிள்ளைகளது நிலை பற்றி கேள்விகளை எழுப்பினர். அப்போது பதிலளித்த ராஜபக்ஷ “கைது செய்த இளைஞர்களை குறித்த படை அதிகாரிகளிடம் நான் கையளித்து விட்டேன். ஆனால் அதன் பின்னர் அவர்களுக்கு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. ஆனாலும் வழக்கு விசாரணையில் அப்படை அதிகாரிகளைப்பற்றி பிரஸ்தாபிப்பேன்” என கூறினார். (27)

# யூனியன் கல்லூரி பிரித்தானிய அணியை, கிளி.அணி வெற்றி!

பிரித்தானியாவில் இயங்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் கிளி. மாவட்ட தெரிவு அணிக்கும் இடை யிலான 17 வயதுக்குட்பட்டோ ருக்கான உதைபந்தாட்டப் போட்டி நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் கிளி.பொது விளையாட்டு மைதா னத்தில் நடைபெற்றது.

தமிழீழ விளையாட்டுத்துறை செயலர் அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப் பாளர் ராஜா ஏற்றிவைத்தார். பிரித்தானிய அணியின் பயிற்றுநர் சத்தியநாதன் யூனியன் கல்லூரி அதிபர் புண்ணிய சீலம் ஆகி யோருக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றதைத் தொடர்ந்து போட்டி ஆரம்பமானது.

இப்போட்டியில் கிளி.அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. செ.குலேந்திரன் இ.சசி தரன் ஆகியோர் கோல் போட்டனர். இப்போட்டிக்கு பிரதமநடுவராக திரு.க.கலாதரனும், பக்கநடுவர் களாக திருவாளர்கள் யோ. திருக் குமார் வி.சுவிஸ்கரன் ஆகியோர் கடமையாற்றினர்.

# சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு பற்றி காவல்துறை கருத்தூட்டல்

தமிழீழ காவல்துறையினரால் நேற்று முறிகண்டிப் பகுதியில் அமைந்துள்ள (H.V.S.றோட் இன் பிறைவேட் லிமிட்டட்) டிப்பர், உழவு இயந்திர சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு சம்பந்தமான கருத்தூட்டல் செயலமர்வு நடைபெறவுள்ளது.

காவல்துறை வாகனப் போக்கு வரத்து கண்காணிப்பாளர் திரு.கு. கனகலிங்கம் அவர்களது தலை மையில் நடைபெற்ற இச் செயல மர்வில் வீதியை பயன்படுத்தும் நடைமுறை பற்றியும், விபத்தின்றி வாகனத்தை செலுத்துவது பற்றி யும் தெளிவு படுத்தப்பட்டது.

இதன் கருத்துக்களை தமிழீழ காவல்துறையின் வாகனப் போக் குவரத்துப் பிரிவுக் கண்காணிப் பாளர் திரு.கு.கனகலிங்கம், வாக னப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன், வாகனப் போக்குவரத்துப் பிரிவு உப பொறுப்பாளர் திரு.திருக் குமார் ஆகியோர் வழங்கினர். இது போன்ற கருத்தூட்டல் செயலமர் வுகள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

# யாழ்.இராணுவத்தளபதியுடன் தெங்கு உற்பத்தியாளர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தெங்கு உற்பத்தியாளர் சங்கத்தினருக்கும் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திர பாலவுக்கு மிடையேயான முக்கிய சந்திப்பு ஒன்று இன்று காலை 10.00 மணியளவில் யாழ். நகரில் உள்ள 512 ஆவதுபடையணியினரது செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படைத் தரப்பினரால் முடக்கி வைக்கப்பட்டள்ள தென்னந்தோட்டங்களைப் பார்வையிடச் செல்லல், பராமரிப்புச் செய்தல் என்பவற்றிற்கான அனுமதி பெறுவது குறித்து இதன் போது முக்கியமாக கலந்துரையாடப்படும்.(33)

# குடாநாட்டிலுள்ள அடிப்படைப் பிரச்சினை குறித்து ஆராய அநுராதபுரத்தில் இன்று விசேட கூட்டம்

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் எதிர்கொள் ளப்படும் அடிப்படைப் பிரச்சி னைகள் தொடர்பாக ஆராய் வதற்கான விசேட கூட்டமொன்று இன்று அநுராதபுரத்தில் நடை பெறவுள்ளது.

இலங்கை அரசின் பொது நிர் வாக உள்நாட்டலுவல்கள் விவகார அமைச்சர் அமரசிறி தொடங்கொட இக்கூட்டத்திற்கு தலைமை தாங்க வுள்ளார். இக்கூட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பாக பொது நிர் வாக உள்நாட்டலுவல்கள் அமைச் சினால் விடுக்கப்பட்ட அழைப் பினையடுத்து யாழ் மேலதிக அரச அதிபர் தலைமையில் குடாநாட் டைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதி பர்கள் நேற்று முன்தினம் அநுரா தபுரம் பயணமாகியுள்ளனர்.

தற்போது கொழும்பில் நிற்கும் யாழ் அரச அதிபர் செ. பத்மநாதனும் நேரடியாக அங்கு சென்று கூட்டத் தில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதனிடையே குடாநாட்டில் அடிப்படை வசதிகள் எதனையும் உருவாக்க நடவ டிக்கை எடுக்காத, இலங்கை அர சின் அமைச்சர்கள் எவராயினும் குடாநாட்டிற்கு வருகை தந்தால் எதிர்ப்புப் போராட்டங்களை முன் னெடுக்கப்போவதாக பொது அமைப்புக்கள் அறிவித்துள்ள நிலையில் அமைச்சரின் இக்கூட்டம் அநுராதபுரத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (21)

# கோதுமை மாவிற்கான இறக்குமதி வரி நீக்கம்

கோதுமை மா இறக்குமதிக்கு இருந்து வந்த வரி நீக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதாக வர்த்தக நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரி வித்தார்.

இதுவரை காலமும் 25% வீத இறக்குமதி வரி கோதுமை மாவிற்கு இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வீரச்சாவடைந்த...

யின் முதல் மாவீரர் லெப். ஆதி ரையின் திருவுருவப்படத்திற்கு போராளி கோதை மலர் மாலை அணிவித்தார். 57 சிறுத்தைகளின் திருவுருவப்படங்களுக்கு போராளி கங்கா மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து சோதியா படையணி யின் 8 ஆம் ஆண்டு ஆரம்ப நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றிய வீராங்கனைகள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளுடன் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெற்றன.

### கனடாவிலிருந்து...

மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை முக்கியத்து வப்படுத்தி தனது கருத்தரங்கினை மேற்கொண்டார்.

இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி, கிளி. சுகாதார அதிகாரி மற்றும் வைத்தியசாலை டாக்டர் கள், தாதிமார்கள் போன்றோர் கலந்து கொண்டனர். சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ, கு)

### கருணா...

வைக்கப்பட்டிருந்த சொகுசு வாகனம் தெஹிவளையைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒரு வருக்குச் சொந்தமானதென சிறி லங்காப் பொலிசார் தெரிவித துள்ளனர். குறித்த வாகனம் கருணா குழுவினருக்கு ஒரு மாதக் குத்தகைக்கு கொடுக்கப்பட் டிருந்ததாகவும் சில நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஜே.வி.பி....

தேவையில்லை. இது மிகப் பெரிய சவால். இதனால் நாங்கள் பொறுப்புடன் சனாதிபதிக்கு கூறுவது என்னவென்றால் வீரவன் சவின் கருத்துக்களைப் பொருட் படுத்தாமல் இடைக்கால நிர்வாக யோசனையுடன் பேச்சுவார்த் தையை ஆரம்பிக்கவும் ஐ.தே.கட்சி தெளிவுடனும் நிபந்தனைகள் ஏதும் இன்றியும் சனாதிபதிக்கு ஆதரவு வழங்கும். இச்சமாதானத்திற்கு எந்த ஓர் அரசியல் பேதங்களும் அதிக பட்சமானதாக இருக்க முடி யாது. இப்பேச்சு வார்த்தைகள் தோ[illegible] வியடைந்து இந்நாட்டை யுத்த[illegible] ஒன்றிற்குக் கொண்டு செல்[illegible]வ தற்கான எந்தவோர் அரசியல் நடவடிக்கைக்கும் நாம் உடன்பட மாட்டோம் என மேலும் தெரிவித் தார்.

இதேவேளை ஜே.வி.பி.யி னரை விட அதிகமான வாக்குகள் ஐ.தே.கட்சியிடம் உள்ளதென அவர் வலியுறுத்தியுள்ளார்.

### புலிகளுடனான....

படுத்த வேண்டுமெனத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து கொண்டால் பல பிரச்சி னைகளுக்குத் தகுந்த முறையில் தீர்வுகளைக் காண முடியும் என் றார்.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நெகிழ்வுப் போக்குடன் செயற்பட வேண்டும் எனவும், வடக்கிலும், தெற்கிலும் இடம்பெறும் கொலைக ளைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள் ளார்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 - 07 - 1982



வீரச்சாவு 30 - 07 - 2001

**மேஜர் பரன்**

**கணபதிப்பிள்ளை ரதன் [பபா]**

[சம்பவம்—மணலாற்றில் நேரடி மோதலின் போது]

புலிவீரம் பேசின்
தமிழீழம் வெகுதூரமில்லை
விடுதலைக்காய்—நீ
வித்தாகி மூன்றாண்டுகள்

அதோ தெரியுது தமிழீழம்
இதோ இன்னுமா சமாதானம்
உன்வழி தொடர
இன்னும் இன்னும் பல வீரர்

உன் பிரிவால் துயருறும்

வைத்தியசாலைக்கு அருகாமை,
1ஆம்வட்டாரம்,
முள்ளியவளை.

வே.மகவதாஸ்
குடும்பத்தினர்.

(பு480)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.